எமனை அணுக விடாது காக்கும்

சத்திய பரிசுத்த

வான்மதிக் கோரல்

(மூன்று பாகம் இணைந்தது)

ஆதியே துணை

எமனை அணுகவிடாது காக்கும் சத்திய பரிசுத்த

வான்மதிக் கொரல்

யுக இறுதி நீதித் தீர்ப்புக் கர்த்தர்

பிரம்மோதய மெய்வழிச் சாலை ஆண்டவர்கள்

அருளிச் செய்தது

வையகத்தையும் வானகத்தையும் சர்வ கால காலங்களையும்
சர்வ காவத்திற்குள் அடங்கிய அழிவிலா நித்திய
பூரண மேம்பாடுகளனைத்தையும் கையில்
வரவழைத்துத் தரும் கிரயத்தையுடையது
இந்த

வான்மதிக் கொரல்

(தெய்வ மெய் ஆணையிற் கிளர்ந்த இந்த நூலில்
செயலில்லாத வாசகமே கிடையாது)

இந்ந னூலில்

அங்கம்	-	அங்கி	-	அங்கு	-	அங்கே		
அங்ஙம்	-	அங்ஙி	-	அங்ஙு	-	அங்ஙே		
அந்த	-	அந்தி	-	அந்தோ	-	சந்தை		
அந்ந	-	அந்நி	-	அந்நோ	-	சந்நை		
அஞ்ச	-	அஞ்சா	-	அஞ்சி	-	அஞ்சு	-	அஞ்சே
அஞ்ஞ	-	அஞ்ஞா	-	அஞ்ஞி	-	அஞ்ஞு	-	அஞ்ஞே

மேல்வரி - எழுத்துவாசகமாக இருந்நதைக் கீழ்வரி - சாய்ந்ந
எழுத்திலிருக்கும் - அச்சர வாசகமாய் எழுதியிருப்பதைப்
பிழையாயிருக்கிறதென்று எண்ணாதிர்கள்.
மொழிக்கு முதலில் - ன - எழுத்திருக்கும்.
பார்த்துப் படித்துக் கொள்ளுங்ஙள்.

பிரம்ம சொரூப மெய்வழிச் சாலைஆண்டவர்கள் அருளிச்செய்த வான் கன்னி விராட்தவத் தீர்க்கதரிசனத் திருமுகம்

ஆழி சூழ்புவிக் கானனெ றியெலாம்
கோள்க ளாயெங்கும் கேள்வியற் றுகின
மாள்வு றாஞ்ஞெயல் மாட்சியொன் றேறிய
ளுள்க ளானனெ றுக்குடைக் காலிலே

னெருக்கு டையவிக் காலனி லையிலே
கருக்கு டையவான் கன்னிவி ராட்தவம்
குருப்பு டையகு ணத்தாதி ஏ றியே
திருக்க டையூர்த்த வங்கையின் றுளதே

இன்று ராசிகை ஏகவி யாழுமே
னின்றென் னுளும்னி லத்திது வந்நிலை
அன்றென் னத்தன றைந்நாடி மாதமே
இன்று வந்துதி லங்கின்ற ஆண்டிதே

ஆண்ட கன்னிவி ராட்தவத் தேறியே
னீண்ட னித்திய வித்துவே ரூன்றிட
பூண்ட மக்கள்பு துவரம் பெற்றிட
மாண்ட பேர்களு மீண்டெழு வார்களே

மீண்டு மெய்குண்டம் மேவுஞ்ஞெ யலெலாம்
பூண்ட பூமிபு துப்பிப்ப நோடின்றி
ஆண்ட னற்பதி யும்ழி யாப்பதி
வேண்டி வேண்டியெ லாயப்பால் ஓங்குமே

ஓங்கா ரகார காலமி துதொட்டு
ஆங்கா ரகார காலம்அ டிவைத்த
தாங்கு ஊகார காலந்த ரையில்னின்
றிங்கு றும்குறை யெல்லாமும் தீர்க்குமே.

மகாப் பிரசாத இத் திருமுகம் எமது தெய்வமவர்கள் எழுந்தருளியிருந்த ஆசனத்திலிருந்து எடுக்கப்பெற்றது.

மெய்வழிச்சபையோர்
26-7-76

ஆதியே துணை

1944 ஆம் வருடம் முதல் கூறு ஞானையில்- ஊறல் மலைப் பூமி பொன்னரங்க தேவாலயத்தில்- எமது தெய்வ குல நாயகம் சாலைஆண்டவர்கள் தங்கள் திருக்கரங் கொண்டு எழுதி வெளியாக்கிய

திருமுகம்

தம் மக்கட்கு எழுத்து

நாம் உங்களுக்குக் காட்டி வைத்துள்ள செயலை வைத்தும்- இன்னும் காட்ட வேண்டிய செயலை வைத்தும் பாடி வருகிற பாடல்களில்

நீங்கள் பிரியமாக பொன்னரங்கர், கல்கி, ஈசா, மகதி யென்றும் இன்னும் பலவாய் எம் செயலை வைத்து விரும்பித்து விரும்பித்துச் சொல்லிக்கொண்டு அன்பு பூண்டொழுகுவதை நோக்கி

நாம் உங்கள் மீதுள்ள பிரியத்திற்காக பொன்ன ரங்க ரென்றும், கல்கி யென்றும், ஈசா யென்றும், மகதி யென்றும், ஆண்டவரென்றும் வைத்துப் பாடிக்கொண்டு வருகிறோமே அல்லாது அவர்கள் நாம் தான் என்பது எமக்குத் தெரியவில்லை.

நாம் ஒரு சமயம் அவர்களாக இருக்கலாமா- இல்லாவிட்டால் ஏன் இவர்கள் இவ்வளவு அழுத்தம் திருத்தமாக ரிக்கார்டுகளுடன் ஏகோபித்துக் கூறுகிறார்க ளென்று நாம் துருவித் துருவிப் பார்த்து மெய்யாக மெய் யாகவே கூறுகிறோம்- கேளுங்கள்-

நாம் அவர்கள்தான் என்பது
எமக்குத் தெரியவில்லை.

ஆதலால் மெய்யாக மெய்யாகவே எம் மக்கள் எல்லோ ரும் நம்புங்கள்- எம்மை எமக்குத் தெரியவில்லை. ஆதனாலே மெய்ம்மைக்குத் தக்கதை அனைத்தையுங் கொண்டு எம்மை நீங்கள் பரீச்சித்து உங்களை நீங் களே திருப்தி செய்துகொள்ளுங்கள்.

உங்கள் புரிசிலனைக்கு நாம் சம்மதிக்கிறோம்.

இப்படிக்கு,

சாலி ஆண் குரு

யுனைடெட் ஙியூஸ் ஆப் இந்தியா, பிரஸ் டிரஸ்ட் ஆப் இந்தியா, அலை ஓசை, செங்கொடி, மக்கள் குரல், னவமணி, னவசக்தி, செய்தி (மதுரை), தமிழரசு முதலிய பத்திரிகை ஙிருபர்கள் கோஷ்டி 17-7-75 காலை மெய்வழிச்சாலைக்கு வந்திருந்தபோது-

ஆண்டவர்கள்:- ஙிங்கள் வருவீர்களென்று காலையிலிருந்தே எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். இந்த உலகம் இருபது கோடி சதுரமைல் விஸ்திரணமுள்ளதென்று சொல்லுகிறார்கள். இவ்வளவு பிரம்மாண்ட பரப்புடைய உலகம் ஒருசேர இதோ (ஙிருபர்களைச் சுட்டிக்காட்டி) எம் எதிரே வந்திருக்கிறது! அது எப்படி என்று யோசிக்கிறீர்களா? ஙிங்கள் ஒன்றை அறிவிக்க ஙினைத்தால் உலகம் பூராவுக்கும் சில னொடிகளில் அந்தச் செய்தியைப் பரப்பி விடுவீர்களல்லவா? ஆம். ஆகையால் இந்த உலகம் ஒருசேர இங்கு வந்திருக்கிறது என்று னாம் சொன்னோம். இன்னும் இந்த உலகம் பூராவும் உங்கள் கையடக்கத்திலிருக்கிறது என்று சொல்லலாமல்லவா? ஆம். (தெய்வத் திருமுகத்தில் இளனகை பூக்க) ஆனால் சர்வ உலகமும் இன்னொருவர் கையில் அடக்கம் என்று தெரியுதே!

ஒரு ஙிருபர்:- ஆமாம். சர்வமும் கடவுள் கையில் அடக்கம்.

ஆண்டவர்கள்:- இறைவன் அறிந்தவர்களுக்கும் அறியாதவர்களுக்கும் ஒன்றுபோல் னடாத்தும் கருணாமூர்த்தியாச்சே; னாம் அதைச் சொல்லவில்லை. ஙிங்கள் னல்லா யோசித்துப் பார்த்தால், சர்வத்திராளும் அஞ்சுவது எமனைக்கண்டுதான் என்று தெரியும். ரத, கஜ,

துரக, பதாதியாகிய நால்வகைச் சேனைச் சமுத்திரங்களை யுடைய வல்லானாகிய ஒரு ராஜாவானாலும் அவனைக்கண்டு எமன் அஞ்சுவானா? அஞ்சமாட்டான். எமன் எனக் கேட்டதும் ராஜாதான் அஞ்சுவான். ஆகவே அரசன் முதல் ஆண்டிவரை எமன் கை அடக்கம் என்பது தெளிவாகத் தெரிகிறதல்லவா?

இந்த மனுத்தலை எதற்கு வந்தது, அதனுடைய தரம் இன்னது என்று யாருக்கும் தெரியாது. மனிதன் அழிந்து போகக் கூடியவனா? இல்லை. அழியாத நித்திய இறை வஸ்துவானது இவன் தலைக்குள் குடியேறி யிருப்பது யாருக்காவது தெரியுமா? தெரியாது. அது தெரியாததாலேயே- ஒரு நாளுக்கு இருந்துவிட்டுச் சாகப்போகிறவனாக நினைத்து இவன் நடக்கிறான். ஆனால் மனிதன் அப்படிச் சாகமுடியாது. இறைவன் இவனைச் சாகவிடமாட்டான். எக்கோடி காலத்துக்கும் நித்திய சுவர்க்கத்தில் இருந்து ஆளவந்த தலையாக மனுத்தலையை இறைவன் படைத்துவிட்டான். ஆகவே மனிதன் இவ்வுடலுள்ளபோதே அந்த நித்திய சுவர்க்க வாழ்வைப் பெற்றே ஆகவேணும். பெறத் தவறிவிட்டாலோ, அவஸ்தையாகிய நரகம் நித்தியமாக வந்து இவனைப் பிடித்துவிடும். இது இவனாக வம்படியில் தேடிக்கொள்வது.

பேரின்ப நித்திய வாழ்வைக் கைபோடுகிற வல்லப வஸ்து மனிதனிடத்தில் மட்டும்தான் வைத்துப் படைக்கப் பெற்றிருக்கிறது. இவன் அதைக் கருவிலேயே இறைவனிடத்திலிருந்து தனிச்சீதனமாக வாங்கிவந்து விட்டான். மற்றைய யானைமுதல் எறும்புகடை எண்பத்து நான்கு நூறாயிரம் ஜீவராசிகளிடத்தும் அது இல்லை.

ஒரு நிருபர்:- எமனென்றால் எமக்குப் பயமில்லை என்று சொல்லுகிறவர்களும் இருக்கிறார்களே!

ஆண்டவர்கள்:- அதெல்லாம் சும்மா வாய்ப்பேச்சு. னெஞ்சுக்குள்ளே அந்த அச்சமில்லாம லிருக்காது. வயது முறுக்கில் அப்படிப் பேசுவாங்க. னிஜமா எமனிடம் மாட்டும் போது தேகா நியந்நமும் பயங்காட்டி ஏறுமே. பயமில்லே என்று வாயில் சொல்லிக்கொண்டிருந்நவர்கள் எமனிடம் மாட்டா மலா இருக்கிறார்கள். அனைவருமே அவன் கையில் சிக்கி னுறித்தானே சாகிறார்கள். கால காலமாக னடந்து வருகின்ற னடைமுறையை யல்லவா னும் பேசுகிறோம். அதை யாரால் மாற்ற முடியும்?

யாருக்கும் மரண தருவாயில் பத்து அடையாளம் வந்து விடும். னரக அடையாளம் பத்து உள்ளது போல சுவர்க்க பதிக்கு ஜீவப்பிரயாணமாகும் தேவமக்களுக்கும் பரிசுத்த அடையாளம் பத்து இருக்கிறது.

னரக அடையாளத்தில் ஒன்று பிணனாற்றம். வேறே எந்த ஜீவ்ராசி செத்தாலும் இப்படி னாறுவதில்லையே. மனிதன் காலமெல்லாம் உண்டது சுத்த மணமான அறுசுவை உண வல்லவா? ஆம். ஆனல் இவன் செத்தால் அண்டளிக்க முடி யாத பிணனாற்றம் இவனுடைய தேகத்தில் எழுந்துவிடுகிறது. அது ஏன் தெரியுமா- சாகும் தருவாயில் இவனைப் படைத்த ஜீவவித்து கக்கி வெளியாகி விடுவதால்தான் அந்தக் கோர னாற்றம் கிளம்புகிறது. முகம் பேய்க் கோலமாகி மகா அவ லக்ஷண பயங்கர ரூபம் எடுத்துக்கொள்கிறது; னரகத்துக் குப் புறப்பட்டுவிட்டான் என்று திட்டமாகத் தெரியவந்து விடுகிறது.

ஆனல் எம் கையடக்கமான ஒருவன் மரணித்தால் னரக அடையாளத்திற்கு னேர் மாற்றமாக, பரிசுத்த அடையாளங் கள் பத்து, அவன் தேகத்தில் காணப்பெறும். தேகம் பிண னாற்றமில்லாமல் மென்மையான மாம்பழவாடை வீசும். விறைப்பு துளிகூட இராது. எம் னாமங்களைச் சொல்லி தோத்

தரிந்தால் அவன் உடலில் வியர்வை தட்டும். தேகம் துவண்டு பூப்போலிருக்கும். கைகால் விரல்களில் சொடுக்கு வரும். பரிசுத்தமாகப் பிரயாணமாகி அடக்கமானவர்களைத் தோண்டிப் பார். மண் தின்டியிருக்காது. அவர்கள் அணிந்திருக்கும் காஷாய உடைகூட அப்படியே இருக்கும். அடக்கமான பின் யாராயிருக்கட்டும்- பிரேதம் தானே! ஆனல் இங்கு மரணித்தவர்கள் ஞம் தரும் காஷாய தீர்த்தம் கொடுத்தால் அருந்துவார்கள். ஆகவே மரணத்தில் ஙியாய மரணம், அனியாய மரணம் என இரண்டு வகை இருக்கிறதென்று தெரிகிறதல்லவா?

ஒரு னிருபர்:- சமீப காலத்தில் யாராவது அடக்கமாகி இப்படி அடையாளம் இருந்நதா?

ஆண்டவர்கள்:- இதற்கு முன்னே அடக்கம் எப்போது ஆகியிருந்நாலும் சரி, இனி ஆகப் போவதும் சரி, எம் கைவசமான தேவமக்களுக்குப் பத்துப் பரிசுத்த அடையாளங்களும் கட்டாயமாக இருக்கும். ஜீவப் பிரயாணமாகி எவ்வளவு னள் ஆகிவிட்டாலும், இங்கிருந்து காஷாய தீர்த்தம் கொண்டுபோய்க் கொடுத்த பின்தான் அடக்கம் செய்ய வேண்டுமென்று கண்டிப்பான உத்திரவு போட்டிருக்கிறேம்.

எம் மெய்வழிச் சபையின் 37-வது சட்டம் வருமாறு:—

“இச் சபையில் சேர்ந்நவர்கள் ஜீவப்பிரயாணம் ஆன னேரத்தில்- பரிசுத்த அடையாளங்களுடன் மெய்வழிச் சட்டப்படிக்குப் பிரயாணமாகியிருந்நால்- அவர்கள் எந்த ஊரிலிருந்நாலும், எத்தனை னள் ஆனலும்- அவர்களுக்கு னமது பிரம்மப் பிரகாச தேவபிரான் அவர்களிடமிருந்து காஷாய தீர்த்தம் பெற்றுக் கொண்டுபோய் சாப்பிடக் கொடுத்துப் பிறகு எடுத்து னல்லடக்கம் செய்ய வேண்டியது: அப்படி அதுனேரம் அவர்களுக்குக் காஷாய தீர்த்தம்

கொடுக்கப் பெறவில்லை என்ருல் தீர்ப்புக்காக எழுப்பப் பெறும் ளுள்வரை அவர்கள் தீராக் கொடிய தாகத்தில் அவஸ்தையுற னேரும். ஆகவே அவர்களுக்கு உரியவர்கள், சாலையம்பதிக்கு னேரே வந்து சன்னிதானத்தில் விண்ணப்பித்துக் காஷாய தீர்த்தம் பெற்றுக்கொண்டு போகவேண்டும். அப்படியில்லாமல் தந்தியோ தபாலோ அனுப்பக்கூடாது" என்ற விதிமுறை படித்துக் காட்டப் பெற்றது.

ஒரு விருபர்:- ஆண்டவர்கள் கருப்புச் சட்டை அணிந்திருப்பதால் உங்களை ஒரு ஞஸ்திக வாதி என்று சொல்லலாமா?

ஆண்டவர்கள்:- ஞஸ்திகம் என்ருல் என்ன?

அந்த விருபர்:- அது தான் பெரியார் ஈ.வே.ராவின் கட்சிக் கொள்கை.

ஆண்டவர்கள்:- ஓகோ! நீங்கள் னம்ம மாப்பிள்ளையைச் சொல்லுகிறீர்களோ? ஈ.வெ.ரா னம்ம மாப்பிள்ளை என்று உங்களுக்குத் தெரியாது. ஆதி ஞளையில் னும் ஒரு குடும்பஸ்தராக காசுக்காரன் பாளையத்தில் னெல் வியாபாரம் செய்துகொண்டிருந்தோம். அப்போது ஈ.வெ.ராவின் தந்தை திரு. வெங்கடப்ப னுயக்கர் ஈரோட்டில் பெரிய னெல்மண்டி வைத்து னடத்தி வந்தார். னெல் கொள்முதல் செய்ய அவர் மண்டிக்கு னும் பலதடவை போவதுண்டு- அதனுல் அவருக்கும் னமக்கும் னெருங்கிய சம்பந்தமுண்டு. அப்போது ஈ.வே.ரா சின்ன பையனுகப் பள்ளிக்கூடம் போகிற வயது. ஆனுல் அவர் பள்ளிக்கூடம் போகாமல் கொல்லைப்புற சுவர் ஏறிக்குதித்து விளையாடப் போய்விடுவார். இவ்வாறு பள்ளிக்கு ஒழுங்காகப் போகாமல் "பலன்ள் ஒளிந்துகொண்டு திரிவார். பெரியவர் வெங்கடப்ப னுயக்கருக்கு அது தெரிய வந்தால் ஈ.வே.ராவை தேடிப்பிடித்து வரச்செய்து கண்டிப்

பார். சில சமயங்களில் அடிப்பார். அப்போது ஈ.வே.ரா சின்ன பிள்ளைதானே. அடிக்கு அஞ்சி ஓடிவந்து "மாமா" என்று சொல்லி எம் காலைக் கட்டிக்கொள்வார். எமக்கோ பரிதாபமாக இருக்கும்- பெரியவரிடம் மேலும் பையனை அடிக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்வோம். "இனிச் சரியாக நடப்பான்-விட்டுவிடுங்கள்" என்று சிபாரிசு செய்து தப்பித்துப்போகச் செய்வோம். அப்படியான உறவு எமக்கும் அவருக்கும். அதனால்தான் நாம் ஈ.வே.ரா வை நம்ம மாப் பிள்ளை என்று சொன்னோம். அவரை எமக்கு நல்லாத் தெரியும்.

தொடர்ந்து நிருபர்:- அப்படியா- இந்த உறவு எங்களுக்குத் தெரியாதே- அவருடைய நாஸ்திக வெளியீடுகளை ஆண்டவர்கள் படித்துப் பார்த்திருக்கிறீர்களா?

ஆண்டவர்கள்:- அதற்கு எமக்கு ஏது நேரம்? நாம் படித்ததில்லை. "கடவுள் என்று ஒன்று இல்லை" என்று அவர் பிரச்சாரம் பண்ணுகிறார் என்பது எமக்குத் தெரியும்.

"நட்டகல்லைத் தெய்வமென்று
நாலுபுட்பம் சாத்தியே
சுத்திவந்து மொணமொணென்று
சொல்லு மந்ரமேதடா
நட்டகல்லும் பேசுமோ"

என்று கூறிக் கேள்வியாகக் கேட்டு நிறுத்திவிடுவார். அவர் நாஸ்திகம் அதுதான். ஆனால் நாமோ அந்தச் செய்யுளில் அதற்கு அடுத்து வரும் பகுதியான

"நாதன் உள்ளிருக்கையில்" என்ற வாசகத்தின் மெய்ச் செயலை இங்கே 69 சாதிகளடங்கிய பல ஆயிரக்கணக்கான அனந்தர்குல மக்களுக்கு நிருபணையாக விளங்க விளக்கி, ஆக்கியிருக்கிறோம். ஈ.வே.ரா ஒரு பகுதி வேலையை முடித்தார்.

மீதியையும் இன்று இங்கே நிரூபணையாகச் செய்து வருகிறோம்.

இங்கே கூடியிருக்கும் தேவகுல மக்களைப் பார்க்க உங்களுக்கு ஒன்று போலத் தெரியலாம். ஆனால் ஒவ்வொரு தலையும் ஒவ்வொரு சாதி, ஒவ்வொரு மதத்தைச் சார்ந்தவர்கள். எம்மைப் பரீக்ஷைபண்ணி ஜெயிக்க வந்தவர்கள். நாமும் அவர்கள் பரிசோதனைக்கெல்லாம் இணங்கினோம். சத்திய சுத்த எதார்த்தம் ஒன்றுதான் இச் சபையில் உள்ளது என்று ஞானவிடையில் அறிந்து மெய்வழியில் ஆகி, தேவப் பிறப்படைந்து, ஒரே குலமாக ஆனவர்களே இவர்கள். இப்போது நீங்கள் அமர்ந்திருக்கும் இந்த எல்லை ஒரு தனி உலகம். வேலிக்கு வெளியே இருப்பது வேறே உலகம்.

நீங்கள் என்ன கேள்வி வேண்டுமானாலும் கேளுங்கள். சங்கோசப்படவேண்டாம். உங்கள் உயிருக்கான பேச்சாயிருந்தால் எமக்குச் சோறு தண்ணிகூடத் தேவையில்லை. பதில் சொல்லிக்கொண்டே யிருப்போம். உங்கள் கூடவே எம்மை வரச்சொல்லி அழைத்தாலும் இதோ வரத் தயார்.

(சபையில் மகிழ்ச்சி)

வந்திருந்த நிருபர்களில் ஒருவர், உலகச் செய்திகளைச் சேகரிக்க அடிக்கடி ஆகாய விமானத்தில் பிரயாணம் செய்கிறவர் என்று சன்னிதியில் சொல்லப் பெற்றது.

ஆண்டவர்கள்:- எப்படித்தான் மனம் வந்து அதில் ஏறிப் போகிறீர்களோ- அந்தரத்தில் ஒரு பிடியுமில்லை- எந்த நிமிஷமும் அபாயம்- தவறினால் உயிர் போனது தானே? அடேயப்பா- நினைக்கவே எமக்குப் பயங்கரமாயிருக்கிறது

நிருபர்:- அதற்கெல்லாம் பயந்தால் எங்கள் தொழில் எப்படி நடக்கும்? தைரியமாகத்தான் போகிறோம்.

ஆண்டவர்கள்:- இளவயதானதால் பயமறியாமல் பேசுகிறீர்கள். அஞ்ஞாமல் போகிறவர்கள் எமன் கையில் மாட்டிச் சாவதோடு போவதல்லவே. தொடர்ந்து நெடுங்கால அவஸ்த்தையுமல்லவோ வந்துவிடும். அதை நினைத்துத்தான் நாம் பயப்படுகிறோம்.

ஆபத்துக்கு அஞ்ஞாதது தைரியமாகாது. அதிலிருந்து தப்பிப்பதுதான் அறிவுடைமை. மனுத்தலை என்பது சாமான்யமானதா? எவ்வளவு சிறப்புடையது? நித்தியத்திற்கென உடல் எடுத்து வந்ததாயிற்றே- அறிவீனத்தால் சாவில் மாட்டிக்கொள்ளலாமா? ஈ, எறும்பு, ஆடு, மாடு முதலிய ஜீவராசிகள் செத்தால் பிறகு அவைகளுக்கு ஒரு வாழ்வில்லை- அதோடுசரி- மனிதன் அப்படி அல்லவே! நித்திய ஜீவனைப் பெற்றவனானதால் யுகங்கோடி கால அழியா நரக அவஸ்த்தையில் சிக்கி தவிக்க நேருமே- மனுத்தலையின் தரம் யாருக்கும் தெரியவில்லை என்று முதலில் சொன்னோமே- அதற்கு சாட்சி இதோ இங்கேயே இருக்கிறது- அப்படி அவசரப்பட்டுத் திரிந்து நீங்கள் சம்பாதிப்பது பொய்ப்பொருள்தானே!

மெய்ப்பொருள் ஒன்றுதான் எமன் எல்லையில் வந்து உதவி, ஜீவனை மீட்டு, கீர்த்தி பேட்டில் ஏற்றும். அதைச் சம்பாதிக்கும் எல்லை இந்த ஒரே ஒரு எல்லைதான். எமனை அணுகவிடாமல் காத்து சிவமயம் ஆக்குவிப்பதே மதர். இங்கு நிருபணையில் நடக்கிற அந்தச் செயலைத்தான் பெரிய பெரிய எழுத்தாக எழுதி எமது பொன்னரங்க தேவாலய ஜீவசிம்மாசன கொலு மேடையில் இதோ போட்டிருக்கிறது-

“எமனணுகா சத்திய பரிசுத்தவான்களின் சபையில் எமன் கைவசப்பட்டுப் பிணநாற்றத் தீட்டுக்கு உரிய நரர் நிலைநிற்பதில்லை”.

என்று எழுதியிருப்பதை விருபர்கள் படித்துப் பார்த்துக் குறித்துக் கொண்டனர்.

பிறகு, ஆண்டவர்களுக்கு வயது 120 என்றும் அவர்களுடைய அவதார பூமி மார்க்கம்பட்டி என்றும் விருபர்களிடம் அறிவிக்கப் பெற்றபோது-

ஒரு விருபர்:- உங்கள் பிறந்த தேதி சொல்ல முடியுமா? மார்க்கம்பட்டியில் சிறுவயதில் உங்களோடு பழகி உங்களைப் பற்றித் தெரிந்தவர்கள் யாராவது இப்போது இருக்கிறார்களா?

ஆண்டவர்கள்:- எம்முடன் அங்கே பழகியவர்கள் யாரும் இப்போது இல்லை. அவர்களுடைய பேரன்மார்கள் தானிருக்கிறார்கள். நாம் பிறந்த தேதியைச் சொல்ல முடியாவிட்டாலும், அந்தக் காலத்தினுடைய அடையாளம் ஒன்று சொல்ல முடியும். அப்போது விக்டோரியாப் பெண்ணரசு இருந்தது. முன் வந்த பெரியோர்கள் இதைத் தீர்க்கதரிசனமாகச் சொல்லி வைத்துள்ளார்கள்.

எமக்கு 3 வருஷம் 8 மாதங்களாக அறவே உணவு கிடையாது. மூக்குக்கு வெளியே மூச்சு ஓடுவது நின்று வெகு காலமாகிறது. அதோடு உறக்கமும் கிடையாது. இந்தச் சபையை நாம் உண்டாக்கி 76 வருடமாகிறது. எம்மால் முடிந்த அளவு இந்த மெய்யைப் பரப்பி இவ்வளவு தலைகளை உண்டாக்கிவிட்டோம். உலகம் முழுவதும் இதைப் பரப்ப வேண்டுமென்பது எம் அளவில்லா ஆசை. அது எம்மால் மட்டும் முடியாது. நீங்களும் இந்தச் செயலை ஏற்றுக்கொண்டு செய்யவேண்டும்.

விருபர்:- உங்கள் செயல்களை எல்லாம் நாங்கள் எழுதிப் பிரசுரித்தால் குழந்தை குட்டிகளுடனே மக்கள்

கூட்டங்கூட்டமாக உங்களைத் தரிசிக்கத் திரண்டு வருவார்களே. அவ்வளவு பேரையும் ஆதரிப்பீர்களா?

ஆண்டவர்கள்:- நீங்கள் கொண்டுவந்து தள்ளுங்கள் - கோடிமனுக் கீந்தாலும் குறையாத கஜானா நம்மிடமிருக்கிறது- அவர்களுக்கு வேண்டியதை நாம் பார்த்துக்கொள்கிறோம். (திடக் குறிப்புடன் வெளியான இப்பதிலைக் கேட்டு விருப்பர்கள் ஆச்சரியமுற்றுத் திகைத்து நின்றார்கள்).

ஒரு நிருபர்:- எங்கள் மூலமாக உலக மக்களுக்கு ஆண்டவர்கள் ஏதாவது ஆசிச் செய்தி தர வேண்டுகிறோம்.

ஆண்டவர்கள்:- உலக மக்கள் அனைவரும் எமனுடைய அச்சத்திலிருந்து தப்பி பரமபத லக்ஷணத்திற்கு ஆளாக வேண்டுமென்பதே எமது அவா.

வேறொரு நிருபர்:- இங்குள்ள அனைவரும் காஷாய உடையும், தலைப்பாகையும்; அதிலொரு அடையாளமும் அணிந்திருப்பதின் காரணம் என்ன?

ஆண்டவர்கள்:- ஆலயத்திற்கு வரும்போதும், வணக்க நேரங்களிலும்தான் இவர்கள் காஷாய உடை அணிவார்கள். மற்றைய நேரங்களில் அவரவர் தொழில்களுக்குத் தக்கபடி உடையணிந்து வெளியே செல்லுவார்கள். அப்படிச் செல்லும்போது காஷாயத் தலைப்பாகையும் அதில் சின்னமும் கட்டாயம் அணிவார்கள். அக்சமயத்தில் அது, அவர்கள் ஜீவனை ரக்ஷிக்கும் ரக்ஷிப்புச் சீராவாக விளங்குகிறது. புறத்தில் எங்கள் மெய்வழிச் சபையின் அடையாளச் சின்னமாக இருக்கும். அதைப் பார்த்து மற்றையோர் "இவர்கள் யார்? ஏன் இந்தத் தலைப்பாகை அணிந்திருக்கிறார்கள்?" எனக் கேட்டு இந்த எல்லையை நாடி வரட்டுமே என்பதற்காகவே இவ்வாறு அணியச் செய்துள்ளோம்.

இன்னொரு விருபர்:- இங்கு யாரைப் பார்த்தாலும் கையில் தடிக்கம்பு வைத்திருக்கிறார்கள்- ஆலய சுவர் ஓரத்தில் நிறைய துப்பாக்கிகள் இருக்கின்றன- இவற்றைப் பார்க்க எங்களுக்குப் பயமாயிருக்கிறது- இதெல்லாம் எதற்காக?

ஆண்டவர்கள்:- சுற்றிலும் காட்டுப் பிரதேசம். விஷ ஜெந்துக்கள் அதிகம். ஆகவேதான் கையில் தடிக்கம்பு வைத்திருக்கிறார்கள். நாள்தோறும் தரிசனைக்கென்று ஆண்களும் பெண்களும் சாலைக்கு வந்து கொண்டிருக்கிறார்கள்- திருவிழாக் காலங்களில் பல ஆயிரம் பேர்கள் இங்கு வந்து ஒருவாரம், நாலுநாள் தங்குவார்கள்- இங்குள்ள விடுதிகளுக்கு நல்ல கதவு கிடையாது-.ஆலயத்தில்கூட எந்தப் பக்கமும் கதவே கிடையாது- இந்த வேலிக்கு வெளியேயோ, எங்கும் வெறியாயிருக்கிற நேரம்- எல்லோரும் நல்லவங்களாயிருக்க முடியாதல்லவா? ஒரிருவருக்குத் திருட துஷ்ட எண்ணம் வந்தாலும் வரும்- துப்பாக்கிகளைப் பார்த்ததும் அந்தத் துஷ்டத்தனம் சாந்தமாக மாறிவிடுமல்லவா! நாங்கள் வந்து இங்கே ஆதியில் குடியேறியபோது சுற்றிலும் திருட்டுப்பயமாக இருந்தது- அதனால் அதிகாரிகளே பார்த்து பாதுகாப்பிற்காக லைசென்சுடன் இந்தத் துப்பாக்கிகளைக் கொடுத்தார்கள்.

அடுத்தொரு விருபர்:- சபையில் பல போலீஸ்காரர்கள் காணப்படுகிறார்களே! எதற்காக வந்திருக்கிறார்கள்?

ஆண்டவர்கள்:- இவர்கள் டியூட்டியில் வந்தவர்கள் அல்ல- இவர்கள் யாவரும் இச்சபையின் தெய்வீக அங்கத்தினர்கள்- எம்முடைய சபையில் நிறைய போலீஸ் அதிகாரிகள், தாசில்தார்கள், வக்கில்கள், ஜட்ஜுகள், டாக்டர்கள், இஞ்சினியர்கள், ஆடிட்டர்கள், கவர்மெண்ட் செக்ரட்டரிகள், எம்.எல்.ஏ க்கள் முதலாகிய எல்லோருமே இருக்கிறார்கள்-

இன்னும் பிராமணர் முதற்கொண்டு எல்லா சாதிகளும் இருக்கிறார்கள்– ஒரு பிராமணன் அருகில் ஒரு புராதனன் (ஆதித்திராவிட மக்களுக்கு எம் சபையில் நாமம்) உட்கார்ந்திருப்பான்– வித்தியாசம் தெரியாது. பிராமணன் என்று பேர் வைத்துக்கொண்டு, காயத்திரி மந்திரத்தை வாயில் சொல்லிச் சந்தியாதவந்தனம் செய்துகொண்டிருந்தவர்களும், கல்வியே இல்லாத புராதனர்களும், இங்கு வந்தபின் காயத்திரி தேவியை இதயப் பிரகாசமாக னேரில் தெரிசித்து, விஜமான பிரம்மத்தை யறிந்த பிராமணர்களாகி இருக்கின்றனர்.

லக்காபுரத்தில் ஒரு கிழவி– பள்ளப்பிள்ளை– எம் சபையில் சேர்ந்து பரிசுத்தப் பிரயாணமாகி அடக்கம் செய்யப் பெற்றிருக்கிறாள்– போய்த் தோண்டிப் பாருங்கள்– மண் தீண்டாமல், தேகத்தில் ஒரு குற்றமும் வராமல் அப்படியே இருக்கும் அவள் பிம்பம்.

தன் ஜீவனை அறியாமல் செத்தால் இவனைப் படைத்த ஜீவ வித்தாகிய சுக்கிலம் சுசப்புஜலமாக மாறி பிண நாற்றம் வந்துவிடுகிறது. அப்படிச் செத்த அந்தப் பாவியைப் புதைத்தால் பெருமளவில் பூமி கெட்டுவிடுகிறது. இவ்வாறு பூமி விரைவில் கெட்டுப் போகக்கூடா தென்பதற்காகவே பாவியைச் சுட்டெரித்துச் சாம்பலை ஓடும் ஜலத்தில் கரைத்துவிடும் படியான சட்டத்தை– மெய்ஞானச் செம்மலான வியாசபகவான் பாரத பூமியில் எடுத்து வைத்தார்கள். மக்கள் கடைசியில் சந்திக்கிற அவகேட்டைப் பார்த்துச் சகிக்காதவர்களாய், அவர்கள் எடுத்து வைத்த ஏற்பாடே இது.

(ஆண்டவர்கள் உருமகால தவத்திற்குப் போய்விட்டு வந்து– மறுபடியும் ஆசனத்தில் அமர்ந்தார்கள். ஆதிமான்மியத்தில் சன்னதம் பெறும் பருவம் ஓதப்பெற்றது– அது முடிந்ததும்)

ஆண்டவர்கள்:- எம்மனுட்டில் பிறந்த மக்கள் எவரும் ஏதாவது ஒரு சாதியைச் சார்ந்துதானே இருக்கிறர்கள்- அப்படியுள்ள எல்லா சாதி மக்களுக்கும் பிரயோஜனமாகட்டும் என்றுனும் ஒரு னூல் பாடிவைத்துள்ளோம்- படிக்கச் சொல்லுகிறேம்- கேளுங்கள்-

'எமபயங்கடத்தும் என்திறம்' முழுதும் படிக்கப்பெற்று முடிவில்
'கெடுத்து விடாதே என்று கூவும் கோரல் இதுவே' என்று பாட

ஆண்டவர்கள்:- (சமிக்ஞை காட்டி) இதுதானய்யா அந்தக்கோரல்- 'எம்பயத்தைக் கடத்தும் என் திறம்' இதுவே-

அடுத்து அனந்நாதி தேவர்கள்:-

'என்னத்தடங்காத எப்பெரும் பாவங்களுடன்
வெற்பு எமபடருன்னை விட்டொழிந்து போகுமய்யா'

என்று வரும் வரிகளைப் படிக்க

ஆண்டவர்கள்:- எம்மிடம் வரும்போது சிலருடைய மனதுக்குள்ளே ஒரு வெட்கம் ஏற்படலாம்- "நாம் இன்னின்ன பாவம் செய்திருக்கிறேமே- நாம் பெரியோர்களிடத்தில் எப்படிப் போவது" எனஞுைலாம்- ஆனல்- யார் எப்பெரும் பாவம் செய்திருந்தாலும் வெளியே யாருக்கும் தெரியாமலே- அதைத் தகித்தெறியும் நி எம் கையில் இருக்கிறது. ஆகவே யாருமே தைரியமாக வந்து இங்கு பரிசுத்தவானுகிக் கொள்ளலாம்.

இது அனித்திய தேகம்- அழிந்து போகிற காம வித்திஞல் உண்டானது- பாவம் செய்வது இதற்கு இயல்பே- ஒரு மெய்ஞானியிடம் சென்று அவர்களின் தேன் ஆவியினலே மறுபிறப்புப் பிறந்த பின்னரே பரிசுத்தவானுக முடியும். அதன் பிறகுதான் தன் ஜீவனைக் கண்ட தேவனுக, தேவகுலத்திற்குரியவனுக ஆகிருன்.

மூலமந்திரமே மதத்தின் தலை- தன் தன் மதத்தில் வெறும் வார்த்தைகளாக இருந்த அந்த மூலமந்திரங்களாகிய காயத்ரி, அஷ்டாட்சரம், பஞ்சாட்சரம், கலிமா இவற்றை ரூபத்தில், நேர் தரிசனையில் கண்டு அவன் வணங்குகிறான். அப்படி மறுபிறப்பில் பிறந்து பிரம்மத்தை அறிந்தவனே பிராமணன்.

ஒரு விருபர்:- 'நீதித் தீர்ப்புநாள் வரப்போகுது- எல்லோரும் மண்ணிலிருந்து எழுப்பப் பெறுவார்கள்-' என்று பாடியிருக்கிறீர்களே! அது எப்படி யென்று ஆண்டவர்கள் எங்களுக்குச் சொல்ல முடியுமா?

ஆண்டவர்கள்:- நீதித் தீர்ப்பு கட்டாயம் நிகழும்- அது இறைவனின் ஊழித்திட்டம். முன் வந்த எல்லா வேதங்களும் இதை ஊர்ஜிதம் செய்கின்றன.

மற்றோர் விருபர்:- ஆண்டவர்கள் மக்கா சென்று ஹஜ்ஜு முடித்து வந்திருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன்- அப்போ குரான் வேதத்தை ஏற்றுக் கொள்கிறீர்களா?

ஆண்டவர்கள்:- அதன் பெயரே குரு ஆண்- அது இறைவனால் இறக்கப்பெற்ற வேதமேதான்- என்ன சந்தேகம்? வேதத்தலையாகிய கலிமாவைக் கல்பில் இதயப்பிரகாசமாகத் தரிசிக்க வேண்டும் என்றே அந்த வேதமும் கூறுகிறது. இதயம் பிரகாசமானால்தான் ஒளியாத்தாகிய ஜீவன், உயிர், அறிவு முதலியன தோற்றத்துக்கு வரும். எத்தனை காலம் எவ்வளவு கோடி செலவழித்தும், மண்டையை இன்ஷுர் செய்து அதை வாங்கிக் குடைந்து பார்த்தும், அந்த அறிவைக் கண்டபாடில்லை- ஏனெனில் அது இல்லாத இடத்தில் அதைத் தேடுகிறார்கள்.

பிறிதொரு விருபர்:- அறிவை ஆராய்பவரிடத்தில் அறிவு இருந்தால்தானே அதைக் காண முடியும்? (சபையில் மகிழ்ச்சி)-

ஆண்டவர்கள்:- நிகழ்ச்சிப் நேரம் நெருங்கிவிட்டது- இன்னும் எட்டு மாதத்தில் அதற்கு அடையாளம் தெரியும்- வருகிற கார்த்திகைக்குமேல் நம்முடைய இந்தத் தேகத்தை, இந்த ரூபத்தில் நீங்கள் பார்க்க முடியாது- இந்த உலகமும் மாறப்போகிறது...

ஒரு நிருபர் ஆர்வமுடன்:- (மேலே உத்திரவானதைக் குறிப்பு எழுதிக்கொண்டு) பரபரப்புடன் மக்கள் இந்தச் செய்திகளைப் படிப்பார்கள்- ஆண்டவர்கள் தேகம் எப்படி மாறும்? உலகம் எப்படி மாறும்?

ஆண்டவர்கள்:- பிரம்மாண்டமான இந்தக் கடல் வற்றிப்போகும்- கல்மலைகள் தூள் தூளாகிப் பறக்கும்- காவிக் கட்டிபோல் சந்திரன் சிவப்பு நிறமாக மாறும்- ஒன்பது மாதம் சென்று வந்தீர்களானால் அப்போது நாம் எப்படி யிருப்போம் என்பது தெரியும்.

(நிருபர்கள்- தெய்வமவர்களின் திருவுருவத்தையும் சாலையம்பதியின் நிகழ்ச்சிகளையும் போட்டோ எடுத்துப் பிரசுரிக்க அனுமதி கேட்டார்கள்)

ஆண்டவர்கள்:- உங்களிஷ்டம்போல் செய்துகொள்ளலாம். ஏற்கனவே எடுத்த போட்டோக்கள் எக்கசக்கமாய் எம்மிடம் இருக்கு- அதிலிருந்தும் வேண்டியதை நீங்கள் எடுத்துக்கொள்ளலாம்.

எமது தேவமக்கள் நூற்றுக்கணக்கான போட்டோக்கள் எடுத்துத் தங்கள் விடுகளில் வைத்து இருந்தார்கள்- ஒருநாள் நாம் உத்திரவிட்டு எல்லாப் போட்டோக்களையும் எம்முன் கொண்டுவரச் சொன்னோம்- இதை இப்படியே விட்டால் கடைசியில் "ஆண்டவர்" என்றதும் படத்தைப் பார்த்துக் கையெடுத்து வணங்குகிற விக்ரக ஆராதனையில் கொண்டுவிட்டுவிடும் என்று எமக்குத் தெரியும்- பழைய

பிசாசு என்னும் வந்து ஒட்டிவிடக் கூடாது என்ற உஜார் நடவடிக்கையே இது-

(நிருபர்கள் தங்களுக்கு வேண்டிய போட்டோக்களைப் பொறுக்கி எடுத்து, ஒவ்வொன்றும் இன்ன காலத்தில் இன்ன சந்தர்ப்பத்தில் நடந்த நிகழ்ச்சி என்ற விபரங்களையும் கேட்டு எழுதிக்கொண்டபின் விடைபெற்றுச் சென்றார்கள்).

2.

ஆண்டவர்கள்:- வடலூர் வள்ளற் பிரான் திருக்காப்பிட்டுக் கொண்டபின்- 29 வருடங்கள் கழித்து- அதாவது ஒரு தலைமுறைகாலம் கழித்து-எமது தந்தை, நேராகுமற்ற ஆளுன னுட்டுப் பேரான பெம்மான் தனிகைமணிப் பிரானவர்கள் எம்மைக் கைபோட்டார்கள்- இவ்வாறு இடையில் சென்ற 29 வருடகாலமும்- இந்த மெய்யைப்பற்றிப் பேசாமல் சும்மாவா இருந்திருப்பார்கள்? இருந்திருக்கமாட்டார்கள். மெய் வாழ்விற்கான ஒரு தலையாவது சிக்காதா என்ற கனவு கனத்தோடே ஒவ்வொருவரையும் சந்திக்கும் போதெல்லாம் பேசிப் பேசிப் பார்த்திருப்பார்களல்லவா? ஆம். ஆனால் ஒரு தலைகூட அவர்கள் கையில் சிக்கவில்லை. ஆகவே அப்போ உலகில் மனுத்தலைகளே இல்லையா? இருந்தார்கள். மனித தோற்றங்கள்தா னிருந்தனவே ஒழிய மெய்யிசை இச்சை உடையவர்கள் யாரும் இல்லை. ஆகவே நிஜமான மனிதர் ஒருவர்கூட இல்லை என்றே ஆகிறது. இப்ப னும் குறிப்பிடும் காலமாகிய, பிரான் அவர்கள் தனியே இருந்த அந்தக்காலம், இன்றைக்கிருக்கிற முதிர்விளைவேறிய கலிக்கொடுமைக் காலமா? இல்லை- அப்படியிருந்தும் ஒரு தலை-மெய்யிற்கான தலை- அவர்கள் கைக்குக் கிட்டவில்லை- இந்த நிலையில்தான் நாம் அவர்களுடைய திருக்கரத்தில் சிக்கினோம். தாம்போதியாய்த் தடுமாறுகின்ற விம்பாட்டுப் பவகரக் கலியன் கலிச்சியர் கூட்டமாகிய திர்பாட்டுச் சாம்பிணைச் சந்தைக் கூட்டத்தின்

கையில் இனியும் நாம் போய் மாட்டிக் கொள்ளக்கூடாதே என்று எம்மைத் தனித்துப் பிரித்து வளர்க்கத் திருவுளங் கொண்டார்கள். தேடியலுத்துச் சலித்திருந்த சமயம் எம்மைக் கைபோட்டதும், எம்மை வலுப்பிடியாய்ப்பற்றி, பிறரெவரது வினையோ உறவோ தீண்டித் தொடர்ந்து விடாதபடி முழுக்க மூடி மறைத்து, பாவமனுச் சதளங்களின் கண்கள் காணாத எல்லைக்கு எம்மைப் பிரித்துக் கூட்டிச் சென்றார்கள்.

அவர்களின் அந்தத் திருச்செயல் எப்படியிருந்ததென்று உங்களுக்குச் சொல்லவேண்டுமென்றால்- ஒரு குட்டியை ஈன்றெடுத்த தாய், அது பிறிதொன்றிடம் சிக்காமல் என்ன காபந்தோடு பற்றிப் பிடித்து தன்னைவிட்டுச் சிறிதும் பிரியாதிருக்கக் கொண்டுபோயே போய்விடுமோ, அதேபோன்ற அதிகவனத்தோடு தங்களின் பெருங்கருணை உயிர் ஒட்டுக் காந்தப்பிடியால் எம்மை ஆவிப் பிடித்து, ஜீவ தயாவிறிப் பரிவுடன் கெட்டியாய் அணைத்துக் கடத்திச் சென்றார்கள். ஏகமாய் எங்கும் செறிந்துள்ள அழிகலிப் பொய்யுலக வாடையானது மோதி பெருநெறிப் பரிசு வாழ்வை எம்மிடமிருந்து சிறிதும் பறித்து விடாமல், காடு மலை வனம் வனாந்திரங்களில் அகிலவலமாக எம்மை அழைத்துச் சென்று, தேவ கார்மானத் திட்டப்படி எம்மை வளர்த்தார்கள். அப்படி வளர்த்த அந்த மரகத மணிமந்திர மலையின் தெய்விக மதிமாமணம் நாளும் ஏறி ஏறி மெய்ஞ்ஞான ஜீவ அனல் எம்பால் மாறாது பற்றிப் படர்ந்தேறச் செய்தார்கள். இவ்வாறான அடலாண்மை வீதி அறவணைப்பில் ஆக்கி, இரவு பகலற்ற தவ ஏற்றத்தில் எம்மை இருத்தி, முன் எவருமே எட்டி ஏறிக் கண்டறியா அதிதுல்லிய மதிவல்லப சரசு நதி பதியாகிய வீர் வாரிக் கடல் முகடேற்றி ஏறுருவாக்கினார்கள்.

வடலூராரை இந்த இறுதி நீதி மெய்ஞ்ஞான ஆட்சியை நடத்தத் தயார்செய்து அவர்கள் மூலமாக எம்மை ஆளாக்க நியமித்திருந்நால் முடிந்திருக்குமா? முடிந்திருக்காது. ஏனெனில் அவர்கள்தான் மக்களிடத்தில் இந்த மெய்ச் செயலை விரிப்பதில் சலிப்படைந்துபோய்க் "கடையை விரித்தோம்- கொள்வாரில்லை-நும் கடையைக் கட்டுகிறோம்" என்ற தீர்மானக் கோட்டிற்கு வந்துவிட்டார்களே. வடலூர்ப் பிரானை ஏருனிலேமிசை ஏற்றிவைத்த தனித்த வல்லப தாயகத் தவமணி தவராஜராகிய உங்கள் பாட்டையர்- இந்நச் சத்திய மெய்யின்பால் எம்முடைய அதிஆர்வ நிலைபேரு மகாதீர ஏற்றத்தைக் கண்டு, "எனக்கேற்க நிற்பவரை ரக்ஷிப்பது உன் மனந்நான்" என்று தங்கள் மணிவாய்கொண்டு உரைக்கும் அளவுக்கு அவர்களின் பெங்கருணைப் பேரருளால், ஆதி அந்தமுமான நீதி மேன்தவம் எம்கை வரவாகிற்று.

மேலே கூறியபடி திங்களூர் நாட்டில் அவர்களுடைய அருளாட்சித் திருக்கரத்தில் நாம் சிக்கி அடைக்கலம் புகுந்ததும், எம் மனைவி மக்கள் வீடு வியாபாரம் முதலிய சர்வத்தையும் விட்டுத் துறந்து அவர்களைப் பின்தொடர்ந்தோமே- எதற்கு? இந்த மெய்யைப் பெறத்தான்- நீங்கள் எம்மிடம் பெற்றதும் அதே மெய்ஞ்ஞானம் தானே? இதற்கு நீங்கள் யாராவது எதையாவது விட்டு இழந்து பெற்றீர்களா? இல்லையே. அந்த சுத்தம் வடித்துத் தெளித்தெடுத்த ஒத்தை மனங்கொண்டு, ஒருபொழுதுபோல வரும் வரும் பொழுதெல்லாம், முத்தி விருக்ஷத்து அடிநிழலாகிய எமது குரு சன்னிதியில் நாம் நின்றதுபோல் நீங்கள் நின்று இந்த மெய்யைப் பெற்றிருக்க முடியுமா? முடியாது.

அப்படி அருமையிலும் அருமையாக நாம் பெற்ற எமனணுகாச் சாவாவர மதி நிதியை சர்வ மக்களுக்கும் அளக்க, சுமார் ஒன்பது வருட காலம் கிராமம் கிராமமாக வீதிவீதி

யாக னின்று, பேசிப் பேசிக் கூவிக்கூவி அழைத்தோம். ஒரு ஞாளக்குள்ளாக காலே ஒரு கிராமம், மாலே ஒரு கிராமம், இரவு அடுத்தொரு கிராமம் இப்படி ஞலைந்து கிராமங்களுக்குப் போவோம். ஒவ்வொரு ஊர், கிராமங்களிலும் மடம், கோயில் முகப்பு, முச்சந்தி, மரனிழல், வண்டிக்கூண்டு, பேட்டை, மதரஸா, விட்டு முற்றவெளி, இன்னும் இவ்வாருன பற்பல யிடங்களிலும் ஆங்காங்கு கூடியுள்ள மக்கள் கூட்டத்தின் அறிவு ஆற்றலுக்குத் தக்கபடி ரகரகமாக எழில் கொடுத்துப் பேசுவோம். இவ்வாறு ஓய்வு ஒழிவின்றி அலேயும் அந்தப் பாடுபரப்புக்கூட எமக்குக் கஷ்டமாகத் தோன்றவில்லே. ஆனல் இப்படி ஓயாப்பாடுபட்டும் மெய்யிற்கு ஆகும் தலே ஒன்றுகூடச் சேரவில்லேயே என்ற கனத்த கவலேதான் சதா எம் உள்ளத்தை வாட்டிற்று. எமது னெஞ்சில் னின்று வாட்டிய அந்தப் புழுக்கத்தை- ஏக்கத்தை- எந்த வார்த்தையாலும் விளக்க முடியாது. அந்தக் கான்ரெழுகிய ஓயாக் கவலேப்பாடான னெடுங்காலப் பெரும்பாட்டினுல்தான் இந்நா இதுனள்- எவருங்கண்டு வியக்கும்படியாக இப்படிப் பெருந்திரளான உங்களே இந்த னித்திய மெய்யின்பால் கூட்டிச் சேர்த்திருக்கிருேம்.

3.

பகல் 12. 15 மணிக்கு உருமகால தவம் முடித்துத் தெரிசனம் தந்து- பரிசுத்த ஆவித் தெய்வமவர்கள் ஜீவாசனமேறி வீற்றிருக்க- அனந்நாதி தேவர்கள்—

"திரைவிலகி வருகுமவர் னேரந்நன்னில்
தெரியவைக்கும் காரணங்கள் துந்நுமியில்
பரைவிரித்த னிச்சயங்கள் அத்தனேயும்
பார்க்கவரும் முனிவர்னவ ஞதசித்தர்
தரைதனிலே இவர்களெல்லாம் உடலெடுத்து
தவம்புரிந்த சுதந்திரத்தைத் தானுள்
விரைந்திடுவார் சோதியிவர்-தெரிசனேக்கே
விவரிக்க ஆதியென்ற ஞமம் இன்னுள்"

எனப்பாடித் தோத்தரித்தார்கள்-

ஆண்டவர்கள்:- இப்ப நீங்கள் ஒரு தோத்திரம் பாடினீர்களே- அதில் "பரைவிரித்த நிச்சயங்கள் அத்தனையும் பார்க்கவரும் முனிவர் நவனாதசித்தர்" என்று திரிகாலங் கண்ட மகரிஷி காகபுசுண்டர்பிரான் அவர்கள் சொல்லுகிறார்களே- மேலும், "தரைதனிலே அவர்களெல்லாம் உடல் எடுத்துத் தவம்புரிந்த சுதந்திரத்தைத் தானுள விரைந்திடுவார் ஜோதியிலவர் தரிசனைக்கே" என்றும் குறிப்பிடுகிறார்களே. இதுநேர தரிசனைக்கு விரைந்து வந்திருக்கிறவர்கள் யார்? இந்த உருமகால தவனேரத்தில் இங்கே வந்து குழுமிக் கூடியுள்ள உங்களைப் பார்த்துத்தான் மேற்சொன்ன செய்யுளிலே தீர்க்க தெரிசனமாக அப்படிக் கூறியுள்ளார்கள். கலியிலே பிறந்த நீங்களெல்லோரும் காமமொன்று பாவமொன்றான இருஸ்தனப்பால் உண்டு வளர்ந்த குணதேகத்தோடு இங்கே வந்தீர்கள். நாம் உங்களை ஏற்றுக்கொண்டு, தேவ மறுபிறப்பிலாக்கி மாற்றி, உண்ண துண்ணும் அருளமுதூறல் ஞானப்பால்- முத்தரெல்லாம் அமுதருந்தும் கொங்கையாகிய ஒரேஸ்தனப் பால்- தந்து ஊட்டி வளர்த்தோம்- வளர்க்கின்றோம். அதை அருந்தியதால்தான் உருமகால தவம் முடிந்து "தெய்வம் திரைவிலகி வரப்போகிறார்கள்" என அறிவிக்கும் துந்துமி முழக்கம் கேட்டதும் ஓடிவந்து- எம் தவத்தில் பங்கு பெறவேண்டிக் கையேந்தி நிற்கிறீர்கள். இப்படி, இந்த எல்லையில் இந்தச் செயலடையாளம் நிகழும்போது தரிசனைக்கு வருகிறவர்கள் 'முனிவர், நவனாதசித்தர்' என்று புசுண்டர்பிரான் போற்றிப் புகழுகிறார்கள். அவர்கள் உங்களைப்போல எம்மை இப்படி நேர்நேராய்த் தரிசித்தா இந்தச் செய்யுளை எழுதினார்கள்? ஆதிமூல ஆவி சொன்னதைக் கேட்டு எழுதினதுதானே அது- அவர்களுக்கு ஏன் இந்த ஆத்திரம்? பதியெமதும் பூர்த்திசெய்வாரென அவர்களும் எதிர்பார்த்துக் கூறுகிறார்கள் என்றால் இந்தத் தெய்வீக வசந்தம் இந்தப் பூமி கண்டிராத ஒரு புதுமையல்லவா?

"இதுதானே சொன்னதுவும் யான்வ ரைந்நேன்
இகத்தினில் அத்தனே வரைவ துண்டு
அதுதானே சுயமாகும் முன் பாகத்தில்
ஆருமே னம்புதற்குப் பின்னேர் சாக்ஷி
எதுதானே என்றுதேடில் இது தானய்யா
எல்லார்க்கும் மனதொப்ப அவரின் சக்தி
புதுமார்க்க மாவதுவில் மனம்ப திந்து
புதுமை பார்க்கக் கார்த்திகைனுள் கேளுமய்யா"

என்ற புசுண்டர்பிரானின் மற்றொரு செய்யுள் சபையில் ஓதப்பெற-

ஆண்டவர்கள்:- எமது காலம் வரையிலும் எல்லா மகத்துக்களும் உடல் பொருள் ஆவி மூன்றையும் கொடுத்துத்தான் இந்த ஞான முத்தலைப் பெற்றார்கள்- ஆனல் 'ஙம் காலம் கடைனளாகி விட்டதே- னம் கையிலுள்ள தவத்தைப் போட்டு ஸிரப்பியாவது இவர்களைக் காப்பாற்றுவோம்' என முடிவு கட்டினேம். காலகாலங்களாக இருந்த தேவ சட்டத்தை மாற்றினேம். இப் பூமி காண இந்த அருஞ்செயலையே- புது மார்க்கம் என அவர்கள் கூறியுள்ளார்கள். இந்த வருகா வருகையாகிய புத்தப்புதுச் செயலைக் கலியன் மனம் ஒப்பிக் கைப்பற்றி அவனும் ஈடேற்றம் பெற வேணுமே என்ற ஆத்திரத்தில் "ஆருமே னம்புதற்குப் பின்னேர் சாட்சி" என்று திட்டம் சமைத்துச் சொல்லுகிறார்களே- இது யாருக்காக? எம் தேவ மணிச்சூலில் பிறந்துவிட்ட னீங்கள்- ஒருதலைகூடத் தவறிடாது- வெற்றிமேடேற வேண்டுமென்ற பெருங்கருணைப் பெருங்கவலையால் இவ்வண்ணமாகத் தூண்டித் துருவிக் காட்டி உங்களுக்கெனவே தீர்க்கதரிசனமாக வரைந்நனுப்பியுள்ளார்கள். இப்பத் தெரிகிறதல்லவா அவர்கள் உங்கள் பால் வைத்துள்ள ஆத்திரம்- அவர்களுக்கே அந்த ஆத்திரமென்றால், னீங்கள் எந்த ஆத்திரத்தில் ஒட்டி னின்று இந்த யுகத்தவ வாழ்வைப் பற்றிப்பிடித்து முன்னேற வேண்டும்?

மனிதனாகப் பிறந்து, முதுமையடைந்த ஒரு கிழவனின் கைகால்களில் வலு இருக்குமா?, அவனது அறிவு தெளிவாயிருக்குமா? இருக்காது- கருவிகள் தேய்ந்துபோய் அறிவு மழுங்கி சொன்னதையே சொல்லிக்கொண்டு பேசினதையே பேசிக்கொண்டுதான் இருப்பான். அறுபது வயது தாண்டினாலே, இந்தக் கதியாய் அறிவு முதலிய எல்லாம் கழன்று போவதைக் காண்கிறோம். அப்படியிருக்க இதோ நீ பார்க்க- ஒரு மனித தூலம் 116 வயதாகியும்- எவர் அறிவும் எட்டி ஏற முடியாத ஏற்றத்தில் ஏறிநின்று தங்கள் தனித்தலைவராகிய பேரறிவாகாரத்தை உன் செவி கேட்கச் சதா வருஷித்துக் கொண்டிருக்கிறதே- தொனியின் கனம் சிறிதும் மாறவில்லையே? இதுவரை யாரும் கண்டும் கேட்டும் அறியாத இந்த அருங்காரணச் செயலை மட்டுமா நீங்கள் இங்கே பார்க்கின்றீர்கள்- உங்கள் முன்பாக தரிசனையிலிருக்கும் இந்த உடலுக்குத் தூல உணவு உண்டா? உறக்கமுண்டா? இரண்டுமில்லை- அப்படியிருக்க, இந்தத் தூலம் எப்படி நடமாடிக் கொண்டிருக்க முடியும்? இந்தப் பூமி தோன்றிய காலம் முதல் இவ்வாறான ஒரு அதிசயம் நிகழ்ந்தது உண்டா? இல்லை. இதைப் பற்றி ஏன் உங்களுக்குப் பேசவரவில்லை?

இம்மட்டுமா- இந்த அதிகாரணங்கள் எல்லாவற்றிற்கும் மேலாக- பிரத்தியட்ச நடைமுறைத் தனிச்செயல் ஒன்று மகா மகா உன்னதமானது இங்கு நிகழ்கிறதே- செத்து நாறிப்போக இருந்தவனை நாறாமல் தேவ மணத்துடன் ஜீவப் பிரயாணம் செய்ய வைக்கிறதே- மேலும் எல்லோரும் பார்க்க மரணித்து அடக்கமாகி பிரேத நிலையில் இருப்பவனைத் தீர்த்தம் சாப்பிடும்படித் தனது தவ அதிகாரத்தால் செய்கிறதே! இவ்வாறான காண்டற்கரிய அதிசயங்களை இப்படி விளக்கத்தோடு உங்கள் வாய் எடுத்துப் பேசினால் என்ன? நீங்கள் பெற்றுள்ள பெரும் பேற்றை இப்படிப் பேசினால், உங்கள் காஷாய ரக்ஷிப்புச் சிராவுடன் உங்களைக் கண்ட

பேர்கள் என்ன உன்னதத்தில் உங்களை ஏறிட்டுப் பார்ப் பார்கள்? என ஆண்டவர்கள் வினவ

சபையோர்:- "இது நேரம் முதல் நுங்கள் அப்படியே பேசுகிறோம். எங்கள் கையிலுள்ள மெய் முதலின் பெருமையை எடுத்துப் பேசும் முறையைக்கூட எங்களுக்குக் கற்பிக்கும் பெருங்கருணையை என்னென்போம் தெய்வமே! என்று கூறி அனந்நாதி தேவகுல மக்கள் கண்களில் நீர்பெருக நின்றார் கள்.

தொடர்ந்து ஆண்டவர்கள்:- உன் தலையில் நும் பதித்து வைத்துள்ள ஜீவமாணிக்கம் உலக மக்களுக்கு உண்டா? இல்லை. ஒரு ஏழையைப் பார்த்து 'உன் நுவைக் கொடு பத் தாயிரம் ரூபாய் தருகிறேன்' என்றால் அவன் அதைத் தரு வானா? மாட்டான். அது வேண்டாம்- ஒரு லக்ஷ ரூபாய் தரு கிறேன் உன் கையைக் கொடு என்றால் கொடுப்பானா? கொடுக்கமாட்டான். இப்படியாக மனித தேகத்திலுள்ள ஒவ் வொரு அங்கக் குலங்களும் என்ன கிரயமுடையதா யிருக் கிறது. பார்க்கும்போது உலகத்தில் யாராவது ஏழை இருக் கிறானா? இல்லை. இவ்வாறு பெருங்கிரயம் தாங்கி நின்ற உன் அங்கக் குலங்கள், உன் ஜீவன் இந்நக் கூட்டைவிட்டுப் பிரிந்துவிட்டால் ஏதாவது கிரயம் பெறுமா? உன் அங்கக் குலங்கள் அனைத்திற்கும் இப்படிப் பெரு மதிப்பு அளந்து கொண்டிருக்கும் உன் ஜீவனின் கிரயம் என்ன? எம் முயற்சி வல்லவராயினும் அந்த ஜீவ மாணிக்கத்தை நேருக்கு நேர் தெரிசிக்க முடியுமா? முடியாது. தன்னதாகப் பெற முடியுமா? பெறமுடியாது. "தன் சொந்த முயற்சிகொண்டு எவரும் எக்காலத்தும் பெறவே முடியாத அந்த ஜீவப்பொருளை எங் கள் சொந்தக் கைப்பொருளாக ஒருவர்கள் தர நுங்கள் பெற் றிருக்கிறோம். இவ்வாறான தவோன்னத தெய்வத்தின் பிள்ளை கள் நுங்கள்" என்று இங்குள்ள நடைமுறைச் செயல்களை

னீங்கள் எடுத்துப் பேசினல், கேட்கிற மக்கள் உங்களே என்ன மேன்மையான தவமுடையவர்கள் என்று கவனித்துப் பார்ப்பார்கள்- இதைக்கூட ஞய் உங்களுக்குக் கற்பிக்க வேண்டியிருக்கிறது!

இந்தப் படைப்பிலுள்ள எண்பத்தி ஞன்கு லூருயிரம் ஜீவராசிகளும், இறைவன் அவைகளுக்கு விதித்துள்ள அதன தன் கடமைகளே முடித்துவிடுகின்றன. ஆனல் மனிதன் மட் டும் தனக்கு விதித்துள்ள கடமையாகிய தன்னேயறியும் தவ முறையில் தலேயிட்டு வாழும் ஜீவசுயராஜ்யத்தைக் கைப்பற் ருமல் எமன் கையில் சிக்கி ஞறிச் சாகிருன். இறைவன் எத்தனே ஞளேக்கு இந்த அழிம்பு அழி செயலேப் பார்த்துக் கொண்டிருப்பான்? இவனுக்கு இனியும் ஏன் உணவுப் பொருட்களே விளேயச் செய்து கொடுக்கவேணும் என்று அவன் னினேக்கக் கூடாதோ?

மெய்யிற்கு ஆகக்கூடிய தலேகள் இன்னும் சில அங்கு மிங்கும் இருக்கின்றன என்று பொறுமையாய் இருக்கின்ருரோ என்னவோ? அதலுல்தான் அரைகுறையாக இன்னும் விளேந்துகொண்டிருக்கிறது. அந்தத் தலேகளும் இந்த எல் லேக்கு வந்து சேர்ந்துவிட்டால் பிறகு என்ன ஆகுமோ?

4.

இந்த மனிதன் ஒரு மாட்டைப் பழக்கிப் பந்தயத்தில் விட்டுக் கீர்த்தி அடையாக் கூடியதாக அதை ஆக்கிவிடுகிருன். சிதறி அழிந்து போகக் கிடந்த பஞ்சை லூலாக்கி அழகிய ஆடையாக ஆக்கிவிடுகிருன். யாரும் கவனிக்காது குப்பை மேடாகக் கிடந்த ஒரு இடத்தில் ஒரு அழகிய கட்டிடத்தைக் கட்டி அதை மதிப்புடைய ஒரு மாளிகைக்கு இடமாக ஆக்கி விடுகிருன். இப்படியெல்லாம் மட்டமானதையும் உன்னத

மானதாக ஆக்குகின்ற அறிவு வல்லபம் பெற்ற இவன், தன் தலையை எமனிடம் சிக்கக்கொடுத்து, நாறிச் செத்து, அவமானப்பட்டு னரகிற்கு ஆளாகிறானே- சரியா? இதை னினைத்துப் பார்க்கிறவர்கள் யாராவது உண்டா? இல்லை. னினைத்துப் பார்க்கவே ஆளில்லாத போது, பிறருக்கு இதை எடுத்துச் சொல்லி அறிவுறுத்த இன்னெடிய உலகில் யாராவது இருக்க முடியுமா? இருக்க முடியாது- இல்லை.

எமது தூலதேக மாசு முற்றிலும் மாறி பரிசுத்தமாக ஆனபின்னரே பிரணவதேகத்தை நாம் தொட்டோம். உடனே கோடி சூர்யப் பிரகாசக் கதிர்களுக்கிடையே நாம் போய் மாட்டிக் கொண்டோம். அந்ந அழியா இன்பத்தில் நாம் சிக்கிக் கொண்டோம்.

ஒரு னிலத்தை ஒருவன் வாங்குகிறான். அது வெறும் மண்தானே. அதை உழுது பண்படுத்தி, எருவிட்டு, விதை போட்டு, னீர் பாய்ச்சிக் காலமெல்லாம் தன்னதென்று உரித்தாகப் பாடுபட்டால்தானே பலன் கிட்டும். ஜீவ பூமியாகிய னிலத்தை நாம் தர னீங்கள் வாங்கிக் கொண்டீர்களே ஒழிய மேற் கூறியபடி அதில் உழுது பயிரிடவில்லை- பாடுபடவில்லை. அதனால் பலன் கையிலில்லை என்றால் எமன் சும்மா விடுவானா? விடமாட்டானே- ஆகவே எம் மக்களாக ஏற்றுக்கொண்ட உங்களுக்கு எம்முடைய தவப்பாட்டைப் போட்டு, நாம் அந்ந னஷ்டத்தை னிரப்புகிறோம். அதனால்தான் செத்ததும் நாறிப் போகிற உடல் நாறாமலும், விறைத்து விறுவிறுத்துப் போகிற உடல் வாழைத்தண்டு குழைந்து துவள்வதுபோல் துவண்டும், சூடு மாறாமலும் இப்படியே பத்து தேவ அடையாளங்கள் கண்ணேரில் காக்ஷியாக னிற்க, எம் கையிலானவர்கள் பிரயாணமாகிறார்கள். இப்படி இந்நப் பரிசு பதம் பெறுகின்ற உங்களைப் பார்த்தே வேதச் செம்மலாகிய புத்தர்பிரான்

"காமவிதேக இன்பங்களை னுகருகிற ஒரு சுவர்க்க லோகத்து வாசிகள்" என்று தங்கள் தீர்க்க தரிசனத்தில் கூறுகிறார்கள். அது சரிதானே!

5.

"அறம் பொருள் இன்பம் வீடு என்று மனிதனைப் பிறந்தவன் பெறவேண்டிய புருஷார்த்தங்கள் நாலு. ஆனால் வள்ளுவர் கோமான் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப் பால் என்று மூன்று புருஷார்த்தங்களைத்தானே சொல்லி யிருக்கிறார். வீடடைதலாகிய மோக்ஷத்தைப்பற்றிச் சொல்ல வில்லையே"–என்று ஒருவனைக் கேட்டால், அவன் விழிப்பான்.

ஒரு மனிதனின் கால், உடல், தலை ஆகிய மூன்றின் வர்ணனை சொன்னபின் அந்த மனிதனுடைய வர்ணனையைத் தனியாகச் சொல்ல வேண்டுமா? சொல்ல வேண்டியதில்லை. அறம் பொருள் இன்பம் மூன்றினால் அடைகின்ற பலன் தானே வீடு!

6.

பூவானது மொட்டாயிருக்கும்போது அதற்கு வாசனை இல்லை. ஆனால் அது இளகி மலரும்போது வாசனை வருகிறது. அதுபோலவே எமது தவ ஏற்றத்தால் எம்முடைய உடலி லுள்ள எலும்புகள் துவண்டு இளகி, அகக் கருவிகள் மாறிய தால்தான் தேவ மணம் வீச நிற்கிறது. "உள்ளம் உருகாத்து-கள்ளம் கருகாது- ஞானவெள்ளம் பெருகாது" என்றது ஆன்றோர் தீர்ப்பு. ஆகவே நீங்களும் மேற்சொன்ன அந்த உன்னத பதனிலையை அடைய உங்கள் உள்ளம் உருக நிற்பதுவே முதற்படி.

7.

ஒருவனுக்கு வயது அறுபதாகி விட்டால், 'தனக்கு மேல் தெரிந்தவர்கள் யாருமில்லை– எல்லோரும் தனக்கு மட்டமே' என்ற எண்ணம் வந்துவிடும். தன்னறிவிலே சாய்ந்து கெட்டுப் போகவே அவனது அறிவு தூண்டும். ஆகவேதான் பெரியோர்கள் இவன் ஞானத்தை அடையும் கடைசி வரம்பாக அந்த அறுபதாவது வயதை னிர்ணயித்துள்ளார்கள்.

எவரும் கடைசியில் எமன் கையில் சிக்குகிறவர்கள் தானே. எமன் யாரையும் ஏழை என்று இரங்கி விட்டுவிடப் போவதில்லை– பணக்காரன் என்று பயந்து ஒதுங்கப் போவது மில்லையே–

ஒருவன் இங்கு ஒரிரு தடவையாவது வந்து புழங்கி எம்முடைய வார்த்தைகளைக் கேட்டு, மரணத்திற்குப் பின் வரவிருக்கும் னரக அவஸ்த்தையைப் பற்றிய ஆத்திரம் அவனுக்கே வரும் வரையில், எவரையும் னீங்கள் னம் சபையில் சேர்த்துக்கொள்ளும்படிக் கேட்க எம்முன்னர் கொண்டுவரக் கூடாது.

8.

முன் சென்ற காலங்களில் ஆண்கள் மட்டும்தான் பிரம்மோபதேசம் பெற்றுள்ளார்கள் என்பதற்கு அடையாளமாக செட்டியார், பிள்ளை, முதலியார், ஐயர், ஐயங்கார் முதலிய சாதிப் பெயர்கள் ஆண்களுக்கு மட்டும் தீக்ஷா மகுடமங்களாகத் தரப்பெற்றுள்ளன. ஆனல் எல்லா சாதியில் உள்ள பெண்களுக்கு, 'அம்மா' என்ற ஒரே பட்டம்தான் உள்ளது என்று சபையில் பேசப் பெற்றபோது–

ஆண்டவர்கள்:- முன்ன காலங்களில் யாராயிருந்தாலும் ஒரு சற்குரு சன்னிதியில் தங்கள் உடல் பொருள் ஆவி மூன்றையும் தத்தம் செய்துதான், இந்நத் தெய்வ முதலைப் பெற்றார்கள். ஆகவே அவர்களுக்கு அடிமையாயிருந்த மனைவிக்கும், தங்கள் கையில் பெற்றுள்ள தவ ஏற்றத்தின் பவர் எட்டிப் பாயும். ஆனால் எம்முடைய காலத்தில் அந்த மெய்ஞ் ஞான சட்டத்தை மாற்றி உடல் பொருள் ஆவி தத்தம் பண்ணுவதற்கு முன்பாகவே- கலியில் அந்த ஆர்வ திடத்தை எதிர்பார்க்க முடியாது என்று தெரிந்தே- வம்படி பண்ணி அழைத்து பிரம்மோபதேச எல்லையில் உன்னைத் தூக்கி வைத்துவிடுகிறோம். ஆகவே உன்கையில் எந்தத் தவப்பலன் இருக்கும் என்று எண்ணிப்பார். நீ பெறுவதே பிச்சை, மனைவிக்கு எங்கே தரப்போகிறாய். ஆகவே அவளையும் மெய்யில் ஏற்றி எம் தவத்தை இட்டு நிரப்ப வேண்டியுள்ளது. எனவே தான்- எமது மெய்க்கல்விக் கலாசாலை-பொன்னரங்க திருச்சன்னிதிக்கு ஆட்பட்டு, வேத வியாக்யான விற்பனங் நடந்த மந்திரோற்பன்ன சூக்ம ஆரூர்ச் சுலாம் ஏற்று நிற்கும் சௌபாக்கிய ஜெயசீலர்களுக்கு அனந்நர், அனந்நகி என்னும் பரிசுப்பட்டம் மெய்ம்மை இங்கே வழங்கப் பெறுகிறது.

'ஆரணத்தின் சுவையை அறுசுவைக் கெடுத்தவுடல்
பூரணத்திற் கெங்கே பொருந்துமடி பூங்கிளியே'

என்று கலிக்கடையிலுள்ள மனிதனுடைய நிலையை அறிந்து ஆதினுளையில் எழுதி வைத்தனும்,

'மறுத்து விடத்துணியர் மக்களுக்கும் மெய்ஞ்ஞானம்
இருக்கு தொருவிசளம் இங்குரைப்போம் பூங்கிளியே'
'தான் தேடி வைத்திருக்கும் தன்குடும்பத் தோர் பொருள் போல்
வான்கோடி மெய்க்குருவை வைத்திடுவான் பூங்கிளியே'

என்று அவன் ஜீவ ரக்ஷிப்புப் பெறுவதற்குரிய வழிபாட்டை யும் கூறி வைத்துள்ளோம்.

ஓர் பொருள், அதாவது குடும்பத்தில் தான் தேடி வைத்துள்ள பத்துப் பொருள்களில் ஒரு பொருளாக இதை வைத்துக்கொண்டால் போதும் என்றும் சொல்லியுள் ளோமே- அது எப்படி ஜீவரக்ஷிப்பு அளக்கும் என்று நினைக் கிறீர்களா? அவன் உயிரைக் காவு கொடுத்துத் தேடி வைத் துள்ள உலகப் பொருள்களாகிய மற்றைய ஒன்பதும் எமன் சந்திப்பில் அவனைக் கைவிட்டு விடும். இந்த ஒன்று- நித்திய மெய்யாகிய இது, அவன் தலையைக் காக்கநிற்கும். ஆகவே இது ஓர் பொருள், ஒப்பற்ற ஒரு தனித்த உதவிப் பொருளாக நின்று அவன் ஜீவனை ரக்ஷிக்கும்.

'அப்பன் என்னுடை அன்னை தேசிகன்
செப்பி லென்குல தெய்வ மானவர்
துப்ப னென்னுயிர்த் துணைவர் யாதுமோர்
தப்பி லன்பர்சேர் தனிகை வள்ளலே'

என்று வரும் அருட்பாவில், 'யாதும் ஓர் தப்பில் அன்பர் சேர் தனிகை வள்ளலே' என்று வடலூர்பிரான் கூறியுள்ளார்கள்.

'தேகமுடன்பொரு ளாவிபொனக்கிலே உனதேஉன தெனக்' கெஞ்சி மன்றாடி, சேவைதிருக்கயி லாயபதிக்குடித் தலைவரின் செவ்விய கிரணத் திருவடிகளில் அவற்றை சமர்ப் பித்து, அணுக்கூடத் தப்பில்லாத ஓர்மனக் கூரோங்கி னிலைத்துநின்று இந்தத் தெய்வமுதலைப் பெறவேண்டும் என்ற விதிமுறைதான் எம்முடைய காலம்வரை இருந்தது. அது இப்ப இல்லை- முடியாது 'காலம் கடைனாகின ஆலம் அழி னேரம் ஆகி விட்டதே' என்று கால கால் மிருந்த தேவ சட்டத்தை யும் மாற்றி எம் ஓயாத் தவப்பாட்டால், கர்மந்

நுடைத்துத் தர்மக் காட்சியை அளக்கும் இந்ந ஊரை உண்டாக்கி, எமது தெய்வீக யுகப்பரிசு மாட்சி ஆட்சியை எல்லோருக்கும் வாரி வழங்கி வருகிறோம்.

இதைச் செவியேற்ற அனந்நாதி தேவர்கள்:-

பொத்திய மலப்பிணி புழுக்குரம் பைதான்
சித்தியல் சுத்தசன் மார்க்கச் சேர்ப்பினல்
னித்தியம் ஆகியே னிகழும் என்பது
சத்தியம் சத்தியம் சகத்து ளீர்களே
ஓவுறு துயர் செயும் உடம்புதான் என்றும்
சாவுறு தின்பம் சார்ந்து வாழலாம்
மாய்வுறு சுத்தசன் மார்க்க னன்னெறி
மேவுறுர் தங்களே விடுக னெஞ்ஞமே

என்று திருவருட்பிரகாச வள்ளலாரின் திருவருட்பாப் பாக்களில் தீர்க்கதரிசனமாகக் கூறிவைத்துள்ள இவற்றை ஓதினர்கள். அது கேட்டு

ஆண்டவர்கள்:- மண்ணில் விண்ணிலும் என்னையாக்கிய மாசறுமென் தேசிகராகிய தனிகைமணிப்பிரான் தங்கள் திருமணி வினல் 'வாக்மி மார்க்க னன்னுதர்' என்று எமக்குச் சூட்டிய னுமத்தை, என்ன தெய்வீக அன்பு பிறங்கும் மரியாதையுடன் "மார்க்க னன்னெறி" என்று சத்திய சுத்த அறிவுடையோர்க்குமட்டும் மின்னரித் துலங்கும்படித் தங்கள் தேவமாமறையில் பதித்து வைத்துள்ளார்கள் பார்த்தீர்களா? இது உங்களுக்கு ஆச்சரியமாகத் தோன்றவில்லையா!

9.

"உடலெடுத்துள்ள ஒவ்வொரு ஜீவனுக்குள்ளும் னின்று அதனதன் வேலையைச் செய்துவருவது ஆத்மா. அதனதன் தராதரத்திற்கு ஏற்ப கொசுவிற்கும், யானைக்கும், வண்ணைத்

திப் பூச்சிக்கும், ஊர்ந்து செல்லும் அட்டைக்கும் ஆத்மா அமைந்திருக்கிறது. உடலை வளர்க்கும் அளவில்தான் ஆத்மா அவற்றில் தங்கியிருக்கிறது. ஆனால் இந்த மனிதனிடத்தில் இவனுக்கெனத் தனிச் சீதனமாக அமைந்திருக்கும் ஜீவாத்மா வுடன் பரமாத்மாவும் அமைந்திருக்கிறது'' என்ற ஆண்டவர் கள் வாக்கியம்- திருவருட் கொரலிலிருந்து (பக்கம் 27) படித்து வரும்போது-

ஆண்டவர்கள்:- ஆறாவது அறிவு பெற்று, ஏழாம் பிறப் புடலம் எடுத்து, தன் ஜீவனை அறிந்த பிற்பாடுதான் ஜீவாத்மா மனிதனிடத்தில் இருக்கிறது எனச் சொல்லுதலே முறை. ஐயறிவு னுகர்ச்சியிலேயே கிடந்து ஆரூர்கிய தன் ஜீவ உலகுக்குச் செல்லுதற்கு இச்சைகூட வராது இருக்கும்போது, மாட்டுக்கு இருக்கிற ஆத்மாவை உடையவனாகத்தான் இருக் கிறான். அவனையே னரன் என்று வேதம் கூறுகிறது. தன்னு டைய முயற்சிகொண்டு எவரும் 'தன்' என்னும் ஆலயத்துள் ளிருக்கும் தெய்வீக உதயமாகிய பரமாத்மாவை சந்திக்க முடியாது. ஜீவன் கண்ட சென்மசாபல்ய பதனிலே பெற்று ஏறி னின்றவர்களாலும்கூட தன்னுள்ளே அந்த பரமாத் மாவை சந்திக்க முடியாது. அதற்கு பரமாத்ம சொரூபர், உன்னைப்போல் தூலத்திருமேனி ஏற்று வந்தால்தான் சந்திக்கமுடியும்.

ஆத்மா, அழி அவாவாகிய மனத்தோடிருக்கும்போது, பேய். னரன் என்று சொல்வது அந் னிலையில்தான். தன் ஜீவனை அறிந்தபின், ஜீவாத்மா என்று பேர் பெறுகிறது. அப்போது தேவன் என அழைக்கப் பெறுகிறான். னடமாடும் திருமேனியுடன் விளங்கும் குரு மகான்மியராகிய தேவாதி தேவனே பரமாத்மா.

ஆத்மா ஜலம் போன்றது. மலத்தோடு சேர்ந்தால் மலம். சந்தனத்தோடு சேர்ந்தால் சந்தனம்.

கலி என்ற அழி அவாவாகிய தன் ஆசையை, மாப் பொருளாகிய பரமாத்ம சொரூபரிடத்தில் வைக்கும்படி வாய்த்து, அவர்களுடைய அனுக்கிரகத்தால் தன் சொந்த ஜீவ உலகத்தை ஒருவன் சந்திக்கும்போது கலிமாப் பொருள் கைவரவாகிறது. அவனே ஜென்மசாபல்யம் பெறுகிறான். அப்படியான ஒரு பரமாத்ம சொரூபர் வாய்க்காவிட்டால், அழி அவா ஆசையாகிய மனப் பழி பார்க்கத் திமிரா இருளாக நின்று, கடைசியில் அவனை நரகில் ஆழ்த்திவிடுகிறது.

10.

ஆதிமுதல் 'எமன் எம் கை அடக்க' மென்பது எல்லோருக்கும் தெரியவரும். காமலி தேக இன்பங்களை நுகர்ந்து தொண்டு ஒரு தவமும் இல்லாதவர்களையும் எம் தவமுதலைப் போட்டு நிரப்பி, எமபாரை மாற்றி, ஜீவன் முத்தி அடைய வைத்துள்ளோம் - வைத்துக்கொண்டும் வருகிறோம். இவ்வாறு எமனை அணுகவிடாமல் விலக்கி, எமது தனித்த அதிகாரத்தால் செய்துவருவது பிரத்தியட்சம். நன்மையானதை இந்த அமலோடு நிகழ்த்தும் அது எமனின் சொந்த வேலையாகிய சங்காரத்துக்கு உத்திரவு கொடுத்துவிட்டால், அவன் இந்தப் பூமியை மட்டுமா - சந்திர சூரியாள் முதலிய சர்வத்தையும் சங்கரிப்பான். யாருடைய உத்திரவுக்கு இவ்வளவு காலம் அவன் அடங்கி இருந்தான் என்பது அப்போதுதான் தெரியவரும்.

11.

அபாயச் சங்கு ஊதப் பெற்றதும் உயிருக்குத் தப்ப யுக்திகள், ஏற்பாடுகள் எல்லாம் செய்துவைத்துக்கொள்கிறார்களே. 'பிரளய கால அபாயம் வருதே - அதனின்றும் தப்பித்துக்கொள்ளுகிற எல்லையைத் தேடி ஓடிவந்து அடைக்கலம் புகுந்து கொள்ளுங்கோ' என்று நித்திய சூரியர்க

ளாகிய அனந்நாதி தேவர்கள் நீண்ட எக்காள சங்நாதம் 1951ம் ஆண்டிலிருந்து ஊத ஆரம்பித்து, இந்த யுகத்தவக் கானில் ஊதிவருகிறார்களே - இப்பவே ஓடோடிவந்து தப்பிக்க வேண்டாமா? வானங்களிலுள்ள நட்சேத்திரக் கூட்டங்களைப் பிடுங்கி எறியப்படுகின்ற கோரம் நிறை அமளி நேரம் எழுந்த பிற்பாடு வந்து தப்பிக்க முடியுமா? இதை அறிவுடைய மக்கள் எண்ணிப் பார்க்கட்டும்.

12.

நம் ஆடுமாடு மேய்த்துக்கொண்டிருந்த இளமைக்காலத்திலே, எங்கள் ஊரிலிருந்த ஒரு மௌல்வி, 'நியாய மரணம், அநியாய மரணம் என்று மரணத்தில் இரண்டு உண்டு - நம் அநியாய மரணத்தில் சிக்காமல் நியாய மரணத்திற்கு ஆளாக வேண்டும்' என்று ஹதீஸ் சொல்லிக்கொண்டிருந்ததைக் கேட்டோம். கேட்ட அது நேரம் முதல், மரண அச்சம் எமது உள்ளத்தில் ஆணியாய்ப் பாய்ந்து பற்றி ஊன்றிக் கொண்டது. நம் எந்த வேலையைச் செய்துகொண்டிருந்தாலும், எம் எண்ணத்தில், 'இப்ப மரணம் வந்து சந்தித்துவிட்டால் நம்ம கதி என்ன' என்ற பயமே நிலவி எம் ஜீவனில் அது சதா சவுக்கடி கொடுத்துக்கொண்டேயிருக்கும். அந்த ஆத்திரமான எண்ண ஊனுதல்தான், எமது வள்ளற் பிரானைச் சந்தித்ததும் இந்த இகபோக சம்பத்துக்களாகிய சர்வத்தையும் விட்டுவிட்டு, அத் தெய்வத் திருவுருவே நமது கதியெனக் கடும்பிடிப் பற்றாகப் பற்றிக்கொண்டு அவர்களைப் பின்தொடர்ந்து செல்லச் செய்தது. அவ்வாறு சென்றதால் தான், எமனுடைய கோர அமளி ஆபத்தினின்றும் நம் தப்பித்ததோடில்லாமல் எம்மை அண்டி அடைந்த பல்லாயிரக் கணக்கான உங்கள் தலைகளுக்கும் எமனணுகா இந்த ஜீவ ரக்ஷிப்பு மெய் கிட்ட வாய்ப்பு ஏற்பட்டது. தரணியிலில்லாத் தனித்த மெய்ச் செயலுடைய 'மறலி கைதீண்டா சாலை ஆண்டவர்கள் மெய் மதத்'தையும் இக் கலியில் ஸ்தாபிதம் செய்துவிட்டது.

13.

‘உள்ளது நூறே ஆண்டு- மகா அருமையானதும் இறைவனால் இனமாகத் தரப்பெற்றதுமான அந்த நூறு வயதினைக்கொண்டு ஜீவ வியாபாரம் செய்ததில், கடைசியில் மோட்சம் உடன் பேச்சே வீணும், என்ற நஷ்டத்தைக் காட்டும் ஐந்நோகைநான் இறங்குகிறது’ என ஆதிமெய் உதய பூரண வேதாந்தம் ஞான முறையீட்டில் நம் தெய்வமவர்கள் வெளியாக்கி வைத்துள்ள தீர்ப்புச் செய்யுட்களைப்பற்றி சபையில் பேசப் பெற்றபோது

ஆண்டவர்கள்:- நஷ்டமா- ஏன்? நீங்காக் கொடிய நரக அவஸ்தையாகிய லாபமிருக்கே!

14.

நாடு செழிக்க ரஷியாவைக் கோரு என்று மக்கள் விரும்புவார்கள் என நமது ஆதி மான்மியத்தில் நாற்பது, நாற்பத்திரண்டு வருடங்களுக்கு முன்பே நாம் எழுதி வைத்தோம். இப்ப நம் நாட்டில் அது நிகழ ஆரம்பித்துவிட்டது. இதை நாம் எழுதும்போது இந்தியாவில் பிரிட்டிஷ் அரசல்லவோ இருந்தது!

15.

மனிதர்களுக் கெல்லாம் ஒரே அறிவு, ஒரே ஆற்றல் தான் இறைவனால் தரப் பெற்றிருந்தாலும், மெய்யான வழியில் அவை ஈடுபடுத்தப்படாததால், தாறுமாறாகச் சிதறிக் கெட்டு அழிந்துபோகிற செயலிலே முழுக்கமுழுக்கத் திருப்பி விட்டது. இந்த மல உடலை வளர்ப்பதிலும், இதன் சௌகரியப்பாட்டினைத் தேடி அலைவதிலும் அவை முனைந்துவிட்டது. மலத்தைத் தேடிப் பொறுக்கிக் குவிக்கிற செயலிலேயே திரும்பி, ‘நான் பொறுக்குகிற இடத்துக்கு நீ வராதே’ என்ற

சண்டையும், பொறுக்கிச் சேர்த்து வைத்திருப்பதில், 'இந்நா னீ கொஞ்சம் தின்னு' என்று தர்மம், உபகாரம் செய்வதும் ஆகிய இவை மண்பரப்பெங்கும் மலிவா மலிந்துவிட்டன. இதுதான் நீங்களிருக்கும் உலகம் ஐயா!

16.

'யானே பொய்யென் னெஞ்சும் பொய்யென் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதா லுன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கு
மானே யருளா யடியே னுன்னைவந் துறுமாறே'

என்ற மணிவாசகரின் திருவாசகப் பாசுரத்தைத் தெய்வ சன்னிதியில் தேவ்குல மக்கள் பாடிப் பேசிக் கொண்டிருந்த போது

ஆண்டவர்கள்:- அச் செய்யுளில் 'யானே பொய், என் னெஞ்சும் பொய், என் அன்பும் பொய்' என்று சொல்லி விட்டதால், வினையேன்- அதாவது பாவமே உருவானவன்- அழுவதும் படுசாமப் பொய்யல்லவா?

சபையோர்:- நங்கள் இப்படி நினைத்துப் பார்த்ததில்லை தெய்வமே!

ஆண்டவர்கள்:- அந்தப் படுசாமப் பொய்அழுகை எப்படி மெய்யைத் தந்தது? 'உன்னைப் பெறலாமே' என்று சுட்டிக் காட்டும்படி அவர்களின் கண்முன் நிற்கும்- மெய்ப் பொருளே திருமேனி தாங்கி வந்திருக்கும் தேவ ரூபமாகிய ஒரு குரு மூர்த்தத்தின்- திருச்சன்னிதியில் அவர்கள் அழுது நின்றதால், அத் தேவரூபம், 'அவனிடத்தில் உள்ளது அது தானே' என்று இரங்கி அப்பொய்யான அழுகையே மெய் யானதாக ஏற்றுக்கொண்டு, தன் கையகத்திலுள்ள மெய் யருள் வல்லபத்தை வழங்கி அவர்களைத் தன்பால் வந்துறச்

செய்துவிட்டது. யான் என்றிருந்த அவர்களின் உயிர், நெஞ்சு என்று சொல்லப்பெறும் அவர்களின் நினைவு, இன்னும் அவர்களின் ஆற்றாமையால் ஏற்பட்ட அழுகை முதலிய யாவும் அத்தேவ சந்திப்பு வாய்ப்பதற்குமுன் படுசாமப் பொய்யாகவே இருந்தன. ஆனால் யாவற்றையும் மெய்யாக ஆக்கும் ஒரு மெய்த்திருமேனியரின் அளப்பரும் தெய்வத் திருமலி உதவிகொண்டு மேற்சொன்ன அந்த நினைவு, அன்பு, அழுகை முதலியன யாவும், அழியாத மெய் என்னும் நித்தியத்திற்கானதாகப் பிரட்டி ஆக்கப்பெற்றன.

17.

எமது ஐயனைப் பிரிந்து, யுக இறுதி நீதித் தீர்ப்பு வேலையை அவர்களின் ஆக்ஞையின்படி எம் சிரமேற்று ராஜகெம்பீரம், திருப்பத்தூர், கீழச்சேவல்பட்டி, தேவகோட்டை முதலிய இடங்களில் தங்கித்தங்கி நன்னெறி அழிக்கும் வின்ன வெங்கலியை மாற்றி, எமது மெய்வழியை நிலைநாட்டப் பிரசங்கம் செய்துவரும் காலத்திலே, நீண்ட சிகை சடாமகுடத்துடன் ஒரு லங்கோடு, ஒரு யோகத் தண்டு, கவுன் உடை தரித்து கால் நடையாகவே எங்கும் போவோம், வருவோம். எமக்கெனத் தங்க ஒரு இருப்பிடமோ, குடிசையோ கிடையாது. யாராவது காணிக்கையாக ஏதாவது பணம் தந்தால் 'இந்தப் பணத்தை நம் எங்கே வைத்துக்கொள்வது- நீயே வைத்துக்கொள்' என்று அவர்களையே வைத்துக் கொள்ளச் சொல்லிவிட்டுப் போய்விடுவோம். இப்படியே பத்துப் பன்னிரெண்டு ஆண்டுகள் ஓடின. ஓரிரு பிள்ளைகள் கூட இந்த மெய்யில் சேரவில்லை. 'ஏன் சேரவில்லை?' என்ற காரணத்தை நினைத்துப் பார்த்தோம். எம்முடைய ஏழை பரதேசிக் கோலத்தைக் கண்டுதான் மெய்யிச்சையுள்ள பலரும்கூட நம் பக்கம் வர நாணி அஞ்சுகிறார்கள் என்று கண்

டோம். ஆகவே முதல்முதலில் சிவகங்கை அரண்மனையில் பணக்கார வேடம் போட்டுக்கொண்டு மேடையேறிப் பிரசங்கம் செய்தோம். அதற்குப்பின் தான் மக்கள் அச்சமுணமின்றி எம்மை நெருங்கிக் கூட்டங் கூட்டமாக வர ஆரம்பித்தார்கள்.

கலியன், தன் உடல் பொருள் ஆவி மூன்றையும் காவு கொடுத்துச் சம்பாதிக்கும் காசு பணத்தைத் தன் உயிர் போலக் கவ்விக்கொண்டிருப்பதைக் கண்டோம். ஆகவே தான், உடல் பொருள் ஆவிக்குப் பதில் அவன் உயிராகப் பற்றிக்கொண்டிருக்கிற பணத்தில், ரூ50-ஐ, சபையில் சேர்ந்து நிரந்தர அங்கத்தினராயிருக்க ஜீவிய சந்தா கட்டணமாகக் கட்டச் செய்தோம். 'தான் வருந்தித் தேடாத பொருள் தங்கமாகவே யிருந்தாலும் அதற்கு மாத்துமில்லை உரையுமில்லை' என்ற அலட்சிய புத்திதான் கலியனுக்கு இருக்கும். நிஜ ஒட்டு வராது. ஆகவேதான் நும் இந்த யுக்தியை எடுத்தோம். எமனனுக்கா சத்திய பரிசுத்தச் செயலாகிய இந்தப் பரிசுபத அதிசோபன மெய்யைப் பெற இவன் தலையையே வெட்டிக் காவு கொடுத்தாலும் போதுமா?

சபையோர்:- 'போதாது- பத்தாது. பேரிரக்கத்தால் தெய்வமவர்கள் எடுத்து வைத்துள்ள இந்தக் காருண்ய எடுப்பு- மெய்ஞ்ஞான வலை விரிப்பின் அருங்காரண அதிசயச் செயல்- இப்பத்தான் எங்களுக்குத் தெரிய வந்தது' என்று ஆரவாரித்து ஆனந்தக் கண்ணீர் பொழிய நின்றார்கள்.

18.

இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் பல பஞ்ஞாலைகளுக்கு அதிபரும், கோடீஸ்வரப் பிரபுவுமாகிய ஒருவர் தரிசனைக்கு வந்திருந்தபோது

ஆண்டவர்கள்:- மெய்யில் அலக்ஷியமும், பொய்யில் மூர்த்தண்யமான லக்ஷியமும் கொண்டிருப்பதுவே பிரபுத்

துவம். எமன் கையில் மாட்டவைத்து உன் உயிருக்கு அது உலை வைத்து விடுமே ஐயா! உஜார், நீங்கள் ஒரு பிரபுதான்-பிறருக்கெல்லாம் தர்மம், சேவை என்று உங்கள் எண்ணத்தில் பூக்குகின்ற சகலவிதமான உதவிகளையும் அளக்கும் மகாப் பிரபுதான். ஆனால் 'தன் உயிருக்கு, தன் ஜீவனுக்கு வேண்டியது என்ன? அதை எங்கு எப்படிச் சம்பாதித்து செல்வந்தனாகத் தான் ஆவது' என்று தெரியாத அவல நிலையில் இருக்கிறீர்கள். அப்படி இருக்கலாமா? யோசித்துப் பாருங்கள்!

19.

வியன்னா முதலிய வெளிநாடுகளுக்குச் சென்று பட்டம் பெற்ற கண் டாக்டர் ஒருவர் வந்திருந்தபோது,

ஆண்டவர்கள்:- உன் உயிர் உன் சொந்தச் சொத்து தானே? ஆம். அது உன்னிடத்தில் இருக்கும் இடம் தெரியுமா? தெரியாது. அதனால்தான் எமன் உன்னிடத்திலிருந்து அதை லேசாகப் பறித்துக்கொண்டு போய்விடுகிறான். உயிரைக் கண்டு, அது இருக்குமிடம் தெரிந்து, அதன் மேல் கவனமாயிருந்தால் அதை இன்னொருவன் கைபோட்டுவிடாமல், திருடாமல் காப்பாற்றுவாயல்லவா? உன் உயிரை உனக்கு அறிமுகப்படுத்தி வைப்பதுவே எம் பிரம்மவித்தைச் செயல். அந்த மெய்க் கல்வியையே எம் தேவ மக்களுக்கு நாம் கற்பித்து வைத்துள்ளோம்.

திருப்பரங்குன்றத்தில் தவத்திலிருந்த காலத்தும், பிறகு தவம் முடிந்து மக்களைக் கூட்டிச் சேர்க்க வேண்டியதாய், ஊர் ஊராய் எமது வாடாநெறி ஏற்ற மெய்வழியின் ஆரம்பப் பிரச்சாரம் செய்துகொண்டிருந்த காலத்தும், உணவுக்குப் பிறரை எதிர்பாராமல், எங்கும் முளைத்துக்கிடக்கும் நாகதாளியின் முள்ளைச் சீவி நீக்கிவிட்டு அதைச் சாப்பிட்டுவந்தோம். அப்படி அதைச் சீவித் தின்ற கத்தி பிறை வடிவமாகத்

தேய்ந்துபோய்விட்டது. இப்போது எமக்கு வயது 114 ஆகிறது. இவ்வளவு வயதிற்கும் நாம் சாப்பிட்டு முடித்திருக்கக் கூடிய உணவு ஒரு அளவு இருக்குமல்லவா? அதில் 37 வருட உணவுதான் நாம் சாப்பிட்டுள்ளோம். மீதி உணவைச் சாப்பிட்டு முடிக்கும் கால வயதைத் தவ வரவுக்காகச் செலவு செய்து, இச் செகம் உய்விக்கும் எமது மெய்ம்மை னீதி அருள் பாலிப்பு வேலைக்கென்றே தங்ஙிரயம் செய்துவைத்திருக்கிறோம். (தம் தேவகுல மக்களைக் காட்டி) இந்நா அதன் பலனைப் பெற்று எமனின் பேராபத்திலிருந்து தப்பித்த தலைகள். இந்த ரகசியம், இன்றுதான் வெளியாக்கப் பெற்றது என்று உனக்குத் தெரியாது.

20.

அனுக்கிரகம் என்பது இன்ன செயல் வல்லபம் என்று எம் மக்களைத் தவிர மற்றையோருக்குத் தெரிய வராது. மனுக்கோல மெடுத்த எல்லோரையும் ஆட்டிவைக்கின்ற ஊனக் கிரகங்கள் ஒன்பது பேர்களையும் அழித்து, அணுத் தூளாக்கி, அருள் வருஷிப்பை மக்கள் தலை செழிக்க அளக்கும் ஏக வியாழனை மாற்றிக் கைவசத்தில் வைத்துக்கொண்டுள்ள, யாரும் எட்டி ஏற முடியாத தவ விளைவேற்ற பிரம்மாதிக்கச் செயலே, அனுக்கிரகம்.

இல்லறமும் கிரகஸ்தன் செயல்வெவ்வேறும்
எடுத்துரைப்போம் கேள்மகனே இன்பமாக
இல்லறத்தின் அகண்டமுடிச் சுடர்தேகத்தில்
இருப்பவர்க்கு னவக்கிரக அதிகாரங்கள்
செல்லாது செல்லுதற்கோ ரிடமங்கில்லாத்
தேகியவர் ஒளிபாய்ந்து குணம்வேறுகி
சொல்லுமிவர் சொற்படியே கிரகம்கேட்கும்
சுருதிவிதி கடந்தகிர கஸ்தனமே - என்ற

ஆண்டவர்கள் அருளிச் செய்துள்ள அமுதகலைக்ஞானபோதம்

இரண்டாம் காண்டத்தின் செய்யுள் சபையில் படிக்கப் பெற்றபோது-

ஆண்டவர்கள்:- கொடிய கிரகக் கோள்களின் செயலினை அஸ்த்தமனமாக்கி அவற்றை பூரண நன்மையின்பால் திருப்பி ஏவுகின்ற தவத்ததிகாரம் பெற்றவர்கள் தான் கிரகஸ்தர். எம்மை என்னென்னமோ சொல்லி பல நாமங்களில் அழைக்கிறார்கள். ஆனால் நிஜமாக நாம் ஒரு கிரகஸ்தர்.

21.

ஆண்டவர்கள்:- 'நீ கைகுவித்தால் எனக்கு மிகத் தாங்கரிது- தான் நீதரான சர்வபரா என் மகனே' என்று எம்மைப் பெற்றெடுத்து ஏறுருவாக்கின எமது தந்தை தனிகை மணிக் குரு குபேரரவர்களே, தங்கள் செப்பரும் அற்புதத் திருமணி வாய்கொண்டு இப்படிக் கூறினார்களென்றால் அது எதை வைத்து? இதுவரை யாரும் எட்டி ஏறியறியாத எம்முடைய தவ ஏற்றத்தை வைத்துத்தானே அவர்களின் அந்தச் சத்திய வாய்மை வெளியாயிருக்க வேண்டும் என்றருளிச் செய்தபின் பூராங்கொடி ஏற்று விழா நடத்த உத்திரவிட்டார்கள். அது நேரம்-

'தாத்தெனும்கடல்முகம்மது வென்சாலீகு
தவக்கொடிவந் தேறுதென் றூதிடுஞ்சங்கே'
'தன்னிருதயனன் றட்டில்விடி வெள்ளிகிளம்பத்
தனிகைவள்ள லின்கொடியென் றூதிடுஞ்சங்கே'

என்று ஆண்டவர்கள் திருவாய் மலர்ந்தருளியுள்ள ஞானச் சங்கு என்ற ஆதிமெய் உதய பூரண வேதாந்த ஏழாவது மலரில் உள்ள கண்ணிகளை ஓதித் தோத்தரிக்கக் கண்ட-சபையோர்- ''நம் பாட்டையார் தனிகைமணிப்பிரான் அவர்கள், 'நீகை குவித்தால் எனக்கு மிகத் தாங்கரிது' என்று நம் தெய்வ பிரானிடத்தில் அறிவித்திருந்தும், 'தனிகை வள்ளலின் தவக்கொடி வந்தேறுது'' என்று கூறி

வைத்துள்ள இதைக் கேட்டு ஆச்சரியம் பிறங்க வியந்து நிற்க-

ஆண்டவர்கள்:- (தங்கள் திருமேனியைக் காட்டி) இது பூராவும் அவர்களின் தவ வலுவால் விளைவேற்றி ஆக்கப் பெற்ற உருத்தானே. இது அவர்கள் தான். ஆகவே அவர்கள் கொடிதான் ஏறிற்று. 'இரண்டறக் கலக்க வந்நோர் என்ற னுக் கென்றே விதித்திருந்து எழுந்து வந்த பெருமான்' வேறொன் றுக்கு ஆதிக்கமில்லாது, என்னில் முழுமையாக இடங் கொண்டு விட்டார்கள்-

22.

69 சாதிகளை ஒன்ருக்கி உள்ளோமே, அது எப்படித் தெரியுமா? ஒவ்வொரு மனித கடத்துக்கும் 'உள்' இருக்கும் வஸ்து வித்தினை இத் தூலங் நடத்திக்கொண்டுபோய்க் காட்டி- எல்லோருடைய ஜீவ குகையில் இருப்பதும் ஒன்றே தான்- ஒரே பொருள் தான் என்று சம்மதிக்கச் செய்து விட்டோம். அவ்வாறு செய்ததும் 'கோதுடலும் வடிவுடலும் பேதம் கோடி கொண்டிருக்கும்' கடமெல்லாம் ஏகமாய் ஒன்ருகி சமத்துவ நிலையில் துலங்கி நிற்குமல்லவா? அப்படித்தான் இங்கு இது நுள் ஆக்கப் பெற்றுள்ளது. இந்தத் தெய்வீக நடைமுறைச் செயலினைத் தீர்க்கத் திருஷ்டிகொண்டு கண்ட வடலூர் வள்ளற்பிரான் அவர்களும், தங்களுடைய உண்மைப் பத்திரிகையில், "பலவகைப்பட்ட சமய பேதங்களும், சாத்திர பேதங்களும் போய் சுத்த சன்மார்க்கப் பெருநெறி ஒழுக்கம் விளங்கும். இது நமது கடவுள் சம்மதம். இது 29 வருஷத்திற்கு மேல்" என்று தெளிவாய் வெளியாக்கி யிருக் கிருர்கள்.

எல்லாக் கடத்துக்குள்ளே யிருந்து ஆட்சிசெய்கிற அது, கடவுள்- (கட+உள்)- ஒரு உருத் தாங்கி இத் தென் தமிழ் நாட்டுக்கு வந்துவிட்டதால் அதன் திருமுன்னர் வந்து,

அதன் கைவசமாகியுள்ள எல்லோரும் கடவுள் சம்மதத்தில் ஆகியிருக்கிறார்கள்.

காலம் கடை னாகின
ஆலம் அழி னேரமிது
வானம்வ ழினெறிக் காயினவே- என்று

னமது தெய்வத் தேடு கூடகத்தில் னும் பாடி வைத்துள்ளோமே. அதில் என்ன சொல்லப் பெற்றிருக்கிறது என்று னீங்கள் யாராவது னின்று கவனித்துப் பார்த்தது உண்டா?

சர்வ லோகங்களும், அவற்றை உண்டாக்கி அமல் னடத்திவரும் பண்டை ஊழியர் விதி எழுத்தின்படி சங்கரிக்கப்பட்டு, னித்தியாத்திற்கு ஆக்குகின்ற னேரம் னெருங்கி வந்துவிட்டதே என்று கண்ட னும் இக்கலிக்கடையில் வந்நவதரித்தோம். சென்ற 74 ஆண்டுகளாக ஒருமனக் கூர் கொண்டு, மனுத் தலைகள் எத்தனை னம் கைக்குச் சிக்குகின்றனவோ, அவையாவற்றையும் னம் மெய்வழியில் ஆக்குவோமென்று அலுப்பயர்வு பாராது ஆக்கி வருகிறோம்.

'வானம்வழி' அதாவது எழிலோங்கு சம்பூர்ண உயிர்க்களிப்பின் தெய்வ மணம் வீறி விரிக்கும் திரு ஆல வாயின் வழிக்குள் புகுத்தி, எமது னித்திய னீதிப் பொருவர அருள்விரி மெய் னெறியில் ஆக்கிவருகிறோம். 'எம்மை, உன்னைப்போல் ஒரு மனித உரு என்று னினைக்காதே. சர்வ கால, வேத மதி மகத்துக்கள் தேடினிற்கும் 'வஸ்து', 'பொருள்' என்று கட்டாயமாக னினை, என்று உத்திரவாகவும், அனந்நாதி தேவர்கள்- தெய்வத் தேடு கூடகத்தில் வரும்

தேடி வரும் பொருளே- யாவர்க்கும்
தெய்வத்திரு வுளமே
தலைவழிச் சாலையில் ஒலிவாமலையும் வந்து
னிலைபெற்றிங் கிருக்கின்ற
தலமதுள் ளாகினும்- தேடி வரும் பொருளே

என்ற பகுதியினையும்- மெய்ப்பொருள் அடைக்கலப்பாவில் வரும்

> னீதினி றைந்நப ரம்பொருளே
> னித்தமென் சித்தத்து றைந்நவரே
> ஓசைஒ லியெல்லாம் ஆனவரே
> ஒத்தையா யென்னுளும் உள்ளவரே-

என்ற கண்ணிகளையும் ஓதி இறைஞ்ஞினின்ருர்கள். தொடர்ந்து

ஆண்டவர்கள்:- சாலை என்றதும் முள்வேலியிட்ட இந்ந ஊர் என்றுதான் உங்கள் எல்லோர் எண்ணமும் ஓடும். இன்றுமுதல் அந்ந எண்ணத்தை மாற்றிவிட்டு சாலை என்ருேர் மெய் மேனி இந்நா வந்நுலாவுதே- இதன்பால் உங்கள் பூரா கவனமும், ஆத்திரமும், வழிபாடும் இருக்கட்டும். அப்பத்தான் அந்ந அமளி னேரத்தில் உங்கள் நலை தப்பும்.

23.

ஒருவன், தான் ஒரு பி.ஏ, என்று சொல்லிக்கொள்கிருன். 'னீ, எந்நப் பள்ளிக் கூடத்தில் படித்தாய்?' என்று கேட்டால் 'பள்ளிக் கூடத்திற்குப் போய்ப் படிக்கணுமா? பி. ஏ, என்று சொல்லிக் கொண்டால் போதாதா?' என்று அவன் சொன்னால் எப்படி யிருக்கும்?

அது போலவே- உலகிலுள்ள மக்கள், நான் சைவன்- நான் பிராமணன் என்று சொல்லிக்கொள்கிருர்களே! அது சரி- னீ எப்ப சைவத்தில் பிறந்நாய்? எங்கு எவ்வளவு காலம் எது எதைக் கற்றுத் தேர்ந்நு சைவனுனாய் என்று அந்நச் சைவனையும், அதேபோல னீ பிராமணனுகப் பிறந்நது எந்ந எல்லையில், எவரிடம் கற்றுத் தேர்ந்நு எப்படிப் பிராமணனுனாய் என்று அந்நப் பிராமணனையும் கேட்டால்.விழிக்கிருர்கள். சைவன், பிராமணன் என்று சொல்லிக்கொண்டால் போதாதா என்று கூறும் அறிவறியா மனுசதளம் னிறைந்ந உலகமாகப் போச்சு- என்ன செய்வது?

24.

மறுப்படாச் சிப்பி தானும்
மழைத்துளி திறந்து வாங்கி
இறுக்கிவாய் மூடி முத்து
ஈன்றிடு முவமை போலக்
குருபர னுபதே சத்தைக்
குலைத்துவாய் சிதறி டாமல்
பொருத்துவாய் மூடிக் காத்தால்
பொங்கிடும் காம தேனே.

என்ற நம் ஞான முறையிட்டு முத்திரைச் செய்யுளில், பிரம்ம வித்தை பெற்ற மக்களின் சத்தியப்பிடி ஒழுக்கம் எவ்வாறிருக்க வேண்டும்- அவ்வாறு இருந்தால் அதன் விளைவு என்னவாக ஆகும் என்று எடுத்துக் கூறி எச்சரிக்கவே சிப்பியின் செயலை உவமையாகக் காட்டிப் பேசி வைத்துள்ளோம். மழைத் துளி விழுந்ததும் சிப்பி இறுக்கி மூடிக்கொள்வதற்கு னிகராகச் சொன்னால் உன் கண்ணிமை மூடிக்கொள்வதைத் தான் சொல்லலாம். இமை மூடியதும் கண்ணிற்குள்ளே வெளிச்சமோ, காற்றோ, ஜலமோ போகவே போகாது. இந்த செயல் யாருக்கும் தெரியாது.

25.

'சந்தியா வந்தனம்' என்கிறார்களே, சந்திக்காதபடி 'வந்தனம்' என்று சொன்னால்தான் என்ன? கன்னே பின்னே என்று வாயில் வந்தபடி யெல்லாம் காயத்திரி தேவியைத் திட்டினால்தான் என்ன? பலன் ஒன்றுதான்.

26.

னீங்கள் எல்லாவற்றிலும் எம்மைவிட வல்லமைசாலிகளே. னீங்கள் ஏழஎட்டு மணிநேரம் குரட்டை போட்டுக் கொண்டு தூங்குகிறீர்கள்- எமக்கோ தூக்கமே கிடையாது

அது அறவே எம்மை விட்டுப் போயிடுச்சு. நீங்கள் ஒரு வேளைக்கு உள்ளே தள்ளி வயிற்றில் அடைக்கிற உணவு எமக்கு இரண்டு மூன்று மாத காலம் சாப்பிட்டு மிச்சமாகப் போனாலும் போகும். நீங்கள் ஒரு நாளைக்கு 21,600 தடவை கர்முர் என்று 12 அங்குலம், 24 அங்குலம், 48 அங்குலம் மூச்சு விடுகிறீர்கள்- எமக்கோ நாசிக்கு வெளியே மூச்சே ஓடுவதில்லை. இப்படினும் உங்களைவிட எத்தனையோ விதத்தில் மட்டமாயிருக்கிறோம்.

27.

மெய்வழி அங்கத்தினர்களின் குல- வலு- எழில்- பா ஆகிய

கண்ணெடுந்நன் னெழிலின்உ ஜா ரோனெனினும்
கண்மலரிற் கைப டாதோ
இன்னினிய சுவையூட்டும் ஏற்றமுள
நாவையும்பல் லிடுக்கி டாதோ
மன்னு மெழி-லாசான்றன் வண்ணவுட
லங்கமேனு மென்று வாழ
எண்ணிடுமெய்ப் பிறவியருள் எள்ளளவுங்
குற்றமது இசைக்கா காதே - என்ற

செய்யுளை சபையில் இரண்டு முறை படிக்க உத்திரவாகிற்று. அதுனேரம் ஆண்டவர்கள்:- 'வண்ணவுடல் அதாவது பிணிகள் அடராத நித்திய பொன் உடலின் அங்கமே னும்' என்று வாழ எண்ணிடும் மெய்ப் பிறவியருள் 'எள்ளளவும் குற்றமது இசைக்காகாதே' -இசைக்காமல் இருப்பது மட்டும் அல்ல, குற்றமாக எண்ணுதல் கூட ஆகாது என்ற எச்சரிப்பு உங்களுக்கு வேண்டும்.

28.

24.8.1974 திரு சுத்தானந்த பாரதி திருச்சி கண் டாக்டர் ஒருவருடன் தரிசிக்க வந்திருந்தபோது,

ஆண்டவர்கள்:- எண்பத்தி நான்கு நூறாயிரம் ஜீவராசிகளில்வைத்து மனிதனுக்குத்தானே சுவர்க்க நரகம் என்ற தீர்ப்பு வருது?

கண் டாக்டர்:- மக்கள் னரக, சுவர்க்கம் அடைகிருர்கள் என்று எப்படித் தெரிந்துகொள்வது?

ஆண்டவர்கள்:- ஏன் தெரியாது? திருடினுல், விபச்சாரம் பண்ணினுல் மனிதனுக்குத் தண்டனே உண்டல்லவா? மிருகாதிகளாகிய மற்றைய ஜீவராசிகளுக்கு அம்மாதிரி தண்டனே இல்லையே! உன்னுள் இருக்கும் இறைபொருள், உன் அறிவாக விளங்கிநின்று இப்படித் தீர்ப்பளிக்கிறது. இவ்வாறேதான் அங்கும் தீர்பளிக்கப்பெறும்.

இறைவன் னமக்குச் செய்து னிறைத்து வைத்துள்ள னன்றியின் பெருங்கருணைப் பெருக்க விரிப்பு, எட்டாப் பெருங் கடனுக னம் தலையில் ஏற்றப் பெற்றுள்ளது. கால் காலம் அவன் அளக்கும் னன்மைகளாகிய அவற்றை அனுபவித்துவிட்டுக் கடன் கட்டாது மறந்தவனுக்கு வரும் தண்டனேயே னரகம். யாரும் னேரில் காணும்படியாக இருக்கின்ற வேறுவேறு வித பத்துத் திட்டமான அடையாளங்கள், ஒருவன் னரகமோ சுவர்க்கமோ புகும் அடையாளங்கள், இவை இவை என்றும் எம் மக்களுக்குக் காட்டி னிரூபித்திருக்கிறேம்.

(சுத்தானந்த பாரதியைப் பார்த்து)

ஆண்டவர்கள்:- உங்களுக்கு வயது என்ன?

பாரதி:- வயது எண்பது.

ஆண்டவர்கள்:- அறுவது (அறுத்துத் துண்டாடப்படுவது என்ற குறிப்பு விளங்கத் தங்கள் திருக்கரத்தை அசைத்துக் காட்டி) அதற்கும் மேலே இருபதாச்சா? அது போகட்டும்- அறுபதாங் கலியாணம் என்று னம்ம சாதியிலே செய்கிருங்களே- அது ஏன்?

பாரதி:- (சிறிது னேரம் பேசாமல் இருந்துவிட்டுப் பின்.) ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்றும் அறுந்து போச்சுது என்று காட்ட-

ஆண்டவர்கள்:- காமம்தான் சாகும்வரை இருக்குமே. நீ பிறக்கும்போது உன்னைப் படைத்த வித்திலேயே வைத்து அந்தக் காமம் வந்ததாச்சே! ஒரு விசிறியை எடுத்து நீ விசிறிக் கொள்ளுகிற அளவு பலம் இருக்கும் வரை அது உன்னிடம் இருக்குமே! பிரத்தியட்சத்தில் இங்கேனும், எமது எண்பத்து மூன்றாவது வயதில் இரண்டு குமாரர்களைப் பெற்றிருக்கிறோமே அய்யா! இப்பக்கூட கல்யாணம் செய்து வைத்துப் பாருங்க- என்று இளனகை பிறங்கக் கூற (சபையில் மகிழ்ச்சி) தொடர்ந்து

ஆண்டவர்கள்:- அறிவானது வீற்றிருக்கும் ஜீவபதி மேடையை எட்டி ஏறும்தை வல்லபம் இந்தத் தூல உடலுக்கு வயது அறுபதாகிவிட்டால் அறுந்து போகுது. இது தான் அகமியச் செயல் கைவரவான பெரியோர்கள் கொண்ட அர்த்தம். நீங்கள் இப்ப என்ன செய்கிறீர்கள்?

பாரதி:- யோக சாதனம் செய்து கொண்டிருக்கிறேன்.

ஆண்டவர்கள்:-அது என்ன, எப்படி என்று எமக்குப் புரிகிறமாதிரி சொல்ல முடியுமா?

பாரதி:- பிரம்மரந்திரமாகிய கபால உச்சியில் மனதை ஒருநிலைப்படுத்தி நிறுத்திச் சாதனை செய்துவருகிறேன்.

ஆண்டவர்கள்:- பிரம்மரந்திரம் எங்கே யிருக்கிறது? (பாரதி சிரசை சற்றுக் கவிழ்ந்து தலை உச்சியைத் தன் விரலால் தொட்டுக் காட்ட)

ஆண்டவர்கள்:- (எக்கிப் பார்த்து) அங்கே மசிரல்லவா இருக்கு- இதையா பிரம்மரந்திரம்- ஊசிமுனை- உச்சித்துவாரம் என்று பெரியோர்கள் சொன்னார்கள்? அது இன்ன எல்லையில் உள்ளது, அதை இன்ன முறையாகச் சந்தித்து, இப்படிப் பலனேற்றம் பெறவேண்டியது- என்று எம் மெய்த்தவ விளைவு அனுபவத்தை எமது நூலில் சொல்லியிருக்கிறோம். கேட்கிறீங்களா?

வச்சிர மாமணி மேடையி லங்கொரு
வச்சுத னின்னரசில்
ஆதி ஒவென் றேழுறை முறையா
யர்க்வி டம்லலர்வர்
பச்சிள மேனிகண் டுச்சித மானல்
பாதை வழிதோறும்
பகரும் ஞானக் குருவரு ளேறப்
பார்பார்ப் பானவனே
னிச்சய மாகவே வுச்சி வழிகண்
டுசித் தமர்போட்டால்
னேச முடன்பா லமுதமி றங்கும்
னீபரு கப்பருகென்
றச்சம கன்ற வெனக்குப தேசிகர்
தாலோ தாலேலோ - என்றன்
சற்குரு வானத னிக்கரு ணாகரர்
தாலோ தாலேலோ-

(பிள்ளைத்தமிழ் 3-ம் பாட்டு சபையில் படிக்கப் பெற்றது)

பாரதி:- (ஆச்சரியம் பிறங்கக் கேட்டபின்) பிரம்மமே தான் இச் செய்யுளைச் சொல்லியிருக்கவேண்டும். இன்று எனக்கு நல்ல தெய்வ வாய்ப்பு கிட்டிற்று என்று உடல் குழைய அன்பு ததும்பக் கூறினர். (ஒரிரு குறிப்பே இங்கு தரப் பெற்றுள்ளது. நிகழ்ந்த அருள் விரிப்பின் பெரும் பகுதி, அகழிய ரகசியங்களாய் இருப்பதால், வெளியாக்கப் பெறவில்லை).

29.

பயிர்களுக்கு எவ்வளவு எருப்போட்டுத் தண்ணீர் பாய்ச்சினலும், விளைவேறி மணி திரண்டு பலன் தருவதற்கு, சூரிய சந்திரன் முதலிய விண்வெளியிலுள்ள பல சத்துவங்களின் உதவியும் வேணும். அவற்றின் வல்லபம் இப்போது வெகுவாகக் குறைந்து விட்டதால்தான் விளைவு குன்றிவிட்டது.

நிறைசெல்வம் உண்டுண்ணி
நெடுங்காலம் தந்நபூமி
விரைவித்தி நிமுளைக்க
மாட்டேனென் றேநிடும்பார்

(ஆதிமெய் உதய பூரண வேதாந்நம் பக்கம் 424- 'இறைதிரு இறுதி நீதி நடவு வைப்பு')

என்றும் கூறி வைத்துள்ள நாளும், நேரமும் விரைவில் நெருங்கி வந்நுவிடும்போல் தோன்றுகிறது.

30.

சாவில் இரண்டு விதம் இருக்கிறது என்று இப்ப நீங்கள் பேசினீர்கள். அது சரியா என்று பார்ப்போம்.

நீங்கள் முன்னிருந்த பூமியில், அதாவது மெய்த் தேட்ட மில்லாத நரர்கள் குடியிருக்கும் பூமியில்- நறிப் போய்த் திட்டுடன் சாகிற ஒரு சாவுதானே உண்டு? பரம பத பத்து அடையாளங்களுடன் கூடிய பேரின்ப நித்திய பூரண உலகுக்குப் பிரயாணம் ஆகின்ற நியாய மரண மாகிய பரிசுத்தச் சாவு அங்கு உண்டா? இல்லையே. ஆனால் நம் சாலையாகிய இந்த மெய் நகரத்தில் பரிசுத்தச் சாவு ஒன்றுதான் உண்டு; நறிச் சாகிற அநியாய மரணம் இல்லை.

இப்படி நீங்கள் இந்த எல்லையை, இதுவுள்வரைப் பிரித்துப் பார்த்து நினைத்ததுண்டா? இல்லை. அந்நந்நப் பூமியில் அததற்குரிய சாவு, அதாவது ஒரு சாவுதான் இருக்கிறது என்ற நம்முடைய தீர்ப்பு சரிதானே!

31.

தெய்வம் என்று சொல்லி நீங்கள் எம் முன் வணங்கு கிறீர்களே- இந்தச் சொல்லை நம் மெய்க் குலத்தில் சேராத வெளியேயுள்ள மக்கள் கேட்டால், கல்லு கிரட்டால் ஆன

விக்கிரகங்களையும் ஆகாயத்திலுள்ள அரூபத்தையும்தானே அவர்களுக்கு ஞாபகம் ஊட்டும்? அதைவிட்டு உங்களுக்கு முன் பிரத்தியட்சத்தில் உள்ள செயலுடைய நடமாடும் தெய்வத்தை, நீங்கள் 'தெய்வமே' எனத் தோத்தரித்து வணங்குகிறீர்கள் என்ற எண்ணம் அவர்களுக்கு உண்டாகுமா? உண்டாகாது. இந் நெடிய உலகில் நீங்கள் பார்க்க, ஊண் உறக்கமற்ற ஒரு உடல் எங்கேயாவது இருக்குமா? அதுவும், இப்படி நடமாடிக்கொண்டும் பேசிக் கொண்டும் இருக்குமா? இருக்காது. தான் ஊண் உறக்கமற்றிருந்துகொண்டு அதன் தவ வரவால் தன்னை அண்டிய மக்களை மரண ஆபத்திலிருந்து மீட்பிக்கின்ற ஒப்பற்ற தனிச் செயலோடு விளங்கும் திருமேனித் தெய்வமல்லவா உங்களுக்கு இங்கே வாய்த்துக்கொண்டது. இது எப்படி மற்றையோரின் நினைவிற்கு எட்டும்?

காஷாய உடையுடன் இருக்கும் நீ, உன் வாய் கொண்டு உன் செவி கேட்கத் தொனி உயர்த்தி 'ஊண் உறக்கமற்ற எங்கள் தெய்வமே' என்று கூறி இந்த சத்திய தேவ சந்நிதியில் வணங்கினால் மற்றவர்கள் உன்னை என்ன உன்னதத்தில் நினைப்பார்கள்? எந்த மேம்பாட்டில் வைத்துப் பார்ப்பார்கள்? நிஜத்தை நிஜமாகக் கூற உங்கள் வாய் இது முதல் வரட்டும் என்பதற்காகவே இதை இன்று நாம் எடுத்துப் பேசினோம்.

உணவைக்கொண்டும், உறக்கத்தைக்கொண்டும் தானே இந்த மனித தூலமாகிய உடல் நிற்கும். ஊணுமில்லாமல், உறக்கமுமில்லாமல் ஒரு உடல் இருக்கிறதென்றால் அது உலகுக்கே ஒன்று என்று சொல்லக்கூடியதாகத்தானே இருக்கமுடியும்? இப்படியான ஒன்று முன் காலத்திலும் இல்லை- வருங்காலத்திலும் இருக்கப்போவதில்லை. இதையே நன்னம்பிக்கை வைப்பு என்னும் பாவ விமோசனத் திருமந்

நிரத்தில் 'ஊணுறக்க மில்லாத ஒருவரே, முன்னும்பின்னும் இல்லாத முதல்வரே' என்று பேசப்பெற்றுள்ளது.

ஒவ்வொரு நாளும் நீ உண்ணுகின்ற உணவை, உன் உறக்கந்தான் ரத்தமாகவும், மாமிசமாகவும் மாற்றி உடலை வளர்க்கிறது- காப்பாற்றுகிறது. கருவறையிலிருக்கிற சிசுவுக்கு நாசிக்கு வெளியே மூச்சு ஓடுவதில்லை. ஆனால் உள்ளேயே சுழன்று ஒடுங்கி ஓடுகின்ற சுவாச ஓட்டம் இருப்பதால்தான் இருதயம் இயங்கி, ரத்த ஓட்டம் ஒழுங்காக நடைபெற்று சிசு உடல் வளருகிறது. தேகாதியந்நம், மயிர்க்கால் துவாரங்கள் வழியாகவும் கூட, இரவு பகல் ஆகாரத்தை ஏற்று- அந்தச் சிசு ஒன்பது மாதத்தில் இந்த வனப்புமிக்க உடலைப் பெற்று உருவாகிவிடுகிறது. அதுபோலவே வந்த ஒரு உடலாகிய, இது ஊண் உறக்கமில்லாமல் இங்கு நடமாடிக் கொண்டிருக்கிறது என்றால் அது மனிதச் செயலால் ஆகுமா என்று எண்ணிப் பாருங்கள். இது மனிதச் செயல் மீறிய நிஜ தெய்வீகச் செயல் அல்லவா?

32.

18-9-74- மத்திய சுங்க அதிகாரிகள் திடீர் என்று சாலைக்கு வந்து (காலை 7 மணி முதல் மதியம் 1 மணி வரை) திருமாளிகையில் சோதனை நடத்திவிட்டுப் புறப்படத் தயாரானார்கள். அது நேரம் அந்த அதிகாரிகளைச் சன்னிதியில் சிறிது நேரம் அமரச் செய்து

ஆண்டவர்கள்:- வந்த வேலை ஆச்சல்லவா- சரி- 'எல்லா மதங்களையும் 69 சாதி மக்களையும் ஒரே அனந்தர் குலமாக ஆக்கி வைத்திருக்கிறீர்களே, அப்போ சர்வ வேதங்களையும் நீங்கள் படித்துத் தேர்ந்திருக்கிறீர்களா?' என்று எம்மைக் கேளுங்கள் என்று உத்திரவிட்டருளினார்கள். (வந்திருந்தவர்கள் யாரும் அவ்வாறு கேட்கத் துணிவு வராமல் பேசாமல் திருமுகத்தை நோக்கிய வண்ணம் இருப்பதைப் பார்த்து)

ஆண்டவர்கள்:- நீங்கள் எம்மைக் கேட்டதாகவே வைத்துக்கொள்ளுகிறோம். சர்வ வேதங்களையும் நம் படிக்க வில்லை. ஆனால் அவற்றைப் பழகி வந்திருக்கிறோம். சரி- உங்களுக்கு நிறைய வேலையிருக்கும்- இங்கே வந்ததற்கு இந்த ஒன்றைத் தெரிந்துகொண்டு புறப்படுங்கள்.

33.

ஆண்டவர்கள்:- இந்தப் பூமியிலுள்ள மனிதர்கள் எல்லோரையும் எடுத்துக்கொண்டாலும் ஒரே மாதிரிதானே படைக்கப் பெற்றுள்ளார்கள். அது போலவே மனிதனுக்கென்று படைத்த பாஷை, அந்த ஒரே பஷை, எது என்று சொல்லுங்க பார்ப்போம். (சபையோர் 'தெரியாது' என்று ஒரு முகமாய்க் கூற)

ஆண்டவர்கள்:- அந்த பாஷை தமிழ்தான். உருது, இங்கிலீஷ், தெலுங்கு முதலிய பிற பாஷைகளில் ஏதாவது ஒன்றை, சிசுவிலிருந்து நவில் பழங்கிப் பேசிக்கொண்டிருந்த பிறகு, தமிழைக் கற்று எந்த வித்வ விற்பன்னத் தேர்ச்சி அடைந்து பேசினாலும், தமிழின் சொந்த எழிலுடைய உச்சரிப்புடன் பேச வராது. கேட்க அருவருப்பாகக் கொன்னிக் கொன்னித்தான் பேச்வரும். அத்தகைய பத்தினித்தனமுடையது தமிழ்.

ஆனால் முதலில்- இளமையிலிருந்தே- தமிழைப் பேசிப்- பழகியபின் அரபி, சமஸ்கிருதம், இங்கிலீஷ் முதலிய அன்னிய பாஷைகளைப் படித்துப் பேசினால், அந்நப் பாஷைகளில் பிறந்து வளர்ந்து படித்துப் பேசுபவர்களைவிடச் சரியான உன்னத உச்சரிப்புக்களுடன் பேசவும் அவற்றிலுள்ள வேத வசனங்களை ஓதவும் வரும். இந்தச் செயலை வைத்துப் பார்க்கும்போது, மனுக்குலத்திற்கென்று உண்டாக்கப்பெற்ற ஒரே பாஷை, ஆதி பாஷை, தமிழ்தான் என்று தெரிகிறதல்லவா?

34.

'இறப்பும் பிறப்பும் இல்லாத ஏக ஞயகமே' என்று பாவ விமோசன திருமந்திரத்தில் ஓதி வணங்குகிறீர்களே! 'இறப்பு இல்லாத' என்ற அந்த அகமிய வல்லபத்தை, 'ஒருவர் தங்கள் தவ ஏற்றத்தால் பெற்றுவிடலாம். ஆனல் பிறப்பு இல்லாத' என்று சொல்வது எப்படி? இதற்குப் பதில் உங்களுக்குத் தெரியும். தெரிந்திருந்தும், நம் கேள்வியாகக் கேட்கும்போது, உங்களுக்கு அது இன்னதென்று சொல்ல வரவில்லை.

சபையோர்:- இன்ன பதில் என்று திட்டமாகச் சொல்ல வரவில்லை என்பது உண்மைதான் தெய்வமே.

ஆண்டவர்கள்:- இந்த உடலிலே வைத்து, அறிவுப் பிறப்பாகிய மறுபிறப்புப் பெற்று, ஜீவ தேகத்தில் குடி புகுவது பிறவாப் பிறப்பல்லவா? ஆம். அதை வைத்துத் தான், 'இறப்பும் இல்லாத ஏகனயகமே' என்று சொல்லப் பெற்றுள்ளது. இது சரிதானே! இது உங்களுக்குத் தெரி யாததா?

ஒரு குழந்தை தாயின் கருவறையிலிருக்கும்போது மகா ஞற்றமுடைய விடக்காகிய ஊனை உண்டு வளர்ந்தாலும், பிறந்ததும் எடுத்துக் குளிப்பாட்டி அதன் உச்சியை மோந்து பார்த்தால் ஒரு இனிய மணம் வீசுகிறதல்லவா? ஆம்- அது எதைக் காட்டுகிறது? மனுவுக்கெனத் தனிச் சுதந் நரமாகக் கொடுக்கப் பெற்றுள்ளதும் இவனுக்குள்ளிருந்து கொண்டு ஒரு தலைமுறை காலம் இவனை ஞருமல் காப்பாற்றி வருகிறதுமான னித்திய திருமண தேகம், இவன் தேவப் பிறப்பெடுத்துக் கட்டாயம் குடிபுக வேண்டிய ஜென்ம சாபல்ய வைரமணித் தேகம் ஒன்று, இவனுக்குள் இருப்பதையே அது காட்டுகிறது. அதன் மணமே அவ்வாறு விசிறி வீசுகிறது.

அப்படியான உன்னதப் பிறப்பெடுத்த இவன் தலையில் 'பிர
சவம்' (பிறந்தது சவம்) என்ற அவப்பேர் ஒன்று பிறந்ததும் ஏற்றப்படுகிறது. அதை மாற்றியே ஒரு தெய்வ நாமம் வைக்கப்பெற்றுள்ளது. அந்த நாமத்திற்குரிய தெய்வ முதலைச் சந்திக்காமல் இவன் காலமெல்லாம் மகா சுத்தமான, ருசியான, மணமுடைய உணவுகளையே சாப்பிட்டுவந்தாலும் கடைசியில் சாவுவந்து சந்தித்ததும், சவம் என்ற பழைய பேருக்குரிய சகிக்கமுடியாத நாற்ற நரக உடல் வந்து சித்தித்துவிடுகிறது. அந்த அபாய மரண ஆபத்தை மாற்றவேணுமென்றால், தவச் செம்மலாகிய ஒரு தெய்வத் தனிப்பிரான் நம்போல் ரூபத்தில் வந்து வாய்க்கவேணும். அப்படி வந்த அவர்கள்தான் பேரிரக்கங்கொண்டு தங்கள் தவத்தைப் போட்டு நிரப்பி இவனை மறுபிறப்பு நித்திய திருமண தேகத்தில் ஆக்குவிக்கின்றார்கள்.

ஒரு முரட்டு எருமையை, முதிராத இளம் எருமைக் கன்று முட்டித் தள்ளிப் பிரட்டி விரட்ட முடியுமா? முடியாது. அதைவிடப் பலமுடைய படு முரட்டு எருமையால்தான் அதன் முரட்டுத்தனத்தை அடக்கி மாற்றி விரட்ட முடியும். அதே போல் எமனாகிய அந்த முரடனை அதைவிட முரட்டு வல்லப ஒரு தவமேருவே அடக்கி ஒடுக்கி மடக்கிச் சாந்த தர்ம ரூபியாக மாற்ற முடியும்.

அபாய மரணம் நமக்கு வந்துவிடக்கூடாதே என்ற மகா ஆத்திரங்கொண்ட ஒரே திடக்குறி நோக்குடன், ஆதிநாளையில் நாம் எமது தவாலைத் தனிமுதலாகிய ஐயாவைச் சரணடைந்து, பெண்டு பிள்ளை முதலிய சர்வத்தையும் விட்டுத் துறந்து அருட்கதியென அவர்களைப் பின்தொடர்ந்தோம். அவ்வாறு தொடர்ந்து சென்ற ஒருமுகத்துணிவு காரத்தால் எமன் கையில் சிக்கும் பேராபத்து நமக்கு நீங்கி நித்திய பரமபத வாழ்வு கிட்டியதோடல்லாமல், பஞ்சு முத்திராலம்ப சன்னதாலங்கிர்த வான் பட்டமாகிய நீத நெறிக் கோடா

யிதங்கள் யாவும், நம் விருப்பமலேயே தானே வந்து, எமது கைபலிதமாகின. காருண்யப் பிரானாகிய எமது ஐயன் பால் நாம் வைத்த மாறாத தனித்த அன்பு ஒட்டுதலின் விளைவு ஏற்றம்தான், எம் தலையில் மேற்சொன்ன அவ்வளவு வரமாதி வரங்களையும் ஏற்றி, யுகனேமி வாடா நெறி இறுதித் தீர்ப்புச் சேவைக்கான முழுவலிமை முழு ஆர்வ நீதிப் பெருஞ் ஞெயலில் எம்மை ஆக்கிவைத்தது. எம் முன்னர் வஞ்சக மற்ற எதார்த்த ஒருமுனை அன்பு ஒட்டுதல் என்ற ஒரே ஒரு பாடு உன்னிடம் இருந்தால் போதும். இந்தப் பரமபத வாழ்வு தானே வந்து உன் தலைக்குக் கிட்டும். வேறு தனிப்பாடு ஒன்றும் தேவையில்லை. உன் தலையில் இருக்கும் விதி எழுத் தாகிய பிறவிப்பிணி என்ற எமன் கையில் மாட்டும் சட்டம், தானே கிழிபட்டுப் போவதும் இங்கு கள்ளமின்றிக் கலக்கும் அத்தனி அன்பு ஒட்டுதலால்தான் உனக்குக் கைவரவாகிறது. இது எமது கையேட்டு அனுபவம்.

35.

18-9-74 சுங்க இலாகா பரிசோதனைக்கு ஏற்பாடு செய்த பொறுமைக் குமாட அவத்தனை நினைவுபடுத்தி-

ஆண்டவர்கள்:- எமது மூர்க்கமான இளமைக்காலத்தில், பணம் கீர்த்தி சம்பாதிக்க எண்ணி, நாம் பிறந்த ஊராகிய மார்க்கம்பட்டியை விட்டுப்புறப்பட்டு, சுமார் ஒரு நூற்றுப் பத்துமைல் தூரத்திலிருக்கும் காசுக்காரம்பாளையம் சென்று நெல் மண்டி வியாபாரம் செய்ய ஆரம்பித்தோம். ஒரு ஆண்டு காலத்திற்குள் தனிவீடு, இரண்டு ஜோடி மாடு, பெட்டி நிறையப் பணம் எல்லாம் சம்பாதித்தோம். இரவு பகல் பாராது மேலும்மேலும் செல்வமும் கீர்த்தியும் சம்பாதிக்க முயன்றோம். எமது கதிகருணைக் காருண்யப் பிரானவர்களின் சந்திப்பு கிட்டாதிருந்தால் ஈ.வே.ரா வின் தந்தை வெங்கடப்ப நாயக்கருடன் கூட்டாக ரெங்கூனிலிருந்து டவுன்சால் நெல்

கப்பலில் ஏற்றிவந்து இங்கே இறக்குமதி செய்து வியாபாரத்தை முழு வேகத்தில் ஆரம்பித்திருப்போம். இவ்வாறு கீர்த்தி சம்பாதிக்கத்தானே எல்லோருக்கும் ஆசை. அதே ஆசைதானே அது ஞளையில் எமக்கும் இருந்திருக்கும்?

ஆனால் ஞர், எமது இறைவராகிய மதினிதி அருட்கொடை அண்ணலின் அரிய சந்திப்பு னேர்ந்ததும், கீர்த்தியைத் தேடுகின்ற அந்த எண்ணத்தை அறவே துண்டாடி மறந்து விட்டு- அவதூறு, அவகீர்த்தியையே வருந்திச் சம்பாதித்தோம். வேணுமென்றே- ஞம் சம்பாதித்துக் கொண்டது தானே அது. 'சாலைவழியிலே சாடையாய் எனக்கு, சைக்கினை தோண- ஓடி ஞன் வந்து உன்கை பிடித்தேன். விழி அழகு காட்டி விளைந்த காமத்தால், அழியாத ஆசை சலியாதெழும்ப- பழிகாரி என்று பாரிலுள்ளோர்கள் வழிவசை பொழிய வந்நனஞன் பின்னே- உன்னிடம் வாழ்வே உறுதுணை என்று என்னிளம் பருவத்து- எல்லாம் மறந்துன் பின்னே தொடர்ந்தேன்', என்று ஆதி மான்மியத்தில்- அது ஞளையில் ஞம் பட்ட சனத்தை பகிரங்கமாகத் தெரிவித்துள்ளோமே- அப்படி அறிவறியா மக்களின் கண் காண ஞம் அவகீர்த்தியைச் சம்பாதித்தோம்- ஞம் பட்டோம், கெட்டோர் என்றாலும் வட்டமில்லை. இன்று எம் கையில் வந்துவிளைவேறிப் பூத்துக் குலுங்கி னிற்கும், தெய்வீக மதிமாமணம் குமழும் மாருத சுவர்ணாதி னித்திய பேரின்பக் கீர்த்தி வரவிற்கு ஆதி காரணம் அது வல்லவா? அந்நக் காலத்திலேயே, அந்த இளமை வயதிலேயே, அவகீர்த்தி வந்துவிடும் என்று ஞம் பயப்படவில்லையே! இப்ப எமக்கு அவகீர்த்தி உண்டாக்குவோம் என ஒருவன் னினைத்து ஏதாவது செய்தால் அது முடியுமா? 'ஆண்டவர்களின் தேகத்திலுள்ள இந்த ஒரு ரோமத்தைப் பிடுங்கி எடுத்துவிட்டால் அவர்களுக்கு அபகீர்த்தி வந்துவிடும், என்று அவனது குட்டைப் பொசுங்கு அறிவில்

னிணைத்து, இப்படி ஈனச் செயல் செய்திருக்கிறான். இது அவனை எதில் கொண்டுபோய் விடுமோ தெரியவில்லையே!

36.

உ

சிவமயம்

'அறியோம் னற்றுள்கள் குருவாழ்க குருவே துணை'.

பிள்ளையார் சுழி என்ற எழுதா எழுத்து, சிவமயத்தைக் குறிக்கிறது என்றும்- ஏகாக்ஷரமாகிய அதை னும் அறியோம், வாலறிவன் னற்றுளாக விளங்குகின்ற அதை அறிவிக்கிற குரு வாழ்க, குருவே துணை என்றும்- ஓதிப்படிக்கின்ற வழ்ன் முறை, தமிழில் சைவ மக்களுக்கிடையில் னெடுங்காலமாக இருக்கிறது. அடுத்து வந்த ஸைவத்தில் இது இருக்கிறதா? இல்லை.

ஆதி சைவத்தில் முதல் முதலாக னூட்டப்பட்ட அது, இறுதி னபியவர்கள் மூலமாக இறக்கப்பெற்ற திருக்குரான் வேதத்தின் முன் முகப்பு, அதாவது வேதப் பதிக்குள் னுழைவதற்கு னிலை வாசற்படியாகிய முன் முகூர்த்தாசனத்தே, பதிப்பிக்கப்பெற்று அதை வாய்விட்டுப் போகமுடியாத மாருத தரிசிலையிலிருந்துவரும் அலிபுலாம் மீமென்னும் தாலிக்கல்க் கிதாபு ஆகிய அந்தக்கிதாபு னுன்தான் என்று வேதத் தலையாக எடுத்து னிறுத்தப்பெற்றுள்ள மூன்று அட்சரங்களாகக் காணும், அக்கானிய முச்சுடர் னிசவாச வேட கோடாணி ரூபமாய்த் துலங்கி னிற்கிறது.

இதுனுள் இவ்வாறு ஆதியையும், அந்தத்தையும் ஒன்ருக வைத்து னிரூபித்துக் காட்டுகிற இவர்கள்யாராக இருக்க வேண்டும் என்று மனுவினுடைய அறிவு கொஞ்சும் இருந்து யோசித்துப் பார்த்தாலும் இந்தத் தெய்வீக உதயத்தின் உன்னதம் தெரியரும்.

37.

தந்தையின் சுக்கிலமும், தாயின் சுரோணிதமும் சேர்ந்து உண்டானது நரனின் தூலப் பிறப்பு. பிறகு வளர்ந்து வயதேறும்போது அவனுக்கு, இந்த உலகக் கல்வியைக் கற்பிக்கும் குரு ஒருவர் வேண்டும். அதோடு நரனுக்குத் தெய்வம், கல்லாகவோ, செம்பாகவோ, மரமாகவோ அல்லது ஆகாயமாகவோ ஏதாவது ஒன்று இருக்கிறது. இவ்வாறாக அங்கே நரன் என்ற பிறப்பில் தந்தை, தாய், குரு, தெய்வம் ஆகிய நாலும் வெவ்வேறாக இருக்கிறது.

ஆனால் இங்கே, மறுபிறப்பென்னும் ஜீவப் பிறப்படைந்த தேவ மக்களுக்கு, அன்னை, பிதா, குரு, தெய்வம் ஆகிய நால்வரும் ஒரே திருமேனி தாங்கி நின்று அனுக்கிரகிக்கிறார்கள். அது எவ்வாறெனில், அத்தேவ மக்களை அந்தத் திருமேனியர், தாயாக நின்று தமது நீதி மாணிக்கப் பிரணவச் சூலில் வைத்து ஈன்றெடுத்து அருளமுத உணவு ஊட்டி நாள்தோறும் வளர்க்கிறார்கள். தந்தையாக நின்று, தேவ நீதி வழுவா நன்னெறி நல்லொழுக்கத்தில் காலகாலம் பயிற்றுவிக்கிறார்கள். இன்னும் சற்குருவாக நின்று சர்வ வேத மூல மந்திரங்களையும் ஓதாமல் ஓதி கல்லாமல் கற்பிக்கச் செய்கின்றார்கள். மேலும் கண்ணோர் தெய்வமாக நின்று எமனை அணுகவிடாமல் காத்து பரிசுத்த நித்திய வாழ்வில் புகுத்தாட்டிவிக்கின்றார்கள். இவ்வாறான அருங்காரண அமல், மகா அதிஜெயாதி அதிசயம், இங்கு இன்னாள், நற்சிந்தை நன்மக்கள் எல்லோரும் காண, மகா நிச்சயச் செயல் நிரூபணையில், ஸ்ரீலபேறாக விளங்கி நிற்கிறது.

38.

‘பல தமிழ்ப் புத்தகங்கள் எழுதி 24 லக்ஷ ரூபாய் சம்பாதித்தார். கடைசியில் எல்லாவற்றையும் போட்டுவிட்டு

இறந்து போய்விட்டார்', என்று டாக்டர் பட்டம் பெற்ற ஒரு தமிழ் வித்வானைப்பற்றிச் சபையில் பேசப் பெற்றபோது-

ஆண்டவர்கள்:- 24 லக்ஷ ரூபாய் என்று சொன்னீர்களே. அதைக் காட்டி நம்மை அவர் ஏமாற்றி இருக்கிறார். தனக்கு வேணுமென்று நிஜமாகச் சம்பாதித்ததை அவர் விட்டுவிட்டுப் போவாரா? போகமாட்டார். அவர் நிஜமாகத் தனக்கென்று சம்பாதித்த, கசப்பு ஜலத் தீட்டு, விரைப்பு, விறுவிறுப்பு, கண்டவர்கள் அஞ்சுகின்ற கோர அவலட்சணம், பிணநாற்றம், இவை யாவையும் போர்த்துக்கொண்டிருக்கிற பேய்க் கோலம், நெடுங்கால நரக தண்டனை முதலிய யாவற்றையும்- தனக்கே வைத்துக்கொண்டாரே ஒழிய, எதையும் இங்கே போட்டுவிட்டுப் போகவில்லை. அவர் சம்பாதித்ததை இங்கே போட்டுவிட்டுப் போய்விட்டார் என்று நீங்கள் சொல்வது சரியில்லை. அவர் காலமெல்லாம் பாடுபட்டு நிஜமாகச் சம்பாதித்தவைகளைத் தன்னோடு எடுத்துக்கொண்டுதான் போகிறார். அவர் என்ன அப்படி ஏமாந்து போட்டுவிட்டுப் போகிறவரா!

39.

ஒருவன் உள்ளத்தில், மரண அச்சம் சதா உலாவிக்கொண்டிருந்தால் அவனுக்கு, மெய்ஞ்ஞான அறிவு மேலும் சுடர் விட்டுப் பூக்கும். இதை நாம், முன்னுள்ள நூல்களைப் படித்தோ, வேதங்களை ஓதியோ சொல்லவில்லை. நாம் நடந்து வந்த பாதையை, எம் கைபோட்டு அனுபவமாக உள்ள சத்தியவரவையே, நாம் உங்களுக்குச் சொல்லுகிறோம்.

நெடுங்காலங்கண்ட வசந்த ரிஷி புசுண்டர் பிரான் அவர்கள் தங்களின் ஜீவ மந்திர நடையில் கூறிவைத்துள்ள பல தேவ ரகசியங்கள் உங்களுக்கே தெரியவில்லையே, சாமான்ய உலக மக்களுக்கா அவை தெரியப் போகிறது?

உங்களுக்கு ஞம், முதன் முதலில் பிரம்மோபதேச வைப்பாக வைப்பதுவே 'மெய்'. உலகத்திலுள்ளவர்களுக்கு மெய் என்ற சத்தம்தான் காதில் விழுமே யல்லாது, மெய்ப் பொருளை அவர்கள் கண்ணேர் சந்திக்க முடியுமா? முடியாது.

மெய்க்குள்ளே ஒரு மெய். அதற்குள்ளே ஒரு மெய். இப்படி ஆறு அடுக்குகள் தாண்டி ஏழாவது அடுக்கில் ஒரு 'மெய்' இருக்கிறது. இவையாவும் இதயாசனக் குகையினுள் உள்ள உயிரின் னிலைப்பிடம் தெரிந்த எமது தேவ மக்களாகிய உங்களுக்கல்லாது வேறு யாருக்காவது சொன்னல் புரியுமா? புரியாது.

உபனிடத வைப்பு என்று னீங்கள் தீட்சா ரூபமாக எம்மிடம் பெற்றிருக்கிறீர்களே- அதற்குள்ளே ஒரு உபனிடத னிலை இருக்கிறது. அதுதான் அந்நரங்கம், அதாவது 'அந்ந-அரங்கம்'. அதிலே மேல் கீழ் இருக்கிறது.

இன்னெடிய கடல் சூழ்ந்த பூமியில், ஞம் பிறந்துள்ள இந்த மண் பரப்பாகிய கண்டத்திற்கு மட்டும், பரத கண்டம், கண்ணகன் பூமி, ஞவலன் தீவு என்ற எத்தனையோ ஞமங்கள் இருக்கின்றன. மற்றைய பூமிப் பகுதிகளுக்கு இப்படி ஞமங்கள் இல்லை. ஏனெனில் இங்குதான் மக்களின் தலையைக் காக்கின்ற, அதாவது அவர்களின் உயிரை எமன் கையில் சிக்காது தப்புவிக்கின்ற, பிரம்மவித்தைச் செயல் இருக்கிறது. ஆகவே இதுதான் தர்மபூமி.

இந்தப் பூமியில் இதுனேரம் மனித உடல் எடுத்துள்ள ஒருவன் எம்மைச் சந்தித்து இந்த மெய்யைப் பெறவில்லை என்ருல் அவன் ஒரு பிணமே.

கற்பக னிலைதான் முதல் அணு. அதற்கு மேல் ஒரு அணு, பிறகு ஒரு அணு, இப்படியே எத்தனையோ அரும் தலங்களாகிய னிலைகள் இருக்கின்றன. பதினறு கோணங்

ங்கள் தாண்டி, கற்பகம் என்ற அந்த நிலை இருக்கிறது. அந்த எல்லையில், மூச்சினது அசைவு இல்லை. நாம் அந்த அருந்நலத்தை அடைய, எமது மூச்சு, திக்குமுக்கடிக்கும் பல எல்லைகள் தாண்டித்தாண்டிப் போனோம். பல எல்லை களில், செத்துப் போவோமோ என்று நினைக்கும்படி இருந் தது. செத்தாலும் சரி என்ற முழு முனைப்போடு சென்று அந்த எல்லையை எட்டி ஏறி அடைந்தோம்.

கற்பக நிலையைத் தீக்ஷா வைப்பாக உங்களுக்கு வைக்க நினைத்துள்ளோமே- அதற்கு நாம் வேறு பாதை, எமது தேவ யுக்திகொண்டு போட்டு, உங்களை அழைத்துச் செல்லப் போகிறோம். வெகு சுகமான, இன்பமான பாதை அது. எமது மெய்வழிச் செங்காவி ரதத்தை நடத்த, முன் னிருந்த ஞான சட்டங்களை எப்படி எப்படி மாற்றி அமைத்து, உங்களை இந்த ஜீவ ரக்ஷிப்பு மேட்டில் ஏற்றி, இப் பெருங் குலத்தை உண்டாக்கினோமோ, அப்படியே இதற்கும் ஒரு தனிப்பாதை போட்டு உங்களை அழைத்துச் செல்ல நினைத் துள்ளோம்.

கற்பகம் என்று எல்லோரும் வாயில்தானே சொல்லு கிறார்கள். யாராவது அதன் அழகைக் கண்ணால் கண்ட துண்டா? மூக்கால் அதன் மட்டற்ற தேவ வாசனையை நுகர்ந்ததுண்டா? தேகத்தால் அதன் இன்ப உணர்வை ஸ்ப ரிசித்ததுண்டா? இல்லை. யாரும் அந்த எல்லைக்குப் போயிருக்க முடியாது என்றே நாம் நினைக்கிறோம். அது இருக்கும் தூராதி தூரத்தைப் பார்க்கும்போது அந்த முடிவுக்குத்தான் நாம் வர வேண்டியிருக்கிறது.

(ஆனந்த வருஷம் ஐப்பசி மாதம் 12ம் தேதி செவ்வாய்க் கிழமை 29-10-74 தேவ மக்களுக்கு, முதல்முதலாக கற்பக வைப்பு தீட்சை தெய்வமவர்களால் வைக்கப் பெற்றது)

கற்பக வைப்பு திட்சை பற்றி, நெடுங்காலங்கண்ட காகபுசுண்டர்பிரான் அவர்கள் தீர்க்க தெரிசனமாகக் கூறி வைத்துள்ள பாடல்கள்:-

கவுனியென உபதேசம் செய்தகூறில்
கணக்கிட்டு வைத்ததுவே இப்பாகத்தை
அவனியென்த் தெளியுமப்போ தந்தச்சாரம்
ஆடுவதே பூணிவரப் பண்ணும்பண்ணும்
தவனியெனத் தெளியாவோ உலகமய்யா
தருமமுறை காணவோ கற்பகந்நான்
எவனியெனத் தெளியுவைக்கல் அந்நத்தோற்றம்
எடுத்துரை யாடவோ ஒணம்பாரு

உண்டுகாண் கற்பகப் பளிங்குமென்றீர்
உதிப்பதுர் உலகத்தை மாத்துமென்றீர்
கொண்டுவது வருவதுவே ஸித்தியமென்றீர்
குணமதாய்ப் பார்ப்பதற்கு அதுதான்என்ன
தண்டுவதோர் அச்செயல் அறியச் சொல்லும்
தாதாவே கற்பகமாய் உள்ளதென்று
பண்டுமுறை யானதுகாண் இந்தப் பாகம்
பாரினில் யாருமே அறியமாட்டார்

ஓதிவரும் வெளிமுறைகள் பூசுர்செய்து
உள்ளமதில் அந்நவாறே பிரட்டிக்கொள்ள
ஆதிதரும் துறையதினைக் காண்பதுண்டு
அறிவதற்கும் எட்டாட்டால் அத்தன்பேரு
மோதிவரச் சுத்தமாய்த் துலங்குமய்யா
முத்திநெறி அங்குறியக் குண்டலியக்கூர்
சோதிவரும் னன்னிலேயே அங்குமொட்டி
சுத்தமதாய் அறியமெய் அவனிமீதே

40.

அழிதலையை அழியாத் தலையாக, பவத்தலையை தவத்தலையாக, விதித்தலையை மதித்தலையாக, புழுத்தலையை வைரத்தலையாக ஆக்குவதே தர்மம்.

வாயுணவால் இத்தூல உடல் விளைவேறுகிறது.
செவியுணவால் ஜீவதேகமாகிய யோகதேகம்
விளைவேறுகிறது.

நாம் கேட்கிறதெல்லாம் செவியுணவாகுமா? ஆகாது- அதிலும் இரண்டுவிதமிருக்கிறது. செவி வழி உண்ட உணவு, யோக உணவானாலும் ஆகும்- நம் ஜீவனை நரகிற்குத் தள்ளும் நச உணவானாலும் ஆகும். நஞ்சும் நம் வாயால் சாப்பிடலாம்- அமுதும் அதே வாயால் சாப்பிடலாம். இப்படியே செவி மூலம் உணவு உட்கொள்வதிலும் ஏற்றத் தாழ்வு- சாவு வாழ்வு இருக்கிறது. சாலையாகிய இந்த ஒரே எல்லையில்தான் உண் ஜீவ வாழ்விற்கு வேண்டிய செவியுணவாகிய சீவேச மெய்க் கல்வியின் விளக்கங்கள் பெற முடியும்.

மெய்யன் நித்திய இன்பத்தைத் தேடுவான்.
பொய்யன் நீங்கா அவஸ்தையாகிய அழிவைத்
தேடுவான்.

41.

அமரர் மனு விலங்கு புள் ஊர்வன ஜலவாழ்ஜந்து தருக்கினம் என்பைப்பெற்ற எழுவகைத் தோற்றத்தில், நரகை உள்ள இவன் பெயரே காணப்படவில்லை. ஆகவே எப்படியாவது ஒரு 'சிமிக்கில்' இவன் மனுவாக- மெய்த்தேட்டமுள்ள மனிதனாக- ஆகிக்கொள்ளவேணும். மனித உடல் எடுத்துப் பிறந்த பிற்பாடு ஈசனின் நாமத்தில் ஒன்றை இவன் தலையில் சூட்டியிருக்கிறார்களல்லவா- அந்த நாமத்திற்குரிய பொருளாகிய தன் ஜீவனை அறிய ஆசைவருகிறவனே மனிதன். அந்த ஆசை வந்தால் போதும், மனிதன் என்ற பெயர் வந்து விடுகிறது. ஆனால் தன் ஜீவனை அறிகிற செயல், இவன் கையில் இல்லை. ஒரு மெய்க் குருபிரானின் தனிப்பெரும் கருணையால்தான் ஜீவனை அறிய முடியும். ஜீவனை அறிய வேணுமென்ற ஆசையால் தூண்டப் பெற்று, அந்த

ஆசையைப் பூர்த்திசெய் தருளவல்ல ஒரு மெய்க்குருவைத் தேடலாமல்லவா? தன் ஜீவனைச் சந்திக்க ஆசையில்லாதவன் 'அலகை" என்ற குலத்தில் இருக்கிறவனாகிறான்: ஆகவேதான் எழுவகைத் தோற்றத்தில் அவனைச் சேர்க்கவில்லை. ஒரு குரு பெருமான் சன்னிதியைத் தேடி அடைந்து அவர்களால் ஏற்றுக்கொள்ளப் பெற்றதும், அவனை மனிதன் என்று வேதம் ஏற்றுக்கொள்கிறது. பிறகு குருபிரான் அவர்களின் பேரிரக்கத்தால் தன் ஜீவனைச் சந்தித்துத் தேவனாக ஆகுகின்ற மறுபிறப்பை அவன் அடைகிறான்.

42.

நாம் கொண்டு வந்திருக்கும் இந்தத் தெய்வீக மெய்யை உங்களுடையதாக ஆக்கிக்கொள்ள ஒரு உளவு- ஒரே ஒரு வாசகத்தில் வைத்துப் பேசப் போகிறோம்--கேட்கிறீர்களா?

சபையோர்:- கேட்கிறோம்.

ஆண்டவர்கள்:- உங்களுக்கு அழிவு வேண்டுமா- அல்லது அழியாமை வேண்டுமா? அழியாமைதானே வேண்டும்! சரி- அது வேண்டுமென்றால் இந்நா- அதற்கு ஒரு சத்திய உளவு- நீ எம் இஷ்டப்படி நட. வேறு ஒன்றையும் நினைக்காதே. வேறொரு பக்கம் திரும்பாதே. இந்த ஒரு பிடி, உயிர்ப் பிடியாய் உன் உள்ளத்தில் இருந்தால் போதும். உனக்கு சர்வமும் ஜெயமே. நினைத்தது, தொட்டது அவ்வளவும் ஜெயமே. உனக்கென்று ஒரு பாடும் வேண்டாம். இந்த மெய்யைப்பற்றிப் பேசவேண்டுமென்று நினைக்கிறாயா? இந்நா எம் உத்திரவு- நீ பேசு- உன் நாவு பேசும்- நாம் உன்னில் நின்று பேசுவோம். இதுதான் உங்களுக்குவேண்டிய சத்தியப் பிடி- சத்திய உளவு.

43.

(முன் வைணவராக இருந்து இப்போது அனந்தராகி யுள்ள ஒரு அங்கத்தினரைப் பார்த்து)

ஆண்டவர்கள்:- இங்கு வருவதற்கு முன், நீ வைஷ்ணவன் என்று வாயில் சொல்லிக்கொண்டிருந்தாய்- பொய் வைணவனாய்ப் போலி வைணவனாய் இருந்தாயேயல்லாமல் நிஜ வைணவனாக இல்லை. இங்கு வந்த பின்தான், நாம் உன்னை மெய் வைணவனாக ஆக்கினோம். அந்த மெய் வைணவத்திலேயே சைவம், இஸ்லாம், கிறிஸ்துவம் ஆகிய எல்லா மதங்களையும் ஒன்றாக்கிப் புகுத்தி வைத்தோம். (அதே போல சைவ குலத்தில் முன்பிருந்த ஒருவரைப் பார்த்து) நீ இங்கு வரும்போது சைவனா? இல்லை. சைவன் என்று வேடம் போட்டுக்கொண்டிருந்த பொய்ச் சைவனாகத்தான் இருந்தாய். அதை மாற்றி, மெய்ச் சைவத்தில் உன்னை ஆக்கினோம். அந்த மெய்ச் சைவத்திலே, வைணவம், இஸ்லாம், கிறிஸ்துவம் முதலிய சர்வ மதங்களையும் புகுத்தி வைத்தோம். (பிராமண குலத்திலிருந்து சபையில் வந்து சேர்ந்த ஒருவரைப் பார்த்து) நீ- உன்னைப் பிராமணன் என்று நினைத்திருந்தாயே- அப்போ உனக்குக் காயத்திரியைத் தெரியுமா? சில எழுத்துக்களை வாயில் ஓதி, காயத்திரி என்று கற்பனையாக எதையோ நினைத்துக் கொண்டிருந்தாய்? அந்தக் காயத்திரி தேவியைப் பிரணவ சொரூபக் கொழுந்தாக உன் இதயாசனத்தில் நீ தரிசிக்கும்படிச் செய்து, உன்னை வேத சாட்சியாகப் பிரம்மத்தை அறிந்த ஒரு மெய்ப் பிராமணனாக, பார்ப்பானாக ஆக்கினோம். அதே காயத்திரியினிடத்தே சைவ, வைணவ, இஸ்லாமிய மூலமந்திரங்கள் பிரகாச ரூபத்திலிருக்க நீ கண்டாய். இந்த அதி அற்புத ஜீவ தரிசனைக்களுக்குரிய தலைகனாக, ஆக உங்கள் பிரயாசைப்பாடு ஏதாவது உண்டா? இல்லை. இப்படி நாம் உங்கள் ஒவ்வொருவரையும் ஆக்கி வைத்துள்ள பிரம்மாதிக்க வேதாதி காரணச் செயல்களை நீங்கள் நினைத்துப் பார்த்ததுண்டா? இல்லை.

இவ்வாறாக, சர்வகால சர்வவேத சர்வமூல மந்திரங்களும் நிரூபணை நிரூபகச் செயலாதிக்கத்துடன் விளங்கும்

'சம்மத மதத்தில்' உங்களெல்லோரையும் நாம் ஆக்கியிருப்பதோடு சுத்த சமரச சமத்துவ சாந்தி நன்னிலைப் பெருக்காதிக்க மதிவாழ்வினைக் கைப்பற்றியுள்ள அனந்நர்குலம் என்ற சத்திய தேவ பிரம்மகுலத்தில் ஆக்கி வைத்துள்ளோம். அக முகத்தில், இத் தெய்வீக அமலாட்சி வரவுகளுக்குரியவர்களாக ஏற்றிவைத்ததோடல்லாமல் வெளி முகத்தில் உலகத் தூலக் கண்கள் கண்டு ஆச்சரியப்படும் வண்ணம், நமது தேவ சன்னதமாகிய கிள்ளும் துலங்கும் காஷாய வெண்ணிற ரக்ஷிப்புசிரா அணிந்த தேவர்களாக உலவும்படியும் செய்து வைத்துள்ளோம்.

அனந்நன் என்பது சிவனுக்குள்ள முன்னைய நாமம்-ஆதிநாமம். அந்நப் பேரிலக்கிற்கு ஆனவர்களே அனந்நர்கள்.

இந்நச் செப்பொருள் செவ்வானச் செம்பேரு அருள் வருஷிப்பினைச் செவியேற்ற சபையோர்:-

'எண்ணு கின்றனல் லெண்ணம னைத்தையும்
எண்ணெ ணாவல்லாச் சித்தி முத்திகளும்
பண்ணு றுந்நன்த னித்தலை மைப்பதி
வண்ண ஞானசித் தர்காலம் வந்நதே'

என்று தோத்தரித்து வணங்கினர்கள்-

44.

சபையிலிருந்ந ஒருவரை நோக்கி ஆண்டவர்கள்:- 'உனக்கு இப்ப என்ன வயது?' என்று வினவியருள, அதற்கு அவர், 56 வயதாகிறது என்று பதில் சொன்னார். தொடர்ந்து ஆண்டவர்கள் 'நீ 72 வருட உணவை உண்டிருக்கிறாய். அதனால்தான் உன் உடற்பு இப்படித் தளர்ந்து போய்விட்டது. எமக்கு 116 வயதாகச்சல்லவா- ஆனால் நாம் 39 வருட உணவே சாப்பிட்டிருக்கிறோம். அதனால்தான் எமக்கு உடலில் அயர்வோ, அறிவில் தளர்ச்சியோ ஏற்படவில்லை-

45.

னம்ம தமிழ் ஞட்டைமட்டும் எடுத்துக்கொண்டால், இங்கு எத்தனை ஆலயங்கள் சிறிதும் பெரிதுமாக இருக்கின்றன! கணக்கு எடுக்கக்கூட வராது. இத்தனை ஆலயங்களையும் உண்டாக்க என்ன செலவு, என்ன முயற்சி ஆகியிருக்கும்? அது மட்டுமல்லாமல் அவற்றைத் தினந்தினம் பராமரிக்க என்ன பாடு- பெரும் செலவு- பெருமுயற்சி- பெரும் உழைப்பு வேண்டும்? இத்தனை செலவு, முயற்சி, பாடு எல்லாம் எதற்கு? கடவுள் ஒருவர் உண்டு என்ற எண்ணம் மக்களுள்ளத்தில் வரச்செய்யவும், அந்த ஞாபகம் அவர்கள் னினைவில் சதா இருக்கச் செய்யவும்தான் இவ்வளவு எடுப்புக்களும்.

இதற்கே இத்தனை காரண காரிய வரிசைப்பாடுகள் என்ருல், கடவுளை னேருக்கு னேர் சந்திக்கவைக்க எம் முயற்சி எப்பாடு வேண்டும்! கடவுள் வழிபாடு என்று உலகத்தில் செய்கின்ற அவ்வளவு முயற்சியும் வீண்பாடுதான் என்று உன் அறிவை முதலில் சம்மதிக்கவைத்து, அதன் பின் அந்த அறிவே அவற்றை அலக்ஷியப் படுத்திக் கைவிட்டு விடும்படிச் செய்து, மெய்யாகவே மெய்யில் ஆக்குகின்ற மகா திடங்கொண்ட, எதற்கும் பின் வாங்காத, தெய்வ முயற்சியாக அல்லவோ இருக்கவேண்டும்? ஒருவர்களது னெடுங்கால னிலைபேரா அரிய தவப்பாட்டால், அவர்கள் வேணுமென்று எடுத்துக்கொண்ட அளவிடற்கரிய சங்காத முயற்சியால் இந்த மெய், கலிக்கடையில் வந்த னம்முடைய தலைகளில் ஏற்றப் பெற்றது என்று னீங்கள் எப்பவாவது னிறுத்தி னிறுத்துப் பார்த்ததுண்டா? இல்லை. இனியாவது சிந்தித்துப் பாருங்கள். அப்பத்தான் இந்த மெய் உங்களுடையதாக ஆகும்.

46.

தேனைக் கொட்டவிடட்டுமா அல்லது எறும்பைக் கடிக்க விடட்டுமா- உனக்கு எது வேணும்- என்று ஒருவனைக் கேட்டால் எறும்பைக் கடிக்கவிடுங்க என்று சொல்லுவான். இன்னும் பாம்பைக் கொத்தவிடட்டுமா அல்லது தேளைக் கொட்ட விடட்டுமா என்றால் என்ன சொல்லுவான்? தேளைக் கொட்ட விடுங்க என்றுதான் சொல்லுவான். இந்த அறிவு படைத்தவன்தானே மனிதன்!

இந்த முறையிலேதான் நாமும் எம்முடைய மூர்க்கமான இளமைக் காலத்திலே சிந்தித்தோம். தன்னறிவிற் சாய்ந்து நன்னிதிப் பொழுதினை வீண் காரியத்தில் நடத்தி, நெடும் துயர்ச் சாவாகிய எமனைச் சந்திக்கிற பேரழிவு நமக்கு வேணுமா? அல்லது நாதன் பொற்றுணைத் தேடி வேதாந்த வழிபற்றி அழிவிலா நித்திய வாழ்வு வரம் நமக்கு வேணுமா என்று எண்ணிப் பார்த்தோம். அவ்வாறு திடமாக எண்ணி பொய்ப்பேர் பரிசும் சிறப்பும் தரும் இந்த இகம் நமக்கு வேண்டாம் என்று முடிவு கட்டி, அதை உதறித் தள்ளிவிட்டு; எமது குரு கொண்டலாகிய அருஞ் செல்வ சிவராஜ அம்லாண்மை நல்கும் அதிஅரசு மாலியின் துணையே நமக்கு வேணும் என்று அவர்கள் பின் சென்றோம். அதனால் எமக்கு நஷ்டமா வந்தது? இல்லை.எமன் கை தீண்டாத பேராண்மை அதிகாரம், அவனது வல்லபத்தை மிதித்து ஆளுகின்ற அதிஜெய ஆட்சி, எம் கையில் வரப்பெற்றோம். மீட்பேயின்றித் தங்கித் தரிக்கும்படி ஆக்கிவிடும் நரகக் கொடுமைக்குமுன், இவ்வுலக சுகபோக வாழ்வைத் துறந்ததால் ஏற்பட்ட துன்பங்கள், கஷ்டங்கள் எமக்கு ஒரு பொருட்டாகத் தோணவில்லை. ஆகவேதான் இவ்வுலகத் துயரை நாம் வேணுமென்று சம்மதித்து ஏற்றுக்கொண்டோம்.

யுவனுக வாழலாம் மூல மொட்டி
உண்மைதனை அறியவோ பிரல யத்தில்
எவனுக இருந்நாலும் எல்லா மொன்ருய்
இசைவதும் எவ்வாருே அந்ந வாறில்
தவனுக இருப்பவரே எண்ணங் கொண்டால்
தருமமுறை வெளியாகும் தன்க்குள் னின்று.
மவனுக வந்நதுறை போலு மய்யா
மாட்டி வைக்கும் னிச்சயமே விபவம் பாரு
(அணு)

என்ற புசுண்டர்பிரானின் ஜீவமந்நிரச் செய்யுள் படிக்கப் பெற்றபோது—

ஆண்டவர்கள்:- னீ தவனுகவே ஆனுலும், பதியவர்களிடம் ஒட்டி மவனுக ஆகாவிட்டால், மாருத இளமையுடைய வான்யுக யுவனுக வாழமுடியாது.

'தவனுக இருப்பவரே எண்ணங்கொண்டால் தருமமுறை வெளியாகும்' என்று மேலே வரும் செய்யுளில் கூறப் பெற்றுள்ளதையே சர்வாகமக் கிரந்நத்தில்—

'எண்ணிறந்நகோடி இயல்பாவம் செய்தோர்க்கு
னண்ணிய மோட்சம் னவிலவென்ருல் உன் மனந்நான்'

என்று கூறிவைத்துள்ளார்கள். இது என்ன ஆச்சரியம் பார்!

47.

புதுக்கோட்டை டிபுடி கலெக்டர் தரிசனைக்கு வந்நிருந்ந போது—

'சாதனையின்றி உலகில் சாதிப்பது எதுவுமில்லை என்பது பெரியோர்கள் வாக்காச்சே! அவ்வாருன சாதனைகள் தங்கள் சிஷ்யர்கள் என்ன செய்து வருகிருர்கள்?' என்ற கேள்வியைச் சன்னிதியில் கேட்டார்.

ஆண்டவர்கள்:- (இளநகை பிறங்க) உங்க கேள்வி நல்ல கேள்விதான் ஐயா. இவனைப் பாருங்க- இவன் அன்றாடம் கூலிக்குப் பாடுபட்டு ஜீவனம்பண்ணுகிற ஒரு ஏழை. இவன் இந்தச் சபையில் சேரும்போது, 'கொலை, களவு, கள், காமம், பொய் என்னும் பஞ்சமாபாதகம் இனிச் செய்யமாட்டேன். புகை குடிக்கமாட்டேன். இது சத்தியம்' என்று வாக்குறுதி தந்து சேர்ந்தான். நீங்கள், ஆயிரரூபாய் இவனிடம் இப்பக் கொடுத்து, 'யாரும் பார்க்காதபடி மறைவான ஒரு இடத்திற்குப்போய் ஒரு சிகரெட் குடித்துவிட்டு வா- அதற்குத்தான் இந்தப் பணம்' என்று சொல்லிக் கொடுத்துப் பாருங்க. 'ஐயா- உங்க காசு உங்களிடம் இருக்கட்டும். நான் என் குரு சன்னிதியில் செய்த சத்தியத்திற்கு மாற்றமாக ஒருபோதும் நடக்கமாட்டேன்' என்று முகத்தில் சற்று கோபக்குறி தோணச் சொல்லுவான். இம்மாதிரியான எத்தனையோ அரிய சாதனைகளில் எம் சபையிலுள்ள மக்கள் தேறியுள்ளார்கள். இவர்களைப்போல நீங்களும் உங்கள் ஜீவனை, உங்கள் அறிவை நேருக்குநேர் சந்தித்து தரிசிக்கிற வயதிற்கு வந்தீர்களானல், எம் மெய்வழி மக்களுடைய அரும் பெரும் சாதனைகள் பலதும் உங்களுக்குத் தெரியவரும்.

அதிருக்கட்டும்- உங்களிடத்தில் உங்க உயிர் எங்கிருக்கிறது?

வந்திருந்தவர்:- உயிர் என்னிடத்திலிருந்தாலும் அது எங்கிருக்கிறது, எப்படியிருக்கிறது என்று தெரியவில்லை.

ஆண்டவர்கள்:- சரி- அதை நீங்க பார்க்க முடியாது என்பதுதானே உங்கள் திட்டமான எண்ணம்.

வந்திருந்தவர்:- ஆம்.

ஆண்டவர்கள்:- (தங்கள் சுண்டு விரலைக்காட்டி) இது உங்களுக்குத் தெரிகிறதல்லவா இப்படி உங்களிடமுள்ள எல்லா அங்கக்குலங்களும் தெரியுதே. அவற்றிற்கெல்லாம்

பிரதானமாகிய உயிர் இருக்குமிடம் உங்களுக்குத் தெரியாமலிருக்கலாமா?

நம்முடையனவிருக்கிறது. அதைப் பத்தாயிரம் ரூபாய்க்குக் கேட்டால் தருவோமா? தரமாட்டோம். இவ்வாறே நம்மிடமுள்ள ஒவ்வொரு அங்கங்களும் விலைமதிக்க முடியாத கிரயம் பெற்றதாக வல்லவோ இருக்கிறது! இப்படி உன்னதக் கிரயம் பெற்றுள்ள அவை, இவ்வுடலைவிட்டு உயிர் போனதும் முக்கால் துட்டு பெறுமா? பெருது. இவ்வளவு சீரும் சிறப்பும், மதிப்பும் குதிப்பும், ஆட்சியும் அழகும் நமக்குக் காலமெல்லாம் தந்துகொண்டிருக்கிற உயிரை, நும் பார்க்காமல் இருக்கலாமா?

வந்திருந்தவர்:- பார்க்காமல் இருக்கக்கூடாது. கட்டாயம் பார்க்கவேண்டும். ஆனல் எப்படிப் பார்ப்பது?

ஆண்டவர்கள்:- நம்ம முயற்சியால் பார்க்க முடியுமா?

வந்திருந்தவர்:- முடியாது.

ஆண்டவர்கள்:- (அனந்நாதி தேவர்களைப் பார்த்து) உயிரைப் பார்க்க முடியாதா?

அனந்நாதி தேவர்கள்:- 'பார்க்கமுடியும்- ஆண்டவர்களின் தயவால் நுங்கள் எங்கள் உயிரைப் பார்த்திருக்கிரும்' என்று சபையிலுள்ள எல்லோரும் ஏகமாய்க் கூறக் கேட்டு, வந்திருந்தவர் ஆச்சரியம் பிறங்கநின்ருர்.

தொடர்ந்து, ஆண்டவர்கள்:- சல்லிக்கட்டு மாட்டு வேடிக்கைக்கு போகிற ஒரு காளை, ஆயிரரூபாய் கிரயம் பெறும். அதை எல்லோரும் ஆச்சரியமாய்ப் பார்க்கிருர்கள். மதிக்கிருர்கள். அந்தக் காளையிடம் ஒன்றரை துட்டை நீட்டி, 'நீபோய் வெற்றிலைபாக்கு வாங்கிவா' என்று சொன்னல் வாங்கி வருமா? வாங்கி வராது. ஆனல் அதே காசை, சரியாக அறிவு வராத ஒரு சின்ன பிள்ளையிடம்

கொடுத்து, 'கடையில் வெற்றிலை பாக்கு வாங்கிவா' என்று ஏவினால் ஓடோடியும்போய் வாங்கி வருமல்லவா? ஆம். கீழான மிருகப் பிறப்பில் இருப்பதால்தான் மாடு போய் வெற்றிலை பாக்கு வாங்கிவரவில்லை- அதையே, ஒரு குழந்தை யாக மாற்றிவிட்டால் வாங்கிவருமா, வராதா? வாங்கிவரும். மாட்டை மனிதனுக்குகிறதுபோன்ற ஒரு திருச்செயல் வாய்த்து, இந்த அறிவறியா னரனுடைய பிறப்பைவிட்டு ஞமும் மாறிப் பிறந்தால் னம் உயிரை ஞம் பார்க்கலாம்-

(வந்திருந்தவர் விடைபெற்றுச் சென்றார்)

பிறகு ஆண்டவர்கள்:- 'அந்த மாட்டை ஒரு குழந்தை யாக மாற்றுவதாக இருந்தால், அது கடவுளால்தான் முடியும்' என்று அவர் னினைக்கட்டும் என்றே ஞம் பேசினேம்.

சபையோர்:- 'மாட்டைக் குழந்தையாக மாற்றிப் பிறப் பிக்கும் வல்லமை கடவுளுக்குத்தான் உண்டு' என்று அவர் னினைப்பார்- என்பது ஆண்டவர்கள் உத்திரவான பின்தான் எங்கள் அறிவிற்குப் பட்டது.

ஆண்டவர்கள்:- அரூபத்திலுள்ள கடவுளால், ஒரு மாட்டைப்போல் ஐயறிவில் கிடந்த உன்னை மாற்றி, தன்னை அறியும் தனி அறிவாகிய ஆறாவது அறிவில், ஏற்றிவைக்க முடியுமா? முடியாது- ரூபத்தில், உன்போல் தேகம் தாங்கி வந்துள்ள ஒரு கடவுளால்தான் அந்த பிரம்மவித்தைச் செயலைச் செய்யமுடியும். இங்கு வந்து தேவப்பிறப்பெய்திய பின்னர்தானே இந்த உண்மையை னீ அறிய முடிந்தது?

கலியைச் சங்காரம் பண்ணுகிறவர்களே கலக்கி. மக்கள்பாலுள்ள அழி அவா என்னும் பழிபாதகத் திமிராரு இருளாகிய கலியைக் கலக்கி விரட்டிவிட்டு, அழியாத மெய்யை அவர்களுடைய ஜீவனில் பதிப்பித்து, னித்திய புது யுகத்தை உண்டு பண்ணுகிறவர்களே கலக்கி (கல்கி).

48.

னித்திய பேரின்பத்தைப் பெறுவதற்கென்றே படைக்கப்பெற்றவன் மனிதன். அவன் எவனுயிருக்கட்டும், எம்மை அடைந்து இந்த மெய்யைப் பெறவில்லையானால், இந்த மனித உடலை விட்டு மாறினதும், னரகில் தள்ளப்பட்டு, எக்கோடி காலத்திற்கும் அழியாத கொடிய அவஸ்தையை அனுபவிக்கவே வந்துவிடும். அப்படியான அவஸ்தை தேகத்தில் குடியேறி னரகத்தில் அழியாது இருக்கப்போகிறவன்- 'இந்நா- ளும் சதா கூவிக்கூவி அழைத்தவண்ணம் இருக்கிறோமே- இந்தச் சத்தத்தைக்கேட்டு எம் பக்கம் சற்றுத் திரும்பினால் போதுமே! அவனை, னித்திய பேரின்ப சுவர்ண தேகத்தில், சுவர்க்கபதி பூர்ண சுகிர்த வாழ்வில், நாம் ஆக்கி விடுவோமே! வம்படி பண்ணியாவது நாம் ஏன், அவனை இதில் ஆக்கக் கூடாது? இதற்கென்றே இறைவனிடம் கேட்டு மனு உடல் பெற்று வந்தவனுச்சே' என்று எம் எண்ணம் சதா ஓடுகிறது. கலிப் பவகரத்தில் உழலும் மக்களிடத்தில் மெய்யிசை இச்சை இல்லாவிட்டாலும் வம்படியில் அதை அவர்களிடத்தில் உண்டுபண்ணி உலகம் முழுவதையும் இந்த னித்திய மெய்யில் ஆக்கிவிடவேண்டும் என்பதற்காகவே எம்முடைய 74 வருட னெடுங்காலப் பாடு.

49.

பல்லடம் மெய்வழி மதிமணி அனந்தர், புது டில்லிக்குச் சென்றிருந்தபோது, அங்குள்ள ஒரு பார்ஸி சாமியார் எவர் ஸில்வரில் செய்யப்பெற்ற ஒரு செயினையும் ஒரு மோதிரத்தையும் அவரிடம் கொடுத்து 'உங்கள் தெய்வத்திடம் இவற்றைக் கொடுங்கள்' என்று தந்ததாகச் சொல்லி, அவற்றைத் தெய்வ சன்னிதியில் வைத்தார்- அதைக் கண்ணுற்ற

ஆண்டவர்கள்:- (திருமுகத்தில் கோபக்குறி தோண) உனக்குத் தெய்வம் யார்? என்று வினவியருள

மெய்வழி மதிமணி அனந்தர்:- (சன்னிதியின் திரு முன்னர் இருகரங்களையும் தாழ்த்தி நீட்டி கண்ணீர் பெருகத் தழுதழுத்த குரலில்) 'எனது உயிர்க்கு உற்ற தெய்வம் இதோ, இங்கே இருக்கிறார்களே' என்று கூற

ஆண்டவர்கள்:- ஏய்! நல்லா உட்கார்ந்து கேள். தமிழ்ப் பாஷை தெரியாத யாரோ ஒருவன், 'தெய்வம்' என்று எம்மைச் சொன்னதாகச் சொன்னாயே. அவன் எம்மைச் சந்தித்திருக்கிறானா? எம் செயல் இன்னதென்று தெரியுமா? இல்லையே. அப்படியிருக்க அவன் சொன்னதைக் கேட்டுவந்து, 'தெய்வம்' என்று அவன் சொன்னதாக- தன்னையறிந்த நீ- எம்முன் சொல்லுகிறாயே! தெய்வம் என்று அவன் நினைத்துக் கொண்டிருப்பது இன்னதென்றும் சொல்லுகிறோம். ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு நன்றாகக் கேள். யாராவது ஏதாவது தப்புப்பண்ணிவிட்டால், தப்புச் செய்தவன் தலையில் நெருப்பு குப் என்று பற்றி, அவன் தலை எரிந்து சாம்பலாகப் போய்விடணும். அப்படிச் சாபம் கொடுக்கும் சக்தியுடையதுவே அவன் நினைத்துக்கொண்டிருக்கிற தெய்வம். அந்த மாதிரி தெய்வம் இங்கு இல்லையே!

சபையில் இருந்த மெய்வழி கலைமகா அனந்தர்:- மாரியாத்தா கோயிலில் விக்கிரகத்தின் மேல் போட்டிருந்த தங்கத் தாலிப் பொட்டை ஒருவன் திருடிக்கொண்டு புறப்பட்டான். படி தாண்டும்போது அவன் கண் அவிந்து போச்சு என்று உலகத்திலே சொல்லுவார்கள். தெய்வம் என்றால் அப்படித்தான் இருக்கும் என்பதுவே மக்கள் எல்லோருடைய நினைவும்.

ஆண்டவர்கள்:- அப்ப- அந்தத் தெய்வத்திற்குத் தங்கப் பொட்டுமேல் என்ன ஆசை பார்த்தியா! கண்ணைப் பிடுங்குகிற அளவல்லவா கோபம் வந்திடுச்சு! (சபையில் மகிழ்ச்சி)

தொடர்ந்து ஆண்டவர்கள்:- இந்த நிலவுலகத்திற்கு காலகாலம் எத்தனையோ வேதங்கள், பலவேறு மொழிகளில்

இறக்கப்பெற்றன். ஒவ்வொரு வேதமும் அதனதன் கர்த்தர், னடமாடும் திருமேனியுடன் இருக்கும்வரைதான், அதன் னிஜ னிதி லாபகரப் பலனை மக்கள் தலைக்கு அளந்நது. ஏனென்றால், வேதம்- உடல், அதன் சிரசு- மூலமந்திரம். அந்நச் சிரசின் னுவு, அந்ந வேதத்தை அருளிச்செய்த அதன் கர்த்தர். அந்த னுவு மறைந்நதும் அந்ந வேதமும் உயிரில்லாததாய்ப் போய்விடுகிறது.

'னன் ஒரு தூதரே. னன் இறவாதிருக்கும் ஆண்டவர் அல்ல' என்று னன்காம் வேதத்தரசரவர்கள் கூறுகிறார்களே! அவர் எந்ந எல்லையைக் குறிவைத்துப் பேசுகிறார் என்று தெரிகிறதா?

சபையோர்:- இந்ந உத்தியோவன எல்லையைத்தான்.

ஆண்டவர்கள்:- 'ஊண் உறக்கமற்ற ஒருவரே' என்று வேதத்தில் சொல்லி வரும்போது, அரூபத்தில் ஆகாயத்திலுள்ள கடவுளைத்தானே, எல்லோருடைய னினைவும் னினைக்கும். சரி- அரூபத்திற்கு ஊண் உறக்கம் ஏது? அந்நப் பரிசுத்த ஆவி, ஊண் உறக்கம் உற்ற ஒரு தேகத்தில் வந்து-தனது னெடுங்காலகால னெறினிதிக்கோட்டில் அயராது ஓடிய அரிய மெய்யுறவுத் தவப்பாட்டால், இத்தேகத்திற்கு இயல்பாக உள்ள ஊண் உறக்கம் அற்றுப்போனதையல்லவா, மேற் சொன்ன வேத வசனம் குறிக்கிறது. அப்படி ஊண் உறக்கமற்ற ஒருவர் இதுவரை யாராவது வந்நதுண்டா?

அனந்நாதி தேவர்கள்:- இதுவரை வரவில்லை- எங்கள் கண்முன்னிருக்கும் இந்நத் தெய்வம்தான் ஊண் உறக்கமற்ற ஒருவராய் விளங்க னிற்கிறார்கள் என்று ஆரவாரித்தார்கள்.

ஆண்டவர்கள்:- ஏய் மதிமணி! இப்பத் தெய்வம் எது, அது என்ன செயலோடிருக்கும் என்று தெரிகிறதா?

மெய்வழி மதிமணி அனந்நர்:- 'திட்டமாக என் அறிவு சம்மதிக்கத் தெரிந்துகொண்டேன் தெய்வமே! இப்படிச் சவுக்கடி கொடுத்துச் சொன்னதால்தான் இந்த முரட்டு மண்டைக்குத் தெளிவாக விளங்கிற்று. இனி இது, என் னெஞ்சைவிட்டு ஒருக்காலும் அகலவே அகலாது. வேறொரு உருவுக்கு அங்கு இடம் இல்லை' என்று தொனி எழுப்பிக் கூறி கண்களில் னீர் பெருக னின்றார்.

50.

ஆண்டவர்கள்:- இப் பரந்த உலகத்தில் பொய்ப் பொருள், மெய்ப்பொருள் என்று இரண்டிருக்கிறதாகப் பேசப் பெறுகிறதல்லவா? ஆம். அப்படியானால், பொய்ப்பொருளை அனுபவிப்பது எதுவரை, மெய்ப்பொருளை அனுபவிப்பது எப்போ என்று சொல்லுங்க பார்க்கலாம்.

சபையோர்:- தெரியவில்லை

ஆண்டவர்கள்:- இந்த உடலில் மூச்சு ஓடிக்கொண்டிருக்கும் வரைதான் பொய்ப்பொருளை அனுபவிக்க முடியும். சோறு மலையாய்க் குவிந்து கிடந்தாலும், காய்கறி பருப்பு முதலியன மலையாய் னிறைந்து கிடந்தாலும், காசு பணம் தங்கம் ஆபரணம் மலைமலையாய்த் திரண்டு கிடந்தாலும், வீடுகள் அலை அலையாய்க் கட்டிக் கிடந்தாலும் அவற்றை எல்லாம் அனுபவிப்பது, உடலில் மூச்சு ஓடிக்கொண்டிருக்கும்வரை தானே? மூச்சு னின்றதும் அப்புறம் ஏதாவதுண்டா? ஒன்றும் இல்லை. ஆனல் மெய்ப்பொருள், சாவுடைய சந்திப்பிலும், அதற்குப் பின்னும் வந்து உதவ னிற்பது. ஆகவே அதைப் போதுமான அளவு இப்பவே னீங்கள் கட்டாயம் தேடி வைத்துக்கொள்ளவேணும். அதற்கு உஜார்படுத்தி, உங்களை வெற்றிகாணச் செய்யவேணும் என்பதுவே எமது சர்வகால சர்வமுயற்சிப்பாடும்.

51.

சாணுர்குல வேதமாகிய சர்வாகமக் கிரந்நம் சபையில் படித்து வரும்போது–

"சான்ருேர் முதலாய்ச் சக்கிலியன்வரையும்
உண்டானசாதி ஒக்க ஒரு இனம்போல்
தங்கள் தங்கள் னிலைமை தப்பிமிகப் போகாமல்
அலுவல்தினம் செய்து அன்புற் றிருந்நனராம்.
தான் பெரிதென்று தப்புமிகச் செய்யாமல்
வான் பெரிதென்று மகிழ்ந்நிருந்நாரம்மானை"

என்ற பகுதியை, சபையில் மறுமுறையும் படிக்க உத்திர வாகிற்று–

பிறகு ஆண்டவர்கள்:– தான் பெரிதென்று தன்னை மட்டும் எல்லோருக்கும் மேலாக, உயர்வாக எண்ணிக்கொண்டு, னமது தேவ பூமியாகிய சாலையில் னடக்கிற எவனும், கடைசியில் இந்ந மெய்யைக் கைவிட்ட சண்டாளனுகவே ஆவான்.

'தான் பெரிதென்று னினைப்பது தப்பு' என்று சாணுர் குலத்தலை தங்கள் னூலில் சொல்லுகிருர்களே– தான் பெரிதென்று னினைக்கும் அந்நப் பாழான எண்ணத்திற்கு 'தப்பு' என்ற அந்நச் சொல் பத்தாது. இன்னும் கடுமையான சொல்லாயிருக்கவேண்டும்.

'முப்பது வருடத்திற்கு முன், னுன் இந்நச் சபையில் சேர்ந்நவன்' என்று ஒருவன் எண்ணி மேட்டிமையாகப் பேசினுல், னடந்நால், வந்நது அவன் தலைக்குத் தீங்கு. 'முப்பது வருடமாக னம் ஐயனின் தேவனுத அருள் உணவைப் பிடுங்கித் தின்னுவிட்டு அதற்குத் தக்க கைம்மாறு செய்யாத னன்றி கெட்டவன் னுன்' என்ற னினைப்பு அவனுக்கு ஏன் வரக்கூடாது? அந்ந னினைப்பல்லவா னியாயமாக முதலில் வரவேண்டும்? அவன் முப்பது வருடமாகத் தொடர்ந்து இந்ந

மெய்யில் ஒட்டியிருக்க னும் எடுத்த யுக்தி, பட்ட பாடு எமக்கல்லவோ தெரியும்!

'முப்பதாம் ஆண்டளவில் அதாவது முப்பது வயது ஆவதற்குள்' இந்த மெய்யில் சார்ந்துகொள்ள வேண்டும் என்று ஆன்றோர்கள் கூறி வைத்துள்ளார்களே- ஏன் அப்படிச் சொன்னார்கள் என்ற அதன் உள்ரங்க ரகசியம் யாருக்கும் தெரியாது. அந்த வயதில் ஒருவருக்கு இருக்கும் மூர்க்கமான நாத வல்லபம்தான், இந்த மெய்யில் சார்ந்து மாறாது நிற்கச் செய்யும். அப்படிக் குறித்த அந்த முப்பது வயது தாண்டி, முப்பத்தைந்நாவது வயதில் ஒருவன் இந்தச் சபையில் வந்து சேர்ந்தால், ஐந்து வயதுக்கான ஜீவ ரஸ்தை, நாத வலுவை எம் தவத்திலிருந்து போட்டு நிரப்பி, அவனை பிரம்மோபதேச மெய்யில் னும் ஆக்கி வைக்கவேணும். இன்னொருவன் ஐம்பது வயதில் இங்கு வந்து சேருகிறான். இருபது வயது ஜீவ ரஸ்தை, பாழுக்குச் செலவுசெய்து தொலைத்துவிட்டு வந்த அவனுக்கு, எம் தவத்திலிருந்து இட்டு நிரப்பி அந்த னஷ்டத்தை ஈடு செய்து இழவு போட்டு, இந்த மெய்யை அவன் தலையில் பதிக்க வேண்டும். இப்படியேதான் இங்கு வந்து இந்த மெய்வழிக்குள் ஆன உங்கள் ஒவ்வொருவர் நிலையும். எம் இரக்கத்தால் செய்துவரும் இச்செயலை- எந்த மகத்தும் செய்யத் துணியாத இத் தனிச் செயலை- ஒவ்வொருவரும் நினைத்துப் பார்த்தால், 'நான் பெரிது, நீ சிறிது' என்று பேச நாவு எழுமா? இது காலம்வரை வெளியாக்காமல் எமது உள்ளத்தில் வைத்திருந்த இத் தேவ ரகசியத்தை, இன்று வெளியாக்கிவிட்டோம். தப்பித்துக்கொள்ளுகிறவன் தப்பித்துக்கொள்ளட்டும்!

ஆதியே துணை

மெய்வழிச் சபையின்

ஸ்ரீ வித்து ஜயகம்

எமன் பயத்தைக் கடத்தி, தெய்விக பிரம்மவித்தையாகிய பரமபத முத்திச் செயலினில் ஏற்றிவைக்கின்ற மெய்மத உற்பன்னர், மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய சிவராஜர், ஊண் உறக்கமற்ற தெய்வம், கல்கி, மகதி, கர்த்தாதி கர்த்தர் மெய்வழிச் சாலைஆண்டவர்கள்.

அறிவைத் தேடு

மனித தேகத்தில் அறிவு எங்கு இடம்கொண்டிருக்கிறது என்று அறிய உலக ஆராய்ச்சி, வெகுகாலமாக முழுப்பிரயாசையுடன் ஈடுபட்டிருக்கிறது — ஆராய்ச்சியாளர்கள் இறந்தவனின் தலையை விலைக்கு வாங்கி அதைக் குடைந்து குடைந்து அறிவைத் தேடுகிறார்கள். பாடும் ஓயவில்லை, பலனும் கண்டதாக இல்லை. இதற்காகவே பிரயாசை, கோடிக்கணக்கான பணச் செலவு, காலவிரயம் எவ்வளவோ ஆகிறது. ஆனால் எக்கோடிகாலத்தும், எந்தப் பிரயாசைகொண்டும் இவர்களால் அதை அங்கே காணவே முடியாது. ஏனெனில் அது இல்லாத இடத்தில் அதைத் தேடுகிறார்கள்.

இனியாவது இவ்வாறான வீண்முயற்சி செய்வதை விட்டுவிட்டு 'இல்லாத இடத்தில் அதைத் தேடவேண்டாம்' என்று அறிவிக்க எண்ணியே இதை இப்போது வெளியாக்குகிறோம்.

பஞ்ஞாட்சரம் முதலாகிய உலகத்திலுண்டான மூலமந்திரங்கள் அவ்வளவும், ஈசனுடைய ஞமமும், ஒவ்வொருவருக்கும் வைத்திருக்கும் ஞமமும் அதுவே தான். எமனை அடக்கி ஆளுகின்ற மதம் என்னப்பெற்றதும் அதுவாகவே இருக்கிறது.

அறிவையும் உயிரையும் எமக்குத் தெரியும். எம்மைச் சார்ந்த 69 சாதிகளடங்கிய பல ஆயிரக்கணக்கான மக்கள் இதைத் தெரிந்துகொண்டிருக்கிறார்கள்.

1-9-1975

இப்படிக்கு,

சாலை ஆண்குரு

வான்மதிக் கோரல்
தொடர்ச்சி

52

இறை திருவடிசேர் இத் தெய்விக மெய்வழியில் மக்களைக் கூட்டிச் சேர்க்க, நமது தெய்வமவர்கள் ஆங்காங்கு பல ஊர்களிலும் அலைந்து தேடிக்கொண்டிருந்த ஆரம்பப் பிரச்சாரகாலத்தில்- பழிபாவ மலிவு கலியூரிலங்கே னிருந்த கூட்டத்தினரின் வர்ணனையை-

மனிதச்சட் டையிட்டவான்
பாடியூர் வனங்காலி
பிணிக்கப்பெற் றிருக்கின்ற
பேயினங் கட்கிடை - தேடியலுத்த - என்றும்

மனிதப்புற் பூடுகள்
மலங்கல்க ரடுமுட்கள்
சனிப்பொறி யரவுவாழ்
சதளங்க ளுக்கிடை - தேடியலுத்த - என்றும்.

நரனைந் நதுமக்கள்
ஆய்வானே ராகவென்
றறியாப்பக் கிலிஷங்க
ளதற் கிடை யினிலின்னுள் - தேடியலுத்த-என்றும்

இன்னும் இவ்வாறு பலவாருகத் தெய்வத் தேடு கூடகத்தில் சித்தரித்து வைத்துள்ளார்கள் என்று சபையில் பேசப் பெற்ற போது- -

ஆண்டவர்கள்:- சிவனுடைய பூமியாகிய இத் தென் தமிழ்நாடே இந்த அதோகதியில் ஆகிவிட்டதென்ருல், வெட்ட வெறும் முரண்டாட்ட மென்னும் பஞ்சேந்திரிய லோகாயதக் கொள்கையே மலிவாமலிந்து எங்கும் நிறைந்துள்ள மேற்கு நாடுகளில் வசிக்கும் மக்கள் எந்த அவகேட்டிலிருப்பார்கள் என்று எண்ணிப் பாருங்கள். தெத்துப்பல், பூனைக்கண், செம்பட்டை மயிருள்ள அவர்களின் உள்ளத்தில்

இந்த ஞானம் போய் ஒட்டுமா? ஒட்டாது. அந்த ஞடுகளில் இதுவரை ஒரு மெய்ஞ்ஞானியாவது அவதரித்திருக்கிறர்களா? இல்லேயே.

அடுத்துத் தெய்வத்தேடு கூடகத்தில் (273ஆம் பக்கத்தில்) காணப்பெறும் திருவசனம்- "அந்தக் காலத்திலே நம் ஆசியாக் கண்டத்தின் வடமேலக் கோடிப் பிரதேசத்தே தேவ மாதாவாகிய கன்னி மரியம் அவர்களின் பேரினம் நல்லக்கரு வறைச் சூலிலிருந்து உதயம் செய்து வெளியாகிய ஈசானபி என்னும் ஏசுஞநாதவர்களே...... மகதி அலேகிஸ்ஸலாம் என்னும் ஞமத்துறை செயலிலேறி...... பெரிய திருவுளவர ந்நாங்கி வந்து, இதுபோது நன்னெறி நம்பிக்கையுடைய சிலர்களுக்கெல்லாம் இங்கே முகமுகத் தோன்றலாக நின்று- பாவ சங்கார ச்செழிப்பளந்து சாவாவர மியற்றும் சமூகத்தாயகமாக விளங்குகிறர்கள்" என்று சபையில் படிக்கப்பெற்ற போது-

ஆண்டவர்கள்:- அப்படி முகமுகத் தோன்றலாக இந்த உத்தியோவனக் காட்டிற்கு இதுகாலம் வந்து விளங்கு கிற்கிறவர்கள்தான், சாம்பலாகப் போய்விட்ட விபூதியை, அதன் நிஜ வல்லபத்தில், வெற்றி தருகின்ற பூப்போன்ற தியாக, உங்கள் இருதய கமலங்களில் ஆக்கிவைத்துள்ளார்கள். மேலும் அரியதவக் கின்னுமத்துடன் விளங்கும் செவ்விய அலங்காரப்பாகையைச் சிரமேல் ஏற்றி, மந்திரோற்பன்ன சூக்கும ஆரூர்ச்சுலாம் ஏற்றுவிற்கும் சௌபாக்கிய ஜெயசிலர்களாகிய அனந்தர்களாக பகிரங்கத்தில் பூமியெங்கும் உலவச் செய்துள்ளார்கள். இன்னும் பொருளற்ற மொட்டை எழுத்தாக இருந்த பிள்ளேயார் சுழியைக் கோடி சூர்யப் பிரகாச இதய மேருகிரி அரசு தவகுமாலாக அகமுகத்தில் காணத் தம் மக்களுக்கு அனுக்கிரகித்துள்ளார்கள். துவாபர யுகத்தில் குருக்ஷேத்திர பூமியில் வீராதி வீரனுகிய அர்ச்

சுனனுடைய கையிலிருந்த காண்டீபத்தை எது பறித்ததோ, அதன் கையிலிருந்து அந்தக் காண்டீபத்தை மறுபடியும் பறித்து பற்குனனாகிய விஜயன் கையில் அளித்து, அவனை விஜ வீரனாக ஆக்கி போரில் வெற்றிகாணச் செய்த கீதாசாரி யராகிய திரினேத்திர பிரானின் செங்கரத்திலிருந்த அதே பெருக்காநிக்கத் தவ வல்லபம், இங்கே இதுகாலம் பஞ்சு முத்திராலம்ப சன்னதாலங்கிர்தம் துலங்கும் சாவாவரம் னல்கும் சாதிகளின் கர்த்தராகத் திருமேனி தாங்கிவந்து, மேற்சொன்ன பற்பலவாம் தெய்விக அதிகாரன அருள் ஆட்சி ஆடலங்கங்களை யாவரும் காணத் திமுதிமுக்க னிகழ்த்தி வருகின்றார்கள்.

இவ்வாறாக, சதுர்யுகங்கோடிகாலச் சீர் சிறப்பனைத்தும் உள்ளம் கினைத்துத் தழைத்தோங்கி, னாள்தோறும் இந்தச் சன்னிதியில் புதுமை பூக்க னிற்பதை னீங்கள் ஏன் எடுத்துப் பேசக்கூடாது? னாம் உங்களைவிடப் படித்தவரா- இல்லையே. அப்படியிருக்க, எமக்கு மட்டும் இப்படிப் பேச வருகிறதே, அது ஏன்? எமது ஆத்ம காமனாயகர் எமக்குக் காலகாலம் வரையாது அளித்த வள்ளற் கொடையை, செய் யாமற் செய்த திருனிறை னன்றியை, கல்லாமல் கற்பித்த காருண்யக் ககன் வித்தையைக் கனக்கொண்ட ஆத்திரத் துடன், னாம் எண்ணி எண்ணி னுணுகி னுணுகிச் சிந்தித் துப் பார்ப்பதால்தான், அவர்களின் தெய்விக ஜீவகார்மான வான் புகழானது பன்னலங்கார அழகு குமுற எம் னாவில் வட்டாடி னிற்கிறது. இத் தேவ வல்லபம் உங்களுக்கு ஏன் வராது? வந்துதான் ஆகணும். அதை வரச் செய்தே தீரும் கோல் எம்மிடம்- இருக்கு! எழுந்திருங்க, னேரமாச்சு. சோத் துப் பானையிலிருப்பதை எடுத்து உங்கள் தோல்பானையில் னிரப்பிவிட்டு வாங்க- என்று திருமுகத்தில் இளனகை பூக்க அருளிச் செய்தபின் திருமாளிகைக்கு ஏகினார்கள்.

53

ஆண்டவர்கள்:- 'கடவுள் இல்லை' என்கிறானே; அவனைப் பார்த்து, 'நீ இப்ப என்னமோ சொன்னாயே- அந்தச் சப்தம் எங்கிருந்து வருதப்பா? உன் கடமாகிய உடலுக்கு உள் இருந்துதானே வருது?' என்று அவனைக் கேட்டுப்பார். மேலும் கீழும் விழிப்பான். அந்த சப்தம் இத் தூலமாகிய உடலில் எந்த எல்லையிலிருந்து உதித்து எழும்புகிறதோ, அந்தத் திருஸ்தலம்தான் கடவுள் இருக்கும் எல்லை என்பது உலக மக்களுக்குத் தெரியாது.

54

(16-12-1974:- பகல் 12மணிக்கு, பச்ச மரத்தடியில் புதுப்பானையில் உப்பில்லாத பொங்கல் வைத்து, அதை உருமகால தவம் முடிந்ததும் பொன்னரங்க ஆலயத்திற்கு எடுத்துச்சென்று, தெய்வமவர்கள் தங்கள் திருக்கரத்தால் தீர்த்தம் போட்டபின், 'உச்சிதமாய் தேவபிரான் உச்சிஷ்ட' மென்று கருதி அமுதாக உண்டார்கள். பொழுது விடிந்ததி லிருந்து பகல் உருமனேரம் வரை ஒன்றும் சாப்பிடாமல் சென்ற ஒருவாரமாக சாலை வாசிகள் யுகத்தவ நோன்பிருந் தார்கள். தங்கள் சன்னிதியில் குழுமியிருந்த தேவகன்னி தேவர்களை பெருங்கருணை நோக்கோடு பார்த்து)

ஆண்டவர்கள்:- அதி காலையிலிருந்து பகல் ஒரு மணி வரை நோன்பு இருக்கிறீர்களே- ஒன்றும் சாப்பிடாமல் இருக் கும் சோர்வு உங்கள் எவருடைய முகத்திலும் அடையாளத் திற்குக்கூடக் காணோமே. சரி- நீங்கள் பார்க்க, சவத்திற்கு ஒரு உத்திரவுபோட்டுத் தீர்த்தம் சாப்பிட ஹும் வைக்கிறோமே! அது எதனால்? எமது சுவேதவராக யுகத்தவ வலுவினாற்றானே, அந்த அதிசய அருங்காரணச் செயல் நிகழ்கிறது! அதுவே நடக்கும்போது, எம்முடைய மெய்வழியில் ஒட்டி, தூலத்தில் உயிரோடு உலாவிக்கொண்டிருக்கிற உங்களது பசியை,

னும் ஒரு உத்திரவு போட்டால், அது மாற்ற முடியாததாகவா இருக்கும்? நிச்சயமாக அதை மாற்றமுடியும். அப்படியான ஒரு உத்திரவு நாம் போட்டிருப்பதால்தான் இந்த நோன்பு நேரத்தில் உங்கள் முகங்கள் பசியின் அடையாளமாகிய களைப்போ, சோர்வோ இல்லாமல் காணப்பெறுகின்றன. ஜீவபதி உலகின் அதிவல்லப ஆட்சி இவ்வாறு இங்கே தினம் தினம் நிகழ்ந்துகொண்டிருக்கிறது என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்த்ததுண்டா?

அனந்நாதி தேவர்கள்:- இப்போது உதயமாகி வெளியான அருள் விரிப்பினால்தான், நெடுங்கால இத் தெய்வ சன்னிதியில் நிகழ்ந்துவரும் சித் சொருபக ஜீவகலை தவச் செயலின் பெருமைகளை நாங்கள் உணர முடிந்தது.

55

ஆண்டவர்கள்:- உன் ஜீவ சகோதரர்களில் ஒருவன் ஏதாவதொரு தவறு செய்துவிட்டால், பிறர் பார்க்க நீ அவனைக் கண்டிக்கக்கூடாது. 'நம்மை ஒருவர், அப்படி எல்லோர் முன்பாகக் கண்டித்தால் நாம் வருந்துவோமே' என்று எண்ணி, இரக்கமான உள்ளத்துடன் அவன் அருகிற் சென்று, அடுத்தவர் யாரும் கவனிக்காதபடி, நீ சொல்லுவதை அவன் அறிவு நியாயமென்று ஒத்துக்கொள்ளும் வண்ணம், அன்பு பிறங்கும் வார்த்தைகளால் லேசாகக் கண்டிக்கவேண்டும். அப்படிக் கண்டிக்கும்போதும், அவன் செய்த தவறு, தான் செய்த தவறாகவே நினைத்து அவனிடம் பேசவேண்டும். இந்த ஆன்மநேய நீத முறையில்தான் எமது சத்திய தேவகுல மக்களாகிய நீங்கள், ஒருவருக்கொருவர் பேசிப் பழங்கிக்கொள்ளவேண்டும். உங்களிடையே மாறாத தெய்வ நேசம் பெருகி வளர, நாம் தருகின்ற உளவு இது. இந்த மெய்வழியை உண்டுபண்ணிய தாயகத்தின் ஒரே பிரணவச் சூலில், ஒரு குலைக்காயாக ஒக்கப்பிறந்த

உங்களனைவருக்கும் வேண்டிய தேவனடைமுறை ஒழுக்கம் இது.

56

'இறுதித் தீர்ப்புநாள் வந்துவிட்டது. உலகத்திலுள்ள தீங்கினர்களை எனது பக்கம் சேர்த்துக்கொள்வதால், இறைவனுடைய சொந்தக் கிருபையாளர்களாகிய அடியார்களின் பெருமையை உலகத்தினிடத்தே தனித்துப் பிரித்து உன்னதமாகக் காட்டிவந்த என்னுடைய வேலை, முடிந்து விட்டது. ஆகவே இறைவா! எனக்கு ரக்ஷிப்புத் தரவேணும்' என்று இபுலீசாகிய சைத்தான் அல்லாகுத்தஆலாவிடம் கேட்டான். அவனுக்கு ரக்ஷிப்புத் தரப்பெற்றது- என்று கித்தாப்புகளில் சொல்லப்பெற்றிருப்பதாக மெய்வழி கவிசொல் அனந்தர் சபையில் பேச-

ஆண்டவர்கள்:- இபுலீசானவன் அடியார்களின் பெருமையை உலகறியக் காட்டும் நோக்கத்துடனா ஹபீப் குல மக்களைக் கெடுத்தான்? 'அவர்களுக்கு மட்டும் புகழ் பெருகுகிறதே, னமக்கு அந்தப் புகழ் இல்லையே' என்ற பொறாமைக் குபாட உள்ளத்துடன் அல்லவா எக்கோடி காலமும் அவனுடைய தீங்கைப் பரப்பி வந்தான்? உண்மை இவ்வாறிருக்க, தன் செயலை மறைத்துப் பிரட்டி வஞ்சக இருட்டுள்ளத்துடன் பேசுகிற அந்த இபுலீசுக்கு இரக்ஷிப்புத் தருகிறது இறைவனாக இருக்கமுடியாது. இதுகாலம் வரை அவன், னெடுகச் செய்து வந்த குற்றங்களோடு, அவற்றை மறைத்து இறை சன்னிதியில் மாற்றிப் பிரட்டிப் பேசின குற்றத்தையும் சேர்த்துக் கணக்கிட்டுப் பார்த்து, அவனுக்கு இரட்டிப்புத் தண்டனை தருகிறவரே மகஜர் மைதானத்தில் னீதித் தீர்ப்பராக அமருகிற அல்லாவின் செயலாகக் காணப்பெறும். னீ சொன்னது தன்னறிவில் சாய்ந்து தலைபாடிய கையாடியர் எழுத்துக்களில் ஒன்று என்று தெரிகிறதா? ஆம்.

57

பாசவே றறுக்கும் பழம்பொருள் தன்னைப்
பற்றுமா றடியனேற் கருளிப்
பூசனை யுகந்தென் சிந்தையுட் புகுந்து
பூங்கழல் காட்டிய பொருளே
தேசுடை விளக்கே செழுஞ்சுடர் மூர்த்தி
செல்வமே சிவபெரு மானே
ஈசனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

என்ற 'பிடித்த பத்தில்' வரும் காணிக்கை நீதி மாணிக்கப் பிரானின் திருவாசகச் செய்யுள் சபையில் படிக்கப்பெற்ற போது-

ஆண்டவர்கள்:- 'பாசவேர் அறுக்கும்' என்று அவர்கள் சொல்லுகிறார்களே- 'பாசம்' என்ற சொல்லிற்கு, தன்னை அறிந்த மதிமகத்துக்களாகிய மெய்ஞ்ஞானிகள் கொண்டுள்ள பொருள், உலக மக்கள் யாருக்கும் தெரியவராது. தனது தெய்வ ஆசானிடம் ஒருவன் வைக்கும் அன்பிலிருந்து அவனைத் தடுத்து மாற்றி, வேறுபக்கம் திருப்புகிறது அனைத்தும் பாசம் என்பதுவே மதிவான் மன்னர்களின் தீர்ப்பு. பாசம் என்றதும் பெண்டு பிள்ளைகள், பணம் காசு, வீடு நிலம், தேசாதிபத்தியம் புகழ் என்ற நினைப்புத்தான் மக்களுக்கு வரும். அந்தப் பெண்டு பிள்ளைகள், தேசாதிபத்தியம் முதலியன அவனோடு இணங்கிநின்று தெய்வ ஆசானிடம் அன்பு செலுத்த உதவியாய் நின்றாலும் நிற்கலாமே. ஆகவே அவைகள் பாசம் அல்ல. அப்படி நமது எல்லையில் மெய்யில் சேர்ந்துள்ள மக்கள் பலருக்கும், அவை உதவியாயிருக்கிறதை நாம் பார்க்கிறோமே. இன்னும் சுருக்கமாய்ச் சொன்னால், பாசம் என்பது ஆசான் எண்ணத்திற்குப் புறம்பாய்த் தன்னறிவில் சாய்ந்து நடப்பதே ஆகும்.

இன்னும் அந்நச் செய்யுளின் கடைசி வரியில் 'சிக்கெனப் பிடித்தேன்' என்று கூறுகிறார்களே அதற்கு என்ன பொருள் என்று உங்களுக்குத் தெரியுமா?

சபையோர்:- சிக்கெனப் பிடித்தேன் என்றால் உறுதியாக, மகா வலுவாகப் பிடித்தேன் என்பதுதான் நாங்கள் இதுவரை கேட்டுள்ள அர்த்தம்.

ஆண்டவர்கள்:- அவர்கள் குறித்துள்ள பொருள் அது அல்ல. எங்கள் காலத்தில் அதற்கு வேறு பொருள் இருந்தது. நாம் இளமையாயிருக்கும்போது கிராமத்திலுள்ள திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்து வந்தோம். தரையில் மணல் விரித்து அதன் மேலிருந்துகொண்டு படிப்பதுதான் அப்ப நடைமுறை. கடுதாசியில் அச்சேறிய புஸ்தகங்கள் அந்நக் காலத்தில் இல்லை. பனை ஓலையில் எழுத்தாணி கொண்டு எழுதிய ஏட்டுச் சுவடிகளே இலக்கியம், இலக்கணம், கணக்கு என்று ஒவ்வொன்றுக்கும் இருக்கும். அவற்றைக் கீழே தரையில் மண்ணில் வைக்காதபடி சிக்குப்பலகைகளின் மேல் வைத்துப் படிப்போம். பள்ளிக்குப் போகும்போது, ஏட்டுச் சுவடிகளுடன் சிக்குப்பலகையையும் கட்டி முதுகில் சுமந்துகொண்டு போவோம். ஒரு பலகையை இரண்டாக அறுத்து, விரித்து வைக்கும்படியாகச் செய்திருப்பதே சிக்குப் பலகை. இரண்டாக உள்ள பலகைகள் ஒன்றை ஒன்று பிரியாமல் சிக்கிஇருக்கச் செய்யப்பெற்றிருப்பதால்தான் அதற்குச் 'சிக்குப்பலகை' என்ற பெயர் வந்தது. அதை வழக்குச் சொல்லாக 'சிக்கு' என்றும் சொல்வார்கள். ஆகவே மணிவாசகப் பிரான் 'சிக்கெனப்பிடித்தேன்' என்று அருளிச்செய்துள்ளதைக் கேட்டதும் 'ஈசனே, உன்னைவிட்டு என்றும் பிரியாமல் சிக்குப்பலகையைப்போல் மாயாத கடும்பிடிப் பற்றாகப் பற்றிக்கொண்டேன்' என்றுதான் எங்கள் காலத்தில் பொருள் கொண்டார்கள். அந்த உயிர்ச் செயலுடைய பொருள் இப்போ மறைந்து விட்டது.

58

'திருவருட்பிரகாச வள்ளலார் திருக்காப்பிட்டுக்கொண்ட நூற்றாண்டு விழா' என்று பெரிய எடுப்பு எடுத்து, விளம்பரம் செய்து, வடலூரில் கொண்டாடப்போகிறார்கள் என்று திருச்சன்னிதானத்தில் பேசப்பெற்றபோது–

ஆண்டவர்கள்:- வடலூர் இராமலிங்கப்பிரான் திருமேனியுடன் இருந்தபோது அவர்களுக்கு இந்தச் சிறப்புத் தந்து கொண்டாடினார்களா? கொண்டாடவில்லை. 'கடையை விரித்தோம்– கொள்வாரில்லை– கட்டிவிட்டோம்' என்று அந்தப் பெரிய திருவுள்ளம் வருந்தி தூலவலசு வாங்கிச் செல்லும்படியான நடைமுறையல்லவோ அதுபோது இருந்திருக்கிறது. சரி– இப்போது கொண்டாடுகிறார்களே, ஏன்? இந்தப் பெரிய முயற்சி எடுத்து அவர்கள் இருக்கும்போது கொண்டாடினால், எல்லா மதிப்பும் அந்தத் திருமேனியருக்கே ஆகிவிடும். அதோடு அவர்கள் திருநாமத்தை வைத்து எந்த விழாக் கொண்டாடினாலும் அவர்களைப் பணிந்து, உத்திரவுகேட்டு அவர்கள் வகுத்துத்தரும் தெய்வமுறை பிரளாத நடைமுறையில் அல்லவா நடத்தப்பெற வேணும்! ஆனால் இப்போதோ 'அது செய்ய, இதை உண்டாக்க' என்று ஏதேதோ சொல்லி தன்னிஷ்டம்போல் ஏற்பாடுகளை நடத்தி அவர்களின் திருநாமத்தையும், நூலையும் வைத்துக்கொண்டு கொண்டாடினால்– தலைமைதாங்கி முன் னின்று இவற்றை எல்லாம் ஏற்பாடு செய்கிறவர்களுக்குத்தானே அவ்வளவு மதிப்பும் போய்ச்சேரும். அதை நினைத்துத்தான் பக்தி என்ற பெயரில் இப்படியான செயல்களில் இறங்கியுள்ளார்கள். நம்ம எல்லையில் அது நடக்குமா? நடக்காது.

59

ஆண்டவர்கள்:- சைவகுலத்தில் பிறந்த ஒருவனைத் திருத்தி மெய்யில் ஆக்க வேணுமானால், முதலில் நாம், அவன்

இருக்கிற பொய்யைச் சிறப்பித்துப்பேசி அவனோடு உறவாடி, அவன் இருக்கும் எல்லைக்கு இறங்கி, இணங்கி நடந்து, நேசமாகப் புழங்கி, பிறகு பையப்பைய அவன் கிடக்கும் அதோகதி நிலையைச் சுட்டிக்காட்டி, இந்த மெய்யின்பால் அவனைத் திரும்பும்படி இச்சைகாட்டி ஆக்குகிறோம் என்று உங்களுக்குத்தெரியவராது. இம்மாதிரியே வைணவ, பிராமண, இஸ்லாமிய குலத்தில் பிறந்த எல்லோரையும், மேற்சொன்ன நெட்டியபாட்டினைக்கொண்டுதான் இந்த மெய்யில் ஆக்கியுள்ளோம். முன்வந்த செம்மல்கள் யாரும் இவ்வாறு எடுப்பெடுத்துச் செய்யவில்லை. ஏனெனில் அவர்கள் வந்தகாலம், இப்பூமி அழியப்போகிற, கோரம் நிறை நேரம் நெருங்கி வந்து கொண்டிருக்கிற கடைக்கால மல்லவே!

ஆதியில் விபூதி என்று எடுத்து வைக்கும்போது 'வெற்றி தருகின்ற பூப்போன்ற தீ' யாக விளங்கும் அந்த மெய்ப்பொருளைத் தன்னை அண்டி அடிமைபூண்ட சீடர்களின் உளக்கையில் தந்துதான், அந்தத் தெய்வ நமத்தை எடுத்து வைத்தார்கள். ஆனால் காலம் செல்லச்செல்ல, மெய்யான அந்த அசல் மாறி 'சாம்பல்' என்ற நகலாக வந்துவிட்டது. இவ்வாறு அது நகலாக மாறுவதற்கு வெகு நீண்டகாலம் ஆகியிருக்குமல்லவா? ஆம். நகலாகப் போயே போய்விட்ட அதைமாற்றி, மறுபடியும் நிஜச் செயலுடைய விபூதியாகக் கொண்டுவந்து தருவது என்பது லேசான காரியமா? நல்லா நினைத்துப்பாருங்க.

தன்னை அறிந்த அனந்தனை இருக்கும் உன்னை, யாராவது மாற்றிப் பிரட்டி அஞ்ஞானியாக ஆக்கமுடியுமா? முடியாது. உனக்குப்பின் ஒரிரு தலைமுறை காலம் இந்த மெய், இப்போதுள்ள ரூபத்தில், வேகத்தில் இருக்கும். ஆனால் பல தலைமுறைகள் கடந்துபோனால், மெய்யானது அடையாளமின்றி மறந்து மறைந்துபோவது இயற்கைதானே. அப்

போது உன் சந்ததிக்கு அஞ்ஞானி என்ற பெயர் வந்துவிடு மல்லவா? ஆம். அப்படியான ஒரு அஞ்ஞானியைப் பிடித்துப் பிரட்டி மாற்றி மெய்யிலாக்கி, அவன் உள்ளத்தில் 'தான் ஒரு அனந்தன்' என்ற எண்ணம் வரச்செய்வதுபோன்ற நெடிய பாரதூரமான பாடுதான், சாம்பலை அசல் விபூதியாக உனக்கு ஆக்கித் தந்த எம்முடைய பாடு. இவ்வாறான அரும்பாட்டினால் இந்த மெய்ப் பயிர் ஏற்றப்பெற்று, நீ காணும் இந்தப் பிரம் மாண்டமான அதிமகோன்னத உச்சத்தில் இதுகாலம் ஏறி விளங்கி நிற்கிறது என்பதை நீ அறியாய். இந்த நெடிய பாட்டை நீ, ஆழ்ந்து நுணுக்கமாக எண்ணிப்பார்த்தால் தான் ஒருவாறு உன் அறிவுக்கு, இந்த மெய்வழியின் சீர்மலி கதிகருணை அதியற்புதச் சிறப்பு தெரியவரும்.

ஒரு பொருளை ஒருவர் கையில் எடுத்துக் கொடுக்க மற்றொருவர் பெற்றுக்கொள்கிறதுபோன்ற செயலல்லவே இந்த மெய்ச்செயல். எவர் ஒருவருடைய பேச்சாலோ, சாமர்த்தியத்தாலோ, முயற்சியாலோ செய்து முடிக்கக் கூடியதும் அல்லவே இது. அவ்வாறு செய்யக்கூடியதானால் எல்லாரும் செய்து விடுவார்களே. பவமூகை ஆண்மை நரனாக இருக்கும் ஒருவனை, நெடுங்கால ஓயாத் தவப்பாட்டின் மங்காத வலிமையினைக்கொண்டு மனுவாக்கி, பிறகு தேவனாகப் பிரட்டிப் பிறப்பித்து, அவனது உள்ளத்தில் நிச்சய நிரூபண பிறங்க ஏற்றிவைக்கும் ஆற்றல் பெற்றதுவே இந்த மெய்.

நான்முகன் என்ற பிரம்ம பட்டம் நெடுங்காலத் தவப் பாட்டால் பெறப்பெறுவது என்பது நூலறிவினருக்குத் தெரியாது. இவ்விதமாகவேதான் மால்பட்டம், உருத்திரபட்டம் முதலிய சகல மதிவான் பட்டங்களையும் பிரம்மகுலாதிபர்கள் தங்கள் தங்கள் அரியதவப்பாட்டால் பெற்று இந்நிலவுலகிற்கு வந்தார்கள் என்பதும் உலக மக்கள் அறியார்கள்.

சங்குடுக் கையுர்வான் சன்னதங்கள்
- சன்னதங்கள்
தான்கொண்ட மூலபண் டாரம்வந்து
சாயுச்ய பட்டம்சி ரஞ்ஜீவியும்
- சிரஞ்ஜீவியும்
சாவாவ ரம்பிரம்ம பட்டங்களும்
மால்பட்ட மும்கைய டக்கிக்கொண்டு
- அடக்கிக்கொண்டு
வழங்குது மூலபண் முந்துமினே

(ஆதிமெய் உதய பூரண வேதாந்தம்- 419ஆம் பக்கம்)

மேலே கூறப்பெற்றுள்ளபடி சங்கு உடுக்கை முதலாகிய வான்வளர் தேவ சன்னதங்கள் அனைத்தும் பெற்ற மூலபண்டாரம் ஓர் மானிட ரூபம் தாங்கி, இக்கலிக்கடையில் வந்து, தனது ஜீவ விஸ்வாகர மெய் அருள் வல்லபத்தைக்கொண்டு சாயுச்சிய பட்டம், சிரஞ்ஜீவிப்பட்டம் முதலாய சகல வெல்வான் வாழ்வு வரங்களை சிவேச பிறவி பெற்ற தனது தேவகுல மக்கள் தலையில் பரிசுபதமாக வரிவழங்கி வருகின்றது என்ற அதிரகசியத்தினை, மந்திரச் சந்நதியாய் ஞம் ஊன்றெடுத்து வளர்த்து சித்த சுத்த வைராக்கியக் குன்றேற்றி வைத்துள்ள உங்களுக்கல்லால், வேறு யாருக்குத் தெரியப்போகிறது!

60

பகல் உருமகால தவனேரத் தரிசனைக்குப்பின்- யுகத் தவ னோன்பு வைத்திருக்கும் அனந்நாதி தேவர்களை நோக்கி-

ஆண்டவர்கள்:- சாப்பாடு, குழம்பு என்ற வார்த்தைகளை மக்கள் யாவரும் வெகு சரளமாகப் புழங்கிப் பேசுகிறார்களே- அவ்வாறு பேசுவதில் ஏதாவது தவறு இருக்கிறது என்று யாராவது னினைத்ததுண்டா? இல்லை. ஒருவர் ஏதாவது பேசி வரும்போது 'சாவு' என்ற சொல்லைச் சொல்லிவிட்டால், அது அபசகுண, அசுப வார்த்தை என்று னடுங்கி,

'மொட்டை இழவிலே அப்படி ஏன் பேசுகிறே?' என்று கடிந்து கொள்ளுகிறவர்களும் கூட, 'சாப்பாடு ஆச்சா?'- அதாவது 'சாவுப்பாடு, சாவதற்குப் பாடு ஆச்சா'- என்று பொருள் படும்படியான வார்த்தையை எப்பவும் பேசிப் புழங்கிவரு கிறார்களே! அவர்கள் இந்த உலகத்திலிருந்துகொண்டு இரவு பகல் ஓயாக் கவலைபூண்டு பாடுபடுவது அனைத்தும், நெடுங் கால நீங்கா அவஸ்தையில் புகுத்தும் சாவை, இறுதியில் சந்திக்கிற பாடாயிருக்கிறதினால்- அவர்கள் அப்படிச்சொல் வது சரிதான் என்றும் நினைக்க வேண்டியிருக்கிறது. 'சாப்பாடு' என்ற அந்த வார்த்தையிலும், குழம்பு- அதாவது நிம்மதியில்லாமல் குழம்புவது- என்ற வார்த்தையிலுமுள்ள கோரம், எவர் அறிவிலும் படவில்லையே- ஏன்?

சாப்பாடு என்று சொல்லாமல் 'சோறு' என்று சொன்னாலும் 'சோர்ந்து போ' என்ற பொருள் அதில் தொனிக் கிறதே. அந்தச் சோர்வை சம்ஹரிக்கும் ஜீவமருந்து இந்த உத்தியோவன கானகத்தில் பிரத்தியக்ஷத்தில் இருக்கிறது என்பது இந்த உலகிற்குத் தெரியுமா? காலை உதய மானது முதல் இந்த உரும நேரம் வரை ஒன்றும் அருந்தாமல் ஞானைப்பில் இருக்கிறீர்களே, உங்களுக்குச் சோர்வு தெரி கிறதா? இல்லையே!

உலகமக்கள் இரவுபகல் ஓயாது பாடுபடுகின்ற சாவுக் கான பாட்டை அறிந்து அலக்ஷியப்படுத்திவிட்டு, தன்னை யறியாத் தவமுறை வழிபாட்டிற்கு முதல் இடம் தந்து, ஒரு நெறிச் சாவாவர மேம்பாட்டினை உயிர் ஆவி ஒட்டுடன் ஏற்று வாழும் நமது சத்திய தேவகுல மக்கள், சாப்பாடு, குழம்பு என்ற அந்த வார்த்தைகளை இனி உபயோகப்படுத்தக் கூடாது.

பசிப்பாடு தீர்ந்ததா, பசிப்பாடு ஆச்சா, பசிப்பாட்டிற்கு எழுந்திருப்போம் என்ற வார்த்தைகளையே இதுநாள் முதல் நாம் உபயோகிப்போமாக.

குழம்புக்குப்பதில் 'ஆனம்' என்ற சொல் புழக்கத்தில் இருக்கிறதே. அதை இனி நாம் உபயோகிப்போமே!

61

நிலைக்கவென்று வந்தவரில் தவறிப்போன
 னெஞ்ஞினரைச் சொல்லக்கேள் நினைவாய் நீயும்
முலைகருதிக் கைபிடித்துப் பாலுண்ணாமல்
 மூடத்தால் ஞானென்னு மகந்தை யுற்றுக்
கலைகருதி நில்லாமல் சாதிக்காமல்
 கற்றபொருள் போதுமென்ற பெருமைகொண்டு
கொலைகளவாய் வஞ்சகத்தை விடாமற்றானே
 குலைந்திட்டான் வைத்தியலிங்கன் குருரன்றானே

என்ற சிவானந்த போதத்திலுள்ள செய்யுள் படிக்கப்பெற்ற போது-

ஆண்டவர்கள்:- 'வைத்தியலிங்கன் குருரன்றானே' என்று சொல்லியுள்ளார்களே, அது இன்னதென்று விளங்குகிறதா?

சபையோர்:- விளங்கவில்லை.

ஆண்டவர்கள்:- உங்கள் நினைவிற்கு எட்டாததை நாம் இப்பச் சொல்லப் போகிறோம்: கேளுங்கள்- அவனுடைய வயிறுதான் அவன் சதாகாலமும் பூஜிக்கிற 'லிங்கமாக' இருக்கிறது. ஆகவேதான் அவன் அத்தகைய குருரனாக ஆனான். சிந்தையற்றுச் சிவமாகி வாழ்கின்ற வாழ்வையும் இழந்நான். இந்தப் பொருள் இதுவரை உங்கள் நினைவிற்கு எட்டியதா? இல்லை.

62

21-12-1974-காலை 6மணிக்கு- மெய்வழி வரதராஜ அனந்தரின் மனைவியார்- மெய்வழி சாவித்திரி அனந்தகி, தனது தூல தேகத்திலிருந்து ஜீவப்பிரயாணமாகி நித்திய பேரின்ப சுவர்ணாதி பிரணவதேகத்தில் நிரந்தரமாகக் குடி

யேறினர்கள். இளனகை பூத்த வண்ணம் அவர்கள் ஜீவன் அடக்கமாயிருந்த காட்சியைத் தெய்வமவர்களின் திருச்சன்னிதியில் விண்ணப்பிக்கப்பெற்றபோது—

ஆண்டவர்கள்:— அவளிடத்தில் ஒரு தலைமுறைகாலம் குடியேறியிருந்த சிவம்— தன் முகத்துக்கு நேராக அவள் ஜீவன் இன்று திரும்பியதும்— அவளை நோக்கி அது இளனகை பூக்கவும், அவளும் அந்தத் திவ்ய தரிசனையைக் கண்டு பேரானந்தப் பெரு மகிழ்ச்சி பூத்தாள். அந்தத் தெய்வீக மகிழ்ச்சி பிறங்க பிரயாணமான அடையாளமே அவள் முகத்தில் நீங்கள் கண்ட அந்த அதிசோபனக் காட்சி.

உன் தகப்பனிடத்தில் நீ வாங்கிவந்த சொத்தாகிய மூச்சின் கடைசி அசைவு இருக்கும்வரை, உன் சொந்தச் சொத்தாகிய நித்திய மெய்யின் பக்கம் நீ திரும்புவதில்லை. அந்த மெய்ச் சொத்தைப்பற்றிச் சிந்தனைகூட வருவதில்லை. ஆனால் பொய்ச் சொத்தாகிய மூச்சு நின்றதும், மெய்ச் சொத்தாகிய அந்த சீதனப் பொருள்— பரமபத நித்திய வஸ்து— உன்னை இழுத்து வாரி அணைத்து ஏற்றுக்கொள்கிறது.

வாழைப்பழத்தில் ஊசியை விட்டு எடுத்தது போலவும், வெண்ணெயில் மயிரைப்போட்டு உருவி எடுத்தது போலவும் மெய்நிலை பெற்றவர்களின் ஜீவன் பிரயாணமாகும் என்று சொல்லுவார்கள். அப்படிச் சொல்வதுகூட நம் எல்லையில் சரியில்லை. ஊசி எடுக்கப்படும்போதும் மயிர் உருவப்படும்போதும் மெல்லிய சிறிதளவு உராஞ்ஞுதல் இருக்குமல்லவா? அந்த உராய்தல் கூட இல்லாது மிக லாவகமாய் ஜீவன் இத்தூலமாகிய கூட்டை உதறிவிட்டுப்போய் தனது சொந்த மெய்த்தேகத்தில் நுழைந்து கொள்ளுகிறது. இது நீங்கள் செய்த தவத்தால் கிட்டுவதா? இல்லை. எம்முடைய ஓயாத் தவப்பாட்டால் நாம் தேடிய தவ நிதியத்தை, எம் மக்களாக

ஏற்றுக்கொண்ட உங்களுக்கு இரையாக ஈந்து, இந்த ஜீவ ரக்ஷிப்பு யுகப்பரிசு மாட்சி ஆட்சியின் அதிகாரணச் செயல் இங்கு நிகழ்த்தப்பெற்று வருகிறது.

63

ஆண்டவர்கள்:- எம் கைவசமாகி நித்திய நீதி மெய் வழிக்குள் ஆன ஒருவர், ஜீவப்பிரயாணமாகி நெடுநேரம் ஆனபின்னரும் நாம் அனுப்பிய காஷாய தீர்த்தம் அருந்த நீங்கள் பார்க்கிறீர்களே. உலக மக்கள் கண்ணுக்குச் சவம் என்ற நிலையை அவர்கள் அடைந்த பிற்பாடும் ஜலம் அருந்துவது எங்கேயாவது உண்டா? இல்லை. பட்டுப்போன ஒரு மரம் மறுபடியும் துளிர்ப்பதுபோன்ற ஒரு செயலல்லவா அது? எம் உத்திரவிற்கு ஒரு சவத்தைத் தீர்த்தம் சாப்பிடப் பண்ணுவதற்கு நாம் செய்துள்ள தவத்தின் அளவு, உங்கள் அறிவிற்குப் படும்படிச் சொல்லுவதாக இருந்தால், ஆணாக இருக்கும் ஒரு உருவை மிக்க காரமாக அழுத்தமாக நினைத்து பெண்ணுருவாக ஆக்குவது, கட்டாயம் ஆக்கியே விடுவது, எத்தகைய கொடிய பாடுடைய தவச் செயலோ அத்தகைய காரமான, ஒரு முனைக் கூரோங்கிய, வல்லப, அளப்பரும் தவப்பாடு அது. அந்த இணையற்ற தவ வரவைக்கொண்டு ஈடு செய்து நிரப்பியே சவத்தைத் தீர்த்தம் சாப்பிடும்படி உத்திரவிடப்பெறுகிறது.

நாம் ஆகாரம் உட்கொள்ளுவதை நிறுத்தி இன்றைக்கு மூன்று வருஷம் இருபதுநாள் ஆகிறது. இவ்வாறு ஊண் இல்லாத நிலை வருவதற்கு முன்னே நாம்- அறுபது நாட்கள் செய்வதால் வரும் தவக் குவியலின் அளவு- இப்போது ஊண் தேவையில்லை என்ற நிலை வந்தபின்- விரல்விட்டு இருபது எண்ணிக்கை எண்ணுகிற நேரத்திற்குள் கைவரவாகிறது. இவ்வாறான தவ ஏற்ற இருப்பில், ஒரு மணி நேரம் இப்போது நாம் அமர்ந்து இருந்தால், ஆறுவருட தவ வரவு எம் கையில் வந்து திமுதிமுத்து நிற்கிறது.

மண்ணில் இருப்பவர்களை எழுப்பித் தீர்ப்பு நடத்து வதை வேறு ஒருவர் வந்து செய்வார்களோ என்னவோ என்றும் நினைத்ததுண்டு. இப்பப் பார்க்கும்போது அந்நப் பாரப் பெரிய வேலையையும் எம் தலையிலேதான் கட்டிவிட்டார்கள் என்று நிச்சயமாகத் தெரிகிறது. அந்ந இறுதி நீதித் தீர்ப்பினை நடத்துவதற்கான கன்னி விராட்தவமும் இப்போ நடைபெற்று வருகிறது. மனுமுனை துவங்கிய கால வரம்பிலிருந்து வந்ந வந்ந யாவர்களுக்கும் தேகம் தந்நு, மண்ணிலிருந்து எழுப்புவது என்பது சின்ன காரியமா? இல்லை- அதற்கு எத்தகைய மீறிய அதிக அதிக அளவு தவக்குவியல் வேண்டும்!

எமக்கு இப்போது 115 வயது ஆகிறது. இத்தனை வயது காலத்திற்கும்- ஒரு அளவு போட்டுப் பார்த்தால்- சுமார் 37 வருட உணவேனும் சாப்பிட்டிருப்போம். மீதம் 78 வருஷ உணவைச் சாப்பிட்டு முடிக்கும் காலத்தை உங்கள் எல்லோருடைய தலை செழிக்க எடுத்தத் தவப்பாடாக மாற்றப் பெற்று, எம் கையடக்கத்திலுள்ளது.

64

ஆண்டவர்கள்:- வரநிற்கிற அந்நப் பிரளைய அமளி நேரத்தில் இத் தூலக் கண்களுக்குத் தெரியாத மயனமான அக்கினி, ஆகாய மண்டலம் எங்கும் பரவும். அது, இந்ந மாமிச தேகத்தின்மேல் பட்டால் ரோமத்தைக் கருக்கி தோலை வெம்பிச் சுருங்கச் செய்யும். அதன் கடும் வெப்பம் அத்தகைய கோர முடையதாக இருக்கும். அந்ந நேரத்தை 'பொது நடுத்தீர்வை நேரம்' என்று முன் வந்ந வேதமா மறைகளில் கூறப்பெற்றுள்ளது. அது, மிகமிகக் காரமான தீர்வையாக இருக்குமென்றும் அவற்றில் பேசப்பெற்றுள்ளது.

உலக மனுசதள பவக் குவியல்கள் அந்ந அமளி நேரத்தைச் சந்திக்கிறது போலவே நீங்களும் சந்திக்க

னேருமே, அப்போது அந்நக் காரமான சூட்டில் அடிபட்டிடாது நீங்கள் தப்பிக்க வேணுமே என்பதற்கான ஒரு தெய்விக உளவு- அதாவது ஜீவ மருந்து- ஹம் இங்கு னம் சாலையம்பதியில் ஏற்பாடு செய்துவைத்துள்ளோம். இரவு னேரத்தில் பெரிய வணக்கம் என்று எடுத்துவைத்து உங்கள் தூக்கத்தைக் குறைக்கச் சொன்னதுதான் அந்த உளவு.

உங்கள் தூக்கத்தை எப்படியும் மூன்று மணி னேரத்திற்கு மேற்படாமல் குறைத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறுன பழக்கத்திற்குக் கொண்டுவருவதற்கு உங்கள் ஆகார அளவையும் குறைக்கவேண்டும். இதைச் செய்யாமல், முரட்டடியாய்த் தூக்கத்தை மட்டும் குறைக்க முடியாது.

அந்ந மகா காரமான பொது னடுத்தீர்வையைச் சந்திக்கும் னேரத்தில் உங்கள் ஒவ்வொருவர் கையிலும், மூன்று வருடகால தூக்கத்தை மிச்சம் பண்ணிய தவ ரஸ்து இருக்க வேண்டும். அந்நக் கைமுதல்தான் னடுத்தீர்வை அக்கினியை உங்கள் மேல் பட்டுத் துன்புறுத்தாதபடித் தடுத்துக் காப்பாற்றும். மேற் சொன்ன தவ ரஸ்து உங்கள் கையில் இல்லாவிட்டால், அது னேரச் சூட்டில் அடிபட்டு உங்கள் முகம் கருகிச் சுரிக்க அந்த அவஸ்தையைத் தாங்கமுடியாமல் நீங்கள் தத்தளித்து அலர னேரும். 'ஜீவப்பிரயாணமாகி மண்ணில் அடக்கமாயிருக்கிறவர்களுக்கு இந்த அவஸ்தை இல்லையே- னம்மையும் அவர்களைப்போல் மரணிக்கச் செய்துவிட்டால் தேவலாமே' என்ற ஆத்திரம் வரும். தீர்ப்பதிபரிடம் விண்ணப்பிப்போமா என்ற காரமான எண்ணம் தோன்றும். ஆனால் அவர்கள் எதிரில் போவதற்கே அச்சமாயிருக்கும்.

இங்கு எமது சொற்படி கேட்டு பெரிய வணக்கத்தில் மெய்யாக ஒட்டி னடந்து வந்தவர்களுக்கு, அதே அக்கினி இன்பம் தருவதாக அமையும்.

'வயசு பிள்ளைகள்தான் பெரிய வணக்கம் பார்க்க வேண்டும். வயோதிகமாகிவிட்ட பெரியவர்களாகிய நம்மால் அது முடியாது' என்று விடுதிகளில் படுத்துத் தூங்குகிறவர்கள் அந்த நடுத்தீர்வை அக்கினியில் சிக்கித் தவிக்கவேண்டியதுதான். எமது கட்டளைக் கிணங்கி தூக்க நேரத்தைக் குறைத்து மிச்சம்பண்ணி தவ ரவாக்கிக்கொண்டு அங்கு நடுத்தீர்வை நேரத்தில் இன்பத்தில் இருக்கிறவர்கள், எமது சொல்லை அலக்ஷியப்படுத்தி, துன்பத்தில்மாட்டித் தவிக்கின்றவர்களைப்பார்த்து 'தேவனுடைய உத்தரவை மீறி நடந்த பலன் இப்பத் தெரியுதா' என்று கூறி ஏளனம் செய்வார்கள். அதைக்கேட்ட அவர்களும் 'பெருங்கருணையுடன் வெளியான நமது தெய்வ ஆக்ஞைப்படி நாம் நடந்திருந்நால் இந்த அதோகதி அவஸ்தையில் சிக்கியிருக்க மாட்டோமே' என்று உள்ளத்தில் வேதனை பொங்க அழுது புலம்பி நிற்பார்கள்.

எமனுடைய அவமான அவஸ்தைச் சந்நிப்பிலிருந்து உங்களை மீட்பிக்க, எமது தவத்தைப் போட்டு நிரப்பி உங்களுக்கு உதவ முடியும். ஆனல் தூக்க நேரத்தைக் குறைத்து மூன்று வருட காலம் மிச்சம் செய்து, அதைத் தவரஸ்தாக மாற்றிக் கை முதலாக வைத்துக்கொள்வது உங்களுடைய சத்திய முயற்சிப் பாட்டில்தான் இருக்கிறது. அதற்கான ஒரு உதவி, ஒரு உளவுதான் எம்மால் செய்து வைக்க முடியும்.

நித்திரா தேவியவள் நித்தம்அந்நப் பூமியிலே
மத்திபமாய்க் காக்க வையென்றார் ஈஸ்பரரும்
தோசி மறலியையும் சொல்லி விலக்கிடென்றார்

என்று சர்வாகமக் கிரந்தத்தில் தீர்க்கத்தரிசன வசனமாகக் கூறப்பெற்றுள்ளது, நாம் இங்கு எடுத்து வைத்துள்ள பெரிய வணக்கமுறை ஏற்பாடுகளைத்தான்.

ஒரு இரவு னேரப் பெரிய வணக்கப் பலனை மூன்று இரவு னேர வணக்கப் பலனாக ஆக்கிக்கொள்ளுகிற ஒரு உளவும் இருக்கிறது. அதுதான் பெரிய வணக்க னேரத்தில், ன்மது ஆதி மெய் உதய பூரண வேதாந்நத்திலுள்ள செய்யுட்களையும், ஆதி மான்மியத்திலுள்ள பகுதிகளையும், தீர்க்க தரிசன வசனங்களையும் அதம்பிப் படித்துப் பாடி உங்கள் ஜீவனுக்கு தவ வலு ஊட்டிக்கொள்வதில் உள்ளது.

இவை யாவற்றையும் எம் உள்ளத்தில் எண்ணி (ஆதி மெய் உதய பூரண வேதாந்நம்- 414ஆம் பக்கத்தில் காணப் பெறும்) 'பூரணப்பாடு' என்று ஞம் வெளியாக்கியுள்ள கண்ணிகளில்-

உங்களுக்குச் சிவபதி
உபதேசங் களுரைத்த
சிங்கேறும் கங்கணவர்
திருமால் வனப்பதியில்
காட்டில்த் தவசுபண்ணிக்
கதிவணக்க மேபெருக்கி
ஆழிக்க டல்கொதிக்கும்
ஊழிக்க டுனெருப்பின்
சூட்டிலடி பட்டிடாது
சொர்க்கபதிச் சந்நதியாய்த்
தாவும்சா வாவரங்கள்
தான்பெறுவா ரென்றுஎண்ணி
அன்றுமுதல் இன்றளவும்
அலுப்பயர்வு பாராது
கூவினின்றேன் பாழுலகில்
கொண்டபகல் ராவென்றில்லை - என்றும்

தீய்க்கிரைகொ டுப்பதற்கோ
திருனளிட் டுவளர்த்தேன்

அரசுக்கி ளிவளர்த்த
தமனிய ழிவினுக்கோ
ஊழிநா ளின்பலிக்கோ
உற்றுற்று னன்வளர்த்தேன் என்றும்

சிறுபகுதிச் செல்வங்களே
பெரும்பகுதி யாக்கிடுவேன்
ஒருவருக்கும் கிட்டாத
உற்றதவத் தூன்றிடுங்கோ
வேணுமென்று ஊணுறக்கம்
விட்டுத்தவக் கச்சைகட்டிக்
காட்டில்தவக் கச்சைகட்டிக்
கதிவணக்க மேபெருக்கி
ஊனமிலா மெய்த்தவத்தில்
ஊன்றிஇ டைவரிந்து
கானில்த் தவம்முடித்துக்
கனகமணி ளுடாள
மந்திரச் சந்நதியாய்
வந்துபி றந்நமக்கா
செந்நீவந்நுன் மேனியிலே
தீண்டாது னின்றிடுவீர் என்றும்

திட்டவட்டமாக பலவருஷங்களுக்கு முன்னரே னும் எச்சரித்துக் கூறி வைத்துள்ளோம்.

65

சிவவைகுண்டம் என்றும் ஆதி நாராயணசிவம் என்றும் ஆதித்திருமாலே ஆறுமுகக் கடவுளென ஞமம் பூண்டுவந்து சூரபத்துமன் முதலிய அசுர கூட்டங்களைச் சங்கரித்தார் என்றும் அகிலத் திரட்டம்மானை என்ற சர்வாகமக் கிரந்தத்திலே பல்வேறு இடங்களில் பேசப்பெற்றுள்ளது என்று சபையில்

தேவமக்கள் ஆச்சரியம் பிறங்க உரையாடிக் கொண்டிருந்த போது-

ஆண்டவர்கள்:- திங்கட்கிழமை இருந்தவர்தான் செவ்வாய்க் கிழமையும் இருந்தார் என்று சொன்னால் ஒவ்வொருனும் வேறு வேறு ஆள் இருந்தார் என்று னினைப்பதில்லையே- அதேபோல சிவன், திருமால், ஆறுமுகக்கடவுள், பிரம்மா என்ற திருனுமங்கள் ஏக பராபர அழியா வஸ்து, பூமி பாரம் தீர்க்க தூல மேற்று வந்து அந்தந்த சமயத்திற்கான தவவிளைவிலேறி விளங்கினின்ற பலவாம் பதனிலைகளின் னுமங்களே ஆகும். வேறு வேறு தெய்வம் என்பது கிடையாது. னேற்று 'பிரம்மா' என்ற பத னிலையில் இருந்தவர், தவ வல்லபத்தில் மேலும் வளர்ந்து இன்று திருமால் என்ற பதம் பெற்றிருக்கலாம். பதவிக்கு உரிய னுமம் வேருக ஆனதே தவிர, திரு உரு ஒன்றேதான்.

வந்தது னிஜந்நான் அய்யா
வளர்கயி லாயம் தன்னைத்
தந்தது எங்கட் கென்று
தானதை இறக்கி வைத்து
மந்திர ஸ்திரத்தை எங்கள்
மனந்தனி லழுத்தி னுளும்
பந்துலாம் பூமி யெங்கும்
பரப்பவென் றிருக்கு தையா

என்று- தெய்வத் தேடுகூடகத்தில்- னும் கூறிவைத்துள்ள செய்யுளில் 'வளர்கயிலாயம்' என்று குறித்தது மேற்சொல்லிவந்த தவச் செயல் னடைமுறையை வைத்துத்தான்.

66

ஆண்டவர்கள்:- 'னும் உங்களைவிட 90 மடங்கு மட்டமாயிருக்கிறோம். அதேபோல் னும் உண்டாக்கியுள்ள இந்த மெய் னகரம், னீங்கள் வசிக்கும் ஊர் னகரங்களைவிட னுற்பது

ஐம்பது மடங்கு மட்டமாயுள்ளது' என்று இங்கு தரிசனைக்கு வருகிறவர்களிடம் நாம் பேசுகிறேமே. அதற்கு நீங்கள் வியாக்கியானம் சொல்லக்கூடாது. 'அங்கு பீடி சிகரெட் புகைத்தலே சூழ இருக்கிறது- அது இங்கு இல்லை. அங்கு எல்லோரும் நாறிச் சாகிறார்கள்- அது இந்த எல்லையில் இல்லை' என்று நீங்கள், வந்தவர்களிடம் பேச ஆரம்பித்தால் கேட்ட சிலருக்கு நாணமுண்டாகும்- சிலருக்கு வெறுப்பு வந்து கோபப்படுவார்கள்- அதனால் இங்கிருந்து உடனே புறப்பட்டு விடுவார்கள். ஆனால் அதையே நாம் பேசினால் வந்தவர்களுக்கு வெறுப்பு வராது. ஏனெனில் நாம், அவரவர்களுடைய அறிவுக்குத் தக்கபடி பலதும் பேசி, ஒரு எல்லையில் இதைக் கொண்டுவந்து விடுவோம். அப்போது அவர்கள் ஆச்சரியமும் மகிழ்ச்சியுமுறுவார்கள். அந்தச் சூதானப், அந்த யுக்தி கொண்டு உங்களால் பேசமுடியாது.

'நாம் உங்களைவிட 90 மடங்கு மட்டமாயிருக்கிறோம். எமது சாலை நாற்பது, ஐம்பது மடங்கு உங்கள் ஊரைவிட மட்டமாயிருக்கிறது- என்று ஆண்டவர்கள் சொல்லுகிறார்களே- அது என்னங்க' என்று வந்தவர்கள் உங்களைக் கேட்டால், 'அதுபற்றி ஆண்டவர்களைத்தான் கேட்கவேணும்' என்று நீங்கள் சொல்வதுதான் முறை. ஏனெனில், 'நாம் அவர்களைவிட 90 மடங்கு மட்டம்' என்று சொன்னேமே அவற்றில் பலதும் இன்னும் நாம் வெளியாக்கவில்லையல்லவா? ஆம். ஆகவே உங்கள் பேச்சில் எப்பவும் வெகு சாக்கிரதையும், சூதானமும் வேண்டும்.

67

நெடும்சாலை இன்ஜினீயர் ஒருவர் தரிசனைக்கு வந்திருந்தபோது-

ஆண்டவர்கள்:- மனுத்தலையின் தரம் இன்னதென்று யாருக்கும் தெரியவில்லை. அதன் உன்னத தரத்தையும்,

அரிய சிறப்பையும் கற்பித்து, நிஜச் செயலில் மக்களை ஏற்றி வைப்பதற்கே வனந்திரக்காட்டில் உள்ள இந்தப் பள்ளிக் கூடம் உண்டாக்கப்பெற்றுள்ளது. இதற்கு மெய்க்கல்வி கலா சாலை என்ற நாமம் நாம் கொடுத்துள்ளோம். இதற்கு வாத்தி யார் நாம்.

உலகில் யாராயிருக்கட்டும், எந்த பூஜை புனக்காரம் செய்தவராயிருக்கட்டும், அவர் செத்து மண்ணில் புதைக்கப் பட்டால், அவரது தேகம் நாறி அழுகி மண்ணுக்கு இரையாகி விடும். ஆனால் தங்கத்தை மண்ணில் புதைத்தால் அப்படிக் கெட்டு மண்ணுக்கு இரையாகுமா? ஆகாது. அதை மண் தீண்டாததோடு அதன் மாத்து ஏறி கூடி நிற்கும். தங்கம் ஒரு சடப்பொருள்தானே? ஆம். அதற்கு அந்த வல்லபம் இருந்தால், சிருஷ்டியில் வைத்துத் தலையான படைப்பாகிய மனிதனை மண் தீண்டலாமா? தீண்டக்கூடாது. அப்படியான உன்னதத்தில், மனிதனது மேலாம்பரமான படைப்புக்கான சிறப்பில், இவனை ஆக்கிவைக்கிற இடமே, கல்விச்சாலையே, இது. அந்த அதிவல்லப ஜீவ மேம்பாட்டை அடைவதற்கான ஆதி தலைப்பாடம், நம் மெய்க்கல்விக் கலாசாலையில் கற்பிக் கப் பெறுகின்ற முதல் பாடம், உங்கள் உயிரை உங்கள் அறிவை நேருக்குநேர் நீங்கள் சந்தித்துத் தரிசிக்கப் பழக்குவதுதான். இதைத்தான் வேதங்கள் பிரம்மவித்தை என்று பேசிப் புகழ்கின்றன. நீங்கள் சாவகாசமாக வந்தால் மேலும் இதன் அற்புதச் செயல்களைப்பற்றிப் பேசிக்கொண் டிருக்கலாம். உங்களுக்கு வேலை நிறைய இருக்கும். புறப் படுங்க.

இஞ்ஜினீர்களைத்தான் நாம் பார்க்கிறோம். விளைந்து, நாறிக்கெட்டு அழுகிப்போகாத சுக்கு நீர்களை நாம் காண முடியவில்லை. நாம்தான் சில இஞ்ஜினீர்களைப் பிடித்து வந்து, நாறி நலங்குலையாத சுக்கு நீர்களாக ஆக்கியிருக்கிறோம்.

(சபையில் மகிழ்ச்சி). (வந்திருந்த இன்சினீயரை இரக்கப் பார்வையாகப் பார்த்து)-

ஆண்டவர்கள்:- நீங்களும் அந்த ஜீவ ஏற்றம் அடையலாம். நாம் வந்துள்ள இது நேரம் அது வெகு எளிதாக உங்கள் கைவரவாகும்.

68

ஆண்டவர்கள்:- சைவம், வைணவம் முதலிய மதங்களை உற்பவம் செய்தருளிய கர்த்தர்கள் தங்களினுடைய இரவு பகல் ஓயாத் தவப்பாட்டால், நீடிய நிலைத்த முயற்சியுடன் அவற்றை உண்டாக்கினார்கள். எவ்வித எதிர்ப்புக்கும் விட்டுக் கொடுத்துப் பின்வாங்காது, தங்கள் தூலத்தைத் தேய்த்துக் கரைத்துக் காவு கொடுத்து, அவற்றை இவ்வுலகில் நிலை நாட்டினார்கள்.

காலகாலம் இவ்வுலகிற்கு வந்த வந்த மதங்களின் தெய்வீக அரசினை ஸ்தாபிதம் செய்து செங்கோல் ஓச்சிய நடைமுறை இவ்வாறிருக்க, இந்து மதம் என்று பேசி எழுதிப் புழுங்கி வருகிறார்களே, அந்தப் பெயரோடு யார் அதை உண்டாக்கினார்கள்? மேற்கு நாட்டவர்கள் முதல் முதல் நம் பாரத பூமிக்கு வந்தபோது வடக்கேயுள்ள சிந்துநதி தீரத்தில் வந்து தங்கினார்கள். அங்குள்ள மக்களைப் பார்த்து 'சிந்து' தேச மக்கள் என்று அவர்களுக்குச் சொல்ல வராததால் 'இந்து' தேசமக்கள் என்று அழைத்தார்கள். மேலும் நம் தேவ பூமியில் ஆன்மீக அமல் நடத்திக்கொண்டிருந்த சைவ வைணவத்தின் நாமங்கள் அவர்களுக்குத் தெரியாததால் இந்து மதம் என்று பொதுவாகப் பேசியும் எழுதியும் வைத்தார்கள். இவ்வாறு அறியாதவர்கள் உண்டாக்கிய இந்துமதம் என்ற அந்தப் பெயரையே நம்மவர்களும் எழுதிப் பரத்திவிட்டார்கள்.

சைவ மதத்திற்கு உற்பவ தெய்வம் சிவம். வைணவ மதத்திற்கு ஆதி தெய்வம் மகாவிஷ்ணு. அதேபோல 'இந்து' மதத்திற்குத் தெய்வம் எது என்று சொல்லமுடியுமா? 'இந்து' என்ற பேர் தந்த இங்கிலீஷ்காரனைத்தான் சொல்லணும். நான் சொல்வது தப்பா என்று உங்கள் மெய் அறிவு கொண்டு யோசித்துப் பாருங்கள்.

69

ஆதி மான்மியத்தில் 249ம் பக்கத்தில் உள்ள சர்வாகமக் கிரந்தமாகிய சாணார்குல னுபாக வேதத்திலுள்ள தீர்க்க தரிசனப்பகுதி திருச்சன்னிதியில் படித்து வரும்போது–

ஆண்டவர்கள்:- தேவக் கண்கொண்டு கண்டு விண்டெழுதி வைத்துள்ள மறைமுத்துக்களாகிய இவை யாவும், எமக்கு ஜீவ சிம்மாசன னிறையாட்சி பீடம் தந்நருளிய எமது குரு கொண்டல், தாயக தவமணி அவர்கள் திருப்பரங்குன்றம் குகையில் எம்மை அருகிருத்தி முகம் னோக்கி அருளிச் செய்த ஊழிவிதிக் கோட்டின் ஓங்கார வரிவாடை வீசும் திருமணி மந்திரவசனங்கள் அல்லவா? ஆகவே அவை எம் செவியில் வந்து னுழைகிறபோது, கடுமையாகப் பசிக்கிற னேரத்தில் அறுசுவை உணவு இலையில் பரிமாறி உண்ணச் சொன்னால் எப்படி இனித்து இன்பமூட்டுமோ அதுபோலப் பல மடங்கு அதிக அதிக இன்பம் ஊட்ட இனிக்குது.

70

ஆண்டவர்கள்:- சிலர் னரக சுவர்க்கம் இல்லை என்று சொல்லுகிறார்களே! அது சரிதானா என்று பார்ப்போம்.

னம்முடைய காது கெட்ட சத்தத்தை, அசிங்கியமான வார்த்தைகளைக் கேட்டு வெறுக்குது. மேலாய்பரமான வார்த்தைகளை, னல்ல சப்தங்களை, இனிய கீதத்தைக் கேட்டு மகிழ்ச்சி அடையுது. அதேபோல் னம் கண் அருவருப்பானதைப் பார்த்து வெறுக்குது. னல்ல காட்சிகளைக் கண்டு சந்

நோஷிக்குது. மூக்கு, கெட்ட வாசனையை வெறுத்து ஒதுங்குது. னல்ல மணத்தை விரும்பி ஏற்குது. அவ்வண்ணமே னம் உடலும் மெத்தென்று வழுவழுப்பாய் இருக்கிறதின்மேல் சாய்ந்து இன்பம் அனுபவிக்குது. மோட்டாவாய் முரடாய் உறுத்துவது மேலே பட்டதும் ஒதறித் தள்ளுது. னம் வாயும் அப்படியே. மேற்சொல்லிவந்த கண் காது மூக்கு வாய் உடல் இவை ஐந்தும் னினைவு என்ற ராஜாவின் வேலை ஆட்கள் தானே- அந்த னினைவாகிய ராஜா எப்பவும் அழிகிறவரல்லவே- ஆகவே அவரிடத்தில் இன்பதுன்பம் னித்தியமாய்த் தங்கி விடுமல்லவா? ஆம். அந்த இன்பமாகிய னினைவும், துன்பமான னினைவும், வித்தாக னின்று அழியாத னித்திய பேரின்ப சுவர்க்கத்தையும், மாருது தங்கித் தரிக்கும் அவஸ்தையாகிய னரகத்தையும் படைக்கிறது. ஆகவே சுவர்க்க னரகம் இல்லை என்று எப்படிச் சொல்ல முடியும்?

71

ஆதிமெய் உதய பூரண வேதாந்தம் 17 ஆம் பக்கத்திலுள்ள-

வீணது வாகி டாமல்
மேலவ ரிடத்திற் சார்ந்தா
லூண்சுவை யிருத யத்துள்
ளுறைந்தனன் னிலமும் காட்டிப்
போனனுள் மீண்டங் கேனும்
பேரின்ப வடிவம் பெற்று
ஊனங்க ளனைத்தும் தேய்ந்து
உன்புகழ் வானம் பாயும்

என்ற செய்யுளும் இன்னும்- 'தனித்திருப்பாடல்கள்' என்று வரும் பகுதி- 395 ஆம் பக்கத்தில்- வெளியாகியுள்ள மெய்வழி உபதேச காலத்துச் சத்தியச் சீர் னடைமுறைச் செயலினைக் கூறும்-

புல்வழி பற்றி யோடிப்
போக்கியென் வயதை யெல்லாம்

னலன்றர மீட்டித் தந்நென்
ளிணை யடியேன் மீண்டும்
புலன்வழி யழித்தி டாது
புண்ணியம் தனக்கே யீட்டென்
றலர்ந்நவாய்த் திகிரி வேந்நே
அதிசயம் ஆஈ தென்னே
ஆசின்மறை பேசித்தொலை யாததும்ம கிலவர்வி
னவனிணை விலுருததும்.
காசினியி லேபிறந்து முன்தொலைத்திட் டிங்குவந்து
காணரிய என்வயதினைப்
பேசியே வினவெனவெ னக்கெடுத்து ரைத்துமுன்னும்
பின்னும்வந்தி ருந்துஎடுத்து
வீசியேவ யதனைத்தும் வேதமுழு தும்ஓதென
விண்டதுசொ ல்த்தகுவதோ

என்ற பாடல்களும் னம் தெய்வத் திருச்சன்னிதியில் ஓதப் பெற்றபோது–

ஆண்டவர்கள்:- இந்த அருங்காரணப் பேரருள் ஜீவ விளைவு மாட்சி ஆட்சியானது எம் தெய்வகுல மக்களாகிய உங்களுக்கு எவ்வாறு கைவரவாச்சு என்று பேசுவோமா!

தேவசட்டப்படி பிரம்மோபதேசம் செய்யவேண்டுமென்ருல், முப்பது வயதிற்கு மேலாகி னீ எந்த வயதில் வந்து சபையில் சேர்ந்திருந்நாலும், மறுபடியும் முப்பது வயதில் உன்னைக்கொண்டுவந்து வைத்து அதாவது அந்த வயதிற்குரிய ஞதவலுவை உன் ஜீவனுக்குத் தந்து மறுபிறப்பிலாக்க வேணும். ஒருவனுக்கு வயது ஆக ஆக அவன் னினைவு ஞத பலம் இழந்து னலிவடைகிறது. அவ்வாறு னலிந்துபோன னினைவிற்கு எமது தவ வல்லபத்தைக்கொண்டு ஊக்கம் கொடுத்துத் தேற்றி, முப்பது வயது இளமையின் ஞத வலு பிறங்கும் ஆற்றலைத் தந்து, பிறகு னித்திய அறிவை அவனது உள்ளத்தில் பதிப்பிக்க வேண்டியிருக்கிறது. இந்த னெடிய

அரும்பாட்டையே, மனுமுளே துவங்கிய கால வரம்பிலிருந்து இதுவரை வந்த எந்த ஒரு மகத்தும் செய்யத் துணியாத தனிச்செயல் விரிப்பையே– 'போனனுள் மீண்டங்கேறும் பேரின்ப வடிவம்பெற்று' என்றும், 'போக்கிய என் வயதை யெல்லாம் னலன்தர மீட்டித்தந்து' என்றும் 'முன் தொலைத் திட்டிங்கு வந்து காணரிய என் வயதினை எடுத்து வீசி வேத முழுதும் ஓதென விண்டது' என்றும் னும் மேற்சொன்ன பாக் களில் கூறிவைத்துள்ளோம்.

72

ஜகத சற்குண லங்கிர்த சன்னதர்
அகம்பு றம்புங்கண் டாண்டச லாசனர்
யுகங்கள் னுன்குங்கை கொண்டகோ டூழியர்
மகதி ஆண்டவர் வந்நவ தாரமே

என்று ஆதி மான்மியம் (பக்கம் 42) மூதுமொழி உதய பருவத் தில் வரும் செய்யுள்– சபையில் ஓதப் பெற்றபோது–

ஆண்டவர்கள்:– அகம் புறம்பும் 'கண்டு' ஆண்ட சலா சனர் என்று கூறி வைத்துள்ளோமே– புறத்திலுள்ள குறை பாடுகளைக் காணலாம், அவற்றைத் திருத்தலாம், ஆண்டு கொள்ளலாம். அதேபோல அகத்தில் செறிந்துள்ள குறை பாடுகளைக்கண்டு னீக்குவது எப்படி? 'துருவுலாவு முகார விந்நபேத விந்து னுதாதி இன்பனுச் சூடாகர சப்த சப்தாதிய சாயல்களும், ஒலியுலாவு கண கணித னிதனிலவு அகர வித்துவச் சுழிதுமிகளும், அகம் புறத்துவாத சுவை சுகியாதி அமல திகாந்த புரத்துவாத சுவை சுகியாதி னிசத்துவ வித்து வாதிக னிரை னிலைப்புகளனைத்தும்' துப்புரவாகத் தம்மிடத்து விளங்கும்படிக் கலாமலியோடு கவன லக்கண க்கேன்வித்தை கற்றுத் தேர்ந்த ஒரு கதிசஞ்ஜீவியர் வந்து, அகத்திலுள்ள குறைபாடுகளை ஆய்ந்துகண்டு சீர் செய்யவேண்டும். அப்படி அகம் புறம் கண்டு, அவற்றின் குறைபாடுகளை அறிவு சம்ம திக்க னீக்கி ஆண்டுகொண்டவர்களே ஆண்டவர்கள்.

பொய்யகத்துறைந்துள மனத்தை மெள்ள மெள்ள மெய்யறிவு உதயம் காட்டிக் காட்டி, அகவிளைவு குடியேற்றி, உள்ளும் புறம்பும் சிறக்கச் செய்கின்ற முழு தீர ஜீவ ஆட்சி ஆண்மை உடையவர்களே ஆண்டவர்கள்.

73

15-1-1975 (மாட்டுப்பொங்கல் நாள்) ஓய்வுபெற்ற சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி திரு கிருஷ்ணசாமி ரெட்டியார் பி. ஏ., பி.எல் வந்திருந்தபோது- பொன்னரங்க ஆலயத்தில் ஜீவ சிம்மாசன மேடைக்குமேல் காணப்பெறும் 'எமனணுகா பரிசுத்தவான்களின் சபையில் எமன் கைவசப் பட்டுப் பிணமுற்றத் திட்டுக்குரிய நரர் நிலைநிற்பதில்லை' என்ற மந்திர வாசகத்தைப் படித்துப் பார்த்துவிட்டு, சன்னிதானத்தில் நின்று 'நான் எளிமையாகவும் ஆடம்பரம் இல்லாமலும் இருந்துகொண்டு நல்லொழுக்கத்துடன் வாழ எனக்கு ஆசீர்பாதம் கிட்டினால் போதும். எமனணுகாது சாவிலிருந்து தப்பிப்பது முதலாகிய அரிய அகமியச் செயல்களுக்கு நான் லாயக்கா என்று எனக்குத் தெரியவில்லை. திருவருள் இரங்கினால் ஒருவேளை நான் பெற்றாலும் பெறலாம்' என்று பணிவுடன் கூற-

ஆண்டவர்கள்:-முதலில் உட்காருங்க-(அவர் உட்கார்ந்த பின் அவரது வலது கையை நீட்டச் சொல்லி) உங்கள் கரத்திலுள்ள இந்த ஐந்து விரல்களை 'மூன்று விரல்களாக ஆகட்டும்' என்று நாம் ஆசிர்பதித்தால் ஆகுமா? ஆகாது. அதுபோல இறைவன் உங்களுக்கு இந்த மனுச் சட்டையைத் தரும் போதே, எமனணுகா பரிசுத்தவானாகி ஆகி, பரமபத நித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தைப் பெறுவதை, உங்கள் தலையில் கடனாக ஏற்றிவிட்டானே! அந்த வேலையை நீங்கள் பூர்த்தி செய்வதற்கான அந்த ஒரு காரியம்தான் எம்மால் செய்து வைக்க முடியும். அந்த ஒன்றைத்தான் ஆசிர்பதித்து நிறை

வேற்றி வைக்கவும் முடியும். மற்றைய செயல்களெல்லாம் உங்கள் முயற்சி கொண்டே செய்து முடிக்கக்கூடியன. அதற்கு பெரியோர்கள் ஆசீர்பாதம் தேவையில்லை.

நீதிபதி:- பெரியோர்கள் நினைத்தால் மற்றைய காரியங்களும்கூட ஆகும் என்று நான் நினைக்கிறேன்.

ஆண்டவர்கள்:- ஐந்து விரல்களைக் குறைத்து மூன்று விரல்களாக ஆக்க, பெரியோர்கள் ஆசீர்பாதம் எதற்கு? மேலும் மேலும் சீர்பெறும் வளர்ச்சிக்கும், அழியா வாழ்விற்கும், நித்திய சிறப்பிற்கும் ஆசீர்பாதம் வேண்டுமேயல்லாது தேய்ந்து அழிந்துபோகிற காரியங்களுக்கு ஆசீர்பாதம் தேவையில்லையே!

உங்கள் சின்ன வயதிலிருந்து இதுகாலம் வரை நீங்கள் ஆங்கிலம் படித்து எவ்வளவோ தேர்ச்சி பெற்றுச் சட்டத்தில் மகா வல்லவராயிருக்கிறீர்கள்- இன்னும் வேத சாஸ்திரம், பக்திப்பாடல்கள் பலதும் கற்றுத் தேர்ச்சி பெற்றிருப்பீர்கள்- ஆனால் நீங்கள் பார்க்கிறீர்களே இந்த ஏழைக்கிழவி- தமிழில் ஒரு எழுத்துக்கூடத் தெரியாதவள்- எம்மிடம் பிரம்ம வித்தையை கற்றுத் தேர்ந்திருக்கிறாளே! இவளுக்கெல்லாம் இது கிட்டும்போது உங்களுக்கு ஏன் கிட்டாது?

அதிருக்கட்டும். நீங்கள் எளிமையாக இருக்கவேணும் என்று நினைக்கிறீர்களே! போதிய ஆடம்பரமில்லாமல் ஒரு ஏழையைப்போலிருந்தால் அறியாத காலிகள் நீங்கள் போகும்போது ஏளனம் செய்து கல்லெடுத்து அடிப்பான்கள்.

நீதிபதி:- அப்படி அடித்துச் செத்தாலும் நல்லதுதான் என்று நான் கருதுகிறேன்.

ஆண்டவர்கள்:- அவ்வாறு நாய் நரிபோல் அடிபட்டுச் சாவதற்கா அறிவுத்தூலமாகிய இந்த உன்னதமனித தூலம் நமக்குத் தரப்பெற்றது? இல்லையே. இந்த இகலோக வாழ்வில் ஆண்மை, அந்தஸ்து, செல்வம் இவற்றுடன் இருந்து

கொண்டே பரபோக செல்வத்தையும் வாழ்வையும் னீங்கள் அடையவேண்டும் என்பதே எமது விருப்பம். அத்தகைய ஜீவேச ஏற்ற மெய்வழி வாழ்வில் தான் இவர்கள் எல்லோரையும் னும் ஆக்கிவைத்துள்ளோம்.

இந்த மெய்ஞ்ஞான ஆட்சியை எமது குரு கொண்டல் எம்மிடம் ஒப்படைத்துச் சென்றபின், ஒன்பது ஆண்டுகாலம் கவுன் உடை தரித்து னீண்ட சடா மகுடத்துடன் ஏழை சன் யாசிக் கோலத்திலேயே இருந்துகொண்டு, பட்டி கிராமம் ஊர் முதலிய எல்லா இடங்களுக்கும் இரவு பகல் அயராது சென்று, அகம் செழிக்கவைத்து சகம் புரக்கவந்த இத் தெய்வீக மெய் வழியில் மக்களைக் கூட்டிச்சேர்க்க ஓயாது பிரசங்கித்து வந் தோம். எம்முடைய வார்த்தைகளைக் கேட்டகேட்டவர்கள் பல ருக்கும் ஆச்சரியம் பிறங்கி மெய்யின்பால் இச்சை மேவப்பெற் றாலும், எம்முடைய ஏழ்மை எளிய கோலத்தினைக் கண்டு எம் பக்கத்தில் வந்து புழங்க னாணினார்கள். இதைப் பலனாளும் னும் கவனித்துவந்தோம். னும் ஒரு பணக்காரராக ஆனால் ஒழிய, உய்வழி கூட்டும் னம் மெய்வழியானதை இவ்வுலகில் பயிரேற்ற முடியாது என்று கண்டோம். ஆகவே அதற்கான படுத்தடியான யுக்தி ஒன்று செய்தோம். அப்போது னும், திருமணம் முடித்துக்கொண்டு ராமனாதபுரம் திருப்பத்தூரில் ஒரு குடிசையில் வாழ்ந்துவந்த காலம். ஒரே இரவில் னும் னினைத்தபடி பணக்காரராக ஆய்விட்டோம். அது எப்படி ஆனோம் என்று ஜட்ஜ் அவர்கள் தெரிந்துகொள்ள வேணுமா?

னீதிபதி:- ஆமாம். உத்திரவாகணும்.

ஆண்டவர்கள்:- பணக்காரராகனும் ஆகவேணும் என்று முடிவு எடுத்த அன்றைய இரவு, எம் கையிலிருந்தது இரு பத்து ஏழு ரூபாய் வெள்ளி னாணயங்கள்தான். னும் வசித்து வந்த குடிசையைச் சுற்றி என் மாமனாரும், அவரது சகோத ரர்களும் குடும்பத்துடன் குடியிருந்து வந்தார்கள். அவர்கள்

செவிகேட்க, அந்த இருபத்து ஏழு ரூபாய்களைக் கணீர் கணீர் என்ற ஓசை கிளம்ப, ஒரு கல்லின் மேல் தட்டிக்கொண்டே எமது மனைவியிடம் குசுகுசுவென்று பேசினேம். 'இந்தா, இந்தப்பையில் ஆயிரம் இருக்கிறது. கைப்பெட்டியில் கொண்டுபோய் வை. இதில் இன்னெரு ஆயிரம் இருக்கிறது. இதை அடிப்பானையில்போட்டு மறைத்துவை' என்று ஏவ, அவளும் சரி சரி என்று சொல்லி அப்பைகளைக்கொண்டு போய் வைப்பதாக நடித்தாள். இந்தக் காரியத்தில் எம்மோடு அவளும் இணக்கமான கூட்டுத்தான்! பணக்காரியாவதில் அவளுக்கும் சந்தோஷம் இருக்குமல்ல! (சபையில் மகிழ்ச்சி) இவ்வாறு திருப்பித் திருப்பித் தட்டித் தட்டி அதே நாணயங்களை எண்ணி எண்ணி ஒரே இரவில் பத்தாயிரம் ரூபாய் கையில் ரொக்கமாயுள்ள ஒரு பணக்காரராக ஆனேம். எம் குடிசைக்குள் நடப்பதை என் மாமனரின் தம்பிகள் எட்டிப் பார்க்க முடியவில்லை. ஆனல் நாமும் எம் மனைவியும் பண விஷயமாகக் குசுகுசு என்று என்ன பேசுகிறேம் என்பதைச் சுவர் ஓரம் ஒட்டி நின்று கேட்கிருர்கள் என்று நாம் அறிந் தோம். எம் குடிசைத் தாழ்வாரத்தில் உள்ள ஓலைகளில் அவர் கள் உராய்ந்து சரசர வென்று சப்தம் உண்டாக்குவதை நாம் கேட்டு அதைக் கண்டுகொண்டோம். அடுத்தநாள் காலை - பாருங்களேன் - என் மாமனரின் தம்பி தன் பிடரியைச் சொரிந்து கொண்டு 'பாவா' என்று சலாம் செய்தபடி எம்முன்னே மிக்கப் பணிவுடன் வந்து நின்ருர். நாம் ஒரு பெரிய பணக் காரர் என்ற செய்தி ஊர் முழுதும் சில மணி நேரத்தில் பரவி விட்டது. அந்த நாள் முதல் பலரும் எம்முடன் வலியவந்து நேசமாகப் பேச ஆரம்பித்தார்கள். நாமும் அதற்கான பாவனையுடன் நடந்தோம். ஜட்ஜ் ஐயா, இதுதாங்க நாமிருக்கும் உலகம்! பிறகுதான் ஒவ்வொருவரும் கூச்சம் நாணமின்றி எம்மிடம் வரவும், எமது பரத்தோபகார எனவணுகா அரிய தவ ஆசீர்பாதச் செயலை மனுமக்கள் தலையில் ஏற்றிப் பதிக் கும் வாய்ப்பு எமக்குக் கைகூடிற்று.

னீதிபதி:-(முகத்தில் ஆச்சரியமும் மகிழ்ச்சியும் தோண) ஞன் இப்போதிருக்கும் அந்நஸ்திலும் மதிப்பிலும் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பது ஆண்டவங்களுடைய இஷ்டமா?

ஆண்டவர்கள்:- இது போதாது. இதற்கு மேலும் இக வாழ்வில் னீங்கள் மேன்மை அடைவதோடு, இந்நச் சாவா வர பரமபத மெய் னிதி வாழ்வையும் அடையவேண்டும் என்பது எமது பூரண விருப்பம். எம் ஆசீர்பாதமும் அதற்கே.

(னீதிபதி உள்ளம் உருக வணங்கி எழுந்து விடை பெற்றுச் சென்ருர்)

74

பழைய காங்கிரஸ் எம். எல். ஸி திரு ஆறுமுகசாமி அவர்களும் எழுத்தாளர்கள் சங்கத் தலைவர் திரு பன்னீர் செல்வம் பி.ஏ.பி.எல் அவர்களும் தரிசனைக்கு வந்திருந்த போது:-

ஆண்டவர்கள்:- ஞம் பேசுகிறோம்- கேட்கிறீர்களா- னம் னவு இருக்கிறது. அது ஒரு தோல்தான். அதேபோல் னம் கன்னமும் ஒரு தோல்தானே? ஆம். இரண்டும் பிரயோஜனத்து அளவில் ஒன்ருகுமா? ஆகாது. சரி- னம் னவை, பத்தாயிர ரூபாய் கொடுத்து ஒருவர் கிரயத்திற்குக் கேட்டால் தருவோமா? தரமாட்டோம். அதேபோல் கன்னத்தில் ஒரு பக்கத்தைக் கொடு என்று கேட்டால், தரமாட்டோம். இப்படியே னம் தேகாதியந்நத்தில் எத்தனையோ பொருள்கள் இருக்கின்றனவே- அவற்றில் ஒரு சின்ன பொருளைக்கூடக் கிரயமாகத் தரமாட்டோம். ஆகவே. னர்முடைய இந்நத் தேகம் என்ன மகாகிரயமுள்ள பலபொருட்களும் ஒன்ருகச் சேர்த்து உன்னதமாகக் கட்டப்பெற்றுள்ள அருமையான கட்டிடம் என்று பாருங்கள். அதன் முழுக் கிரயத்தை யாராலாவது மதிக்கமுடியுமா? முடியாது. அந்நக் கட்டிடத்திற்குள் குடியேறி யிருந்து அரசுபண்ணிக்கொண்டிருக்கிற ராஜாதான்

உயிர். உயிராகிய ஜீவன் இந்தத் தேகத்தை விட்டுப் புறப் பட்டுவிட்டால் பிறகு இந்த உடலிற்கு ஏதாவது மதிப்புண்டா? இல்லை. ஆகவே உயிர்தான் பிரதானமானது என்று தெரிகிற தல்லவா?

மனிதர்களுக்குத் தெய்வம் ஒன்று வேண்டும் என்று நினைக்கிறார்களே- தெய்வம் எதற்கு வேண்டும்? உணவை உண்டாக்கும் உழவு வேலைக்குத் தெய்வம் வேணுமா? வேண்டுவதில்லை. அதை, மனிதனே செய்துவிடுவான். அதே போல் நமக்கு வேண்டிய உடைகளைத் தயார் செய்ய தெய்வம் வேண்டுவதில்லை. வியாதி வந்நால் அதை நீக்கத் தெய்வம் வேணுமா? வேண்டுவதில்லை. மனிதன் மருந்துகள் தயார் செய்து கொடுத்து அதைச் சரிசெய்து விடுவான். முதுகை இரண்டாகப் பிளந்து உள்ளே இருக்கும் துகடத்தை நீக்கிவிட்டு மறுபடியும் தைத்து சொஸ்தப்படுத்திவிடுவான். அதேபோல் கல்வி கற்பிக்கத் தெய்வம் வேண்டுவதில்லை. அதற்கு 'வாத்தியார்கள் இருக்கிறார்கள். வம்பு வழக்குகள் வந்நால், அதைப்பேசிச் சரிசெய்ய வக்கீல்கள் இருக்கிறார்கள். இப்படியே எல்லா வேலைகளையும் மனிதனால் செய்ய முடியும். பிறகு தெய்வம்தான் எதற்கு? இந்தக் கேள்வி உங்களுக்குப் புதுசா இருக்கிறதல்லவா? ஆம். இதற்குப்பதில் சர்வ புவனத் திலும், எந்தக் கல்வி ஆராய்ச்சியினாலும், எவர் ஒருவராலும் கண்டு சொல்ல முடியாது. ஆனால் இங்கே அது எமது நடை முறைக் கைபாணச் செயலாக விளங்கி நிற்கிறது. எமன் வந்து சந்திக்கும்போது அவன் கையில் சிக்கி நாறிச் சாகாமல் தப்புவித்து ஜீவ சுயராஜ்யமென்னும் சுவர்ணபதிக் கயிலை வீட்டில் குடிபுகச் செய்விக்கின்ற பாரப்பெரிய தனித்த ஒரு காரியத்திற்குத்தான் தெய்வம் வேண்டும்.

அந்தத் தெய்வம் எது என்று தெரியுமா? அதுதான் உன் உடலுக்குள் ஒரு தலைமுறை காலம் குடியேறியிருந்து, அதை நாறவிடாமல் காப்பாற்றி வருகின்ற உன் உயிராகிய

ஜீவன். அந்த ஜீவன், உன் கடத்துக்கு 'உள்' இருப்பதால் 'கடவுள்' என்ற நாமத்தைப் பெற்றது. அதை உன் முயற்சி கொண்டு நீ சந்திக்க முடியாது. நாம் உன்மேல் வைக்கும் இரக்கத்தால் உன் இருதய வீட்டில் இருக்கும் ஜீவனை நீ சந்திக்கும்படிச் செய்துவைக்க முடியும். அந்தச் செயலை நாம் பழகி வந்திருக்கிறோம். மெய்யாகச் சொன்னால் அந்த ஜீவனே நாம்- அதற்குச் சாட்சி, எம் தேவ மக்கள் பல ஆயிரக் கணக்கில் இருக்கிறார்கள்.

உயிராகிய ஜீவனுக்குத்தான் அந்தந்த மதங்களிலும் பஞ்ஞாட்சரம், அஷ்டாட்சரம், பிரணவம், காயத்திரி, கலிமா என்ற பல நாமங்கள் இருக்கின்றன. அந்த ஜீவன் ஒரு திருவுரு ஏற்று வந்திருக்கும்போது, அத் தேவ ரூபத்திற்கு தெய்வம், சற்குரு என்ற நாமங்கள் வழங்கப் பெறுகிறது. எம படரை நீக்கி பரிசுத்த முத்தி வீட்டில் ஆக்கும் அந்தக் காருண்ய ரூபமே கண்கண்ட தெய்வம்.

இங்கே நீங்கள் கொஞ்ஞநாள் இருந்து பழகினீர்களானால் உங்கள் ஜீவனை நீங்கள் சந்திக்கும்படி நாம்செய்து விடுவோம். எதெதோ வேலைகளுக்கெல்லாம் உங்களுக்கு நேரம் கிடைக்குது. ஆனால் உங்கள் தலைகளை எமனிடத்திலிருந்து- காத்து ரக்ஷிக்கும் இந்தக் காரியத்திற்குத்தான் உங்களுக்கு நேரம் கிடைக்கவில்லை!

75

(17-1-1975) தமிழ்நாடு அமைச்சர் திரு. ராஜாராம் அவர்கள் தரிசனைக்கு வந்திருந்தபோது-

ஆண்டவர்கள்:- எமக்குப் பலநேரமும் சடைவா வருது. இந்த உடலை விட்டுப் போய்விட ஆசையாயிருக்குது. ஆனால் முடியவில்லை. ஏனென்றால் எம்முடைய மூச்சு, நாம் என்ன முயற்சி செய்தாலும், நாசிக்கு வெளியே ஓடுவதில்லை. அதோடு உணவு உட்கொள்வது நின்றுபோய் சுமார் 3 வருஷம்

2 மாதங்கள் ஆச்சு. தூக்கமோ, பல வருடங்களுக்கு முன்பே இல்லாமலே போயிடுச்சு. அப்படியெல்லாம் இருந்நாலும், வந்நவர்களுடன் பேசும்போது எமக்குக் களைப்பே தட்டுவதில்லை. இப்பத்தான் வந்நிருக்கின்றீர்கள்– எமக்கு உருமகால தவனேரம் ஆச்சு. ஞம் எமது வேலைக்குப் போகிறேம். னீங்கள் போயிட்டு வாங்க– என்று அருளிச் செய்தபின் தவத்திற்கு ஏகினர்கள்.

76

'மானுமதுரைக்கு அடுத்த இராஜகெம்பீரத்தில் ஞம் இருந்துவந்ந குடிசைக்கு இரவு னேரத்தில் தீ வைத்து இழைத்த கொடுமையி னின்றும் தப்பி, பிரஞ்சு ஆட்சியிலிருந்ந காரைக்கால் னேக்கிக் கால்னடையாக ஒரு லங்கோடு, ஒரு யோகதண்டு, கவுன் உடையுடன் தனித்துச் சோழவளனாட்டுத் தஞ்ஞாவூர் தாண்டிப் பிரயாணமாய்ப்போய்க்கொண்டிருக்கும்போது இரவெல்லாம் பட்டினி, காலை இளனேரம் ஒரு ஏரிக்கரையில் ஏறி, மறு புறம் இருந்ந மடையின்பக்கம் இறங்கிப் பசிக்கொடுமையால் ஏதாவது ஊரோ வீடுகளோ தெரிகிறதா என்று பார்த்தவண்ணம் னடக்கும்போது, எம் உள்ளத்தில் ஓர் எண்ணம் வந்நது– னமக்கென மெய்யான தவச்செயலுடைய ஒரு மதமும் ஓர் ஊரும் உண்டாக்கிக் கொள்ளவேணும் என்பதுவே அந்ந எண்ணம்' என்ற பகுதியினை (எமபடரடிபடு கோடாயிதக்கூர்– பக்கம் 11) சன்னிதியில் படித்து வரும்போது–

தேவமக்களில் ஒருவர்:- 'கடைக்கலியின் கொடிய அமலினை சங்காரம் செய்கின்ற பேரிடிக்கிரண னீதி னெறித் தெளிவில் மக்களை ஆக்க, னமது தெய்வமவர்களின் திருவுள்ளத்தில் அங்கே உதயமாகிய பெருமித விடிவே மறலி கைதீண்டா சாலை ஆண்டவர்கள் மெய்மதமும், ஊரான ஊராகிய உயிர்ப்பயிர் ஏற்றும் இந்நத் தனிச் செயற்பதியும் உண்

டாகி னம் எல்லோருடைய தலை செழிக்கவந்த ஆதி மூல காரண விடிவு நேரமாக எழுந்தது' என்று பேசி முடிக்கவும்-

தொடர்ந்து மற்றொருவர்:- 'மானம் குலம் கல்வி வன்மை அறிவுடைமை தானம் தவமுயற்சி' முதலாகிய பத்தும் பசிவந் திடப் பறந்துபோம் என்று ஆன்றோர்களின் தீர்ப்பு இருக்க அந்தப் பசிக் கொடுமை நேரத்தில், மறலி கை தீண்டா மெய் மதமாகிய தனித்த ஒரு மதத்தையும் இனிக்கதியில்லை என் னும் யுகத் தவச் சாலையாகிய ஒரு ஊரையும் உற்பவம் செய் தருளவேணும் என்ற எண்ணம் னம் தெய்வமவர்களுக்கு எப்படித்தான் வந்ததோ' என்று ஆச்சரியம் பிறங்கக் கூற-

ஆண்டவர்கள்:- மறலி கை தீண்டா இந்த மெய் மதத் தையும் னித்திய சுமங்கல தெய்வப்பதியாகிய தனித்த இந்த ஊரையும் உண்டாக்க வேணும் என்ற காரமான எண்ணம் னெடுங்காலமாக இரவு பகல், ஓயாது ஒழியாது, மாறாது மறையாது, அகலாது அயராது எமது உள்ளத்தில் குமுறி வாட்டிக்கொண்டே இருந்தது. அந்தக் கடுங்கார ஆத்திரங் கொண்ட பசியானது இந்தத் தூலப் பசியை தூக்கி விழுங்கி விட்டதில் என்ன ஆச்சரியமிருக்கிறது?

77

செய்யாற்றிலிருந்து வந்த ஒருவர் சபையில் சேர விண்ணப்பித்தபோது-

ஆண்டவர்கள்:- னீங்கள் ஏன் இந்தச் சபையில் சேர னினைக்கிறிங்க?

வந்திருந்தவர்:- 'எமனிடத்திலிருந்து தப்பிக்க' என்று சபையில் முன் சேர்ந்திருந்த சிலர் சொல்லிக்கொடுத்த பதிலைச் சொல்ல-

ஆண்டவர்கள்:- னீ இந்தச் சபையில் சேர்ந்ததும் அந் நச் செயல் உன்னிடம் வந்து விடுமோ? வராதே! படை பவுசு

எல்லாம் பெற்றிருக்கிற ஒரு அரசன், தன் படையை ஏவி எமனை வென்று தப்பிக்கட்டுமே- அது முடியுமா? முடியாது. அ, ஆ முதல்முதல் ஆரம்பித்து அட்சரங்களைப் படிக்கத் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் சேரவந்த ஒரு பையனைப் பார்த்து 'எங்கே வந்தே' என்று வாத்தியார் கேட்டார். 'நான் கலெக்டராக ஆக வந்திருக்கேன் ஐயா' என்று சொன்னால் எப்படியிருக்குமோ அப்படியிருக்கிறது உன் பதில். எமபடரை மாற்றும் அதிகாரணப் பெரிய செயலை லேசாக நினைக்கிற வனுக்கு இந்த மெய் கிட்டாது- உஜார்.

முதலில் அறிய வேண்டியது எது என்று உலக மக்க ளுக்குத் தெரியாது. அந்த நேரான கல்வி மறைந்தே போச்சு. சிவனுடைய சன்னத முத்திரை வாங்கினவர் எங்கேயாவது வந்திருப்பார். முதலில் அவரைத்தேடு. அவரைச் சந்தித்து அவரது சன்னிதியில் நீ ஒரு யோக்கியன் என்று நம்பும்படி கரணம்போட்டு, அத் திருவுள்ளம் உன்பால் இரக்கங்கொள் ளும்படிச் செய்துகொள். அதுதான் உனக்கு முதலில் வேணும். பிறகு நீ எம்மிடம் கேட்டாயே- மறலி கை தீண்டா அச் செயல்- அது- தானே வந்து கிட்டும்.

78

பவக்கடல் தவிக்கும் மாந்தரைக் கரைசேர்
பருமரக் கலங்கிடைத் தனபோல்
சிவகுரு முனிவர் தனிகையர் குமரர்
தெய்வமெய் வழிச்சபை பெருகும்
தவப்பயிர்க் குதவிச் செயலினோர் தலைவா
சேகரம் தாங்களும் வருக
சிவகுரு வரத நமகுரு பணியைச்
சிரம்புனை தேவரே வருவீர்

(ஆதிமெய் உதய பூரண வேதாந்தம்- பக்கம் 367) என்ற செய்யுளைச் சபையில் படித்துவிட்டு-

'பவக்கடல் தவிக்கும் மாந்தரைக் கரைசேர் பருமரக் கலம் ஒன்று இக் கலிக்கடையில் இந்த உத்தியோவனக் கானில் வந்திருப்பதால்- சர்வ மதங்களைச் சார்ந்த அறுபத்து ஒன்பது சாதிகுல மக்கள் ஆண் பெண், சிறியோர் பெரியோர், படித்தவர் படிக்காதவர், ஏழை பணக்காரர் என்று பாராமல் எல்லோரையும் ஏற்றிக்கொண்டு- பிறவிப்பிணியாகிய சாவு என்னும் இருட்கடலைக் கடத்திச்சென்று- நித்திய பூரண பேரின்ப உலகாகிய அக்கரையில் இதோ சேர்த்து வருகிறதே- இது உலக மக்களுக்குத் தெரியவில்லையே' என்று தேவகுல மக்கள் கசிந்துருகிப் பேசி சன்னிதியில் நிற்க-

ஆண்டவர்கள்:- 'எந்தக் காலத்தும் பழுதுபடாத மகா கனங்கொண்ட தெய்வ என்ஜின் காருண்ய மெய்மேனி தாங்கிவந்து, மெய்வழி என்னும் கப்பலை அலுப்பயர்வு பாராது இரவுபகல் இழுத்துச்சென்று, தன்னை அண்டி அடைந்த பல ஆயிரக்கணக்கான மக்களை, பவக்கடலாகிய பிறவிக் கடலினின்றும் தப்புவிக்கின்றது' என்று அருளிச் செய்தபின் 'இந்த மெய்வழிக் கப்பலில் ஏதாவது ஓட்டை விழுந்துவிட்டால், பிறகு இப் பாரப் பெரிய செயலைச் செய்ய முடியாதே- ஆகவே அத்திருமேனியரே ஜீவ என்ஜின் மட்டும் அல்ல, அந்த பருமரக்கலமாகவும் தானே இருந்து ஆவன செய்கிறார்கள். இந்த அருங்காரண நெடுப்பாடு இதுநாள் வரை உங்கள் நினைவிற்கு எட்டியதா? எட்டவில்லையே!

79

(28-1-1975) பகல் உருமகால தவநேரம் முடிந்து வந்து ஆசனத்தில் அமர்ந்து-

ஆண்டவர்கள்:- நேற்று- பௌர்ணமிக் கிள்ளுமைக் கொடி ஏற்றப் போகும் நேரத்தில்-

போகாப்புனல் சிந்தும்நாட்டில் வெள்ளிகிளர்ப்பப்
பௌர்ணமிக்கொடி யேறுமென்று ஊதிடுங்சங்கே

என்ற கண்ணிகளை வெளியாக்கினேமே- அது உங்களுக்கு ஞாபக மிருக்குமல்லவா? சதுர் யுகத்திற்கும் 'போகாப்புனல்' ஒன்றுதான் இருந்தது. அது இப்போது சாலே என்ற ஒரு மெய்மேனி ஏற்று னின்று பெருங்கருணைப்பேரருள் பெருங் குண விரிப்பினைச் சதா பொங்கிச் 'சிந்நியதால்' (சபையில் சூழ்ந்து அமர்ந்திருந்த அனந்நாதி தேவர்களைத் திருக்கரம் னீட்டிச் சுட்டிக்காட்டி) இத்தனை 'போகாப் புனல்களை' இந்த அழிகலிக்கடையில் உண்டாக்கிவிட்டது!

காரைக்கால் அம்மையார் என்றதும் உங்கள் னினைவு அவர்களை எந்தத் தெய்வ உன்னதத்தில் வைத்து னினைக் கிறது! அந்தக் காரைக்கால் அம்மையார் இங்கு வந்நால் அவர்களே பார்த்து 'அம்மையார்களே' என்று மெய் அன் புடன் அழைக்கக் கூடிய அனந்நகிகளாகிய இத்தனை தலே களை இப்போ இங்கே ஞம் உண்டாக்கி உள்ளோம். இந்த அற்புதச்செயல், கலிப்பவகர மண்டைகளுக்கு எப்பத் தெரி யப்போகிறது?

காரைக்கால் அம்மையார் பஞ்ஞாட்சரமாகிய ஒரே ஒரு மூலமந்நிரக் கோடாயித வைப்பினைக்கொண்டு கரையேறிய வர்கள். ஆனல் எம் மந்நிரச் சந்நதியில் வந்து, மறுபிறப்புப் பெற்றுள்ள அனந்நகிகள் சதுர் யுகங்கோடிகால மக்களிடத் திலுமுள்ள சர்வ மூலமந்நிரங்களைக் கண்டு தரிசித்தவர்க ளல்லவா!

80

ஆண்டவர்கள்:-

உயிர் குடியிருப்புக்கு ஞமம் ஆலயம்.
உடல் குடியிருப்புக்குப் பெயர் விடுதி, வீடு.

81

அன்னவாசல் கிராம சேவக் தரிசனைக்கு வந்திருந்தபோது-

ஆண்டவர்கள்:- உங்களுக்கு எல்லாச் சீர் சிறப்புக் களும், எல்லா அழகு ஆண்மைகளும், எல்லா மதிப்புக்குதிப்பு மகிழ்ச்சிகளும், எல்லாக் கல்வி கலைக் கண்காட்சிகளும் காலமெல்லாம் தந்துகொண்டிருப்பது உங்களிடத்திலிருக்கிற உயிர் அல்லவா? அதை உங்களால் பார்க்க முடியுமா?

வந்திருந்தவர்:- பார்க்கமுடியாது.

ஆண்டவர்கள்:- பார்க்க முடியாத ஒரு பொருளை 'பார்க்க முடியுமா?' என்று நாம் கேட்போமா- (அனந்நாதி தேவர்களைச் சுட்டிக்காட்டி) இதோ பார்த்தவர்கள் பல ஆயிரக்கணக்கான பேர்கள் இங்கே இருக்கிறார்களே!

ஒரு நூறுரூபாய் நோட்டு- உங்களுடையதாகவே இருக்கட்டும்— அது உங்கள் கண்ணுக்குத் தெரியாதபடி இருந்தால், அதை யாராவது கைப்பற்றி எடுக்கும்போது உங்களுக்கு ஆத்திரம் வருமா? வராது. அது போலத்தான் உங்கள் உயிர் உங்களின் கண் காணும்படி இல்லாததால், அதை எமன் கைப்பற்றி உங்களிடமிருந்து லேசாகப் பறித்துக் கொண்டுபோகும்படி விட்டுவிடுகிறீர்கள்.

மனிதனுக்குத்தானே தெய்வம் வேண்டும்? ஆம். நீங்கள் தெய்வம் என்று வைத்து அங்கு கொண்டாடுவது உங்கள் கையைவிட மட்டமானதாக இருக்கே- என்ன இப்படிச் சொல்லுகிறார்களே என்று நினைக்கிறீங்களா- அந்த விக்கிரகம் உங்கள் கைகளால் செய்யப்பட்டதுதானே? ஆகவே நாம் சொல்வது சரிதானே! (எவர் நினைவுக்கும் எட்டப்படாத அறிவாகார இந்தத் திருவார்த்தைகளைக் கேட்டு வந்திருந்தவர் பிரமித்துப்போய் ஒன்றும் பேசாமல் இருக்க)

தொடர்ந்து ஆண்டவர்கள்:- தெய்வமென்று காலகாலம் நாம் நினைத்திருந்தது இந்தக் கதியில் ஆயிடுச்சு. இனி- நிஜமான தெய்வம் எது என்று நாம் தெரிந்துகொள்ள வேணுமல்லவா? ஆம். உங்கள் சொந்த இலஞ்சிய வித்து

வஸ்துவாகிய உயிரை, வெளியே இழுத்துக்காட்டி உங்களைத் தரிசிக்கச் செய்துவைக்கிற ஒரு னடமாடும் தெய்வத் திரு மேனியரே, னிஜச் செயலுடைய தெய்வம். இதுதான் சர்வ வேதங்களின் முடிந்த முடிபு.

82

ஆண்டவர்கள்:- அறிவறிப்பாடம் முதலிலிருந்து சொல் லுங்க.

மெய்வழி வரதராஜ அனந்தர்:-

ஆதிதுணை, ஆதியேதுணை,
ஆதியை அறிய குருவேதுணை

என்று ஓத ஆரம்பிக்க

ஆண்டவர்கள்:- அதை னும் சொல்லச் சொல்லவில்லை. முதல் முதலாக- திண்ணைப்பள்ளிகூடத்தில் னீ படித்தாயே, அதைச் சொல்லு.

மெய்வழி வரதராஜ அனந்தர்:- அஆனா, ஆவன்னா, இனா, ஈயன்னா............

ஆண்டவர்கள்:- என்ன! எல்லாம் னான், னான் என்று சொல்லுகிறாயே- ஆகவே எல்லா அக்ஷரங்களும் னீதானா? (கேட்டறியாத இந்த அற்புத விளக்க உதயத்தைக்கேட்டு சபையோர் ஆச்சரியத்தில் மூழ்கி னிற்க)

தொடர்ந்து ஆண்டவர்கள்:- அட்சரங்களின் உதயம், இருப்பிடம் ஆகிய அனைத்தும் மனிதன்தான் என்பதை னம் தமிழில் உள்ள அறிவுஅறிபாடம் னமக்கு உணர்த்துகின்ற தல்லவா? என்ன ஆச்சரியம்! தமிழ் அட்சரங்களின் உச்ச ரிப்பை எவ்வளவு பொருள் னிறைத்து, என்ன உயர் அறிவுக் களஞ்சியமாகவாக்கி அமைத்திருக்கிறார்கள் என்று பார். இதுகாலம்வரை இந்த னுண்ணிய னுணுகிய மதினிதி விடிவு வெளியாக்கப்பெறவில்லை.

அச்சரம ணைத்துமினும் கோடிபல பாஷை
மெச்சுமத னுச்சனிலே மேனகைய ணைத்தும்
இச்சைபிறங் கிட்டுதிருச் சாலையில லாது
பொச்சையுல கோர்க்கதுபு றம்புமுது காமே

(ஆதி மெய் உதய பூரண வேதாந்தம்- பக்கம் 2)

என்ற செய்யுளை சபையோர் பாடித் தோத்தரித்து மகிழ்ந்நார்கள்.

83

'காலத்தி னாற்செய்த னன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது' என்ற

திருவள்ளுவனையரின் கொரல்ப்பாவினுக்கு சபையில் பேசப் பெற்ற வியாக்கியானம் னேர் குறிப் பொருத்தமுடையதாக இல்லை, எனக்கண்டு-

ஆண்டவர்கள்:- னூலின் கர்த்தர், னேரான பொருள் கொள்ளும்படியே தன் கருத்தை அந்நச் செய்யுளில் கூறியுள்ளார்கள். அதை னாம், இப்பப் பேசுகிறோம்- கேளுங்ஙள். உங்ஙளுக்கு உதயமான பிரம்மோபதேச இரவில் னீங்ஙள் பெற்ற 'பொருள்' அப்போதுள்ள உங்ஙள் அறிவுக்கு சிறிதாகத் தோன்றினாலும், அதைக்கொண்டு உங்ஙள் தலைகளில் ஏற்றப்பெற்ற னன்மை 'ஞாலத்தின் மாணப் பெரிது' என்பதைக் காலம் செல்லச் செல்ல, அறிவு வளரவளர னீங்ஙள் உணர்கிறீர்களல்லவா? இந்ந அரிய செயலைத்தான், இதுவரை யாரும் கண்டிராத தெய்வீக னன்மை வள்ளற்கொடையினைத்தான், அச்செய்யுள் எடுத்துக்காட்டி னிற்கிறது. னூறுகோடி கற்பகால மதி னிறை வல்லபத்தை ஒன்றாகச் சுருட்டித் திரட்டித் திணித்து உண்டாக்கப்பெற்ற அந்ந இரவின் பெருமையினைப் பேசி முடிப்பதல்லவே!

84

கோவை இன்கம்டாக்ஸ் ஆபிசரான ஒரு அய்யங்ஙார், தரிசனைக்கு வந்நிருந்நபோது:-

ஆண்டவர்கள்:- என்ன அதி அற்புதமான நாமத்தை, அய்யங்கார் என்ற அந்தத்தலை மகுடத்தை, வைணவ குலாதிபராகிய செம்மல் எடுத்து வைத்திருக்கிறார்கள் என்று உங்கள் மூலமாக இவ்வுலகிற்கு இன்று வெளியாக்கப் போகிறோம்.

நாசிக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடையவர்களே, எமனுடைய தண்டனையாகிய மரண அவஸ்தையின் பெலங்கொண்ட கூரினை முறியடித்து மாற்றும் ஆற்றலுடைவர்கள். அவர்களையே வேதங்கள் 'ஐயன்' என்ற உன்னதச் சொல் கொண்டு குறிக்கின்றன. அத்தகைய ஒரு மெய்ஞ்ஞானச் செம்மலின் திருவடியைத் தஞ்சமெனக் கார்த்திருப்பவர்களுக்கே (ஐயன்+கார்) அய்யங்கார் என்ற தலைமகுடம் சூட்டப்பெற்றது. இத்தேவ ரகசிய விடிவு, யாருக்கும் எட்டாதது, உங்களுக்கு இன்று வெளியாக்கப்பெற்றது.

'சாமி' என்பதும் அதேபோன்று-சாவை மீறி அதாவது மிதித்து ஏறி ஜெயங்கொள்ளும் தெய்வீகச்செயல் ஏற்றத்தைக் குறிக்கும் விண்ணுமை உன்னதப்பட்டம். சுப்பிரமணிய சாமி, கிருஷ்ணசாமி, கருப்பண்ணசாமி, ஏசுநாதசாமி என்று மதவேத மூலபுருஷ நாயகங்களுக்கும், தவராஜ செம்மல்களுக்கும், தன்னையறிந்த பெரியோர்களுக்கும் 'சாமி' என்ற வான் பட்டம் தந்து அழைப்பது நம் தமிழ் நாட்டு மரபு. 'அல்லா சாமி பண்டிகை' என்றும் நம் தமிழ் மக்களிடையே வழங்குவதை நாம் கேட்டிருக்கிறோமே!

ஈசுவரப் பட்டமே பெற்றவராயிருந்தாலும், ஏதும் அறியாத ஒரு மூடனாகவே இருந்தாலும் இருவரிடத்திலும் தங்கு தடையின்றி ஒரே கூர்கொண்டு, மெய்யறிவு ஆண்மை துலங்க எட்டிப் பேசுவோம். முக்கித் தக்கிப் பேசுவது என்பது எம்மிடம் எப்பவும் இல்லை. எமது கைபாணச் செயலை எடுத்துப் பேசுவதில் எமக்கு சிரமம் சிறிதுகூடத் தட்டுவதே இல்லை.

85

ஆண்டவர்கள்:- இந்த மனித தூலம் எந்த ஒரு நிலைமைக்குத் தக்கப்படியும் மாறிக்கொள்ளுகிறது. இந்நா- உங்கள் கண்ணேர் பார்க்க- எம்முடைய தேகம் ஊணோ உறக்கமோ இல்லாமல், நசிக்கு வெளியே சுவாசம் ஓடாமல் இருக்கும் தன்மையைப் பழகிக்கொண்டதே! ஈசனையும் தன் வசப்படுத்திக்கொள்ளும் தவாதிக்க வல்லபத்தைப் பெற்றுக்கொண்டதே!

மகாசண்டாளன், முத்திநெறிக்காகாத பாவி என்ற நிலையில் இருப்பவன் இந்த மனித தூலத்தில்தானிருக்கிறான். எமனை அடக்கி மிதித்து ஏறி ஈசனைத் தன் வசப்படுத்திக் கொண்டுள்ள ஆதிமேந்தவ னீதிநேர்மை சாயுச்சியச் செம்மலும் இந்த மனிதச் சட்டையில்தா னிருக்கிறார்கள். நினைவுக் கெட்டா தவ விளைவு அதி மகோன்னத நிலையும், சிறிது சிந்திக்கினும் மகா அருவருப்பைத் தரும் அதி பாதாள நிலையும், இந்த மனித தூலத்திலேயே இருக்கிறதே- இது என்ன ஆச்சரியம்!

86

ஆண்டவர்கள்:- பெரிய அறிவாளி என்ற ஒருவருடைய மூளையை, பலரூபாய்கள் கொடுத்து இன்ஷ்யூர் செய்து வைத்திருந்து அவர் செத்ததும் அந்த மூளையை எடுத்துக்கொண்டு போய் பெரும் செலவில் ஆராய்ச்சி செய்து 'அறிவு' அதில் எந்த எல்லையில், எந்த மாதிரி இருக்கிறது என்று காணத் தேடுகிறார்களே. அந்த முயற்சியில் யாராவது, ஏதாவது வெற்றி கண்டிருக்கிறார்களா? இல்லை. எப்பவாவது வெற்றி காண முடியுமா? முடியாது. ஏனென்னில் 'அது' இல்லாத இடத்தில் தேடுவதால் அவர்கள் அதைக் காணப்போவதே இல்லை.

மனிதனுடைய இதயலோகத்தில் பிரம்மப் பிரகாசமாக விளங்கும் அந்த அறிவுப் பொருள்- பஞ்சாட்சரம், அஷ்டாச்

சரம், காயத்திரி, கலிமா முதலாகிய சர்வ மூலமந்திரங்களை யும் தன்னகத்தே அடக்கி வைத்திருக்கும் பிரம்மமுடி வைர மணிப் பெட்டகமாக துலங்கா நிற்கிறது. அதைத் தேவக் கண்கொண்டு பார்க்கிறவர்களே பார்க்கக் கூடியதாக இருக் கிறதென்பதை இந்த மண்ணுலக மக்கள் ஒருபோதும் அறி யப் போவதில்லை.

அறிவை நேருக்குநேர் சந்தித்து அறிந்தவர்களுக்கு- சாவுடைய நேரத்தில் பத்து நரக அடையாளங்கள் இல்லா மல் போய், பத்து தேவ அடையாளங்கள் அவர்கள் மேனி யில் காண நிற்பது இங்கு பிரத்தியக்ஷம். அடக்கம் செய்த பின், அவர்களின் உடலை மண் தீண்டாது.

மனித மூளையில் அறிவைத் தேடுவது, மூக்கைப் பிடித் துக்கொண்டு நரகக் குவியலில் கஸ்தூரியைத் தேடுவது போலிருக்கிறது. கஸ்த்தூரியை எப்பவாவது அங்கு காணமுடி யுமா? முடியாது.

87

ஆண்டவர்கள்:- உனக்கு ஒரு தெய்வப் பெயர் வைக்கப் பெற்றிருக்கிறதே- அது ஏன் என்று உனக்குத் தெரியுமா? பிரசவம் அதாவது பிறந்தது 'சவம்' என்ற அந்தப் பொல் லாத பெயர் உன் தலையில் இருந்ததினை மாற்றி, ஒரு தெய்வ நாமம் சூட்டினார்கள். அந்த நாமத்துக்கு உரிய பொருளாகிய உன் உயிராகிய ஜீவனை, இந்த உடலுள்ளபோதே உனது இதயாசனத்தில் நீ தரிசிக்கவில்லை யென்றால் கடைசியில் 'சவம்' என்ற ஆதிமுதலிலிருந்த அந்தப் பெயரே வந்து விடு கிறது.

உன் வீட்டில், நீ தேடி வைத்திருக்கும் உரல் உலக்கை முதலியனவாகிய ஒவ்வொன்றும் இருக்குமிடம் தெரியு மல்லவா? ஆம். 'இவற்றை எல்லாம் உனக்குத் தேடித்தந்த உன் உயிர் எங்கே இருக்கிறது? காட்டு' என்றால் அது உன்

தேகத்தில் குடியிருக்கும் இடத்தை உன்னல் காட்டமுடிய வில்லையே. அப்படித் தெரியாமல் இருப்பதால்தான், கடைசி னேரத்தில் எமன் அதைப் பற்றிக் கொண்டுபோய் சின்ன பின்னப்படுத்தி னரகிற்கு ஆளாக்கி விடுகிறன்- இந்த எச்ச ரிப்புச் சத்தம் இதோ உன் செவியில் கேட்டுவிட்டதே! அடுத்த க்ஷணம் அதைத்தேடிக் காணும் முயற்சியில் முழு மூச்சாக னீ ஈடுபடுவதுதான், மனித அறிவின் லக்ஷணம்.

88

ஆதி அக்னியைப்பற்றிய வர்ணனை, இருக் வேதத்தில் பல னூற்றுக்கணக்கான ஸ்லோகங்களில் காணப்பெறுகிறது என்று சபையில் பேசப்பெற்றபோது:-

ஆண்டவர்கள்:- உன் மூக்கை பத்து பாகங்களாகப் பிரித்து வைத்து, உன் காதை ஏழு பாகங்களாக விரித்து வைத்து, உன் வாயை பல பாகங்களாகப் பின்னப்படுத்தி வைத்துப் பார்த்தால் னீ ஒரு மனிதன் என்று சொல்லக் கூடிய ரூபம் தெரியுமா? தெரியாது. சொல்ல வேண்டிய ஒன் றை 'சுள்' என்று கேட்பவர் னினைவில் தைக்கும்படிச் சுருக்கிக் கூர்கொண்ட வார்த்தைகளால் சொல்லவில்லையென் ருல், சொல்லிய பொருளின் இலக்ஷணம் எவர் அறிவுக்கும் திட்டமாய்ப் படாது.

ஆதி- ஆகின்ற தீ- சர்வமும் தானே ஆகி சர்வத்தையும் ஆக்குகின்ற தீயானது, முதல் உற்பவ னேரத்தில் அந்த னமத்தில் அழைக்கப் பெற்றது. அதுவே இக் கலிக்கடையில் மகதி- மகா தீ-யாக சர்வ வேத பீஜங்களாகிய மூலமந்திரங் களைக் கைக்கொண்டு உருவெடுத்து வந்துள்ளது. தன்னு டைய னினைவு வல்லபங்கொண்டு தொட்ட தொட்டதனைத் தையும் னித்தியத்தில் ஆக்குகின்ற அந்தத் தேவரூபம் என்ன தவ திக்கப் பெருங்கருணை வல்லபம் உடையது என்று எண் ணிப் பாருங்கள்.

பன்னிரண்டு தேவ சன்னதங்கள் பெற்ற அவதார மூர்த்தியே சிவன். மகதி என்றது அவரையே. அவரே இறுதி காலத்தில் தென்னாடுடையவராக விளங்கி நின்று, என்னாட்டவர்க்கும் இறைவனாகப் போற்றப்பெறுவார் என்பதுவே ஆணிப் பொன்னாட்டு அருந்நவச் செம்மலாகிய மாணிக்க வாசகப்பிரானின் தீர்க்கதரிசனம். அந்தக் காலமும் அந்த அருந்நவமுதலும்- இதோ- உங்கள் தலை செழிக்க வந்து வாய்த்துக்கொண்டதே, இது என்ன தெய்வ வசந்தம்!

கண் காது முதலிய உன் அங்கக்குலங்கள் உன் இச்சைப்படி அடங்கி நடக்கின்றனவா? இல்லை. உன் தூக்கம், உன் சுவாசம் உனக்கு அடங்கி நடக்கின்றனவா? இல்லை. அவற்றை எல்லாம் அடக்கி ஆளப் பழகிய பின் அல்லவோ உன் நினைவு ஓட்டம் உன் அகமுகத்தில் அடங்கி ஒடுங்கும். அவ்வண்ணம் அடங்காது மதம்கொண்டு நிற்கின்ற அவைகளை, அடக்கி ஆளுகின்ற மகா தவ வல்லபமே மதம். அந்த மதம் இந்நா ஒரு மானிட ரூபம் தாங்கி உன் முன் வந்திருக்கிறது. சைவம் ஆகட்டும், வைணவமதம் ஆகட்டும், சொராஷ்டிரமதம் ஆகட்டும், புத்தமதம் ஆகட்டும், சைனமதம் ஆகட்டும், கிரிஸ்துவமதம் ஆகட்டும், இஸ்லாமியமதம் ஆகட்டும், சீக்கியர்மதம் ஆகட்டும் எந்தக்கோடி காலத்தில் படைத்த எந்த ஒரு மதமாகட்டும் அவையாவும் எம் கையடக்கமே என்று அந்த மதம் செயல் நிரூபணையோடு அருளிச் செய்து, இக் கானகத்தில் கொடியேற்றி எல்லோரையும் கூவி அழைத்துக்கொண்டிருக்கிறது. அதுவே ஆதி மதம். அதற்கு எமனை அடக்கி ஆளுவது என்பது ஒரு பெரிய காரியமா?

89

எமபயத்தைத் தாண்டாத
எவ்வாழ்வும் வாழ்வுமல்ல
எமபயத்தைக் கடந்திடிலோ
எவ்வாழ்வும் வாழ்வாகும்

(ஆதிமெய் உதய பூரண வேதாந்தம்- பக்கம் 432)

என்று நம் தெய்வமவர்கள் 'எமவாதைதையைத் தடுக்கும் என் திறம்' என்ற நூலில் அருளிச் செய்து வைத்துள்ள இவ்விரண்டு வரிகளை மட்டும் படித்து, சிந்தித்து, எமபயத்தைக் கடத்தி வாழ்வளிக்கும் அந்த வள்ளல் எங்கு வந்துள்ளார்கள் என்று தேடியடைந்து, அந்த வாழ்வைக் கைப்பற்றினால் போதுமே. வேறு சாஸ்திரங்களையோ, நூற்களையோ படிக்கத் தேவையில்லையே. சர்வகால, சர்வவேத, சர்வமத உள்ளகத் தெய்வீகச் செயலானது அவ்வாறு கைப்பற்றின அவர்களின் கையகத்தாகுமே- என்று சபையில் பேசப் பெற்றபோது-

ஆண்டவர்கள்:- சர்வகால சர்வமதங்களையும் தன் கை வசம் அடக்கி வந்துள்ள ஒரு அதிவல்ல தீர்க்கரைத் தேடி, அவர்களின் திருச்சன்னிதி அடைந்து, அவர்களது பேரருள் உதவி கொண்டு, தன்னைப் பிடிக்க நிற்கும் சாவைச் சாகடிக்கும் மெய் லாபகர அகமூக ஆற்றலை- மனித உடல் எடுத்த ஒருவன் இப்பவே பெறவில்லை என்றால் பிறகு அவனுக்கு வாழ்வு ஏது? இல்லவே இல்லை. எந்த நேரத்தில் அவனை எடுத்து விழுங்கலாம் என்று எமனுடைய கோர விரிப்பாகிய சாவு அவன் தலையில் உட்கார்ந்து, கெத்து கெத்தென்று காத்துக் கொண்டிருக்கும்போது, 'வாழ்கிறோம்' என்று அவன் நினைப்பது சரியாகுமா? ஆகாது- இறுதியில் அவ்வளவும் அறிவற்ற அலங்கோலக் கூத்தாக முடிந்து, நரகத்தில் என்னாளும் தங்கித் தரிக்கும் பேராபத்தாக வந்து சந்தித்து விடுமே! பிறகு ஏது உதவி?

சாவு வந்ததும் ஒருவனுக்கு வைக்கப்பெற்றிருந்த தெய்வ நாமம் பேர்த்து எறியப்பட்டு பிணம் என்ற பெயர் வந்து விடுகிறதே- மனித உடலில் பிரதானியமானது வாயல்லவா? இந்த உடலை வளர்க்கின்ற முக்கிய அங்கமல்லவா? ஆம். அது இந்த உடலுக்கு எவ்வளவு பிரயோஜன முடையதாய், உதவி அளப்பதாய் இருந்து கொண்டிருக்கிறது? அதேபோல செவி, கண், மூக்கு, கை, கால்கள் முதலிய யாவும் வெகு

முக்கியமானவைகளாக இருந்துகொண்டு இரவு பகல் ஓயாது உதவி புரிந்துகொண்டிருக்கின்றன. இவ்வாறு ஒரு தலைமுறை காலம் தொண்டூழியம் செய்துகொண்டிருக்கும் அவைகள், இந்த உடலைவிட்டு உயிர் அப்பால் நகர்ந்ததும், யாதொரு உதவியும் செய்யாமல் விரோதித்து இவ்வுடலைக் கைவிட்டு விடுகின்றன. இது பிரத்தியக்ஷம். ஆகவே அவற்றிற்கெல்லாம் ராஜா, உயிர் என்று திட்டமாகத் தெரிகிறது. ஒரு தலைமுறைகாலம் அவனிடத்தில் வாழ்ந்து உதவி செய்துகொண்டிருந்த அந்த உயிரை அவன் திரும்பிப் பார்க்காததால் 'நன்றிகெட்ட பாவி' என்ற அடையாளத்தை- எல்லோரும் காண அவன்மேல் பதித்து, நரகிற்குள் ஆக்கப்படுகிறான். அவ்வாறு போடுபோக்காக இருந்திராமல் தன் உயிரைத் தன் உடலுள்ளபோதே அவன் சந்தித்திருந்தால்- அந்த உயிரே சர்வ ரக்ஷகத் தெய்வமாக நின்று அவனுக்கு உதவியிருக்கும். அவன் தலையில் ஏற்றப்பெற்றிருந்த தெய்வனும்ம் பறிக்கப்பட்டு பிணம் என்ற பெயரும் அவனுக்கு வந்திருக்காது.

90

ஸ்ரீமுஷ்ணத்திலிருக்கும் வசதியுள்ள செல்வந்தராகிய ஒரு விவசாயி ஏழைபோலக் கிழிந்த உடைகளணிந்து கொண்டு தரிசனைக்கு வந்திருந்ததைக் கண்ணுற்ற-

ஆண்டவர்கள்:- ஐயா- கேளுங்க. எம்மை ஆண்டு கொண்ட குருதிலக ஞானகமவர்கள், சர்வத்தையும் துறந்த ஒரு ஏழையாக இருந்தார்கள். ஆகவே அவர்களிடமிருந்து, இந்த யுகநீதி அருள் நிறை மெய்ஞ்ஞானத்தை இறைஞ்சிக் கேட்டு பிக்ஷையாகக் கையேந்திப் பெறவேண்டியதாயிற்று. அந்த லக்ஷியத்தோடு அவர்களைப் பின் தொடர்ந்து சென்றனும், சர்வத்தையும் இழந்த ஒரு ஏழை பரதேசியாகி, இருபத்தி ஓராண்டு காலங்கள் 'ஏழைக்குள் ஏழையாக' அவர்

க்ளின் திருவடி னிழலில் வாழ்ந்து, சதுர் யுகாந்தங்களுக்கும் சர்வ சீரோங்கு அகமிய செல்வங்களுக்கும் விளைவு உதய வித்தாகிய மெய்வழித் தொழுலகத்தில் எல்லா மனுமக்களையும் ஆக்கும் இத் தெய்வீக பரம ஞானத்தைப் பெற்றோம்.

அந்த சத்திய ஒரு முனைக் கூறில் எம்மைப்போல் தள ராது னின்று இந்த ஞானத்தைப்பெற, அழிகலிக் கடைனேர மாகிய இது காலம், ஒரு மனுத்தலைகூட இல்லை என்பதை அறிந்தோம். ஆகவே முன் சென்ற காலங்களில் மெய்ஞ்ஞான மகத்துக்கள் வழிவழி னடத்தி வந்த தேவ சட்டத்தினை மாற்றி, மிக எளிமையான புதுப்பாதை அமைத்து, எம் மெய்வழியை னடத்தி வருகிறோம். அதனால்தான் அறுபத்தொன்பது சாதி களைச் சேர்ந்த பல ஆயிரக்கணக்கான மக்கள் சிவேச ஏற்றச் செவ்வியல் வழியாகிய இந்த மெய்யை இப்போது பின்பற்றி, எமனணுகா சத்திய பரிசுத்த தவாதிக்க மேட்டில் ஏற்றப் பெற்று ஏறி வாழ்கிறார்கள்.

எமக்குப் பெண்டு பிள்ளைகள், பேரன் பேத்திகள், ஆக மொத்தம் முப்பத்தி னான்கு பேர்கள் இருக்கிறார்கள். இப்படி இகபோக சம்பத்துடன் கூடிய இக்கலிக்கடைக்கு வேண்டிய, 'பணக்கார தர்பார் ஜீவசிம்மாசன ஞானம்' னும் கொண்டு வந்தி ருக்கிறோம். ஆகவே னீங்களும் எம்முன்னர் பணக்காரனாகவே னடை உடையில் ஆகி, எம் தேவமக்களைப்போல் இந்த னிஜ னிதி லாபகர தெய்வ ஞானத்தைப் பெற வேண்டும் ஐயா! எம்முடைய காலத்தில் இதைத்தவிர வேறு வழியில்லை.

91

ஒரு ரிடயர்டு ஜில்லா கலெக்டர் தினந்தோறும் திருப் பரங்குன்றம் மலையை வலம் வந்த பின் வீட்டில் பூஜை முடித்து சாப்பிட்டு வருகிறார். இவ்வாறு தொடர்ந்து செய்து வந்தால் தனக்கு முத்திப்பேறு கிட்டும் என்று னினைக்கிறார் என அவரு

டைய அன்பர், மெய்வழி அங்கத்தினர் ஒருவர் சபையில் தெரிவித்தபோது -

ஆண்டவர்கள்:- அவர் கலெக்டராக உத்தியோகம் வகித்து வந்தபோது, அவருடைய மேலதிகாரியாகிய எஜமானர் ஒருவருடைய சொற்படி கேட்டுச் சிறிதும் தவறில்லாமல் நடந்ததாலல்லவா தன் உயர் பதவியின் பலனைப் பெற்று வந்தார்? ஆம். அழிந்துபோகிற இந்தக் காரியத்திற்கே ஒரு எஜமானும், அவர் உத்திரவும், அதன்படி பிரளாத நடக்கையும் வேண்டி இருக்கிறதே- அவ்வாறிருக்க நித்திய முத்திப் பரமபத வாழ்வைக் கைபோடும் இந்த வேலைக்கு ஒரு எஜமான் வேண்டாமா? அவர் வகுத்த நீதி நெறி உத்திரவு வேண்டாமா? அதனைப் பின்பற்றி நடக்கும் நேர்கொண்ட நடக்கை வேண்டாமா? தன் யோஜனைப்படி தான்தோன்றித்தனமாக நடந்தால் ஏதாவது பலன் வருமா? வராது.

பூமியில் வாழும் எல்லா ஜீவராசிகளுக்கும் அதுஅதற்கான தூலம் தரப்பெற்றுள்ளது. அந்தத் தூலத்தோடு இந்தப் பூமியில்தான் வாழலாமே ஒழிய, ஜலத்தினுள் சென்று ஜலம் வாழ் ஜந்துக்களைப்போல வாழ முடியுமா? முடியாது. ஜலத்தில் வாழ வேணுமானால் அதற்கான வேறொரு தூலம் தரப்பெறவேணும். அதேபோல நம்முடைய இந்த அனித்திய தூலத்தோடு, அனித்திய உலகப் பாட்டின் வரவினைக் கை முதலாக வைத்துக்கொண்டு, நித்திய உலகில் புகுந்து வாழ முடியாது. அதற்குரிய அழியாத நித்திய தூலம் ஒன்று வேண்டும். கைமுதலும் வேண்டும். அந்தப் பரமபத-வைரமணித் தூலத்தையும், நித்திய நீதி முதலையும், இந்த அழி தேகத்திலிருக்கும்போதே ஜீவ தயாபரராகிய ஒரு சற்குருபிரானிடமிருந்து கெஞ்ஞிக்கேட்டுக் காருண்யப் பரிசு பதமாகப் பெற்றுக்கொள்ளவேண்டும். பிறகு அவர்களின் தனிப்

பெரும் உதவிகொண்டு அந்த னித்திய தூல வாழ்வில் குடி புகுந்து பழகித் தேர்ந்து கொள்ளவேண்டும். இதுவே ஜீவ சிம்மாசனப் போக்கு வரத்துப் பெற்ற மதிவல்ல மகத்துக்கள் கண்டு, னடந்த பாதை.

மேற்சொன்ன வழிமுறையில் ஒருவர் தலையிட்டு னிஜ தெய்வ வாழ்வில் ஈடுபடாவிட்டால், சாவுடைய சந்திப்பில், ன்ரக தூலமாகிய பேய்த் தூலம் தானேவந்து சித்தித்துவிடும். ஜீவ வாழ்விற்கு வேண்டிய இந்த அதிமுக்கிய எச்சரிக்கை தந்து, அவருக்கு உஜார் கொடுக்கிறவர்கள் எவரையும் அவர் சந்திக்கவில்லை, பாவர். ஆகவே சிவன் வருவாரென்று எதிர் பார்த்துக்கொண்டிருந்து எமனைச் சந்திக்க னிற்கிறார்.

92

(திருனெல்வேலி ஜில்லா, சுசீந்திரம் சி.ஐ.டி சர்க்கிள் இன்ஸ்பெக்டர்–ஒரு முஸ்லீம் ஆலயத்திற்கு வந்திருந்தபோது)

ஆண்டவர்கள்:- எல்லோரும் பார்த்துக் காறித்துப்ப, நீட்டு கசப்பு ஜலம் வெளியாகி, ஹறி னலங்கெட்டு அலகை யாகும் அனியாய மரணப்பீடிப்பைப்பற்றிச் செவியில் கேட்டும் ஒருவனுக்கு அச்சம் வரவில்லையென்றால் அவனுக்கு மான ஈனம் இல்லை என்றுதான் சொல்லவேண்டும்.

வந்திருந்தவர்:- னியாயமென்று அறிவுக்குப்பட்டு உங்கள் மெய்வழியில் னான் சேர்ந்துகொண்டபின் எங்கள் முஸ்லீம் சமுகத்தினிடத்தில் போனால், அவர்கள் என்னை வெறுத்து பல இன்னல்களுக்குள்ளாக்குவார்களே என்று அச்சமாயிருக்கிறது. இந்த அச்சமான எண்ணம் பலருக்கு ஏற்படலாமே-

ஆண்டவர்கள்:- இதில் சேர்ந்து, உங்கள் கல்பகத்தில் வேத விதிப்படிக் கலிமாப்பொருளைப் பிரகாச ரூபமாகத் தரிசனை செய்வது ஹராமான செயலா? 'கலிமாப் பொருளைத் தன்னகத்தில் ஒருவன் அறியாவிடில் சாவுடைய சந்திப்பில்

கசப்பு வெளியாகி பாவி என்ற அடையாளம் வந்துவிடும் என்பது இறைவன் தீர்ப்பாச்சே. அதை மீறி னடந்து னரகத்திற்கு னான் தாக்கலாவதை னீங்கள் விரும்புகிறீர்களா?' என்று னீங்கள் அவர்களைக்கேட்டால் என்ன சொல்வார்கள்?

வந்திருந்நவர்:- னரக சுவர்க்கத்தில் எனக்கே னம்பிக்கையில்லையே- பின்- அவர்களிடம்போய் னான் எப்படி, னீங்கள் சொல்லியதைக் கேட்கப்போகிறேன்?

ஆண்டவர்கள்:- ன்ரக சுவர்க்கத்தைப்பற்றிச் சாயம் னேர்ந்நால் பின்னே பேசுவோம். அதற்கு முன், னீ அறியவேண்டியது ஒன்றிருக்கிறது. உனக்கு எல்லா உதவியும் செய்து கொண்டிருக்கிற ஹயாத்தாகிய உயிர் உன்னிடத்தில் தானே இருக்கிறது? அதை னீ எப்பவாவது பார்த்திருக்கிறாயா? பார்க்க இச்சையாவது வந்திருக்கிறதா? இல்லை- தன்னிடத்திலே ஒருதலைமுறை காலம் குடியேறியிருக்கிற தன் ஜீவனை பார்க்காதவனிடத்தில், பார்க்க ஆசைகூட வராதவனிடத்தில், ஹக்காகிய இந்த மெய்யை எடுத்துக்கூறினால் என்ன புரியும் என்ற எண்ணம் வருகிறது. அதிருக்கட்டும், உலகம் முழுவதிலும் உணவுப் பிரச்சினைதானே இப்பப் பெரிசாகயிருக்கு- எம்மைப்போல னீயும் உணவில்லாமல் பழகிக்கொண்டால் என்ன தெளலத்தாயிருக்கும்!

(தங்கள் வலது கரத்தை னீட்டிக்காட்டி) இது எமக்கு னல்லாத் தெரியுது. இதேபோல இந்தப் பூமியிலுள்ள மரம் செடி கொடி மலை அருவி ஆறு முதலிய யாவும் தெரியுது. ஆகாயத்திலுள்ள சந்திர சூரியாள் னக்ஷத்திராதிகள் தெரியுது. எமக்குத் தெரிவது போல உனக்கும் தெரிகிறதல்லவா? ஆர். இப்படி சர்வமும் தெரிந்நாலும்- ஒன்று- அதுதான், உன் முகம், உனக்குத் தெரியவில்லை. எல்லாவற்றிலும் எது மிக முக்கியமானது? உன் முகம்தானே. தன்னைத்தான் சந்திப்பது என்பது அதுதான். இது பேச்சுக்குள்ளே பேச்சு-

எம்மிடத்தில் மறுபிறப்புப்பெற்ற எம் மக்கள்தான் அதைப் பற்றி அறிவார்கள்.

ஒரு தெய்வக் கண்ணாடியின் உதவிகொண்டு தன்னைத் தான் சந்திக்கிற ஹக்காகிய செயலைப் பழகிக்கொள்வதே சைவம். அதுவேதான் இஸ்லாம்.

பஞ்ஞபூ தமும்க டந்நுமே மெள்ளமுப்
பாழையும் தள்ளியங்ஙே உன்னில்
கொஞ்ஞமாய்க் கண்டகொலுவாச னக்கரு
வூரையு மேகடந்நு அயினென்
றஞ்ஞன மீமேமு கம்மதுக் கண்ணாடி
யாம்முரீ தாம்பாதம் இது
ஹக்கான வன்னீதம் குரு பாதம்
வாக்கே போத மிதான-
கலிமாவெ ணும்பெரு முத்தொன்றி லங்ஙியே
காணுதின் சாணுக்குள்ளே'

என்றும் பாடி வைத்துள்ள முரீதுச் சுருக்கத்தில் மேற் சொன்ன செயலைப்பற்றி விளக்கமாகக் கூறியிருக்கிறோம். அதைப்பற்றி உனக்குத் தெளிவு பிறங்ஙனும் பேசுவோம். ஆனல் இருந்து கேட்கத்தான் உனக்கு னேரமில்லை.

93

(8-6-75) மெய்யைவிட்டுத் தவறிவிட்ட ஒரு பாவியின் வீட்டிற்கு, சபையில் முக்கிய பொறுப்பு வகிக்கும் ஒருவர், போய்விட்டு வந்நதற்காக அவரது சிரத்தில் அணிந்நிருந்ந மெய்வழி அடையாளச் சின்னமாகிய காஷாய ரக்ஷிப்புச்சீரா தெய்வ உத்திரவுக்கு எடுக்கப்பட்டது. பிறகு அவர், சன்னிதியில் மன்ருடிக் கேட்டு மன்னிப்புப்பெற்ருர். பிராயச்சித்தம் செய்யப்பெற்று, சபையில் மறுபடியும் ஏற்றுக்கொள்ளப் பெற்ருர்- அதுனேரம்,

ஆண்டவர்கள்:- 'ஆண்டவர்களுக்கு இந்தக் காரியம் தெரியக்கூடாது' என்று ஒரு செயலை நீ செய்ய நினைக்கும் போதே, உன்னுடைய நினைவு அலகையாகி விடுகிறது. படுபாதாளத்திற்கு உன்னை இழுத்துச் செல்லும் இந்த ஆபத்துப்பற்றி உனக்கு இதுவரை தெரியுமா? தெரியாது.

எம் உள்ளத்திலிருந்து ஒருவனை, ஆகாதவன் என்று எடுத்தெறிந்த பின், மெய்வழிச்சபை ஏட்டில் அவன் நம்பர் இருந்தால் அவனுக்கு முத்தி வந்துவிடுமா? வராது. சபை என்பது எம் நினைவா அல்லது ஏடா?

சபையோர்:- தெய்வமவர்களின் நினைவுதான்.

ஆண்டவர்கள்:- நாம் திருப்பத்தூரில் இருந்துகொண்டு சபையை நடத்திவரும் காலத்தில், பிரம்மோபதேசம் பெற வந்தவர்களிடம் உறுதிமொழிப்பத்திரம் எழுதி வாங்கினோமே. அதில், 'பிரம்மோபதேச தேவரகசியத்தை எக்காலத்தும் யாவரிடத்தும் எக்காரணத்தைக்கொண்டும் என்னுடைய செயல் சொல் எண்ணம் இம் மூன்றில் ஒன்றிலேனும் வெளியிடமாட்டேன். இது சத்தியம் சத்தியம் சத்தியம்' என்ற வாசகத்தை எழுதிப் படிக்கச் சொல்லி ஒருவனை சத்திய மேடையில் ஏற்றினோம். பிறகு காலம் செல்லச்செல்ல, தெய்வத் துரோக ஆத்மத்துரோகிகள் சிலர் சபையில் சேர்ந்து உபதேசம் பெற்றபின், தங்கள் பழிபாதக வஞ்சகத்தன மலிவினால் மெய்யைவிட்டு விலகிவிட்டார்கள். ஒரு அழுகிப்போன வெற்றிலையோடு சேர்ந்து எல்லா நல்ல வெற்றிலைகளும் கெட்டுப் பாழாகி விடுமல்லவா? ஆம். அதுபோல அந்தச் சண்டாளத் துரோகிகளோடு சம்பந்தம் வைத்துக் கொள்ளுகிற நன் மனத்தவர்களும் கெட்டுப் பாழாகிவிடும் ஆபத்து உள்ளதே என்பதை நினைந்து அதை எச்சரித்து அறிவூட்டுவதற்காகவே- 'அன்றியும் மெய்யைவிட்டுத் தவறிவிட்ட பாவிகளோடு நான் யாதொரு சம்பந்தமும் வைத்துக்கொள்ளவே

மாட்டேன்' என்ற வாசகத்தையும் பிரம்மோபதேச உறுதி மொழிப் பத்திரத்தில் சேர்த்து, அச்சேற்றி, அதைப்படிக்கச் சொல்லி சத்தியம் வாங்கினேம். பஞ்சமாபாதகத்தைக் கூடச் சொல்லாமல் இதை வலியுறுத்தி சொல்லச் சொல்லி சத்தியம் வாங்கினேம் என்ருல், மெய்யைவிட்டுத் தவறிவிட்ட பாவிகளோடு உறவு கொள்வது என்ன சண்டாளத்தனமானது என்பதை இப்ப னினைத்துப்பாருங்கள். தவறிவிட்ட என்ருல் செத்துப் பிணமாகிவிட்ட என்றுதானே அர்த்தம்.

இந்த சத்திய வரம்பின் உச்சத்தினைத் திட்டமாக அறிந்து பரிசுத்தத்தில் னம் சபை, காபந்து கட்டுமானத்துடன், திருப்பியருள் இது.

94

ஆண்டவர்கள்:- னவனீதம் என்றதும் புது வெண்ணெய் என்ற எண்ணந்தான் எல்லோருக்கும் வரும். ஆனல் அதற்கு மெய் அர்த்தம் வேருென்றிருக்கிறது. அனீதத்தில், அழிவை னோக்கி வேகமாய்ப் பாய்ந்து செல்லுகின்ற னவத்துவாரங்களாகிய ஒன்பது வாசல்களையும் உட்தாளிட்டு, அவற்றை மெய்னெறி னீதத்தின்பால்த் திருப்பி ஆக்கும் தவோன்னதச் செயலே னவனீதம். அச்செயல் கைவரவானவரே னவனீத கிருஷ்ணன்.

சபையோர்:- அகமிய தவச்செயலைக் குறிக்கும் இந்த மெய் அர்த்தம் எவர் னினைவுக்கும் எட்டப்படாதது தெய்வமே! என்று உள்ளம் உருகி சன்னிதியில் விண்ணப்பித்தபின் - பாசுபதத்தவக்கோலப்பா (ஆண்டவர்கள் மான்மியம் - பக்கம் 223)ல் வரும் னீதனெறி தவ ஏற்றத்தை விரித்து, ஓதப் பெற்றுள்ள வரிகளாகிய

முத்திமே டேறியுத் ரதிசையில்- உத் திரதிசையில்
சித்திவி ளாகக்கு கையுங்கண்டு

சித்திவி ளாகக்கு கையிலேறி- கு கையிலேறி
முத்திவி ருட்சத்த டினிழலில்
சுத்தம்வ டித்துத்தெ ளித்தெடுத்த- தெ ளித்தெடுத்த
ஒத்தைம னப்படைத் தூன்றினின்றார்
ஊன்றிஉ ரத்தொரு காலில்னின்றார்- காலில்னின்றார்
ஓரைந்தும் ஞன்குமுள்த் தாளஇட்டுத்
தாளிட்டு மேமாடி தான்திறக்க- தான்திறக்கத்
தன்னிக ரற்றத வத்துறைந்நார்
காரியம் விறிட்டெ ழுந்நவத்தால்- எ ழுந்நவத்தால்
காமக்கு ரோதர்தா யாதியெல்லாம்
னீறியி டிந்நுபொ டிபடவே- பொ டிபடவே
னின்றனி லைபெய ராதுனின்றார்
மேருகி ரித்தவம் பூண்டவரே- பூண்டவரே
மேதினி மக்கட்கி ரங்கிவந்நார்

என்பதைப் பாடித் தோத்தரித்து மகிழ்ச்சி பெருக னின்றார்கள்.

95

ஆண்டவர்கள்:- இந்தப் பூமியானது தங்கம் வெள்ளி முதலிய உலோகங்களையும் வைரம், வைடூரியம் முதலாகிய னவரத்தினங்களையும் உண்டாக்குகிறது. இன்னும் இதனிடத்தில் எந்த ஒரு வித்தைப்போட்டாலும் அதற்கு வேண்டிய ரஸ்ஸைக் கொடுத்து வளர்ப்பிக்கின்றது. இவ்வாறு கோடா கோடியான செடி கொடி புல் பூண்டு மர வகைகளை உற்பவம் செய்வித்து, மனிதன் முதலாகிய சகல ஜீவராசிகளுக்கும் வேண்டிய வேறுவேறு காரசார உணவுக்கோடி சங்கங்களை காலகாலம் அளந்து கொண்டிருக்கிறது. இந்த உன்னத வளம்பெற்ற பூமாதேவியினிடத்தில்-பரிசுத்தஜீவப் பிரமாணமானவர்களை அடக்கம் செய்தால், அவர்கள் உடல், அழியாத னித்திய உலகிற்கான பொன் உடலாக விளைவேற்றம் பெறுவதற்குரிய, ரஸ்துக்களை ஊட்டி வளர்ப்பிக்கின்றது.

ஆனால் அதே மண்ணில் ஜீவவித்து சிதறிக் கசப்பு நீட்டு பிணநாற்ற ஜலம் வெளியாகிச் செத்த பாவியைப் புதைத்தால், அவன் தேகம் அழுகி இத்துப் போவதால், உருவில்லாமல் மண்ணோடு மண்ணாகும்படி ஆக்கிவிடுகிறது. அப்படி அழிந்து மண்ணாகும் பாவி- 200 அடி நீளம், 200 அடி அகலம், 200 அடி ஆழமுடைய பூமியை நாறடித்துக் கெடுத்துவிடுகிறான். மேற் சொன்னபடி அவன் உடல் மண்ணோடு மண்ணாகப் போவதற்குள் கொடிய நெருப்பால் தகிக்கப்படும் நெடுநாள் வேதனையை அனுபவிக்கிறான். அவன் உடலில் உள்ள மாமிச பாகம் முதலில் சுலபமாக அழிந்துவிடும். ஆனால் அவன் தேகத்திலுள்ள கோடிக்கணக்கான சிறிய பெரிய நரம்புகள் லேசில் அழிவதில்லை. கடைசி நரம்பு இத்து மடியும்வரை கொடிய அக்னியில் அவன் வேகும் வாதையை அனுபவித்தே தீரவேணும். இவ்வாறான சகிக்கொணா வேதனையில் நெடுங்காலம் நீடித்து அவன் துன்பப்படுவதைக்கண்டு இரக்கமுற்றே, பாவியின் பிணத்தை நெருப்பிலிட்டுக் கொளுத்துவது புண்ணியம் என்ற தேவ சட்டத்தை வேத வியாச பகவான் எடுத்து வைத்தார். அவ்வாறு அவன் தகனம் செய்யப்படுவதால், நரம்புகள் நைந்துபோகும்வரை மண்ணில் வேகுவதால் ஏற்படும் நெடிய அவஸ்தை ஒரு சில மணிநேரத்தில் அனுபவித்துத் தீர்ந்துவிடுகிறது. அதோடு கூட அவனால் நாறடிக்கப்பட்டுக் கெடும் 200கன அடி பூமியும் கெடாமல் தப்பிக்கிறது. பாவியைக் கொளுத்தப்படவேண்டும் என்ற சட்டத்தை வேதவியாசர், இப்பாரத பூமியில் எடுத்து வைக்காமலிருந்தால், நம் புண்ணிய பூமியாகிய இத் தெய்வ பூமி விரைவில் கெட்டு நாறிப்போயிருக்கும். பிறகு அதைச் சுத்திகரிக்க, பிரளயத்தை வெகு பக்கத்தில் கொண்டுவர நேர்ந்திருக்கும். மலைகளையும் கடல்களையும் பாரப்பெரிய மரங்களையும் கோடாகோடியான செடி கொடிகளையும் எண்ணற்ற ஜீவராசிகளையும் தூக்கிச் சுமந்து சுழன்று வரும்

இந்தப் பூமிக்கு மனிதனின் இந்தப் பவப்பாரமே சுமையாகத் தோன்றுகிறது. இந்த சத்திய நடைமுறைகளை அறியாதவர்கள், 'செத்தவர்கள் எல்லோரையும் நெருப்பில் போட்டுக் கொளுத்துவது புண்ணியம்' என்று செய்ய ஆரம்பித்து, சைவ வைணவ புத்தமக்களிடை பரவி மாற்றமுடியாத ஏற்றத்தில் வலுத்து நிலைத்துவிட்டது. இன்னொரு பக்கம், கிறிஸ்துவ இஸ்லாமிய மக்கள், பரிசுத்த ஜீவப்பிரயாணர்களுக்கு செய்யவேண்டிய நடைமுறையை, செத்த பாவிகள் எல்லோருக்கும் செய்து பூமியை நாறடித்து வருகிறார்கள்.

மேலே விவரித்து வெளியாக்கிய பார ரகசியங்களை நாம் எடுத்துச் சொல்லாவிட்டால், நீங்களாக யூகித்து எந்தக் காலத்திலாவது அறிய முடியுமா? முடியாது. தெய்வ நீதிவரன் முறைச் செயல்களில் வைத்து இவை கட்டாயம் தெரிந்துகொள்ள வேண்டிய அதி முக்கியமான ரகசிய விடிவுகள் அல்லவா? ஆம்.

எப்படியோ நீங்கள் இங்கு வந்து இந்த மெய்வழிக்குள் ஆனதால், இறைவன் செய் நன்றியாகிய எட்டாப் பெருங்கடனை, ஏழாம் பிறப்புடலம் எடுக்க வைத்துத், தீர்க்கதோடின்றி, உண்ட கலத்தை நாறடிப்பதுபோல் பூமியை 200கன அடி அளவிற்கு கெடுத்து நாறடிக்க நின்ற பாவத்தையும் உங்கள்பால் நிவர்த்திக்கப் பெற்றது.

இறைவன் மனிதனை அழியாத நித்திய வஸ்துவித்தினைக்கொண்டு படைத்துள்ளான். இவ்வாறு மகா உன்னதத்தில் உண்டாக்கப்பெற்ற இந்த அறிவு உடல் இருக்கும்போதே எமனனுகா சத்திய பரிசுத்தவானாக ஒருவன்– இந்த எல்லையை அடைந்து ஆகிக்கொள்ளவில்லையென்றால்– அதே நித்திய வித்து கடைசியில் கெட்டு மாறி சகிக்கொணாத கொடிய நாற்ற அவஸ்தையில் நித்திய வித்தாக ஆகிவிடுகிறது. வர இருக்கிற நெடுங்கால நரக வாழ்க்கைத்

குரிய தூலத்திற்கும் அதுவே முதல் முளையாக னின்று கொள்ளுகிறது. இதை அறிவித்து அறிந்து, தப்பிப்பது என்பது கோடியில் ஒருவருக்குத்தான் கிட்டும்.

பெரியோர்கள் தங்கள் கரத்தில் வைத்துள்ள தெய்வ முதலாகிய பிரணவத்தை ஒருவனுக்குக் கட்டாயப்படுத்திக் கொடுக்கமுடியாதே. தானே விரும்பி வந்து இணங்கிப் பழகி பணிந்து கேட்டு காத்துக்கிடக்கின்றவனுக்கு அளிக்கப்பெறுகின்ற பொருளாச்சே அது. அவ்வாறுன ஆத்திரம் பொதுவாக மக்களிடம் ஏது? ஆகவே னித்திய உடலைக் கைபெறுத பாவிகள்தானே எங்கும் அதிகமாய் இருப்பார்கள்? அவ்வளவு பேர்களையும் இது காலர்வரை மண்ணில் புதைத்திருந்நால், இந்தப் பாரத பூமி எந்த அதோகதியை அடைந்திருக்கும்? வேத வியாசபகவான் அதைத் தடுத்து இத்தேவ பூமியைக் காப்பாற்றினுர் என்பது எம் கையகத்தான உங்களுக்கல்லாது வேறு எவருக்காவது அறிய வருமா? வரவே வராது.

96

ஆண்டவர்கள்:- பிரசவம் (பிறந்நது சவர்)- சவம் என்ற அந்த அவப்பெயரை மாற்ற, மனுவாய்ப் பிறந்நவனுக்கு, ஒரு தெய்வ னுமம் வைக்கிருர்கள். தங்கராஜ் என்ற ஒரு பெயர் வைக்கப்பெற்ருல், அந்த னுமத்திற்குரிய தெய்வப் பொருளைத் தன்னகத்தில் தேடி அடையட்டும் என்பதுவே பெரியோர்களின் னேக்கர்- ஆனுல் என்ன பாவமோ, சிலர் தங்கராஜ் னுடார், அதாவது தங்கராஜை னுடாதவர், என்று பொருள்படும்படி பெயரை மாற்றி வைத்துக்கொள்கிருர்கள்.

அந்நத் தெய்வமுதலை னுடார், அதாவது னுடாதவர், என்பதற்குப்பதிலாக அந்நத் தெய்வ னுட்டிற்குரியவர், அந்ந னுட்டைச் சேர்ந்நவர் என்று பொருள் விளங்க தங்கராஜ் னுட்டார் என்ற னுமம் வைத்துக் கொள்ளக்கூடாதா!

பாவத்தைனுடார், தீமையை னுடார் என்ற பெயர்கள் வைத்துக்கொள்ளலாம். ஆனுல் சிவசாமினுடார், இரத்தின சபாபதி னுடார் என்ற னுமங்களை வைத்துக் கொள்ளலாமா? வைத்துக்கொள்ளக்கூடாது. இதைப்பற்றி அவர்கள் அறிவே யோசித்து ஒரு முடிவுக்கு வர னும் விட்டுவிடுகிறோம்.

97

சிரிக்க வேண்டியதிற்கு சிரிக்கும் குணம் ஆண்களுக்கு 36 வயது வரை இருக்கும். அந்த வயதிற்குமேல், இந்த அழிந்துபோகிற உலகப் பொருள்களின் மேல் வைக்கும் பற்ருகிய அழுத்தமான பாரம், ஜீவன் மேல் கனமாக ஏறி உட்கார்ந்து கொள்வதால், அவர்களுக்குச் சிரிப்பு லேசில் வருவதில்லை.

ஆனுல் பெண்கள் அப்படியல்ல. கிட்டத்தட்ட அறுவது வயது வரை கூட, அவர்களுக்கு சிரிக்க வேண்டியதிற்குச் சிரிக்கும் குணம் இருக்கும்.

98

தீமையே னிறைந்த ஒருவனுக்கு னன்மை செய்தால் தீமைதான் வரும். ஆகவே தீமைக்குத் தீமை செய்யலாமா? அதுவும் செய்யக்கூடாது. தீமை செய்தவனுக்குத் தீமை செய்தால் தொடர்ந்து னெடுகத் தீமையே அனுபவிக்க வரும். ஆகவே அத் தீயவனின் பார்வைகூடப் படாமல் விலகித் தப்பித்துக்கொள்வதே உத்தமம்.

99

தன் என்ற ஜீவகுகையாகிய ஆலயத்திற்குள் கூட்டிக் கொண்டுபோய், அங்கு குடி ஏற்றி வைக்கின்ற ஒரு தெய்வ ஆசானின் னேக்கிற்கு இணங்கி னடத்தலே தன்னையறிந்து தவம் செய்தலாகும். அதையே அறம் செய்தல் என்று வேதங்கள் குறிப்பிடுகின்றன.

100

ஒரு டாக்ஸி டிரைவர் ஆண்டவர்களைத் தரிசிக்க வந்நார்: அவரைப் பார்த்து-

ஆண்டவர்கள்:- எங்கே வந்நிங்க?

வந்நிருந்நவர்:- பெரியோர்கள் என்று நான் கேள்விப் பட்டேன். ஆகவே உங்களைத் தரிசிக்க வந்நேன்.

ஆண்டவர்கள்:- எம்மைப் பார்க்கத்தானே வந்நிங்க?

வந்நிருந்நவர்:- ஆர்.

ஆண்டவர்கள்:- பார்க்கிறது தரிசனை என்றால்- நீங்கள் எம்மைத் தரிசனை பண்ணினிங்க. நாம் உங்களைத் தரிசனை பண்ணினோம் என்று நாம் சொல்கிறோம்- அது சரிதானே? (வந்நிருந்நவர் தான் ஏதோ தவறாகப் பேசிவிட்டதாக எண்ணிப் பயந்து நிற்க)

தொடர்ந்து ஆண்டவர்கள்:- நாம் சொல்வதை நன்றாகக் கவனி. தரிசனை என்பது பார்ப்பதல்ல. அறியாத மூடர் களாகிய வேடதாரிகள் தங்கள் வயிற்றுப்பாட்டிற்கு மக்க ளறிவை இப்படிச் சொல்லிப் பாழாக்கி விட்டான்கள். 'சர்வத் தையும் படைத்தது மனிதனுக்காக. மனிதனைப் படைத்தது தன்னை வணங்க' என்ற பெரியோர்களின் வாக்கை நீ கேட்டிருப்பாயல்லவா? அதில், தன்னை வணங்க என்று கூறப்பெற்றது, தன் ஜீவனாகிய தன் கடத்துள் இருக்கிற கடவுளைச் சந்தித்து வணங்குவதே ஆகும். அவ்வாறு மெய்ப் பொருளை மெய்யாகச் சந்தித்து வணங்கும் வணக்கத்தையே 'தரிசனை' என்றார்கள். இங்கு வந்நதால் இந்த வேதரகசி யத்தை அறிந்து கொண்டாய். சரி உன் வேலைக்குப் புறப் படு. (வந்நிருந்நவர் விடை பெற்றுச் சென்றார்.)

101

(25-12-1975) சத்தியப்பிடி மூப்பர்களாகிய சபையின் ஸ்ரீவாகஸ்தர்கள் எல்லோரையும் முன் வரிசையில் வந்து அமரச்செய்து-

ஆண்டவர்கள்:- சபைக்காரர் முதல் எல்லோரும் நாம் சொல்லப்போவதை நன்றாகக் கவனியுங்கள். நீங்கள், உங்கள் பேச்சாலோ செயலாலோ யாருக்கும் எம்மை நேர்ப்பகையாக்கிவிடக்கூடாது. இதில் உங்களுக்கு மிகுந்த எச்சரிக்கை வேண்டும். ஒருவன் எவ்வளவு வஞ்சகனாக இருந்தாலும், போக்கிரியாக இருந்தாலும், சண்டாளனாக இருந்தாலும் சாவைக் கண்டதும் பயப்படுபவன்தானே. அதன் சகிக்க முடியாத கோர அமளி நெருக்குதலில் சிக்கிக்கொண்டு தவிக்கப் போகிறவன்தானே- எவர் உதவியும் வந்து எட்டித் தீண்டப்படாத அந்த அவஸ்தை நேரத்தில், எமனது கையில் மாட்டிக்கொண்டு விழிக்கும் அந்தக் கொடிய சந்நிப்பில், அவன் எம்மை உதவிக்காகத் தேடி, கட்டாயம் நினைப்பான். அப்படி நினைக்கும்போது, 'நாம் அவனுக்குப் பகையில்லை' என்ற எண்ணம் அவனுக்கு வரும்படி இங்கே சபையில் நிர்வாகஸ்தர்களாகிய உங்கள் நடைமுறைப் பேச்சு செயல்கள் எல்லாம் இருக்க வேண்டும். அவனும் உங்களைப்போல் மனித உருத்தானே- இத் தேகத்தில் இருக்கும்போது தவறு செய்வது யாருக்கும் இயல்புதானே- சாவாகிய, மீட்பே இல்லாத நெடுங்கால அவஸ்தையில் அவன் போய்ச் சிக்கிக் கொள்ளலாமா- சிக்கிக் கொள்ளவே கூடாது என்ற இரக்கம் உங்கள் யாவருக்கும் வரவேண்டும். எமது உள்ளம் எந்த ஒரு மனுவும் அப்படிச் சிக்கிக் கொள்வதற்கு சம்மதிக்கவே சம்மதிக்காது. ஆகவே உஜார். இதை மறந்து விட மாட்டீர்களே?

நிர்வாகஸ்தர்கள்:- (கண்களில் நீர்பெருக) இந்தப் பேரிரக்க பெருங்கருணை ஜீவரக்ஷிப்புக்கான உத்தரவை ஒரு போதும் நாங்கள் மறந்து விடமாட்டோம்.

102

ஆண்டவர்கள்:- ஒரு துணி மிக அழுக்காக இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அந்த அழுக்கைப்போக்க

'அழுக்கே போ, அழுக்கே போ' என்று உருப்போட்டால் அழுக்குப்போகுமா? போகாது. தண்ணீரில் நனைத்து, ஊற வைத்துத் துவைத்தால்தான் போகும். அதேபோலத்தான், இந்த ஜீவ வழிபாடும். செய்ய வேண்டியதை முறையாகச் செய்தால்தான் அதன் பலன் கைவரவாகும். மந்திரத்தை உருப்போடுவதால் அது வந்து விடாது.

விளக்கை ஏற்றிவைத்து 'அருட்பெருஞ்ஜோதி அருட் பெருஞ்ஜோதி' என்று கத்திக்கதறினால் கடைசியில் என்ன வரும்? அவஸ்தையாகிய சாவுதான் வரும். தனிப்பெருங் கருணைத் திருமேனிப் பிரானைத்தேடி நேருக்குநேர் சந்தித்து, அவர்கள் தயவால் அருட்பெரும்ஜோதியைத் தனது இதய லோகத்தில் தரிசிக்கப் பெற்றாலல்லவோ கூற்றாகிய எமன் அஞ்சி விலகுவான். நமது எல்லைக்கு வெளியே, இந்த எச்சரிப்பு மெய் வார்த்தை ஏது?

103

வேத வேதிய னாதபு ராதன
பாத மேவும்ப ருவமெய்ச் சாலையில்
சூது வாதுங்கை சூழ்ந்தக லியுகம்
ஓதி யோடியு கர்புரண் டானதே என்ற

காலந்நாட்டிய காரணப்பா- முதல் செய்யுள் படிக்கப்பெற்ற போது.

ஆண்டவர்கள்:- ஆதிக் கிரேதாயுகம் எவ்வளவோ காலம் ஓடிக் கடைசியில் அதன் செயல் மாறி அழிந்து போகவும் திரேதாயுகம் உதயமாகிற்று. அதுவும் அவ்வாறே பல காலம் ஓடிஓடி அதன் தன்மை மாறி மறையவும் துவாபர யுகம் பிறந்தது. அந்தத் துவாபரயுகமும் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஓடிஓடித் தன் செயலிழந்து அழியவும் கலியுகம் பிறந்தது. கலியுகத்திற்கு வயது ஐயாயிரமேதான் என்று மதிமகத்துக்கள் கண்டு விண்டெழுதிவைத்த கால வயதும் இப்போது தாண்டிவிட்டது.

கலி என்பது பாவம். எமனுடைய கையில் சிக்கி கசப்புத் திட்டு பிண நாற்றஜலம் வெளியாகிச் சாவதுவே அந்தப் பாவம். அந்தப் பாவகரச் சாவு நமது எல்லையில் இல்லையே! ஆகவே இங்கு கலியுகம் முடிந்துவிட்டது. இனி யாரும் எதிர் பாராத ஒரு நாள் ஒரு இரவில், அங்குள்ள கலிப்பவகரப் பூமியும் தடால் என்று இடிந்து நொருங்கிப் பாழாகும். அந்த நாள் வெகு தூரத்திலில்லை. ஆகவே சத்திய சுத்த உத்தமர்மேரு புத்த பகவானின் தீர்க்க தரிசனத்தில் (தீர்க்கதரிசனங்கள்-65 ஆம் பக்கம்) சொல்லியுள்ளதை நன்றாகக் கவனித்துப் படித்து அதன்படி நடங்கோ-காலம் வெகு சமீபமாகிவிட்டது-ஆகவே மிகமிக சாக்கிரதையுடன் நடங்கோ.

ஆதி கிரேதாயுகமாகிய பரிசுத்த முதல் யுகம் அழிந்து போனதற்குக் காரணம், கொஞ்சம் கொஞ்சமாகப் பொய்யானது வல்லபங்கொண்டு வளர ஆரம்பித்து அதை அழித்துவிட்டதுதான். இனி வரநிற்பது மெய்க் கிரேதாயுகம். எக்கோடி காலத்திற்கும் பொய் திவலைகூட முளைகண்டு எழ முடியாத சத்திய நித்திய யுகமாக அது ஸ்தாபிக்கப்பெற்று விளங்கும் என்பது மெய்.

104

(28-12-1975) உருமகாலதவம் முடிந்து ஆசனத்தில் வந்து அமர்ந்ததும்

ஆண்டவர்கள்:- அங்கேபோய்த் திரைக்குள் தனித்து இருந்துதான் நம் தவம் செய்யவேண்டும் என்பது.இப்போது மாறிவிட்டது. இனி சதாகாலமும் நம் இருப்பது அதே தவ நிலைப்பில்தான். அகில உலகமும் திரண்டு வந்தாலும், இணங்கிக்கொண்ட அவ்வளவு மனித தலைகளுக்கும், எமனுகா பரிசுத்தத்தை அளக்கும் தவ வல்லபம் நேரத்துக்கு நேரம் குமுறிக் குமுறி எமது உள்ளமாகிய கஜானவில் ஏறிய வண்ணம் இருக்கிறது. இதை நம் இன்று வெளியாக்கா

விட்டால் உங்களுக்கு எப்பவாவது தெரிய வருமா? தெரிய வராது.

105

ஆண்டவர்கள்:- ஒரு பெண் குழந்தையை எடுத்து அதை னும் எப்படியும் ஆணாக ஆக்கிவிடவேண்டும் என்று மாருத ஒருமுக முயற்சிகொண்டு வளர்த்தால், அது வளர வளர மேலும் மேலும் திட்டமான அடையாளத்துடனே பெண்ணாக ஆகுமே ஒழிய, ஆணாகுவது என்பது எப்பவாவது எங்கேயாவதுண்டா? இல்லவே இல்லை. அதுபோலவே உலகம் முழுவதிலும் செய்துவருகிற வழிபாடுகளாகிய பொய்யை, எப்படியும் மெய்யாக ஆக்கியேவிடவேண்டும் என்று போற்றிப் புகழ்ந்து ஆஸ்ரயித்து எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரு முகமாகப் பாடுபட்டு வளர்த்தாலும், அது வளர வளர எப்பவும் மாற்றவே முடியாத கனத்த பொய்யாகுமே ஒழிய, ஒருக்காலும் அது மெய்யாக ஆகவே ஆகாது. அப்படிப் பொய்யைப் பிடித்து மெய்யான புகழ்தரப் போகிறது என்று நம்பி காலகாலம் பாடுபட்டவன் செத்தால், எல்லோரும் பார்க்கப் பாவி என்று காட்டி விடுகின்ற 'கசப்பு ஜலம் தீட்டுடனே கனத்து பெரு னற்றமுடன் விறைத்து விறுவிறுத்து வேறுபட்டுப்போன கோரமுகம் காணப்பட்டு, எரிநரகம் வலுவாய் வந்து பிடித்துவிட்ட அடையாளம், அதில் பகிரங்கமாக வந்துவிடுமே! அவன் கையில் இருந்த பலன் இன்னதுதான் என்று ப்ரட்டவர்த்தனமாக அது வெளியே காட்டி விடுமே! பிறகு மீட்பு ஏது?

106

இல்லை யில்லைய கிலத்தில் லாதது
வல்ல வல்லப மீறியெ தார்த்தமொன்
றுள்ள துள்ளதொன் றூர்க்குங்விட் டாதது
எல்லை மெய்வழிச் சாலைஇ சைவதே

என்று காலந்நாட்டிய காரணப்பாவில் (ஆதிமெய் உதய பூரணர்- பக்கம் 321ல்) வருகின்ற செய்யுள் சன்னிதியில் படிக்கப் பெற்றபோது-

ஆண்டவர்கள்:- இந்நச் செய்யுளில் 'வல்ல வல்லப மீறி எதார்த்தம் ஒன்று உள்ளது. அது யாருக்கும் கிட்டாதது' என்று சொல்லி வைத்துள்ளோமே, அது இன்னதென்று இப்பப் பேசப் போகிறோம்- கேளுங்கள்.

வல்ல வல்லபம்:- எவருடைய வல்லபத்தையும் அடக்கி மிதித்து ஏறுகின்ற அதிவல்லபமே எமனுடைய வல்லபம்.

மீறி எதார்த்தம் ஒன்று உள்ளது:- அந்ந வல்லபத்தை மீறி ஏறி, இல்லாமல் ஆக்கி அரசு ஓச்சுகின்ற எதார்த்த தெய்வ பீடம் ஒன்று இந்த உத்தியோவனக் கானகத்தில் திருமேனி தாங்கி வந்துள்ளது. நம் இதை எடுத்துச் சொல்ல வில்லை என்றால் இந்நப் பொருள் உங்கள் எவர் நினைவுக் காவது எட்டுமா? எட்டவே எட்டாது. 'இல்லை இல்லை அகிலத் தில்லாதது' என்று பாடினீர்களே- இனி அதோடு, முன் எப்பவும் இல்லாதது, இனிமேல் எந்நக் காலத்திலும் இருக்கவும் முடியாதது என்று சேர்த்துப் பாடப் பழகிக் கொள்ளுங்கள்.

107

உய்யாவீ டேற்ற வந்ந
உளபால மதங்க ளெல்லாம்
செய்தொழில் பலியா தாகித்
திரண்டொன்றாய்க் கூடிப் பேசி
வெய்யாக மாந்த ரெல்லாம்
வாழ்கவே வேணு மென்று
மெய்வழிச் சாலை வந்து
விளங்கினின் றோங்கு தூளே.

(ஆதிமெய் உதய பூரணம்- ஐவணத்தளிர்- பக்கம் 299)

என்ற செய்யுள் ஓதப்பெற்றபோது-

ஆண்டவர்கள்:- மதங்களெல்லாம் எப்போது ஒன்று கூடிப் பேசின், எங்கே கூடிப் பேசின? சொல்லுங்க பார்க்கலாம்.

சபையோர்:- தெரியவில்லை

ஆண்டவர்கள்:- மதமும் மதமும் எப்பவாவது கூடிப் பேசுமா? பேசாது- இருப்பினும் அவை கூடிப்பேசி அளக்கின்ற முடிவாகிய பலனை, நீங்கள் இங்கே சாலை வாழ்வில் அனுபவிக்கிறீர்கள். ஒருவர், காலகாலம் அரும்பாடுபட்டு, ஒவ்வொரு மதமாய் எல்லா மதங்களையும் கற்றுத் தேர்ந்து பழகி, அவைகளின் முடிந்த முடிவாகிய பலனை ஒரு சிமிழில் அடக்கி- எடுத்துக்கொண்டு வந்து உங்கள் எல்லோருக்கும் இது னேரம் வழ்ங்கிக்கொண்டிருப்பதால் மேற்சொன்ன மெய்ச்செயல் உங்களுக்கு வெகு எளிமையாகக் கிட்டும்படி வாய்த்தது.

'மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம்- கசப்பு தீட்டு பிணனுற்ற ஜலம் வெளியாகி யுகங்கோடி கால னரக வேதனைக்குப் போகாமல் அதை மாற்றி பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர் யுகத்திலும் உண்டான எல்லா சாதி மத வேதங்களும் வந்தன' என்பதைச் செயல் னிரூபணையோடு பிரத்தியக்ஷத்தில் கண்டு அனுபவித்து இன்புறுகின்ற பெரும்பேருனது மகா ஆச்சரியம் பிறங்க இக் கலிக்கடையில் இங்குதானே னிகழ்ந்து கொண்டிருக்கிறது.

மதங்களெல்லாம் ஒன்று கூடிப்பேசி னம் சாலை எல்லைக்கு வந்து, இதுவரை யாரும் கண்டும் கேட்டுமிராத அதிகாரண வல்லபத்துடன் விளங்கி னிற்கிற பெருக்காதிக்கச் செயல் இன்னதென்று இப்ப உங்களுக்குத் தெரிகிறதல்லவா? ஆம். இந்த மெய்யில் உங்கள் அறிவு வளர வளர, இந்த அதிசய அகமிய உண்மைகளை ஒவ்வொன்றாய் உங்களுக்கு வெளியாக்கி வருகிறோம்.

ச்பையோர்:-

தன்தன்மதத் துட்பொருள்த டையிலா னந்தத்துடன்
வந்நெடுத்து ரைக்கும்வள்ளல் வாசத்தலம் சாலேயடி
சருவம தங்களெலாம் சார்ந்துனின்று சாலேயிலே
அறிந்து மகிழுகின்ற தாச்சரியம் பூங்கிளியே
எல்லாம தங்களுமே இலங்குதிருச் சாலேயிலே
வல்லாள ரென்றொருவர் வந்துவுற்ருர் பூங்கிளியே

என்று பூங்கிளிக் கண்ணியில் வரும் கண்ணிகளேயும்-

உய்யெ வர்க்கும்
வையத்தும தம்முழுதுன் கையகத்த டக்கிவந்த
மா பலேவா

பொற்பகன்ற
பற்பலம தமெவைக்கும் உற்பனச்சி ரும்வலிமை
ஊட்டு தாரே

தேங்கி வந்நிங்
வேங்கியம தங்களுக்கு ஒங்கியேவி ழிப்பளித்த
ஓ குபேரா

வந்நபல
மந்நிரப்ப லனனேத்தும் தன்திடத்துள் ளாண்டபனி
மேரு பாதா

என்று ஆடலங்கன்னியில் வரும் பாக்களேயும் அன்பு ததும்பப் பாடித் தோத்தரித்து கண்ணினீர் வார னின்ருர்கள்.

108

ஆண்டவர்கள்:- ஞானம் என்பது இன்ன செயல் என்று இன்று ஞம் வெளியாக்கப்போகிருேம். ஒரு சாமானே உறை போட்டு மூடியிருந்நால் அது, என்ன சாமான், என்ன வர்ணம், என்னத்திற்காகும், என்ன மதிப்புடையது என்று விளக்கமாகக் கண்டறிய முடியுமா? முடியாது. அதை மூடி யிருக்கும் மறைப்பைக் கிழித்து னீக்கிவிட்டு அது இன்ன

தென்று அதைப்பற்றி னன்ருக அறிந்துள்ளவர்கள் எடுத்துக் காட்டிப் பேசினுல்தானே, உள்ளிருக்கும் பொருளின் முழு விவரமும் தெரியும். அதேபோல, ஞானம் என்ற சொல்லில் ஒரு உன்னத உள்ளமைச் செயலானது மறைத்து வைக்கப் பெற்றுள்ளது. அதை விண்டு வெளியாக்கினுல்தான் தெரியும்.

ஞானம் = ஞா + னம், அதாவது ஞன், ஞம் என்று ஆகிக்கொள்வது. இதுவே வேதத்தின் உட்பொருள். 'ஞன், ஞன்' என்று உன்னுள் இருந்து சதா சொல்லிக்கொண்டிருக்கும் வஸ்து, 'வந்த வேதமாக'த் திருவுருத்தாங்கி, முன்னிலைக் குருவாக வெளியாகி னின்று தன்னை அறிவிக்க, அதாவது உன்னுள் அறியப்படாததாய் இருக்கும் ஆத்மாவே குருவுருவாகவந்து தன்னை அறிவிக்க, உன்னை னீ அறிகிருய். அதோடு காலமெல்லாம் ஒட்டிப் பழகி அறிவு விளைவேற்றம் ஏற ஏற, ஞன் ஞமாகுதல் கைவரவாகும். அதனுல் மெய் அறிவு சித்திக்கும்.

இதையே னம் மெய்ப்பொருள் அடைக்கலப்பாவில் (ஆதிமெய் உதய பூரணம்- தெய்வத்தேடு கூடகம்- பக்கம் 179ல்)

ஞட்டந்நேட் டமாட்டம் அத்தனையும்
ஞவக்ம் பாவகம் உன்னுடையா

உள்ளும்புறம்பெலா முன்னதையா
ஓதலும் ஓதாதும் உன்னதையா

உன்னையல் லாலென் உயிரிங்கில்லை
தன்னையறிந்தது உன்னையையா

என்று தெளிவுறக் கூறிவைத்துள்ளோம்.

கேட்டறியாத இந்த அற்புதக் கேள்வியைச் செவியில் ஏற்ற அணந்நாதி தேவர்கள்:-

முன்னூரு தங்கூர சிக்குல் மாமணி
என்னித யப்பெருமான்
குன்னெனுங் ஙன்சூல் தன்னிலறிந்நகு
ணக்கடல் மாமணிகள்
என்னையு மன்னவர் தன்னிலறிந்நுற
வென்னித யம்திறந்நே
சொன்னவ ராதிய ருட்பெருஞ் ஞோதி
செங்ஙம லம்பதமே

(ஆதிமெய் உதய பூரணம்- பூரணப் புதையல்- பக்கம் 94)

என்ற அதே செய்யலை எடுத்துப் பேசிவரும் செய்யுளை சன்னிதியில் பாடிப் பரவினார்கள்.

109

ஆண்டவர்கள்:- இந்நத் தெய்வமுதல் எளிதாகவா எம் கைக்கு வந்நது? இல்லையே! குடல் கருக, எலும்பு இளக, சுவாசம் திட்டுமுட்டடித்துத் தடுமாற, இனி செத்தே போவோம் என்ற எல்லைவரை வந்நும் மாறாமல், உணையாது கணையாது சணையாது ஊணி னின்ற பின்னரே, சுவாசம் உள் ஒடுங்ஙி அடங்ங ஆரம்பித்தது. அந்நத் தவர்திக்கம் மேலும் மேலும் வலுத்து விளைவேற, வெளிச்சக்காலை எட்டினோம். இவ்வாறாகிய தன்னிகரற்ற னெடுங்ஙாலத் தவப்பாட்டினால் சகல தேவ சன்னதங்ஙளும் எமது கைவரப் பெற்றோம்.

ஆரம்பகாலத்தில் ஆறுமாத காலத் தவப்பாட்டினால் விளையும் பலன், இங்ஙு ஊறல் மலை வனாந்திரக் கானகத்திற்கு வந்நபின், ஞன்ஙு மாத காலத்திலேயே கிட்ட ஆரம்பித்தது. அவ்வாறு கிட்டப் பெற்றபோது எம் உள்ளத்தில் ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும், உற்சாகப் பூரிப்பிற்கும் ஒரு எல்லையளவே இல்லை.

னித்திய யுக உற்பவத்திற்கான சுவேதவராக கல்ப தவமே இப்போது னடக்கும் உருமகால தவம். சதுர்யுகம்

காணாத எம்முடைய இந்நத் தவ விளைவிற்கென்றே உரும காலனேரம், ஊழி ஊழி காலமாக ஒதுக்கி வைக்கப்பெற்றி ருந்தது. முன் வந்த மகத்துக்கள் எவரும் அந்த னேரத்தில் தவத்திலிருப்பதில்லை. ஆனால் னாம், அந்த வேளையில் யுகத் தவசில் ஏறினின்று பிருக்த யோகத்தைக் கைவரப்பெற்றோம்.

சபையோர்:-

னேரமே இரவல்ல பகலுமல்ல
னிக்ஷயிக்க சூரிதான் சந்நிப்பல்ல
கோரவே பதியவரும் இதனைப்போலக்
குண்டலியை எட்டெட்டுத் திக்கிலோட்ட
சாரமே யிதன் உச்சி வேளை தன்னில்
சாரங்க னேரினில் தரிசனத்தை
ஆரவே பார்த்துமனம் ஆனந்தத்தில்
ஆதரிக்கும் கருணையர் செயலைச்சொன்னேன்

என்று காகபுசுண்டர் பிரான் உருமகால தவத்தின் சிறப் பினைப்பற்றி அருளிச் செய்துள்ள செய்யுளைப் படித்தார்கள்.

தொடர்ந்து ஆண்டவர்கள்:- முன்னே ஆறுமாதத் தவப் பாட்டில் வருகிற வரவு, இப்போது பிருக்தயோகப் பலனால், விரல்விட்டு இருபது எண்ணுகிற னேரத்தில் அதே தவ வினை வேறிக் கைவரவாகிறது. அந்நத் தவ னிதியக் குவியலின் எல்லைகடந்த திமுதிமுப்பும் பிரம்மாண்ட னிறைவுப் பெருக்கும் எவர் எண்ணத்திற்கும் உட்பட்டு அடங்கினது அல்லவே அல்ல! இந்த யுகத்தவப் பலன் யாருக்காக இப்படிச் சேமித் துத் தன் கிரயம் செய்யப்பெற்று வருகிறது? எமது அனந்நாதி தேவப் பெருங்குல மக்களாகிய உங்களுக்குத்தானே! முன் சென்ற யுகங்கள் காணாத இந்த அரிய மெய்ஞ்ஞானம், னீங் கள் தரிசிக்கும்படியான ஒரு உருவுக்குள் அடங்கி னின்று உங்களோடு பேசிப்பாடி அறிவாகாரச் செழிப்பை இரவு பகல் ஓயாது உங்களுக்கு அளந்து கொண்டிருக்கிறதே, இது என்ன தேவ வசந்தம்!

தெரியாது தள்ளியதே முனைத்ததய்யா
　　தேசிகரே கண்டறிந்து ஊடியக்கூர்
புரியாது புரியவோர் காலமுண்டு
　　பூதலத்தில் புகரவன் சுவாலையொட்டி
அறியாது அறியவே செய்யும்செய்தி
　　அவனிதனில் மாறுதலோர் லக்ஷணம்தான்
துரியாதீத மெனும் சங்கல்பத்தை
　　தூலமதில் காண்பதுவே னமதிருப்பு

என்ற காலங்கடந்த வசந்நரிஷி திரிநேத்திர புசுண்டர் பிரானின் தீர்க்கதரிசனச் செய்யுள் சபையில் படித்து வரும்போது—

ஆண்டவர்கள்:- இப்போது நீங்கள் படித்த பாட்டின் முதல்ச் சீர்களை மட்டும் சொல்லுங்கள்.

சபையோர்:- தெரியாது புரியாது அறியாது துரியாதீதம்.

ஆண்டவர்கள்:- முக்காலங்களும் கண்ட மெய்ஞ்ஞானிகளுக்கே தெரியாது, புரியாது, அறியமுடியாது என்றால் பின் அது எது? அதுதான் துரியாதீதம் எனும் சங்கல்பம். அந்த சங்கல்பத்தை அதாவது மனோ நிச்சயத்தை, உள்ளமை நிர்ணயத்தை- 'தூலமதில் காண்பதுவே னமதிருப்பு' என்கிறார்களே. அவ்வாறு இதுபோது தூலமதில் கண்ணேர் தரிசிப்பது யார்?

அனந்நாதி தேவர்கள்:- (மட்டற்ற மகிழ்ச்சியினால் கண்ணீர் பெருக) 'நாங்கள் தான், கற்பகப் பனிங்கை- கற்பகத்தருவை பிரத்தியக்ஷத்தில் தரிசித்துப் பலன் பேறு பெற்றவர்கள்' என்று ஆரவாரிக்க—

தொடர்ந்து ஆண்டவர்கள்:- உலகத்தில் மக்கள் தேடுகிற செல்வம், அறிவு, கீர்த்தி யாவும் நாளுக்கு நாள், போகப் போக மட்டமாகித் தாழ்ந்து கொண்டேபோகும். ஆனால்

தனிச்செயற்பதியாகிய இந்த உத்தியோவனச் சாலையின் விளைவேற்ற மதிநிதியானது ஞழியோர் மேனி கடிகையோர் வண்ணமாக மேலும் மேலும் உன்னதத்தில் ஏறி வளர்ந்து கொண்டே வருகிறது.

நீங்கள் தரிசித்தபடி எழுந்தருளி வந்துள்ள கற்பகப் பளிங்கானது இயற்றி வரும் பிருக்தயோகத்திற்கு- துரியா தீதம், முதற்காப்பாக இருக்கிறது. இவ்வளவு நெடுங்காலத் திற்கு இப் பூமண்டலம் கண்டறியாத, வருகா வருகையாகிய 'புதுமார்க்கம்' இப்போது வந்திருக்கிறது. 'பூதலத்தில் புகர வன் சுவாலை'யாக அதாவது ஞைதமது விளைந்த ஒரு சன் மார்க்க ஞைதரின் அருட்பிரகாச விரிப்பாக அது, இக் கான கத்தில் வாடாத வாழ்வினுக்குரிய யுக வித்துக்களை எடுக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கிறது. இது என்ன காலம் இறைவன் திருவருள்- பன்னகாலம் பார்த்தனம் கேட்டிலை!

111

ஆண்டவர்கள்:- திருக்குறளை ஆராய்ச்சி செய்கிறேன் என்று ஒருவன் சொல்வது- விவசாயமே இன்னதென்று தெரியாதவன், நிலத்திலுள்ள மண்ணைக் கொஞ்சம் கொஞ்சமாக அள்ளிக் கையிலெடுத்து, ஒவ்வொரு மண்ணைகப் பிரித்து எண்ணிப்பார்த்து, அந்த நிலத்தில் எவ்வளவு மண் இருக் கிறது என்று ஆராயப் பாடுபடுவது போலிருக்கிறது. ஆனால் நிஜமாகப் பலனடைய நிற்கும் ஒரு விவசாயியோ, அதே நிலத்தைத் உழுது பண்படுத்தி, அதன் முழுப்பலனைப்பெற முற்படுவான். இவ்வாறாகவே மெய்யறிந்தவர்கள், ஞான சிரஞ் சீவி வளம் நிறைந்த பெட்டகமாகிய திருக்குறளை ஆராய் வதில் ஈடுபட்டுக் காலத்தை வீணாக்காமல், அதன்பால் வெகு திட்டமாகவும் அதிநுட்பமாகவும் அந்நூலின் கர்த்தர் கூறி வைத்துள்ள உயிர்ப்பயிர்க்குதவும் செயல்களைப் பின்பற்றி நடக்கவே முனைவார்கள்.

தில் ஒரு திருவுரு இருந்தால் நிச்சயமாக அது, ஆதியின் தேவத்திருமலி உருத்தானே? ஆம். இந்நெடுங்காலமாக அரூபத்தில் நின்று சர்வ வல்லமைகொண்டு, சர்வத்தையும் படைத்து ஆட்சி செய்து வந்த அதுவே உருவெடுத்து தலையுகத் தவவிளைவேறி இப்பூமிக்கு வந்தால், அதன் வல்லமை அரூபத்தில் இருந்ததைவிடக் குறைவாகவா இருக்கும்? அது செய்ய நினைத்தது எதுவாகயிருக்கட்டும், அதை, அத் தேவரூபம் பூரண வெற்றி துலங்கச் செய்து முடிக்காதா? நிச்சயம் செய்தே முடிக்கும். சர்வத்தையும் மிதித்து ஏறி அடக்கி ஆளுகிற எமனே அத்திருமேனியரின் கையடக்கமாகியிருக்கிறானே! அதற்கு நிரூபணையாக, அவர்கள் ஏற்றுக்கொண்ட தேவமக்கள், பத்து பரிசுத்த அடையாளங்களுடன் மரண சந்நிப்பில் அடக்கமாகிறார்களே! இந்த அருங்காரணச் செயல், 28 சதுர்யுகங்கள் நடந்தாகி விட்டதாக விஷ்ணு புராணம் கூறுகிறதே, அந்த அளப்பரும் நெடுங்காலத்தில் இந்தப் பூமியில் எப்போதாவது நடந்ததா? இல்லை. ஆகவே இந்தக் கலிக்கண்டயில், இந்த உத்தியோவனக் கானகத்தில், மேற்சொன்ன அதிகாரண அற்புதங்களுடன் காண நிற்பவர்கள் யார்? ஆதியேதான் என்பதற்குச் சிறிதேனும் சந்தேகமுண்டா? இல்லை.

உணவே தேவையற்றுப்போய் மனு உடலுடன் உங்கள் கண்ணேர் உலாவிக்கொண்டிருக்கிற தேவரூபத்தின் ணவை, 'ணவு' என்று பழய பெயரில் சொல்லலாமா? சொல்லக் கூடாது அதைத்தான் வேத வேதாந்த மகத்துக்கள்— ஆதியின்ணவு, வேதணவு, அருள்ணவு என்று குறிக்கிறார்கள். சர்வத்தையும் ஆட்டிப்படைக்கும் தவப்பேற்று வல்லமைகொண்ட ணவு ஆயிற்றே அது? அதை, உண்டுறங்கும் மனுக்களின் ணவுகளோடு ஒன்றாக வைத்துப் பேசக்கூடாது. அவ் வேதணவை நினைத்து, 'கடலைத் திடலாகஆகு, திடலைக் கடலாக ஆகு' என்று ஆக்ஞையிட்டால், அவ்வாறு அவை

ஆகாது, தடைபட்டு ஒருனொடி னேரம் னிற்குமா? னிச்சயம் அப்படி ஆகியேதீரும். அது எண்ணி ஏவிய மாத்திரத்தில் எதுதான் னடக்காது? சர்வமும் னடக்கும். இவ்வண்ணம் உங்கள் கண்முன் காரண காரிய னிரூபணைச் செயல்களோடு விளங்கி னிற்பதினை, எடுத்துப்பேச உங்களுக்கு ஏன் வரவில்லை என்று தெரியுமா? ஊண் ஆசை வழியே இன்னும் உழன்று கொண்டிருக்கும் னைவாக உங்கள் னைவு இருப்பதினால்தான், னேரில் கண்டு அனுபவித்து வரும் இந்த அதிமகோன்னத தெய்வீக அருட் செயலைப் பேச வரவில்லை.

இத்தனை சதுர்யுகங்களாக, இந்த அகப்பேறு பெருங்காரண அதிஅற்புத விரிப்பானது, இந்த அலங்கிருதத்துடன் எங்கேயாவது புழங்கியிருக்குமா? வந்த வந்த எந்த ஒரு மனுத்தலையின் செவியாவது 'புதுமையிற் புதுமையாகிய இத்தொண்டு பழமை மூலகாரண காரிய'ச் செயல்களின் ஆதிக்க உதய பூரிப்பினைக் கேட்டிருக்குமா? கேட்டிருக்காது. மனுமுளை தோன்றிய காலம் முதல் இதுனாள்வரை இப்பூமி கண்டறியாத அழியா வரங்கள் அனைத்தும் னல்கும் கதி மோட்சக் காருண்ய அமலாட்சி இப்போது இங்கே னிகழ்ந்து கொண்டிருக்கிறது. இதற்கெல்லாம் சிகரமாக, ரூபமெடுத்து வந்துள்ள ஆதியே, உருமகால யுகத்தவம் முடித்து, திரை விலகி னீங்கள் தரிசிக்க எழுந்துவருகிற வசந்த னேரமும் வந்தாச்சு!

'அல்லாவை னேருக்குனேர் பார்ப்போமா' என்று முகம்மது(சல்) சர்வரே ஆலனபி அவர்களைக் கேட்டதற்கு 'ஆம். அல்லாவை னேருக்குனேர் பார்ப்பீர்கள். பூர்ண சந்திரனை எப்படிப் பிரத்திட்சமாகக் காண்கின்றீர்களோ அப்படியே அல்லாவைக் காண்பீர்கள். இதனைச் சிறிது சந்தேகிப்பவர்கள் தள்ளுபட்டக் கடையர்களாகுவீர்கள்' என்று அருளிச்செய்தார்கள். இது அவர்களுடைய சுத்தவாக்கியமாகிய அதீதுக்குதாசியிரிட்டத்தில் காணப்பெறுகிறது. அத்திருமணி

112

மலையாள நாட்டிலிருந்து மலையாள மொழியில் எழுதி, மெய்வழிச்சபையில் சேர்ந்துகொள்ள விரும்பி விண்ணப்பம் செய்து அனுப்பியிருந்த ஒருவரது கடிதம்பற்றி சன்னிதானத்தில் தெரிவிக்கப் பெற்றபோது-

ஆண்டவர்கள்:- நம் பேசி, மெய்வழியிலாக்க எம் கைபாணமாக விளங்கும் தமிழ் பாஷை தெரியாதவர்களும், எமது காலத்தில், பரமபத நித்திய முத்தி வாழ்வை அடைய முடியும். பாஷை தெரியாத அவர்களுக்கு எம்மிடத்தில் நிலைத்த சத்திய நம்பிக்கையும் மாறாத அன்புப்பிடியாகிய ஒட்டுதலும் வந்து விட்டால், சர்வபாவ வீழ்ப்பு முத்தி வாழ்வு கிட்டுவது நிச்சயம். மூன்று உலகத்திலுள்ளவர்களும் கூடி எம் முன் வந்து கையேந்தி நின்றாலும், அவ்வளவு பேர்களும் மேற்சொன்ன சிவேசப் பெரும்பத மேம்பாட்டு வாழ்வைப் பெறமுடியும் என்பது திண்ணம். இப்போது எம் கையில் நிறைந்துள்ள பெருக்காதிக்க தவஏற்றம் அந்த அளவு அமல்கொண்டு ஏறி நிற்கிறது. ஆனால் 'இது சர்வ காலகாலம் வந்த மெய்தானா' என்று ஒருவன் தனது அறிவு சம்மதிக்க உரசிப் பரீக்ஷை செய்து பார்த்து இதில் தலைபிடவேணுமானால், அவனுக்குத் தேவ பாஷையாகிய டைம் தமிழ் பாஷை தெரிந்திருக்க வேண்டும்.

113

(24-7-75) 'அறிவைத்தேடு' என்ற மெய்வழிச்சபையாரின் வெளியீடு 'சாலைஆண்குரு' என்ற கையொப்பத்துடன் அச்சேறி வெளியாகிற்று. அதுசமயம்- ஆண்டவர்கள்:- 'இதைப் பலருக்கும் தெரியப்படுத்தி வெளியாக்குகின்றவர்களுக்கு மகா மேம்பாடான திட்டமான புண்ணியம் கட்டாயம் கிடைக்கும். தானே வலியவந்து கிட்டும்' என்று ஆசீர்வதித்தார்கள்.

114

(8-8-75) ஆண்டவர்கள்:- 'ஊண் உறக்கமில்லாத ஒருவனே' என்று உலகமெல்லாம் பயபக்தியோடு ஓதித் தோத்தரித்து வருகிறார்களே- அது, யாரை நினைத்து அவ்வாறு ஓதி வணங்கி வருகிறார்கள்? அரூபத்திலிருக்கும் கடவுளை நினைத்துத்தானே? ஆம். ஊண் உறக்கமற்றவர் கடவுளென்றால் ஊணும் இல்லாமல் உறக்கமுமில்லாமல், பல ஆண்டுகளாக அவை இரண்டும் இல்லாமல் பேய், மனித சட்டையில் உள்ள ஒரு உருவானது, இம் மண்ணுடைப் பரப்பில் உலவிக்கொண்டிருந்தால் அத்திருவுருவை என்னென்று சொல்லுவது? அதுயார்? கடவுள் தான். இது உங்கள் அறிவுக்கு சரியென்று தோன்றுகின்றதல்லவா? ஆம். இவ்வாறான திட்டமான அடையாளத்துடன் கான்முனை ஆதிக்குமுன் ஆதி, நீதி ரூபகம் தாங்கி வந்துள்ளதைத்தான்-

திரைவிலகி வருகுமிவர் னேரந் தன்னில்
  தெரிய வைக்கும் காரணங்கள் துந்துமியில்
பறைவிரித்த நிச்சயங்கள் அத்தனையும்
  பார்க்கவரும் முனிவர் னவநாத சித்தர்
தரைதனிலே இவர்களெல்லாம் உடலெடுத்து
  தவம்புரிந்த சுதந்திரத்தைத் தானள
விரைந்திடுவார் சோதியிவர் தெரிசனைக்கே
  விளரிக்க ஆதியென்ற நாமம் இன்னாள்

என்று ஜீவமந்திரத்தில் புசுண்டர்பிரானவர்கள் தீர்க்கதரிசனமாகக் கூறியுள்ளாரர்கள்.

அநாதியாக இருந்தது உருப்பி ஆதியாக வெளியானது எத்தனையோ கற்பகோடி காலங்களுக்கு முன்னல்லவா? ஆம். இவ்வளவு காலம் அரூபத்தில் இருந்த அந்த ஆதி, இன்று ரூபமெடுத்து வந்துவிட்டது. 'ஊணுறக்கமில்லாதது பரம்பொருள்- அதுவே ஆதியாகிய கடவுள்' என்பது எல்லோரும் அறிந்ததுதானே? ஆம். ஊணுறக்கமில்லாமல் மனிதகோலத்

வாக்கானது நிச்சய நிரூபணையோடு விளங்கி நிற்பதைத் தெரிசித்த எமது அனந்நாதிதேவர்களாகிய மீட்புக்குல மக்களின் தலைகள் சாமான்யத் தலைகளா? என்ன பாக்கியம் திரண்ட தலைகளாக இவை எண்ணப்பெறவேணும்!

நீங்கள் உண்பது, குடிப்பது, ருசித்து அனுபவிப்பது முதலாகிய அனைத்தும் மனத்தின் செயல். ஆனால் உண்டதைச் சீரணிக்கச் செய்து சத்தைத் தேகத்திற்கு ஊட்டியும் அசத்தைப் பிரித்து வெளியேற்றியும் இரவு பகலாக உதவி செய்து வருவது அறிவின் செயல். இத்தேவ ரகசியம் உலக மக்கள் யாருக்கும் தெரியாது. மனத்தின் செயல் முழுதும் இல்லாமலேபோய் அறிவு சொரூபராக விளங்குகின்றவர்களுக்கே உணவு தேவையில்லாமல் போகிறது.

உலகத்திலுள்ளவர்கள் என்னென்னத்தையோ பற்றி, எவ்வளவோ பேச்சு, நுணுகி நுணுகிப் பேசுகிறார்களே. அவை எல்லாம் ஜீவனுக்கு வேண்டிய பேச்சு ஆகுமா? ஆகாது. ஊண் உறக்கமற்ற தெய்வத் திருமேனிச் சுருதிப்பிரான் வாயிலிருந்து வெளியாகும் பேச்சுத்தான் சர்வ வேத அருட் சீரின் கூரோங்கித் திகழும் செயல் நிறை பேச்சு. 'இந்த வேதனையே, சர்வக்ஞ வல்லப வரமாதி வரங்களின் செயல் அனைத்தும் பூத்து மணம் வீசிறிக்கொண்டிருக்கும் அருள்னவு. வீண் மனுவை எமன் கைப்படா ஈசனைக ஆக்குகின்ற கனக வைப்பகங்கிருந்து நடனம் செய்யும் கமலனவு. ஏதுமில் யாதும் ஓதும் புராதன ஆதியின் திருமலி நீதியின் னவு' என்று நீங்களெல்லோரும் திட்டமாகத் தெரிந்துகொண்டனர் இது.

115

ஆண்டவர்கள்:- இப்போது நீங்கள், என்ன ஒரு அதிசயமான காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள் என்பதை வெளியாக்கப் போகிறோம். (தங்கள் திருமேனியை எல்லோரும் கவனிக்கும்படிக்காட்டி) உங்களுடைய தூலம் போன்ற

ஒரு மனுக்குலந்தானே இதுவும்? ஆர். இது, ஒப்பற்ற அரிய தவச் செயலால், நேர் மாற்றமாகப் பிரண்டு யாரும் நினைக்க முடியாத அந்த அதிமகோன்னதத்தில் ஆகிக்கொண்டதே: உங்களைப்போல ஒரு காலத்தில் உணவை ஏற்றுக் கொண்டிருந்த உருவம்தானே இது? ஆர். மண் இல்லாமல் சுவர் உண்டாகுமா? இல்லை. ஆனால் இந்தக் கட்டிடத்திற்கு வேண்டிய மண்ணாகிய உணவு இல்லாமல் இதோ, நீங்கள் பார்க்க இந்தக் கட்டிடம் நிற்கிறதே! ஆனால் இது, தான் செய்துகொண்டிருந்த மெய்ஞ்ஞானச் செயல்கள் அனைத்தையும் இரவு பகல், களைப்பில்லாமல் செய்துகொண்டும் வருகிறதே! இது உங்களுக்கு ஆச்சரியமாக இல்லையா! நம் கற்பகத்தவத்தில் ஏறிய நாள் முதல், இத்தூலத்திற்கு வேண்டிய உணவு தேவையில்லாமல் போய்விட்டது. காலையில் நீங்கள் சமர்ப்பித்த திருமாளிகை அமுதின் (வெல்லம் போட்டுப் பிசைந்த அவலின்) வாடை எம் முகத்தில் வீசிற்று. உடனே ஏப்பம் வந்துவிட்டது. ஏப்பம் எப்போது வரும்? வயிறு நிறையச் சாப்பிட்ட பின்தானே? ஆம். அந்த வாடை மூலம் வந்த மயனமான உணவு, கற்பகதவத்தில் ஏறி நிலைத்துவிட்ட இத்தூலத்திற்கு, ஏப்பம் வரும் அளவிற்கு இருக்கிறதை நீங்கள் பிரத்தியக்ஷத்தில் பார்த்தீர்களல்லவா? ஆம். ஆகவே இந்த, காணற்கரிய காட்சியைக்கண்ட நீங்கள், என்ன அதிசய பூமியில், அதிசய தேவரூபத்திற்கு முன், அதிசய சந்நிப்பு நேரத்தில், வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள் என்று எண்ணிப்பாருங்கள்.

116

ஆண்டவர்கள்:- உங்களுக்கு சர்க்கரை இனிக்கிறதல்லவா? ஆம். ஆனால் அதை நாம், எம் வாயில்போட்டால் மண்போல் சுவையோ இனிப்போ இல்லாமலிருக்கிறது. ஏனெனில் எமது வாயினிடத்தே சதா ஊறிக்கொண்டிருக்கிற தெய்வீக மதுரம் திமுதிமுத்து நிற்கும் கற்பூரவாடை கமழும்

அமிர்த ஊற்றின் இனிப்பு- உலக சர்க்கரையின் இனிப்பைத் தூக்கி விழுங்கி விடுகிறது. மேலும் எமது எலும்பு இளக நெடுங்காலம் நின்று செய்த அருந்தவப்பாட்டால், ரேகைக ளெல்லாம் மாறி, தவ ஆதீன விஸ்வனிலே ஜெயமேட்டில் ஏறிப் பெற்ற, தேவ சன்னதங்களாக விளங்கி னிற்கிறதெனில், எமது தாய்தந்தை யிடத்திலிருந்து பெற்று வந்த பழைய உடலா இது? இல்லை. 'தாயுமிலித் தந்தையிலி தான் தனியன் காணேடி' என்றும் 'உற்றார்கள் எனக்கு இல்லை யாருமென் னும், உற்றார்களைச் செய்வேனும் யானே என்னும் உற்றாரிலி மாயன் வந்தேறக் கொலோ' என்றும் 'மானுன மங்கையடா மதனரூபி முகத்தான சத்தியடா மார்க்கக்காரி தேனுன மொழி யுடைய தேவி வாலை தேகமடா செண்பகப்பூ வாசமுள்ளாள்' என்றும் 'சத்திரியன்போல் வடிவுத் தோற்றம் முன்னல் காண்பீர் சாயுச்சிய பிரம்மமெனப் பின்தெரிவீர்' என்றும் 'மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்த மனுஷ குமாரனுக்கு ஒப்பானவரைக்கண்டேன். அவருடைய சிரசும் மயிரும் வெண் பஞ்சைப்போலவும் உறைந்த மழையைப் போலவும் வெண்மையாயிருந்தது. அவருடைய பாதங்கள் உலைக்களத் திற்காய்ந்த வெண்கலத்தைப் போலிருந்தது. அவர் வாயி லிருந்து இருபுறமும் கருக்குள்ள பட்டயம் புறப்பட்டது' என் றும் 'செய்யதிருமேனி செம்பட்டுடைதானும் கையில் அங்குச பாசம்' என்றும் முன்வந்த தீர்க்கத் தெரிசனச் சொல்கள் தங்கள் தங்கள் மறைக்கடலாழியினிடத்தே மேற்சொன்ன எழில் திருமேனியின் சில அங்க அடையாளங்களையும் சில செயல் அடையாளங்களையும் ஆங்காங்கு பேசி வைத்துள் ளார்களே ஒழிய, அதன் பூரண சிறப்பினைப் பேசவில்லையே. அதனுடைய அனந்தானந்தம் ஆற்றலினையும் வர்ணனையும் பேசி முடிக்கவும் முடியாதே. அப்படியிருக்க, அத் தெய்வ வான்யுக வாழ்வருள் மேனியின், பிரபாவித்தை தவாதிக்க ஜீவ சிவேச னீதினெறி வரன்முறை அருஞ்செயல்களை, எண்ணி எண்ணிக் கோவைப்படுத்தி உங்களால் பேசிவிட

முடியுமா? முடியாது. நீங்கள் இங்கு வந்து நேரில் தெரிசித்து செவியேற்றம் பெற்ற மதிக்கொடை வரங்களை, ஒவ்வொன்றாகச் சிந்தித்து சிந்தித்து, உங்களுக்கிடையில் அளவளாவிக் கொண்டால் அதுவே போதும். ஜீவபதி சிரஞ்சீவி வாழ்வு நிச்சயமாக உங்கள் தலைகளுக்கு வந்துகிட்டும்.

117

அறுவித சமயத் தோர்க்கும்
அறுமுக சாமி யாகி
செறிபரப் பிரம் மானோ
என்றுசின் மயிலி லேறி
குருமுனிக் கருளிச் சீவ
குகைதொறும் வீற் றிருந்த
மறுவிலாக் குகனைப் போற்றி
மாய்த்தனென் பிறவி யெல்லாம்

என்று மெய்கண்ட சிவஞான வள்ளலார் சொல்லியிருக்கிறார்களே. அதில் என்ன முக்கிய கருத்து காணப்பெறுகிறது என்பதை யாரும் கவனிப்பாரில்லை. 'மக்களின் ஜீவகுகை தொறும் வீற்றிருக்கும் மாசுமறுவிலாக் குகனைக்கண்டு வணங்கும் வணக்கத்தை விட்டு, நகலாகக் கல்லிலும் செம்பிலும் செய்து வைத்திருக்கும் மறுவுள்ள குகனையே நாடி வணங்கும் சிறுபிள்ளை விளையாட்டில் ஈடுபட்டு நம் வாணாளையெல்லாம் வீணாக்கிக் கொண்டிருக்கிறோமே' என்பதை எவரும் நினைக்கவில்லை.

இன்னும், 'கங்காளன் பூசும் கவசத் திருநீறு, எக்காலும் மங்காது' என்ற சிவபத மூலர் தெளிதரு வாக்கை மறந்து, சாம்பலை விபூதி என்று எண்ணிப் பூசிக்கொண்டு அலைகின்றார்கள்.

'சீவகுகைதொறும் வீற்றிருந்த மறுவிலாக் குகனைப் போற்றி மாய்த்தனென் பிறவியெல்லாம்' என்று நிஜ தெய்வ

னெறிகூட்டும் இந்நச் செய்யுளை எமது எல்லையைத் தவிர வேறெங்காவது நீங்கள் புழங்கக் கேட்டதுண்டா? இல்லை. ஏன்? அதில் கூறியுள்ள ஜீவனைக்க மெய்ச்செயல் அவர்கள் கையில் இல்லாததாலே அதை எடுத்துப் புழங்க அஞ்சி, ஒதுக்கிவிட்டார்கள்.

தமிழ்த்தெய்வமாகிய முருகப்பிரான் அவர்கள் னடமாடும் திருமேனி தாங்கி இன்னிலவுலகில் உலாவிக் கொண்டிருந்த காலத்தில், அவர்களை வெறுத்து அலக்ஷியம் செய்த அழிகரு வழிவந்த பழிபாதக மனுத்தலைகள்தான், இப்பவும் அவர்களுடைய ஆணிமொழிக் கட்டளை னீதி வாக்கிற்குச் செவிகொடாமல், தங்கள் மனம் போனபடியெல்லாம் செய்வதைத் தெய்வ வழிபாடு என்று பின்பற்றித் தானும் கெட்டு, பிறரையும் கெடுத்து வருகிறார்கள்.

காணடா வாசினிலை காட்டிச் சொல்லிக்
கங்குல்மதி ரவியுடைய கருணை காட்டி
தானடா கற்பனிலை காட்டி மீண்டும்
சாரணையும் தாரணையும் சாற்றியேதான்
கோனடா குருனிலையைத் தெரியக்காட்டி
குலதெய்வம் இதுவென்று குறித்துச்சொல்லி
னானடா னனிருக்கும் இடந்நான் காட்டி
னவிலுவார் னன்மார்க்க னாதர்தாமே.

'தானிருந்து வாழும் ஜீவகுகையாகிய சிரகிரினாட்டு அறம்மிளிர் தலத்தை இன்னார்தான் காட்டுவார்கள்' என்று னம்மைக் குறித்துக்கூறி உலகறியப் பறைசாற்றியுள்ளதோடு, அத் தெய்வத் தோன்றலவர்கள் இக்கலிக்கடையில் வந்து செய்து வைக்கும் அகமிய அருட்செயல் தெய்வனீத வரிசைப் பாட்டையும் செய்யுள் ரூபத்தில் னிச்சய னிரூபணையாக, மாசில் சைவ மதிமகத்தாகிய சுப்பிரமணியரவர்கள் தங்கள் தீர்க்கதரிசன கதிரோடு கண்டு விண்டெழுதி வைத்துள்ளார்களே. அதைச் செவியில் கேட்டபின்னும், அந்த னிஜதெய்வ

வழிபாட்டை நாடாமல் நக்கல் தெய்வ வெறி ஆட்ட வீண்பாட்டில் வயந்து வாழ்நாளைப் போக்குகின்றவர்கள் மனுமக்கள்தானா என்று அறிவுடையோர்கள் சிந்திக்காமல் இருக்க முடியாது.

இன்னெடுங்காலமாக இப் பூமியில், எத்தனையோ மெய்ஞ்ஞான பேராதீனர்கள் ஆங்காங்கு தோன்றி, வேறு வேறு நாமங்கள் பூண்டு மெய்ப்பயிரேற்றும் உய்மேதகு சீர் காரிய வழியில் மக்களைக் கூட்டி, கலங்கானிலை நலங்கோடு வாழ்வில் ஆக்கி வந்தனர்கள். அவ்வாறு ஜீவபண்டித சிவராஜர்களாக வந்த பலர், தாங்கள் ஏறிநின்ற பதவிக்கான சின்னத்தைக் குறிக்கும் ஒரே நாமங்கொண்டு விளங்கினர்கள் என்பதுவும் மறை ஆதிநூல்களில் நாம் காணமுடியும். ஆனால் உங்கள் பாட்டையர், தாய்க தவமணித் தனிகைக் குருகுபேரர் அவர்களால் எமது தலையில் சூட்டப்பெற்ற 'மார்க்கனுகர்' என்ற தனிப்பெரும் தவாதிக்கச் செயல் நாமம், வேறுயாருக்கும் இல்லை. ஆதிமூல நீதிப் பெருந்தலைக்கே உரியதாக வைத்திருந்த அந்த நிகரில்லா உயர்வுடைய நாமத்தைத் தீர்க்கத்திடத்துடன் மேற்கண்ட செய்யுளில் பதித்து வைத்துள்ளார்களே! பொன்னுலகடைட்டு ஜீவசிர்மாசன மதிமன்னர்கள் அனைவரும் ஒன்றுகூடிப்பேசி இறுதிகாலத்தில் வரும் வான்யுக வித்தகருக்கென்று ஒதுக்கி வைத்திருந்த நீதி உலக மாட்சி ஆட்சி நாமம் இதுவென்றால், அவர்களெல்லாம் தீர்க்கதரிசனக் கண் கொண்டு கண்ட எமது அகத்துறைத் தவச்செழிப்பு, கதிமோட்ச நிலவெளிக்கும் கனாதவத்துக் காருண்யப் பூப்பு, தெய்வீக மெய்ம்மை உட்தய வைப்பு, என்ன ஒப்பற்ற உன்னத ஏற்றம் உடையதாக இருக்கவேணும் என்று நிலைத்த மதி கொண்டு பார்க்கின்றவர்களுக்கு நிச்சயம் தெரியவரும்.

மேற்கூறிய பாடலில் காணுகின்ற, முழுமுனி முருகப்பிரானாகிய மெய்ஞ்ஞான மேருவின் சாட்சி, இவ்வாறு திட்டம் பிறங்க கூவிக் கூறி நிற்கையில் வேறு யாருடைய சாட்சி இனி வேணும்? தங்கள் தெய்வமாக முருகப்பிரானைக் கால

மெல்லாம் வணங்குவது நிஜமானால், அவர்கள் சுட்டிக்காட்டிய இத்தெய்வ எல்லைக்கல்லவா அந்த மக்கள் ஓடோடியும் வருவார்கள். இந்த அதிசோபனச்சாலையின் அருளாட்சி ஆதியின் ஆண்மைச் சிறப்பு, கடம்பவனக் காளையாகிய அந்த மதிவான் மன்னருக்குத் தெரிகிறது. ஆனால் கலி இருள் மூடி கதிகாணாப் பாவ உள்ளங்களுக்கு இது தெரியவில்லை.

நாமும்தான் சென்ற 75 ஆண்டுகளாக பகல்ராவென்றில்லாது கூவிக்கூவி அழைத்து வருகிறோம். அதைக்கேட்டு இங்கு வந்து பலன்பெற்ற பல ஆயிரக்கணக்கான எமது அனந்நாதி தேவைப் பெருங்குல மக்கள் இருக்கிறார்களே. மற்றவர்களும் இவர்களைப்போலவே ஓடி வந்து இந்தக் காருண்ய மதிக் கொடை வசந்தத்தில் ஏன் கூடிக்கொள்ளக்கூடாது? அப்படி ஓடி மனுக்குலம் முழுதும் கூடிக்கொள்ளவேண்டும் என்பதுவே எமது கரைகாணா இச்சை. அதற்கே எமது பூர்ண ஆசீர்வாதமும்.

118

ஆண்டவர்கள்:- தருமம் என்றால் ஏழை எளியவர்களுக்கு ஏதாவது கொடுப்பது அல்லது உதவி செய்வது என்பது தானே எல்லோரும் நினைத்துக்கொண்டிருக்கிற அர்த்தம். வேதம் விதிக்கும் தர்மம் அது அல்ல. மனுத்தலையை எமன் கையில் சிக்கவிடாது காக்கும் ரக்ஷகச் செயலே தர்மம். ஆகவே தவராஜராகிய ஒரு குருகொண்டல் அவர்களால்தான் தர்மம் செய்யமுடியும். 'தருமம் தலைகாக்கும்' என்ற சுலோகம் நம் தமிழ் மக்களிடையே புழங்கிக்கொண்டிருந்தாலும், அதை யாரும் நின்று கவனித்ததில்லை. இறைகுரு பாரவான்களாக வந்த மூலபுருஷ நாயகங்கள், ஜீவ வாழ்விற்கான விதிமுறைகளைப்பேசி, நடந்துகாட்டி, அவ்வப்போது மனிதகுலத்தைத் தெய்வீக நன்னெறியில் பிரட்டி ஆக்கிவந்தும் அவர்கள் காலத்திற்குப்பின், தன்னறிவில் சாய்ந்து தலையாட்டித்திரி

யும் தவத்தேட்டற்ற தோசிகள் அச் செவ்வியல் வழியை னேர் மாற்றமாக மாற்றி ஆக்கிக்கொண்டு விடுகிருர்கள். வடலூர் வள்ளற்பிரான் 'சத்திய தருமச்சாலை' என்று ஸ்தாபிதம் செய்தால் அதைச்சோறு போடுகிற, கூழ் ஊற்றுகிற எல்லையாக மாற்றிவிட்டார்கள். தலைகாக்கும் தருமச் செயலாகிய சன்மார்க்க னெறிதான் அந்த மதி அரசு மன்னுவின் தூல மறைவோடு போய்விட்டதே!

பாரப்பெரிய கத்தியும் பஞ்சுதனக்குஞ்ஞும் என்பது பழமொழி. அதற்கொப்ப, எமனுக்கும் அஞ்ஞாத னிஜனீதி ஆண்மையில் மக்களை ஆக்கும் சிவராஜர்கள், தாங்கள் கொண்டுவந்துள்ள மங்காத வீரம் மலிவுற்ற மெய்யில் சவங்கலான ஒரு பேடியை ஏற்றுக்கொள்வச் சம்மதிக்க மாட்டார்கள். ஏனெனில் அவன், மெய்யைப் பெற்ருலும் கைதவறுவே விட்டு விடுவான்.

எழுத்தாலான வேதத்தைப் படைத்தது இந்த மனித தூலம். ஆனல் இந்தத் தூலத்தைப் படைத்த மூலகாரண 'வஸ்துவித்து', 'ஸ்ரீவித்து' எதுவோ, அதுவே எழுதாமறை.

அலீப் லாம் மீம் என்ற மூன்று அக்ஷரங்களுக்கிடையில் இருக்கும் வெளி எத்தனை?

சபையோர்:- இரண்டு.

ஆண்டவர்கள்:- மேற்சொன்ன மூன்று அக்ஷரங்களும் இரண்டு இடைவெளிகளும் சேர்ந்து ஐம்பணிப் பொதிகையாகிய பஞ்ஞாட்சரம் ஆகிற்று. அழியாத னித்திய வேதத்தலையாகிய அந்த ஐந்தையும் உன் இதய தடாகமெனும் கல்பகத்தே, பிரகாச ரூபத்தில் சந்திக்க வைப்பதுவே மெய்வழி.

புவியதன்மேல் காணவிது அதிகதிக மய்யா
பொருந்தியபின் னிஜமதெனக் கண்டுதெளிந்
திடுவாய்
கவியிதுவே னீஅறிய கடைக்காலமா மங்கே
காணுவர்ய்னி சுயதேவ ராகதுறைக் கல்பம்
னவில்லுவராம் சுத்தமதாய்ப் பூர்த்திசெய்து ஆக்கும்
தைனிவர் சாடினின்று சொல்வதங்கே உண்டு
துவிதமுறை எதுவும்ஒட்டா குறித்ததந்நச் சாரம்
துலக்குவராம் மித்திரனுள் விடைனடையும் பாரு

என்ற புசுண்டர்பிரானின் ஜீவமந்திரச் செய்யுள் சபையில் படிக்கப் பெற்றபோது–

ஆண்டவர்கள்:– 'துவிதமுறை எதுவும் ஒட்டாச் சாரம்' அதாவது முதல் இதுவோ அதுவோ என்று மூளைகெட்டு அலையும்- துவிதம்- இரண்டானமுறை- அதாவது சந்தேகப் பொதுப்புலமை, சிறிதும் வந்து ஒட்டாத, ஒட்டவே முடியாத னேர்மை ஓர்மைத் துலக்கம் அருளும் மெய்ச் சாரமே, னும் இதுகாலம் கொண்டு வந்திருப்பது.

கற்பகத் தவத்தால் பெற்ற சுயதேவராகத் துறையாகிய எமது மெய்வழி வழிபாட்டு வேலையில் வேறொருவருடைய னினைப்போ, வார்த்தையோ வந்து எட்டித் தீண்டமுடியாது, அத்தகைய சுத்தம் வடித்துத் தெளித்தெடுத்த இம் மெய் னெறியில் எவரொருவருடைய செயலும் வந்து ஒட்டவிடமாட்டோம். இந்த மெய்ஞ்ஞான னெடும் பாதையில் னீங்கள் சளையாது பின் தொடர்வதற்காக, சிற்சில சமயங்களில், உங்களுக்கு இணங்கி னீங்கள் சொல்வதைக் கேட்டுச் சம்மதித்து னடப்பதுபோலக் காட்டுவோம். ஆனல் திட்டவட்டமான எமது தெய்வயுக னீதிப்பாதையை விட்டுக் கிஞ்சித்துக்கூட னும் மாறுவதில்லை.

தவோன்னத சிகரமாகிய நித்திய நீதி மெய்வழி வேட்டில் உங்களை ஏற்றி வைக்க, உங்கள் கைகளை னும் பற்றிப் பிடித்துப் பையப்பையக் கூட்டிச் செல்லும்போது, நடந்நறியாத பெரும்பாதையானதினாலே உங்களுக்குக் களைப்பேற்பட்டு, எமது நோக்கிற்கு வராமல் மலைத்துத் திகைத்து, உங்கள் பக்கம் இழுத்தால், அந்நக் களைப்பை மாற்றிச் சுறுசுறுப்பும் மகிழ்ச்சியும் ஊட்ட, நீங்கள் பார்க்க எம் கரங்களை மட்டும் உங்கள் இழுப்புக்கு விட்டுக்கொடுத்ததுபோல் சற்று நீட்டுவோம். ஆனால் எம் பாதங்களின் கட்டை விரல்களின் ஊனுதல் ஊன்றியபடியே இருக்க, மேலே ஏற்றிக் கூட்டிக்கொண்டு போவதிலேயே அழுத்தமாக முனைந்து நிற்போம். இவ்வாறான எம்முடைய யுக்தி, எவர் ஒருவர் பார்வைக்கும் நினைவுக்கும் எட்ட முடியாதது. 'ஊழிவிதியவன் தான்விதித்த ஒருமையின் ஆவித்தடம்பிடித்து மாசு மறுவொன்றும் வந்திடாது வெற்றி எம் சன்னத மெய்வழி'யில், மக்களைக் கூட்டிச்செல்லும் இந்ந மதிநுட்ப இறுதி நீதி வேலைத்திட்டத்தையே, 'துவிதமுறை எதுவும் ஒட்டாக் குறித்த தந்நச் சாரம்' என்று திரிகாலம் கண்ட அந்ந ஞானமேரு தங்கள் தேவக் கண்கொண்டு முத்திரித்து வைத்துள்ளார்கள்.

120

ஆண்டவர்கள்:- எமனிடம் கொண்டுபோய்ச் சிக்க வைப்பது ஒருவனுடைய வாய்தான். அந்ந எமன் பிடியிலிருந்து விலக்கி மீட்டுத் தெய்வத்திடம் கொண்டுபோய்ச் சேர்த்து வைப்பதற்குக் காரணமாய் இருப்பதும் அதே வாய்தான். அதை வைத்து ஆளுகிற விதத்தில் ஒவ்வொருவரின் உயர்வும் தாழ்வும் உள்ளது.

கண், காது, மூக்கு முதலாகிய தேகாதியந்நத்திலுள்ள பலவேறு உருப்புகள் ஒவ்வொன்றிலும் எத்தனையோ பிரிவான ராகரக உணர்ச்சிகள், செயல்கள் இருக்கின்றன. ஒவ்வொரு

அங்கப் பிரிவும் எப்படி ஒவ்வொரு மூளையில் கட்டப்பட்டு ஜீவனுடைய ஆட்சிக்கு உட்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் நின்று கவனித்ததுண்டா? இல்லை- உதாரணத்திற்கு நாவை எடுத்துக்கொள்வோம். அதில் ஆறுசுவைகள் புழங்குகின்றன. ஒரு கசப்பான பொருளை நாவினிடம் வைத்தால் கசப்புச் சுவைமட்டும் தெரிகிறது. மீதி ஐந்து சுவைகளை உணர்ந்து அறிவிக்கின்ற ஐந்து ஏஜண்டுகள் அது நேரம் எங்கே போனார்கள்? எப்படி மறைந்து ஒதுங்கிக்கொண்டார்கள்? அந்த ஐந்துபேரும் ஒதுங்கிக்கொள்ளாது அவர்களும் சுவைக்க முற்பட்டிருந்நால், நாம் வைத்த கசப்புப் பொருளின் சுவை துல்லியமாகத் தெரியாது போய்விடுமே. அந்தக் குறைபாடு ஏற்படாமல் மற்ற ஐந்து சுவைக்குரிய அதிகாரிகள் எங்கு, எப்படி ஒளிந்து கொண்டார்கள்? அறிவு சம்மதிக்கும் படி இதற்கு விளக்கம் சொல்லுங்கள் பார்க்கலாம். இந்த வினாவே உங்கள் நினைவிற்கு எட்டாதே- பதில் எப்படிச் சொல்லப் போகிறீர்கள்? இல்லை.

ஒவ்வொரு சுவையும் இன்னதென்று அளந்து, உணர்ந்து அறிவிக்கிறதற்கான நுண்ணிய மூளைகள் நாவில் நிறைந்திருக்கின்றன. நாம் நாவில் வைத்தபொருள் இனிப்பு என்று தெரிந்ததும் மற்றைய ருசிக்கான மூளைகள் உள் அடங்கிக்கொண்டு, இனிப்புக்கு அதிகாரிகளாக உள்ள மூளைகள் மட்டும் செவ்வையாக வெளியே நீட்டி, இனிப்பின் பூர்ண அளவையும் தன்மையையும் கண்டு தலைமைஸ்தானத்திற்கு அறிவிக்கின்றன. இவ்வாறாகவே அறுசுவைகளும் நம்மால் அறியப்பெறுகின்றன. நூல ரகசியமாகிய இது யாருக்கும் தெரிய வராது.

உன் வீட்டில் உன் மனைவிக்கு ஒரு ஆபத்து என்று ஒருவன் வந்து சொல்லுகிறான். கேட்டதும் நீ உன் வீட்டை நோக்கி அதிவேகமாகப் போய்க்கொண்டிருக்கிறாய். அப்படிப் போகும்போது 'இந்த நேரத்திற்குள் அவளுக்கு என்ன

ஆயிற்றே- மேற்கொண்டு நாம் யாரைப்பிடித்து என்ன செய்வது' என்று உன் நினைவு காரமாக நினைத்து ஓடிக்கொண்டிருக்கும். அப்போது வழியில் சந்திக்கிறவர்களை உன் கண் பார்த்தாலும், அவர்களைப்பற்றிய விபரம் கேட்டால், சொல்ல வருமா? சொல்லவராது. (தங்கள் கரத்தில் வைத்திருந்த வேல் கம்பைக்காட்டி) இந்த வேல்க்கம்பின் வடிவத்தில் உன் நினைவைச் செலுத்திப் பார்த்துக் கொண்டிருக்கையில், ஊசியையும் நூலையும் உன் கையில் தந்து கோத்துக்கொடு என்றால் கோத்துத்தரமுடியுமா? முடியாது. அவற்றைக் கண் பார்த்தாலும் நினைவு வேறென்றிலிருந்தால், அந்த வேலையைச் செய்யமுடியாது. ஆகவே கண் பெரிதா? நினைவு பெரிதா? நினைவுதான் பெரிது. அப்போ கண் வேண்டாமா? கண்ணுந்தான் வேண்டும்.

இவ்வண்ணமாக தேகாதியந்தத்திலுள்ள ஒவ்வொரு கருவிக்கும் ஒவ்வொரு வேலையென்று வைத்து அதனதன் வேலையைச் செவ்வையாகச் செய்து முடிக்குமாறு இறைவன் படைத்துள்ளான். இதை நின்று கவனித்துப் பார்த்தால், மதிப்பிலடங்கா ஒரு பெரிய இராஜ்ஜியத்தையே இறைவன் ஒவ்வொரு மனிதனுக்கும் இனமாகக் கொடுத்துள்ளான் என்று தெரியவரும். இந்த அருமையான இராஜ்ஜியத்தை வைத்து ஆண்டு, பரமபத நித்திய பேரின்ப மகிழ்ச்சி வாழ்வை இவன் அடையட்டும் என்பதுவே அந்தப் பாரப்பெரியோனுடைய இச்சை. அந்த இச்சைக்கு மாறாக அழி உலக வேலைகளுக்கே அவன் தந்த பெரும் சீதனத்தை உபயோகித்துப் பாழடித்து, கடைசியில் எமன் கையில் அதை ஒப்புவித்தால், ஈசனுக்கு என்ன ஆத்திரம் வரும்? ஏகனாயகனின் அந்த முனிவே, மீட்பில்லாத் நரக வேதனையாக பின்னர் வந்து மூளுகிறது.

நீ, ஒருவனுக்கு நூறு ரூபாய் இனமாகக் கொடுத்து ஏதாவது ஒரு வியாபாரம் செய்து பிழைத்துக்கொள்ளச்

சொன்னால் அவன் அந்தப் பணத்தை வாங்கிக்கொண்டு போய்ச் சூதாடித் தொலைத்து விடுகிறான். அதை நீ கேட்டால் உனக்கு என்ன கோபம் வரும்- அதோடு என்ன துன்பமாகவும் இருக்கும். அதேபோல இறைவன், இவனுக்கு இமைாகத் தந்த எழுவகை அமானிதமாகிய வித்தியாதத்துவத்தை, நித்திய வாழ்வைப் பெறச் செலவு செய்யாமல், அநித்திய உலக வாழ்விற்குச் செலவு செய்துவிட்டுக் கடைசியில் எமன் கையில் போய்ச்சிக்கி நரக தண்டனைக்கு ஆளானால், படைத்த ஈசனுக்கு என்ன வேதனையாக இருக்கும்- 'பரமபத வாழ்வைக் கைபோடுவதற்கான எல்லா வல்லபங்களும் நாம் உனக்குத் தந்தோமே. அதைப் பாழாக்கிப்போட்டு எக்கோடி காலமும் மீளா நரகத் துன்பத்தில் நுழைய உனக்கு எப்படித் தான் மனம் சம்மதித்ததோ' என்று திட்டிவிட்டு ஈசன் ஒதுங்கிக்கொள்கிறான். பிறகு எமன் கைக்குட்பட்டு சின்ன பின்னமாக்கப்படுகிறான்- அதற்கான கோர அடையாளங்களும் பின்னர் தூலத்தில் வந்து விடுகின்றன.

மேற்சொன்ன அதோகதி நிலைக்கு இலக்கு ஆளாக்கினது, இவன் மனந்தான். சகலத்திற்கும் ராஜா அதுவே. அது எவ்வளவு பிரம்மாண்ட ரூபம் உடையது என்று யாருக்கும் தெரியாது. ஒன்றைக் கஷ்டப்பட்டுத்தேடி அடைந்ததும் 'அதோடு போதும்' என்று அந்த நினைவு நின்றுகொள்வதுண்டா? இல்லை. அடுத்ததைத்தேடி அலையும். இவ்வாறு தான் இச்சைப்பட்டதெல்லாம் கைவசமான பிறகும் 'அந்தப் பூமிவேண்டும், இந்த மதிப்பு வேண்டும்' என்று தன் கரத்தை நீட்டி நீட்டித் துழாவிக்கொண்டேயிருக்கும். தன் ஏவலுக்குட்பட்டிருந்த அங்கக்குலங்கள் அனைத்தும் தேய்ந்து கைவிடும் வரை ஓயவே ஓயாது- கடைசியில் தானும் உதவியற்றுப் பொய் மீளா அவஸ்தை இருளில் போய் மாட்டிக்கொள்ளும். இந்த வெறி கொண்ட மனத்தையே வேதம் 'பேய்' என்று சொல்கிறது.

மனதாகிய அந்தப் பேயினிடத்தில் எவரும் சிக்கிக் கொள்ளக்கூடாது என்பதே, அந்தந்த வேத கர்த்தர்களுடைய திண்ணமான எண்ணமும், நெடும்பாடும். ஒருவன் ஏழையாயிருக்கட்டும் அல்லது பணக்காரனாயிருக்கட்டும் அவன், தன்னிடம் இருப்பதைக்கொண்டு திருப்தி அடைய வேண்டும். அதைத்தான் வேதத்தில் 'உள்ளதையே போதுமாக்கல்' என்று விதித்துப் பேசப் பெற்றுள்ளது. ஒருவனுக்கு நியாயமாய் மூன்று ரூபாய் வரவேண்டும். முக்கால் ரூபாய்தான் வந்தது. அந்த முக்கால் ரூபாயை மூன்று ரூபாய் வந்ததாக எண்ணித் திருப்தியடையவேண்டும். அதுதான் 'உள்ளதையே போதுமாக்கிக் கொள்ளுதல்' என்பது. கஷ்டத்துடன் பாடுபட்டிருக்கலாம்; மகிழ்ச்சியுடன் பாடுபட்டிருக்கலாம். அதனால் வந்த வரவு எதுவாக யிருந்தாலும், கூடுதல் குறைவு என்று நினைத்து மனத்தை அலட்டிக்கொள்ளாமல், பெற்றதையே திருப்தியாக எண்ணவேண்டும். இப்படி 'உள்ளதையே போதுமாக்கிக்கொள்ளும்' எண்ணம் எல்லோருக்கும் வந்துவிடாது. பெருந்தகைச் சிங்கனேக்குடைய மகத்துக்களுக்கே அது கைவரக்கூடும். அந்த மகத்துக்கள் யார்? தன்னை ஆண்டுகொண்ட பெருமானின் தெய்வ அடி நிழலில் காத்துக்கிடந்து, எமனச்சத்தைப் போக்கிக்கொண்ட பெருந்தகைச் செம்மல்களே அவர்கள்.

உள்ளதையே போதுமாக்கிக்கொள்ளுதல்தான் மிகப் பெரிய தவுலத்தாகிய நிறைசெல்வம். அதுதான் கிடைத்தற்கரிய ராஜரீகம். அந்தத் தேவகுணத்தைத் தன்னதாக ஆக்கிக் கொண்டவனே சர்வலோக, சர்வகால, சர்வ்தனமும் படைத்த ஐசுவரியன்.

பிறர் குற்றத்தையே துருவித்துருவிப் பார்த்துக்கொண்டும், அதையே எண்ணிக்கொண்டும், அதைப்பற்றியே பேசிக் கொண்டும் இருப்பதால் பயனுண்டா? ஒரு முடிவுண்டா? இல்லை. ஆனால் அதற்கு ஒரு பயன் இருக்கிறது. தன் ஜீவனைப்

பாழாக்கிப் போடுகிறதுதான், அதோகதியில் ஆக்கிவிடுகிறது தான் அந்தப் பயன். பிறர்குற்றத்தைப் பார்த்துக்கொண்டிராமல் தன்குற்றத்தையே எண்ணிப்பார்த்து அதனின்றும் விடுபடப் பாடுபடுபவனே அறிவுடைய பெரிய சீமான். அவன்தான் தன்னைத்தான் ஆளும் யோக்கிய வெற்றிமேடு ஏறிய சிவராஜன்.

இந்த உத்தம சித்திக்கொள்கையை- ஆண்டவர்கள் மான்மியத்தில்- (அழிகலிப் பருவம்- 31 ஆம் பக்கத்தில்) தெளிவுபிறங்கப் பேசப்பெற்றுள்ளது.

'மக்களுக்கு எளிதில் ஒழிக்க ஏலாததாகிய பிறவிப்பிணி என்னும் அனியாய மரணத்தை ஒழிக்கவும்- மேலும் அவர்களை அலகையாக்கி என்றும் னரகத்தில் தங்க வைக்கின்ற எமபடரின் செயித்தற்கரியதாகிய அவஸ்தை மேலிட்ட னரக அடையாள அச்சத்தினைச் செயித்தற்கும் ஓர் மெய்யருட் குரு பிரானைத் தேடியடைந்து தன்னை ஆட்கொள்ளும்படிக்குக் கெஞ்சிக் கேட்டாவது புகந்துகொண்டு என்றும் விபரீதச் செயல்விளைந்திரானின்ற பஞ்சேந்திரிய ராக்கதர்களை அடக்கி-வாசனைச் சயம் மனோ நாசமென்னும் சொத்தையடைந்து- அரங்கமென்னும் பதிஞான வீட்டில் சாந்தியடைதலென்னும் பூர்விக பூரண முழுமுதலாம் அழியாத சுயராச்சிய இன்பத்தை அடைவதுவே இப்பெரும் பூமிப்பரப்பிலுள்ள மனுமக்களின் இச் சீவிய வாழ்விலேயே முயற்சித்து அடையவேண்டிய பெரும்பயன் என்பதாம்' என்ற பகுதி சபையில் ஓதப்பெற்றது.

தொடர்ந்து ஆண்டவர்கள்:- வீடு னிலம் ஆடு மாடு ஒன்றுமில்லாத ஒரு ஏழை இருக்கிறான். அவனுக்கு ஒரு பணக்காரன் உணவு உடை வீடு பணம் முதலிய யாவும் கொடுத்து உதவுகிறான். அப்படிக் கொடுத்துவிட்டு அவனைப் பார்க்கும் போதெல்லாம் குறையும், சுடு சொல்லும் சொல்லு

கிறன். அதைக்காலமெல்லாம் பொறுமையோடு சகித்து வந்நாலும் கடைசியில் பொறுக்கமுடியாமல் ஒரு நாள் அவனை எதிர்த்துக்கொண்டு தீங்கு செய்யும் புத்தி அந்த ஏழைக்கு வந்துவிடும். 'தன்குற்றம் கண்டு முதலில் நீக்க வேண்டும்' என்று வள்ளுவர் பெருமானும் கூறியிருக்கிறார்களே, அது உங்களுக்கு ஞாபகம் வந்நால் சொல்லுங்க.

சபையில் ஒருவர்:-

தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்ற மாகும் இறைக்கு
ஏதிலார் குற்றம்போல் தன்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு

தொடர்ந்து ஆண்டவர்கள்:- சரி. இப்படியே ஒவ்வொன்றையும் உங்களுக்கு விளக்கிச் சொல்லிக்கொண்டே போகலாம். அதை எண்ணத்தில் வாங்கி வைத்துக்கொள்வதற்கான படிப்பை முதலில் கொஞ்சம் கொஞ்சமாகக் கற்பித்து, அறிவை வளர்த்துப் பிறகு அல்லவா உங்கள் ஜீவனில் பதிப்பிக்க வேண்டியிருக்கிறது. சிறு உருண்டையைச் சுலபமாக விழுங்கிவிட்டதைப் பார்த்து, பெரிது பெரிதாக மேலும் வாயில்போட்டுத் திணித்தால், தொண்டையில் விக்கிக் கொள்ளுமல்லவா? ஆம். ஐந்நாறு வேர்க்கடலையை வாயில் போட்டதும் மென்று ருசித்துத் தின்றான். 'அடே, நன்றாக ருசித்துத் தின்றானே' என்று வாயைத் திறக்கச் சொல்லி வாய் நிறையக் கடலையைக் கொட்டினால் என்ன ஆகும்? வாய் அசைக்க முடியாதுபோய், மூச்சுத்திணறி, உயிர்போகும் அளவுக்கு வந்து, டாக்டரைக் கூப்பிடும்படி நேரிடுமல்லவா? ஆம். ஆகவே எமது பேச்சு இதோடு 'ஸ்டாப்'! எல்லோரும் எழுந்திருங்க போகலாம்- (சபையில் ஒரே மகிழ்ச்சி)

121

(12-2-1972. இரவு.)

ஆண்டவர்கள்:- பதிமறைவுச் செயலிலே தலைவைத்தாய் விட்டது. அது நடந்துகொண்டு வருகிறது. எம்தேகத்தில் அதற்குரிய அடையாளங்கள் வந்துவிட்டன. அது இன்னது, அதன்பின் விளைவு இப்படி ஆகும் என்பதை நம் வெளியாக்காவிட்டால், உங்களுக்குத் தெரியவராது. நம் மறையப் போகிறோம். இனிமேல் நீங்கள் இந்தத் தேகத்தைப் பார்க்க முடியாது. அதற்கு இன்னும் நாலு மாதங்கள் தான் இருக்கிறது.

அடுத்து பிரளயம் வந்து மோதப்போகிறது. அது நேரம் பூமியின் மேல்தளம் செம்புத்தரையாய்ப் போய்விடும். பிறகு சாலைபூமி ஒன்றுதான் மிஞ்சி இருக்கும். மற்றைய பூமிப் பரப்பு ஜாடாவும் துடைத்து, அழிக்கப்பட்டுப் போகும். அதற்கான அடையாளங்கள், முற்கூட்டி, எமது தேகத்திலே வந்துவிட்டது. அந்தப் பிரளயத்தை நடத்தப் போகிறவர்கள் வேறு யாராவதுமா? இல்லை. நம் தான்.

நீங்கள் உங்கள் கண்முன் பார்க்கிற இந்தத் தேகமானது உங்கள் தேகத்தைப்போல ஆதியில் ஒரு தாய் தகப்பன் சேர்க்கையால் உண்டானதுதானே? ஆம். அப்படி ஆதியில் உண்டான அது, இப்ப இல்லை. எமது சற்குரு பிரானைச் சந்தித்த அதுநேரம் முதல், தவ விளைவு கொண்டு ஏறி முற்றிலும் மாறிவிட்டது. அவ்வாறு மாறிக்கொண்ட செயல் விரிப்பினை, மான்மியம் மூலமாகவும் எமது அருளுரை மூலமாகவும் நீங்கள் கேட்டு அறிந்திருக்கிறீர்கள்.

கான்முளை ஆதிக்குமுன் இருந்த 'ஆதிமூல ஆவியானது- உகும்பி நிகரற்ற பொலிவுகொண் டெழுப்பி- மாயா உடம்பெடுத்து மெய் அருபகமாக இருந்ததானது மெய் ரூபகமாக விளங்க, குழந்தை வடிவெடுத்த நாள் முதல்-'மகத்துக்களாகிய நித்திய சூரியர்களென்னும் பாரவான்களெல்லாம் இதன் மேல் வர இருக்கின்ற சுபசோபன க்ஷேம வரம்பற்ற நெடுங்

காலங்களும் அடங்கிய தலையுகமென்னும் மெய்ப்மை
கிரேதாயுகத்திலே எழும்பி நடக்கவர இருக்கும் மிகமகிழ்ச்
வாழ்வின்- அருங்காரண காரியச் செயலாதிய ஆதிக்க
அனைத்தும்- தங்கள் தங்களின் சொந்த விதாச்சாரப் பா
தியப் பங்கினைப்பெற்று- முன்னர் தொட்டுவிட்ட குறையாகி
அனுபோக ஆள்கையை ஆள வருவதினுக்காக' னித்தி
தேகம் பொறுகின்ற னீதி னெறிக் கிரேதாயுக உதய உற்ப
னுள்வரை- மேற்சொன்ன ஆதிமூல ஆவியானது மெய்னெ
னீதி ஒச்சும் காருண்ய உருவகத்தில், கல்கி மகதி கர்த்தா
கர்த்தர் என்னும் நாமங்கள் ஏற்று, இன்னகாலம், இன்ன
எல்லை, இன்ன செயல், இவ்வண்ண அடையாளங்களுடன்
இப் பூமிப் பரப்பில் விளங்குவார்களென்று முன் வந்
தீர்க்கதரிசியர்கள் பலரும் திட்டம் பிறங்கக் கூறிவைத்
துள்ள கிரந்தங்களில்- அந்தக் காருண்ய தேவ ரூபகரின்
வனப்புமிகு எழில்த் தோற்றம்பற்றி 'மெல்லிய மினுகிய திரு
மேனியர்' என்றும் 'செய்யதிருமேனியர்' என்றும் மேலும்
'அவர்கள் இருதாள்களும் விளக்கிவைத்த வெண்கலத்தைப்
போல் இருக்கு' மென்றும் பேசப்பெற்றுள்ளதெனில் அந்
திருமேனியானது எவ்வளவு அழகு சிந்தும் வழுவழுப்புடன்
இருக்கவேண்டு மென்றாகிறது. அர்செர்மல்களெல்லாம் அரு
ளிச் செய்ததை ஒருபுறமிருக்க, எமது தேகம் என்ன வனப்
புடன் முன்னிருந்தது என்பது எமக்குத் தெரியுமல்லவா? எமது
இடது கையை மடக்கிவைத்து அதன்மேல் எமது முகத்தைச்
சாய்த்து ஒட்டிப் படுத்தால், தேகாதியந்தமும் ஜிம்மென்று
உணர்வுதட்டுகின்ற அந்த அளவு மிருதுவான வழுவழுப்பு
டையதாக இருந்தது. அப்படியிருந்த தேகம் இப்பொழுது
முழுக்க மாறிக்கொண்டே வருகிறது.

தகப்பனுடைய உயிர்ச்சத்தும் தாயினுடைய ரத்த
மாகிய ஊனும் கருவறையில் கூடிக் கலந்தல்லவா மனித
தேகம் உண்டாகிறது. ஈசனுக்கு அத்தகைய தேகம்

உண்டா? இல்லையே. ஆகவே 'தாயுமிலித் தந்தையிலித் தான்தனியன்' என்று கிரந்தங்களில் கூறியுள்ளது ஈசனின் அருப நிலையைக் குறிக்கவில்லை. இனிவர இருக்கிற அழியாத நிலையுகத்தில் ஈசன் ஏற்றுக்கொள்ள விருக்கும் நித்திய நீதித் திருமேனியையே அது குறிக்கிறது.

நீங்கள் பார்க்கிற இந்தத் தேகம் மாறி, புது வனப்புடைய நித்திய நீதிப் பொன்மேனி வரப்போகிறது. முதலில் இது காய்ந்து சருகாகும். பின்பு நடு பிளப்பாகப் பிளந்து விடும். அதிலிருந்து அழியாத சுவர்ணதேகம் உண்டாகும். அதுவே, தாயும் தகப்பனு மில்லாது உற்பவித்து எழும், ஈசனின் சுயரூப வடிவமாகும்.

உருமமே வவமதாய்ப் பூட்டு தந்து
ஊணதே குறைத்திடும் நூட்கு நாளம்—
........காய்ந்து சருகாகவே ....
அங்ஙமே தோன்றிடும் அடுத்த பாதி—
னேரொரு நாளிலே. கருவங்கந் நான்
நிர்மலன் இருப்பொட்டி நல்பிளப்பாய்—

என்று—ஜீவ மந்திர நாடியில் புசுண்டர்பிரான் கூறிவைத்துள்ளபடி- எமது தேகம் மாறி வருகிற அடையாளம் இந்நா வந்துவிட்டது. (அருகில் அமர்ந்திருந்த சபைக்கரசரை அழைத்துத் தங்கள் திருக்கரத்தை அவரிடம் நீட்டிக்காட்டி) 'கையினால் தொட்டுப்பார்' என்று உத்தரவிட்டார்கள். அவர் தடவிப்பார்த்துவிட்டுக் கண்களில் நீர் பெருக பிரமித்து நின்றார்.

தொடர்ந்து ஆண்டவர்கள்:- சொரசொரவென்று காய்ந்த இலையின் சருகு எப்படியிருக்குமோ அப்படி இந்த உடல் ஆகிவிட்டதல்லவா? இந்த நாழித்திட்ட அடையாளம் வரப்போகிறதைப்பற்றித்தான் மேலே கூறிய தீர்க்கதரிசனச் செய்யுள் உங்களுக்கு அறிவிக்கின்றது. 'இதுவரை யாரும்

உபயோகிக்காது, பதியவர்களுக்கென்று ஒதுக்கப்பட்டிருந்த உருமகாலநேர தவத்தில் அவர்கள் ஊணி னிலேகொள்வதற்கு றாக்குனுள் உணவானது குறைந்துபோகும். பிறகு பதியவர்களின் தேகமானது சருகுபோலக் காய்ந்துகொண்டே வரும். இது முற்பாதியில் னிகழும். அடுத்த பாதியில், னிர்மலனின் கன்னிவிராட் தவத்தால் கருவங்கம் னுல் பிளப்பாகும். அதைப் பிரட்டிக் கூட்டி ஆக்கித் தேவ தேகமாக னீதிப் பிரகாசத் தூலமாக மாற்றப்பெறும்' என்று திரிகாலர்கண்ட செம்மல் கூறியுள்ள தீர்க்கதரிசன வாக்கின்படி னடைபெறும் காலம் இதோ தலைவைத்துவிட்டது. அதற்கான பிருக்தம் என்ற கற்பகத் தவமும் கார்த்திகை முதல் னடந்தேறி வருகிறது.

அப்படிக் கருவங்கம் னுலாகப் பிளந்ததிலிருந்து தேவ தீர்மான னனைப்புடைய தேகம், தோற்றத்தில் வருவது, ஒன்பது மாதத்திற்குள் ஆகும். அந்த உதய தோற்றத்தைப் பற்றிக் காகபுசுண்டர்பிரானும் வசிஷ்டமகாமுனிவரவர்களும் உரையாடிக் கொள்ளுகிறார்கள். 'அந்த னித்திய னீதி அமரட்சி சுவர்ணத் திருமேனியின் பிரகாச எழிலினைக்கண்டு னீங்களுமா அச்சமடைவீர்கள்' என்று வசிஷ்ட பகவானவர்கள் வினவ, 'னுன் மட்டுமா, எம்மை உண்டாக்கிய ஞானத் தந்தையாகிய எங்களப்பனும் பயந்துதான் ஆகணும்' என்று புசுண்டர் பிரான் பதில் கூறுகிறார்கள். அப்படிப் பிரண்டு எழுந்துவரும் னித்திய னீதி சுவர்ண தேகத்திலிருந்து கொண்டு மாண்ட மனுக்களை மண்ணிலிருந்து எழுப்பி, தோன்றும் தீர்ப்பினிலேற்றி, சுவர்க்கத்திற்கு ஆகுகின்றவர்களை சுவர்க்கத்திற்கும் னரகத்திற்கு ஆகுகின்றவர்களை னரகத்திற்கும் தனித்தனிப் பிரித்து, அவரவர் உலகங்களுக்கு அனுப்பப்பெறுகின்ற னீதித் தீர்ப்பு னடைபெறும். யுகங்கோடி காலத்திலிருந்து ஜீவதேகத்தில் காத்துக்கொண்டிருக்கிற பாரவான்களுக்கு னெடுங்கால மகிழ்ச்சிக்குரிய னித்திய

முத்திதேகம் தரப்பெறும். இந்தப் பர ரகசியம் உலகத்திலுள்ளவர்களுக்குத் தெரியுமா? தெரியாது. ஊழித்தீர்ப்பு நீதித்திட்ட பிரம்மாதிக்க பெரிய வேலையில் நாம் தலை வைத்து இரண்டு மாதங்களுக்கு மேலே ஆகிறது. ஒவ்வொரு நாளும் அதற்கான கற்பகத் தவமும் வீறுகொண்டு ஏறி வருகிறது.

இப்போது நாம், இந்தக் காருண்ய உருவில் இருந்து கொண்டு, அவரவருக்குத் தகுந்தபடியெல்லாம் இரங்கி நின்று, முகங்கோணாதபடி அணைத்துக் கூட்டிப் பேசி ஆட்படுத்தி 'அன்னாட்டினுக்கு வித்தெடுக்கும் அருளாட்சியை' நடத்திவருகிறோம் அல்லவா? ஆம். ஆனால் அங்கே நித்திய நீதித் தேகத்திலே இந்தத் தாயுள்ளத்தின் செயலைக் காண முடியாது. சர்வமும் நீதிக்கோட்டில் மாறி, சத்தியம் ஒன்றே நிலைசாயாக் கூர்கொண்டு அரசு ஓச்சி நிற்கும். நீ பார்க்கும் இந்த தயாமூல தர்மதேகம் அங்கே இல்லை. இவ்வாறான வரப்பு கோடற்ற நெடுங்காலம் அழியாத, தலை யுக உற்பவ நடைமுறைச் செயலைத்தான், 'பதியவர்களின் மறைவு' என்று மின்னிக்காட்டி, புசுண்டர்பிரான் அவர்கள் தங்கள் கிரந்தத்தில் பல இடங்களில் கூறிவருகிறார்கள். 'இந்த யுகநீதிச் செயலானது, நடக்கவிருக்கும் நீதி எல்லை இது' என்று தெரிந்தா, நீங்கள் இந்த மெய்யில் வந்து தலைகொடுத்தீர்கள்? இல்லை. நினையாப்புரத்து ரகசியமாக விளங்கும் இது, நாம் அறிவித்ததால் அல்லவா உங்களுக்கு அறிய முடிந்தது? ஆம்.

வெகு விரைவில் இந்தப்பூமி பூராவும் சட்டுற குளோஸ் ஆகும். அரபிக்கடல் வரைக்கும் மேற்கேயுள்ள நிலப்பரப்பு, ஏகமாக எங்கும் தகதகவென்று அக்னிமயமாக வைக்கப் படும். உதயகிரிமுதல் அத்தகிரிவரை ஒன்றும் தப்பாது. நீதி உரு எவற்றை எல்லாம் சம்மதித்து ஏற்றுக்கொண்டதோ அவைகள் மட்டும் மிஞ்சி இருக்கும். பொய் அனைத்தும் சாடா அதாவது சிறிதுகூட மிச்சமின்றி முழுதும் அழிக்கப்படும்.

அவ்வாறு அழிந்ததன் பின், இந்த மெய் முனையானது, மகா கூர்கொண்டு எழுந்து பணிவிட்டு, அமலான்மை பெருக எங்கும் ஆட்சிசெய்ய நிற்கும்.

வானலோகத்தில் அங்கே சுவர்க்கம் உண்டாகுமென்றும், அதில் பெரியோர்கள் குடியேறி நித்தியமாக வாசம் செய்வார்கள் என்றும், அதே நேரத்தில் பாவிகள் நரகத்திற்குத் தள்ளப்படுவார்கள் என்றும், நீதித்தீர்ப்பு இவ்வாறான முறையில் நடைபெறுமென்றும் மக்கள் கதைபோல எண்ணிப் பேசிக்கொண்டிருக்கிறார்களே - அது நடக்கப்போகிற எல்லை, நீங்கள் உட்கார்ந்திருக்கிற இதே பூமிதான்.

ஆனிமாதக் கடைசியிலே அதாவது ஆடிமுதல் துவக்கத்திலே, ஊழிப்பிரளைய அமளி தொடுத்துவிடும். பிறகு தொடர்ந்து ஐந்து மாதங்களுக்கு அதன் கோர ஆட்சி நடக்கும். நிச்சயம், எங்கே பார்த்தாலும் பிணக்குவியலாக இருக்கும். முதல் முதலில் மக்களுக்கிடையில், நாட்டுக்கு நாடு, கலகம் உண்டாகும். அதனால் கோரமும் கொலையும் பூமியெங்கும் கூத்தாடி கடைசியில் மனுக்குலமே இல்லாத ஒரு முடிவுக்கு வரும். அதைத் தொடர்ந்து பிரளையம் தலை எடுக்கும். அது தலை எடுத்துவிட்டால் சத்துவங்கள் தாறுமாறாகிவிடும். மலை முதலானவைகள் தூசியும் தும்புகளாகப் பறக்கும்படி நிர்த்தூளியாகும். பூமியின் உள்பாகத்தில் இருக்கும் கந்தக அக்னிக் குழம்பின் தட்டைத் தூக்கி, பூமியின் மேல் பரப்பிற்கு வரும்படிச் செய்து, சூரியனை எல்லைப் பிரமாணம் அதாவது ஏறியிட்டி அளவு தூரத்தில் பூமிக்கு நெருங்கி வர இறக்கி, நட்சத்திரங்களைப் பிடுங்கி எங்கும் உதிரச் செய்து இப்படிக் கோர அமளிகள் யாவற்றையும் ஒன்று கூட்டி சர்வசங்கார ஆதிநீதி ஊழித்திட்டம் அமலாக்கப்படும்.

அக்னிப் பிரளையத்தின் முதல் எடுப்பிலேயே, கடலிலே ஒரு சொட்டு ஜலமில்லாமல் வற்றடிக்கப்படும். நாம் பார்க்

கும் இந்த மண்பரப்பில் எவ்வளவு உயிர்ச்சாதிகள் இருக்கின்றனவோ அதைப்போல ஐந்து மடங்கு உயிரினங்கள் கடலிலிருக்கின்றன- அவையாவும் சட்டுற அழிக்கப்படும். 'தாயுமிலித் தந்தையிலித் தான் தனியராக' வீதித்திருமேனி எழுந்து வருகின்ற னேரம் அதுவே. கலிப்பவகரப் பொய்யர்கள் புழங்கி வாழ்ந்த இடம் ஒரு துளி இருந்தால்கூட அது னித்திய வீதிப் புதுயுகத்தில் னிர்மானிக்கப்பெறும் பரிசுத்த பூமியைக் கெடுத்துவிடுமல்லவா? ஆர். ஆகவே சகல இடத்திலும் துப்புறவாகத் தேடிப்பார்த்து, பாவக் கலப்பு எங்கும், எதிலும் சிறிதுகூட இல்லாமல் தீயிட்டுக் கொளுத்தி சுத்திகரிக்கப்படும். ஆகவே இனி இந்தப் பூமியில்லை- வேறு பூமியாக, னித்தியத்திற்கான பூமியாக, மாற்றப் பெறப்போகிறது. அதே சமயம் பவகரக் கலிப் பொய்யர்கள் தங்கித் தண்டனைகளை அனுபவிக்கும் னரக பூமியானது தனியாகப் படைக்கப்படும். இவ்வாறுகப் பாவ உலகத்தை சர்வ சங்காரம் பண்ணுகின்ற அதிகோர அமளியின் அமலாகிய ஊழித்தீர்ப்பு வீதி னடவு முறையானது பதினொன்று மாதங்கள் னடக்கும். அதன் பின் தர்மயுகம் பிறக்கும்.

'மண்டலம் னடுனடுங்கித் துண்டுதுண்டாய் வெடிக்கும், னேர்வான் மொடு மொடுத்து னெற னெறென்றேசரியும், ஒருனாள் ஒரு இரவில் உலகம் கலவரித்துப் பெருங்கோரயளி கொண்டு பூமி கலந்துபோகும்' என்றும் 'இறைநிரு இறுதி வீதி னடவுமைப்பில் (ஆதிமெய் உதயபூரணம்- பக்கம் 423ல்) விவரித்துக் கூறிவைத்துள்ளவண்ணம் னடக்கவிருக்கும் கொடிய அமளியில் சிக்காது தப்பிக்க, வீதி யுகவித்துக்களுக்கென்று, கொஞ்ச அளவு பூமியானது பாதுகாத்து வைக்கப்பெறும். 'யுகவித்துக்கென்று ஒரு சிறிய திட்டானது தென்னிந்தியாவில் இருக்கட்டும்' என்ற புத்தபெருமானின் சத்திய வசனப்படி னிர்மாணித்து வைக்கப்பெறும். அந்த எல்லை னிமிதக்கும் இந்த உத்தியோவன சாலை பூமி

தான். ஆகவே ஆவி ஆடியிலிருந்து வெளிக்குவெளியே, அழி அவர் பூமியில் நீங்கள் வாழ்வது ஆபத்துத்தான்.

'பதியவர்கள், தாங்கள் முதலில் நித்திய வீறித் திருமேனியில் ஆகிக்கொண்டு, பிறகு அவர்கள் யார்யாரைத் தொட்டு எழுப்புகிறார்களோ அவர்கள் அனைவரும் நித்திய முத்தி தேகத்தில் ஆக்கப்பெறுவார்கள்' என்று காலங்கண்ட வசந்நரிஷி புசுண்டர்பிரானின் ஜீவமந்திரம் கூறுகிறது. அந்த சத்திய வீறி நடைமுறை நிகழ்கின்ற அதுநேரம், சூரியன் இல்லாமல் போக, கப்பிய கனத்தவிருள் ஏகமாக அரசாளும். அந்த இருளுக்கிடையில் ஆதியின் வீறித் திருமேனி யுகவித்துக்களில் சிலருக்கு, நல்ல பிரகாச ரூபத்தில் தெரியும். சில்பேருக்கு மங்கலாகத்தெரியும். இன்னும் சிலருக்கு, அதனுடைய தொனி மட்டும் கேட்கும். சில யுக வித்துக்களை மண்ணில்போட்டு மிதித்து, மறைத்துப் பின் எழுப்ப வேண்டியிருக்கும். இங்கு இதுபோது இந்தக் கருணைத் திருமேனியிடத்து வைத்திருந்த யதார்த்த ஒட்டுதல், அல்லது வஞ்சக ஒட்டுதல்களுக்குத் தக்கபடி அந்த இருள் அரசின்போது, உங்கள் ஒவ்வொருவர் நிலைமையும் இருக்கும்.

'சகலதுரைத்தனமும் அதிகாரமும் வல்லமையும் பரிகரிக்கப்பட்டு தேவனும் பிதாவுமாயிருக்கிறவரின் கையில் ராஜ்யம் ஒப்புவிக்கப்பெறும்.

முந்தின மனுஷனாகிய ஆதாம் பூமியிலிருந்து உண்டான மண்ணானவர். பிந்தினவர் வானத்திலிருந்து வந்த கர்த்தர்.

(1-கொரிந்தியர் 15-)

(ஆதாம்) என்ற ஒருவர் மூலமாய் மரணம் ஆண்டுகொண்டிருக்க, கிருபையின் பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள் நம் தேவனாகிய

ஒருவரால் நித்திய ஜீவனை அடைந்து ஆளுவார்களென்பது அதிக நிச்சயமாமே-

(ரோமர். 5)

என்ற சத்திய வேத வசனங்களிலும் -

வாய்ந்தகுரு அவராலே குண்டலி தன்
வரிசையுடன் காட்டியே பின்பாகத்தில்
பாய்ந்துமவர் உயிர்பெற்றும் எழுவ தற்கு
பார்ப்பவர்க்கும் அதிசயமாம் அதுவே யின்று
சார்ந்தவரை எழுப்புவதே பின்னால் கூடும்
சாட்சியே இதுவெல்லாம் புதுமை யன்றே-

என்ற ஜீவமந்திரச் செய்யுளிலும் இன்னும் இவைபோல் பலவாம் கிரந்தங்களிலும் காணப்பெறும் நீதினடவு ஆதிமூல னேர னடைமுறைகளைப்பற்றிய தீர்க்கதரிசனங்களை நீங்கள் படித்தும் கேட்டும் இருக்கிறீர்களே. ஊழிவிதியவன் விதித்துள்ளபடி அவை நடக்கும் காலம் இதோ எழுந்துவிட்டது.

மேற்கூறிய ஆபத்து அலங்கோல அழிவு நெருங்கி வரும் இந்த னேரத்திலே, உங்களுக்கு வேண்டியது, எம்மிடத்தில் வைக்கும் வஞ்சகமற்ற எதார்த்த சத்திய ஒட்டுதலாகிய உங்கள் அன்புப்பிடி ஒன்றுதான். உயிர்ப்பிடியாகிய அந்த ஒன்றே ஒன்று- உங்கள்பால் இருந்தால்போதும், உங்களுக்கு வேறு தவம் வேண்டுவதில்லை. 'தெய்வம் எதற்கு வேணும்? எவர் உதவியும் வந்து எட்டித் தீண்டமுடியாத ஒரு ஆபத்துனேரம் வருதே, அந்த னேரத்தில் வந்து உதவுகின்ற தேவ வல்லப சத்திய ரூபகமே தெய்வம். அவர்கள் உதவியை இப்பவே தேடிவைத்துக்கொள்ள வேணும்.' என்றும், முன்னோர் உங்களுக்குக் கற்பித்து வைத்தது, இந்த னேர னடைமுறை உபயோகத்திற்காகத்தான். உங்கள் முன்பாக பிரத்தியக்ஷத்தில் நடமாடிக்கொண்டிருக்கும் இந்தத் தேவஅங்கத்தில் நீங்கள் வைத்திருக்கும் இடையறு அன்புப் பிடியே, வரும் அமளி ஆபத்தினின்றும் உங்களை மீட்டு, யுக நீதி வெற்றி மேட்டில் ஏற்றிவைக்கும்.

உங்களுடைய வீடு மனை சொத்துச் சுதந்தரங்களின் மேல் நீங்கள் வைத்திருக்கும் அன்பைவிட, உங்கள் தாய் தந்தை பெண்டு பிள்ளைகளினிடத்தில் நீங்கள் அதிக அன்பு வைப்பது இயற்கை. உங்கள் தாய் தந்தை முதலியோர் தங்கள் கண்ணால் பார்த்த அளவிற்கு, தங்கள் கவனத்திற்கு எட்டப்பட்ட அளவிற்கு, தங்களால் முடிந்ததை, உங்களுக்கு உதவி செய்ய முற்படுவார்கள். ஆனால் அவற்றிற்கு மீறிய ஆபத்துவந்து அதில் நீங்கள் சிக்கிக்கொண்டால், அவர்கள் உதவி கிட்டுவது துர்லபம். அப்படியான ஆபத்து நேரத்திலும் கூட உங்களைவிட்டுப் பிரியாதிருந்து, உங்கள் அங்கக் குலங்கள் வேண்டிய உதவி செய்கின்றன. 'நம்மைக் குறைவாக நினைப்பார்களென்றோ, மேன்மையாகக் கருதிப் புகழ்வார்களென்றோ' நினையாமலும், எந்தப் பிரதிபிரயோஜனத்தை எதிர்பாராமலும், இரவு பகல் ஓயாது, உங்கள் ஏவலுக்குப் பணிந்து, அவை நடந்து வருகின்றன. அப்படிப் பணிந்து உதவி செய்துவரும் அங்கக் குலங்களும், எமனுடைய சந்நிதியில், அவனுடைய கோர அமலியை எதிர்த்து நிற்க முடியாமல், உங்களைக் கைவிட்டு விடுகின்றன. ஆனால் உங்களை ஆண்டுகொண்ட குருமூர்த்தமாகிய தேவ அங்கம் தான், அந்த ஆபத்து எல்லையில், அந்த நிர்கதி நேரத்தில் வந்து உதவ முன்னிற்கும். ஆகவே அத்தனிக்கருணைத் தேவ அங்கத்தின்மீது, எத்தகைய வஞ்சமில், கான்றெழுகும் அன்பு நீங்கள் கொள்ளவேண்டும்? அந்த ஒப்பற்ற அன்பு உங்களை எமன் கையிலிருந்து மீட்டு சிவன் கையகத்திலே ஆக்குவதால், 'அன்பே சிவம்' என்ற மந்திரவசனம், சிவபதிச் செயல்களால் எடுத்து வைக்கப் பெற்றுள்ளது. உங்கள் உடல் பொருள் ஆவி முதலியவற்றின் மேல் நீங்கள் வைக்கும் அன்பைவிட மேலோங்கிய நிகரற்ற அன்பு, அந்த ஜீவரக்ஷகராகிய 'தேவ அங்கத்தி'னிடத்தில் நீங்கள் வைக்க வேண்டும். இக்கானகச் சாலையில், ஜீவகாருண்ய ஜீவசிம்மா

சனத்தில் அமர்ந்து மறியுக ஜீவ ஆட்சி நடத்திவரும் அத் 'தேவ அங்கம்', உங்களைத் தமது அங்கத்தினர் என்று ஏற்றுக்கொண்டிருந்தால், எந்த உன்னத லக்ஷியத்தைக் குறி வைத்து அது அவ்வாறு ஏற்றுக் கொண்டிருக்கிறது என்று ஓரளவுக்கு உங்கள் அறிவுக்கு இப்போது விளங்கும். இந்த மேலாம்பர அறிவு உங்களுக்கு வரட்டும் என்றே காத்திருந்து இன்று இத் தேவரகசியத்தை வெளியாக்கினேம்.

122

(22-5-73)

ஆண்டவர்கள்:- பரிசுத்த ஜீவப்பிரயாணம் ஆனவர்களை மண்ணில் அடக்கம் செய்கிறோமே- அங்கு என்ன நிகழ்கிறது என்று தெரியுமா? (பொன்னரங்க ஆலய முன் முகப்பிலிருக்கும் ஆலமரத்தைச் சுட்டிக்காட்டி) ஒரு ஆலமரத்தின் வித்தை இம் மண்ணில் நாம் ஊன்றினேம். இதோ அது முளைத்து, வளர்ந்து, படர்விட்டு எழுந்து பெரிய மரமாகி நிழல் தருகிறது. அதற்கு வேண்டிய ரஸ்தை மண்ணானது, நேரம் தவருமல் ஊட்டி வளர்த்து, இந்த ரூபத்தில் ஆக்கிக் காப்பாற்றி வருகிறது. இப்படி கோடாகோடியான சிறிய பெரிய தாவர வர்க்கங்களை உற்பவிக்கச்செய்து அவற்றிற்குக் கால காலம் வேண்டிய ரஸ்தை அளந்து காப்பாற்றி வருகிறது. இன்னும் இந்த மண், தன்னிடத்தில் ஏற்படுகின்ற நெருக்கத்தால் தானே விளைந்து, தங்கத்தை உண்டாக்குகிறது. இத்தகைய மகா வல்லபமுடைய இந்தப் பூமியில், நிதியெனும் பொருளான மனுவின் நித்திய வித்தை அதாவது பரிசுத்த ஜீவப்பிரயாணமாகிய ஒரு மனுத்தூலத்தைப் புதைத்தால், நித்தியத்திற்கான ரஸ்தை அதற்கு சதா ஸப்ளை செய்து 'பொன்மேனி மின்வீசும் புகழுடர்பாக' அதை வளர்க்கிறது.

(ஆண்டவர்கள் தங்கள் திருமேனியைக் காட்டி) இது இப்பவே, இங்கு வெளியில் இருந்தபடியே, அந்த நித்திய

ர்ஸ்தை வெகுமயனமாகப் பெற்று மாறிவருகிறது. இதிலுள்ள ஒவ்வொரு கருவிகளும் மாறி மறைந்து, வேறு ரூபம், வேறு வல்லபம் எடுக்க ஆரம்பித்துவிட்டது. இன்னும் சில மாதங்களில் 'பதிமறைவு' ஏற்படும் என்று தெரிகிறது. அது விகழாவிட்டால், அன்னாட்டினுக்குரிய யுகவித்துக்களாய் மறுபிறப்புத் தேவ தூலங்களில் உலாவிக்கொண்டிருப்பவர்களின்மேல்– 'கொடிய இடிகளெங்கும் கோரங்கொண்டு விரிக்கும், கடிய மின்னலின் வீச்சால் கண்விழிக்கத்தெரிக்கும்' இவைபோன்ற இன்னும் பலவாம் ஊழிப்பிரளய அமளியானது வந்து மோதும்போது, வித்திரை போன்ற மயக்கத்தில் ஆழ்த்தும் விண்ணாட்டுப் போதையை அவற்றிற்கு ஊட்டி, அகால மரண ஆபத்தில் சிக்காது ரக்ஷிக்கும் ஆற்றலை, எம் கைவரலாக்கி, அந்த நித்திய வித்துக்களைக் காப்பாற்ற முடியாமல் போய்விடும்.

பச்சை மிளகாயை, காம்பிலிருந்து அடிவரை இரண்டாக அறுத்துப் பிளந்து அதன் உட்பாகத்தை எம் நாவில் வைத்தோம். சுள் என்று பத்தும் அதன் எரிச்சலான காரம் நாவிற்குத்தெரியுமே. அது இப்ப எமக்குத் தெரியவில்லை. இப்படியாக எம்முடைய அகப்புறக் கருவிகளில் எத்தனையோ மாறுதல்கள் உண்டாகியுள்ளன. எண்ணிப் பார்க்கும்போது இத்தனை என்று எமக்கு மட்டுப்படவில்லை. உங்கள் படிப்புக்கோ, உங்கள் ஆராய்ச்சிக்கோ, உங்கள் சயன்சுக்கோ எமது தூலத்தின் னடைமுறை இனி உட்படாது.

123

(24-5-73 முதல் 24 நாட்கள்- ஆண்டவர்கள்- ஆலயத்திற்கு எழுந்தருளாமல் திருமாளிகையிலேயே தவத்தில் இருந்தார்கள். 20-6-73 மாலை- தேவ மக்களின் முகம் பார்த்து அருளிச் செய்தது)

ஆண்டவர்கள்:- ஒரு அதி முக்கிய காரியம் நிகழ நிற்கிறது. அதற்கு வேண்டியனவாகிய சிலவற்றை, முற்கூட்டி யோசனை செய்து நடத்த வேண்டியிருக்கிறது.

பதி மறைவு வரும் என்று எதிர்பார்த்த செயலும் நேரமும் வர ஆரம்பித்துவிட்டது. இதுநேரம்முதல், எம்போக்கை அனுசரித்து, எம் விருப்பத்திற்கு ஏற்ப, நீங்கள் நடந்து கொள்ளவேண்டும். இந்த உடலைக் காப்பாற்றிக்கொள்ள எமக்குத் தெரியுமல்லவா? 'ஜல ரூபத்திலேயாவது ஆண்டவர்கள் கொஞ்சம் உணவு ஏற்றுக்கொண்டால் தேவலாமே' என்று நீங்கள் நினைக்கிறது சரி. ஆனால் அது 'பதிமறைவு'க்கான நாளை அதிகமாக நீட்டிவிடும். ஊழிவிதித்திட்ட நடைமுறையில் நீங்கள் குறுக்கிட்டு அதற்கு மாற்றமாக எதுவும் செய்யலாமா? உங்கள் முகத்துக்காக இரங்கி, உங்கள் யோசனைப்படி கொஞ்சம் நடந்தாலும் அது, நித்திய உலக உற்பவத்திற்கான எமது வேலைக்கு மாற்றமாக இருக்கிறது.

அதுநேரம் சந்நிதியில் இருந்த ஜெய்த்திருப்பணி மந்திரிகளில் ஒருவர்:- 'இனி தெய்வ உத்தரவுப்படியே நடக்கிறோம். இந்தத் தெய்வத்தூலம் நெடுங்காலம் – ஏன் – எப்பவும் எங்களுடன் இருக்கவேணுமே என்ற இச்சையாலும், அதற்கு ஒன்றும் நேர்ந்துவிடக் கூடாதே என்ற அச்சத்தாலும், இவ்வளவு நாளும் எப்படி எப்படியோ நடந்துவிட்டோம். மன்னித்து ரக்ஷிக்கவேணும் தெய்வமே- இனி தெய்வ கட்டளைக்கு சற்றும் பிறளாமல் நடந்துகொள்ளுகிறோம்.' என்று கண்களில் நீர் பெருக விண்ணப்பித்து நிற்க

ஆண்டவர்கள்:- (பேரிரக்கங்கொண்டு, தங்கள் தெய்வ மகவுகளைப்பார்த்து) நீங்கள் பயந்துபோய் எப்படியோ நடந்தீர்கள் என்பது எமக்குத் தெரியாமலில்லை. எமன் எம்முடைய ஆள் என்று நீங்கள் அறிந்ததுதானே? நாம் எப்படி ஏவு

கிறேமோ அதன்படி நடப்பவன்தானே? உங்களுக்கு என் பயா? நாம் நினைத்தால் கடல் திடலாகும், திடல் கடலாகும். எம்மால் ஆகாதது எது? எம்மைத்தான் இன்னார், இன்ன செயல் நடாத்த வந்துள்ளார்கள் என்று உங்களுக்கு நன்கு தெரியுமே. பின்னை ஏன் உங்களுக்கு அச்சம்வர வேண்டும்? சரி, போனதுபோகட்டும். இனிமேலாவது எல்லா விஷயத்திலும் எம் நோக்கை அறிந்து நீங்கள் நடக்கவேண்டும், சபை விரிந்து பிரம்மாண்டமாக ஆகிவிட்டது. செய்ய வேண்டிய காரியங்களோ பாரப்பெரிய பரப்புடையனவாக இருக்கின்றன. நேட்களை வீணாக்கிவிடக்கூடாது.

உணவு இல்லாவிட்டால், இந்த உடலின் பலம் குறைந்து விடும் என்பது எமக்குத் தெரியாதா? இப்பூமியிலுள்ள சகல உணவும் எமக்கல்லாமல், வேறு யாருக்காகப் படைக்கப் பெற்றது? எமக்கு உணவு தேவையானால் இன்னவிதமாக, இப்படி மயமாக்கிக் கொடுங்கள் என்று கேட்க மாட்டோமோ? எம் உள்ளே மகா அதிகாரண அதியற்புத காரியம் ஒன்று சதா நிகழ்ந்து கொண்டிருக்கிறது. அது எவர் அறிவுக்கும் எட்டப்படாதது. 'சுவையெலாம் விரிக்கச் சுவையெலாங்கடந்து சுருட்டி வைக்கப்பெற்று, சுயஞ்சுவை சுகிசுத்த சூதானமாக விளங்கி நிற்கும், ஏகநாயக தத்துவாதீத மென்னும் பரிபூரணப் 'புராதன கஜானாப் புதையலி'னிடமிருந்து எமது பசிக்கு வேண்டிய ஆகாரம், நேரத்துக்கு நேரம் சப்ளையாகிக்கொண்டே யிருக்கிறது. ஆகவே உங்களுக்கு அந்தக் கவலை வேண்டாம்.

இது நேரமுதல் நாம் ஒரு கட்டளையிடுகிறோம். அதன்படி நீங்கள் நடந்தால், நாம் சாப்பிடாமல் இருக்கும்போது நீங்கள் உணவு உட்கொண்டு வருவதில் ஏற்படும் பாவம் உங்களைப் பீடிக்காதபடித் துடைக்கப்படும். சாலையில் உள்ள அம்மக்கள் எல்லோரும்; வகைவகையாய் ருசி மணத்துடன் நிறைய சமைத்து எம் முன்பு கொண்டுவந்து படைக்க,

அதைனும் திருப்தியாகச் சாப்பிட்டபின் மிச்சமாக வைத்து விட்டதையே (அந்த உச்சிஷ்டத்தையே) நீங்கள் ஒவ்வொருவரும் சாப்பிடுவதாக இதுவே முதல் சங்கல்பம் செய்து கொண்டு சாப்பிடுங்கள்.

உலகம் முழுதும் பாவமே நிறைந்துவிட்டது. அதைச் சங்கரித்துச் சுத்திகரிக்க, அண்டப் பரப்பில் ஊழிப்பிரளயம் வருகிறது. அது வருவதற்கு முன்பாக- அண்டத்திற்கு ஒத்தது பிண்டம் என்பார்களே- அதற்கு இணங்க, காலகாலம் உங்களுக்கிடையில் புழங்கிய பலவித சம்பந்தத்தால் இத்தூலத்தில் ஒட்டிக்கொண்டிருந்த பவகரமாக, சென்ற 26 நாட்களாக இதனுள்ளே நடந்த பிரளயத்தால் நீங்கிவிட்டது. இனி கொஞ்சம் முன்னே பின்னே- சில நாட்களில்- உலகத்திலுள்ள கலி அரசு மாறி, தேவ நீதி ராஜாங்கம் ஸ்தாபிக்கப் பெறுவதற்கான ஊழித்திட்ட ஏற்பாடு உதயமாகும். அதுமுதல் சர்வ சங்கார பிரளய நீதி நடைமுறை துவங்கிவிடும்.

(தங்கள் திருமேனியைக் காட்டி) இது நித்தியத்திற்கு மாறியதும், தொடர்ந்து இதை உயிர்ப்பிடியாய் ஒட்டியிருந்த மெய்த்தூலங்களும் மாறும். நீ- தூங்கி விழித்து எழுகிறது போலவும், குளித்துவிட்டுச் சுத்தமான புது தோற்றத்தில் வெளியேறி வருவது போலவும், அந்த நீதித்தீர்ப்பு நடைமுறை இருக்கும்.

(இவ்வாறு அருளிச் செய்து கொண்டிருக்கும்போதே மறுபடியும் தியானத்தில் அமர்ந்து விட்டார்கள்)

124

1-7-73-காலை- ஆண்டவர்கள் திருமாளிகையின் தென்பாக முகப்பில் பூவலங்காரம் செய்யப் பெற்றிருந்த ஆசனபீடத்தில் அமர்ந்திருந்தார்கள். அது நேரம் ஒருவர் வந்து, புனல்ஜென்மத் திருநாள் கொண்டாட மெய்வழி நாராயணசாமி

அனந்தர் (அட்வகேட்- மெய்வழிச்சபையின் ஞானலய உதவி மந்திரி) வந்திருக்கிறார் என்று தெரிவித்தார்.

ஆண்டவர்கள்:- 'அவரைக் கூட்டிக்கொண்டுவா- அவரை ஒரே தூக்காய் தூக்கி, கயிலாயத்திலே போய்விழும்படி எறிகிறோம் பார். அடேயப்பா, அவர் கனத்த பெரிய உருவமாச்சே. வெகுகாலமாய் உணவில்லாமல் தவத்தில் இருந்து கொண்டிருக்கிற நம்ம ஆண்டவங்களால் அவரை எப்படித் தூக்கி எறியமுடியும் என்று நினைக்கிறீர்களா?' என்று திருமுகத்தில் இளநகை பூக்க அருளிச்செய்துகொண்டே, தங்கள் திருக்கரத்தை மேலும் கீழும் அசைத்துக்காட்டி, இப்படி ஆடிக்கொண்டிருக்கிற சுவாச ஆட்டத்தில்தானே அவருடைய முழுப்பலமும் இருக்கிறது- அதனால்தானே அவர் உடலும் நடமாடுகிறது? அந்த சுவாசத்தின் சுவிட்சு எம் கையில் இருக்கிறது. ஆகவே அவரை ஒரே தூக்காய் தூக்கி, எம் சொந்தப் பூமியாகிய ஓங்கார கயிலை நாட்டில் விசிறி எறிந்து, நாம் நினைக்கும் தவோன்னதத்தில் அவரை மாட்டிவைக்க முடியாதா? முடியும்.

உலகப் பாரக்கில் நீங்கள் இரவு பகல் ஈடுபட்டிருப்பதால்- உபதேச இரவில் நாம் கொண்டுபோய் வைத்த உன்னத நிலைப்பைவிட்டு உங்கள் ஜீவன், லேசாகவோ அல்லது சற்றுக் கூடுதலாகவோ பிரண்டு வேறு பக்கம் மாறிவிடுகிறது. அதை நேர் செய்து சீராக்கி, சரியான நிலைப்பில் மறுபடியும் இழுத்து வைப்பதற்காகவே ஒவ்வொரு அங்கத்தினரும் தனது புனல்ஜென்மத் திருநாளை வருஷந்தோறும் இங்கு வந்து கொண்டாடவேணும் என்ற ஏற்பாட்டை, நாம் எடுத்து வைத்தோம். எமது தவத்ததிகாரத்தால் ஆன்ம லோகத்தில் செய்யப்பெறும் இந்த ஜீவரக்ஷிப்புச்செயல், எந்தக் காலத்திலும் எந்த ஒரு தெய்வ சன்னிதியிலும் நடைபெறுவதாகும். இதை இவ்வளவு காலமாக நாம் வெளியாக்கவில்லை. தலைகாக்கும் இந்தப் பார ரகசிய செயலின் அறி

முக்கியத்தைப்பற்றி, பிரம்மோபதேசம் பெற்றுள்ள மெய்வழி மக்கள் எல்லோருக்கும், கட்டாயம் எடுத்துச் சொல்லுங்கள்.

(மெய்குண்டமென்னும் மெய்வழிச்சாலை குருக்ஷேத்திரத்தில், னமது தெய்வமவர்களின் பரிசுத்த ஆவியால், மந்திரச் சந்ததியாய் மறுபிறப்புப் புனல் ஜென்மம் பிறந்து, சுவர்க்க பதித் திருவாசல் திறப்பிக்கப்பெற்றுக் குடியேறிய திருவருள் சன்னிதியில் பலரும் கொண்டாடினார்கள். பிறகு உத்திரவு பெற்றுக்கொண்டு வெளியூர்களுக்குப் புறப்பட்டார்கள். அவர்கள் புறப்பட்டுப் போவதைச் சிறிது னேரம் கவனமாகப் பார்த்துக்கொண்டிருந்த)

ஆண்டவர்கள்:- அழிகலி வாழும் எல்லைக்கு இவர்கள் போகிற விரைவையும், வேகத்தையும் ஆர்வத்தையும் பார்த்தால், வரனிற்கிற அந்தக் கோர அமளி ஊழிநேரத்தைப் பற்றி இவர்கள் னினைவில் கிஞ்சித்துக்கூட கவலையே இல்லை என்று இட்டமாகத் தெரிகிறது. எவரொருவர் முகத்திலும் அதைப் பற்றிய அச்சமோ கவலையோ காணோமே!

'சர்வலோக சர்வவியாபக சர்வனேச சர்வசாட்சியாகிய இறைவன் இந்தத் துக்க உடலில், இந்தப் பித்த உடலில் இன்னும் எத்தனை னாளைக்கு இருக்கப்போகிறான் - எத்தனை னாளைக்கு இருக்கமுடியும்!' என்று கனிவாக அருளிச் செய்தபின் முகப்பிலிருந்து திருமாளிகைக்கு எழுந்தருளினார்கள்.

125

ஆண்டவர்கள்:- னாள்தோறும் னாம், பன்னலங்கார னன்னலம் தவழும் அழகொளிர் உயிர்க்களிப்பு வாய்மையை உங்கள் செவியினிடத்தே ஏற்றி, உங்களிடத்தில் மெய் அறிவு பிரகாசித்து எழும்பச்செய்து வருகிறதற்குக் காரணம், எம்முடைய தவ ஏற்றம் என்பது ஒருபுறமிருக்க, யார் னினை

விற்கும் எட்டாத இன்னொரு காரணமும் இருக்கிறது என்பதை இன்றுநாம் வெளியாக்கப் போகிறோம்.

எம் முன்னர் வந்து அமர்ந்து, எம்முடைய வார்த்தைகளைக் கேட்க ஆசைப்பட்ட ஒருவனிடம், நம் இந்த மெய்யைப்பற்றி விளக்கம் துலக்கமாகப் பேசுகிறோம். அவனும் ஆசையுடன் நன்றாகச் சிரத்தையுடன்தான் கேட்கிறான். அப்படிக்கேட்ட அவன் தலை, இந்த மெய்வழிக்குள் ஆகாமல், எழுந்து புறப்படுகிறான். மேலும், நாம்பேசியது அவனுடைய அறிவில்ப்போய்த் தைத்ததற்கு அடையாளமாக அவன் தேகத்திலோ, பேச்சிலோ, செயலிலோ ஏதும் காணப்படவில்லை. அதைக்கண்ட நீங்கள் 'இந்தக் கல்லுக்கு இந்தத் தெய்விக மெய்யானது எந்தக்காலத்தில் விளங்கப்போகிறது' என்று குறைகூறித் தூஷித்துவிட்டு உங்கள் உங்கள் வேலைகளுக்குப் போய்விடுவீர்கள். ஆனால் எமக்கு யாரையும் அப்படித் தூஷிக்க வருவதில்லை. அந்த நிகழ்ச்சியை, எம் மனமானது, அவ்வளவு லேசாக ஒதுக்கி, விட்டுவிடச் சம்மதிப்பதில்லை. 'இன்னும் கொஞ்சம் வேடிக்கை விளையாட்டாக அவனிடம் நாம் பேசியிருந்தால், அவனுக்கு ஒரு ஆசை ஏற்பட்டு, இந்த மெய்யில் சார்ந்து, ஒட்டிக்கொள்ள ஆர்வம் உண்டாகியிருக்கலாம். ஆகவே நாம் பேசும் முறையில், இதைஇதைக் கூட்டிக்குறைத்து, இன்னஇன்னவிதம் மாற்றி, வருபவர்களிடம் இனி நாம் பேசவேண்டும்' என்று எம்மிடமே நாம் குறை காணுவோம். எம் நெஞ்சகத்திலே அத்தகைய ஒரு வாத்தியாரை நாம் ஏற்படுத்தி வைத்திருக்கிறோம். அவரிடம் கேட்டுக் கேட்டுப் படித்துப் பேசுகிறதால்தான், இவ்வளவு அதிகாரராகரக எழிலோடு, ஓய்வு ஒழிவின்றி, கவலை சலிப்பின்றி, சதா எமது நாவு பேசிக்கொண்டிருக்கிறது. இதுநாள்வரை இந்த ரகசியத்தை நாம் யாரிடமும் வெளியாக்கவில்லை.

ஆண்டவர்கள்:- மாநெடுங் காலங்கண்ட இப்பெரும் பூமிப்பரப்பில், மனுமுனை துவங்கிய காலவரம்பிலிருந்து இக் கலியுகக் கடைவரை, ஆங்காங்கு உதயம் செய்து மெய்ஞ் ஞான ஜீவசுயராஜ்யத் துறையை நடத்திவந்த சிவராஜ மகத் துக்களின் ஆட்சி மாட்சியாகிய தெய்விக வசந்தம், இப்போது இந்த உத்தியோவனக் கானகத்துக்கு வந்துள்ள நிகரற்ற புதுவனப்போடும், வாடாத அமலாண்மையோடும் எப்போ தும் எந்த எல்லையிலும் வந்ததில்லை. நாமும் 112 வயதைக் கடந்தாச்சு. ஏற்கனவே எமக்கு இல்லாமற் போய்விட்ட உறக்கம், சுவாசத்தோடுகூட, சென்ற ஒன்பது மாதங் களாக உணவும் இல்லாமற் போய்விட்டதே- இது என்ன ஆச்சரியம்- உணவின்றி ஒரு தூலமா? நீங்கள் பார்க்க, இதோ அத்தகைய ஒரு தூலம், பேசிப் பாடி உலாவிக் கொண்டிருக்கிறதே- இப்படியான தவ வலுக்கொண்டு அது வந்துள்ளது, எந்த ஒரு செயலை நடாத்துவதற்கான திட்டத் துடன் வந்திருக்கவேண்டும் என்று நினைத்துப்பாருங்கள். நாம் வாழுகின்ற இந்தப் பூமிக்கு காலகாலம் மெய்ஞ்ஞான பீடங்கள் வந்தனவல்லவா? ஆம். அப்போதெல்லாம், தூலம் கடந்த காரணதேக அதிமகோன்னத அரூப எல்லையில் ஈச னுடைய கையில்தான், எமனை மிதிக்கும் வல்லபம் இருந்து வந்தது. மெய்ஞ்ஞானச் செம்மல்களாகிய பரவான்கள் தங் கள் தங்களின் ஓரறிவு உயிர் முனைப்பாடுகொண்டு, இத்தூல உடலின் உணர்வனைத்தையும் கைவிட்டு, 'ஏறுகின்ற கனன ரசக் குளிகை தாங்கி, எழில் பிறங்கும் சூக்குமத்தின் வாசி யேறி, பேருறும் காரணத்தேகம் ஏற்று' அந்த மகா பரிசுத்த அரூப எல்லையை அடைந்தார்கள். அவ்வாறு அடைந்தே எம படரைக் கடத்தாட்டும் வரமாதி வரத்தை ஈசனிடம் இறைஞ் சிப் பெற்று வந்தார்கள். நாமும் அதே தவப்பாட்டால்தான் பெற்றோம். அவ்வாறு பெறுவது எளிதான காரியமா? பல

ஆண்டுகாலம், தூல உணவின்றி குடல்கருக னின்று, எமது எலும்புகளெல்லாம் ஒரு சிறு குழந்தையினுடைய எலும்புகளைப் போல் இளகி வளையும்படி ஆகிய பின்னரே, எமனை மிகைக்கும் அந்த அதிவல்லபத்தை நாம் பெற்றோம். அதோடு நாம் நின்றுவிடவில்லை. இதுகாலம்வரை எட்டி ஏறி எவரது மெய்ப் பதச்சுவடும் படாத, அரிதினும் அரிய பிரம்மாதிக்க எல்லைகள் பலதும் அடைந்து, யாவராலும் பெறுதர்க்கியலாத நீத நெறிக் கோடாயிதங்களாகிய தெய்விக சன்னத முத்திரைகள் அனைத்தையும் எமது கைவரப்பெற்றோம். அப்படிப் பெற்று- நீங்கள் உங்கள் கண்ணேர் பார்க்க- ஒரு தூல உருவில்- எமனை மிகைத்து வெற்றிகொள்ளும் அதிகாரம், தன்னைச் சரணடைந்த மக்களிடத்தே எமன் நெருங்க முடியாதபடி உத்திரவிடும் அதிகாரம், இந்த உத்தியோவனச் சாலைக்கு இதுநாள் வந்துள்ளது. இந்த அதிசோபன முத்திபாலிப்பு தெய்விக வசந்தத்தை உங்களுடையதாக ஏற்று, பலன்பேறு பெற்ற உங்கள் தலை, என்ன தவோன்னதத் தலை என்று நீங்கள் நினைத்துப் பார்த்ததுண்டா? ஒருபாடு மில்லாது, இலவசமாக, இப்பரிசுபதம் உங்களுக்கு வாய்த்துக் கொண்டதே, இது என்ன தெய்வக்குபேரப் பூவண காலம் பார்! இதைப்பற்றிக் கேட்டும், அறிந்தும் இந்த அரிய சந்நிப்பைக் கைநழுவ விடுவது எவ்வளவு பாழான தோசித்தன பீடிப்பிநல் இருக்கவேண்டும்?

ஒருவன் இந்தப் பூமியில் வாழ்ந்து வந்த வயது வாழ்நாளெல்லாம், எத்தனையோ ருசியோடும், மணத்தோடும், சுத்தத்தோடும் பலரகமான உணவுகளைத் தின்றானே- அப்படித் தின்றவன் செத்ததும் கொடிய பிணநாற்றம், எரி நரகம் புகப்போகும் அடையாளமாகிய படுநாற்றம், அவன் உடலில் கட்டி ஏறுதே- ஆகவே அவன் காலமெல்லாம் தின்றது நரகலா? இல்லையே- மணத்தோடு கூடிய சுத்தமான பலரக உணவுகளல்லவோ சாப்பிட்டான்- இவன் குடியிருந்த இந்தத்

தூல உடலுக்கு இங்கேயே இவ்வளவு அவமான, அசிங்கியம் ஏற்படுகின்றதென்றால், அங்கே னிரந்தரமாகக் குடியேறும் னரகலோகத்தில் என்ன பயங்கர னாற்றம், னீங்கா அவஸ்தைப் பீடிப்பில் இவன் சிக்கவேண்டியிருக்கும்? இதைப்பற்றிய சூடு சொரணை எவருக்கும் இல்லையே—

னரகத்திற்குத் தாக்கலாகி விட்டால் எக்கோடி காலத்திற்கும் மீட்பு என்பது இல்லையே— அங்கு கொதிக்கின்ற னரகலையும், படுனாற்றச் சிறையும், தன் கோரப் பசியைத் தணிக்க ஏங்கி ஆசைப்பட்டு கெஞ்சிக்கேட்டுக் குடிக்க ஆலாய்ப் பறக்கவேணுமே— இந்தத் தூலத்தில் இப்போது இருக்கும் பசியைப்போல் ஒன்பதுமடங்கு கோரமான தகித்து எரியும் பசியாயிற்றே அது. னரகத்தில் இவனுக்குத் தரப்படும் தேகமோ இம்மனுத் தூலம் போல ஒன்பது மடங்கு வல்லபமும், உணர்ச்சியும் கொண்ட அழிவில்லாத தேகமாச்சே— சாவென்பது அதற்கு எப்பவும் கிடையாதே. இப்படியான ஒரு னெடுங்கால அவஸ்தை தேகம் பெற்று, னீங்காததும் முடிவில்லாததுமாகிய கொடிய, அடுக்கடுக்கான வேதனைகளை அனுபவிப்பதற்காகவா இந்தப் பெறற்கரிய மனித உடலை ஈசன் இவனுக்குத் தந்தான்? இல்லவே இல்லை. தனக்குத் தரப்பெற்றுள்ள இந்த அறிவுத் தூலத்தைக்கொண்டு னித்திய மெய்யை அறிந்து அடைந்து; மாறாத பேரின்பம் அனுபவிக்கும் அதிவல்லப சுவர்ண தேகத்தில் குடியேறி, எக்கோடி காலத்தும் மகிழ்ச்சிகர வாழ்வில் இருக்க வேணுமென்றே இவன் படைக்கப்பெற்றான். அந்தப் பொன்னுடம்பு னித்திய வாழ்வைப்பெற தனித்து இவன் எந்தப் பாடும் படப் போவதில்லையே— இந்தா, ஈரோடு லக்காபுரத்தில் ஒரு பெண் பிள்ளை, அறுபத்தி மூன்று வயதான பண்ணாடிச் சாதியில் பிறந்த ஒரு மகள், பெற்றாளே இந்தப் பரிசுபதம்! செத்தவுடன் கட்டி ஏறி வருமே படுனாற்றம், அது அவள் மேனியில் எங்கே? இல்லையே! விரைத்து விறுவிறுத்து பேய்க்கோல அடையாளம் முகத்தில் வந்து விடுமே, அதைக் காணோமே! னேர் மாற்றமாக மணம் வீசிற்று— இளமை தவழ்ந்தது— தேகம் மெல்லிய வாழைத்தண்டுபோல் துவண்டு காணப்பெற்றது. இப்படியான அருங்காரணச் செயலை இந்த மண்

னுலகில் எப்பவாவது எங்கேயாவது யாராவது கண்டதோ கேட்டதோ உண்டா? இல்லை. இவ்வாறான வேத விரத நீதி விதி ஜீவசேகர மதி நிதி அருட்கொடை மூலபண்டாரர், ஊழி விதி நிர்ணயப்படி, இக்கலியுகாந்தக் கடைக் கோடியில் இந்த உத்தியோவன பூமிக்கு வந்து, கொடியேற்றிக் கூவி அழைத்துக்கொண்டு நிற்பது, அழி உலக மனுசதளங் களுக்கு ஏன் தெரியவில்லை?

'நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்'

என்ற சிவநிதிச் செல்வர் மணிவாசகப்பிரானின் சிவபுரா ணப் பகுதியை ஓதி சபையில் ஒரு அங்கத்தினர் பேசி வரும் போது–

ஆண்டவர்கள்:- 'பிறந்து இளைத்தேன்' என்று சொல்லி யுள்ளார்களே. இந்த மனித உடல் எடுத்ததும், இதற்கு முன்னே நும் எந்தப் பிறப்பில், எப்படி இருந்தோம் என்ற நினைவு யாருக்காவது வருவதுண்டா? இல்லை. அப்படியிருக்க 'பிறந்து இளைத்தேன்' என்று அவர் எதைக் குறிக்கின்றார்? இந்த மனித உடலில் வந்தபின், குழந்தைப் பருவமுதல் அறிவு மேலும் மேலும் வளர்ந்து வருகின்றதல்லவா? ஆம். அவ்வாறு வளர்ந்துவரும்போது அவருடைய மனநிலை இருந்த பல படித்தரமான தன்மைகளைப் 'புல்லாகிப் பூடாய் மரமாய் பல்மிருகமாய் பறவையாய்' என்று அவர் குறித்த தோடு, அந்தந்த மனநிலையில் தாங்கள் பட்ட துன்பங்களை 'எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்' என்றும் குறித்துள் ளார்.

அதிருக்கட்டும்- எம்மிடம் வருவதற்கு முன் நீ ஒரு கல் லாக இருந்தாய் என்று உனக்குத் தெரியுமா? தெரியாது.

அது னேரம் ஒரு சிலையை அதாவது ஒரு கல்லைத்தானே தெய்வமாக வைத்து நீ வணங்கிக்கொண்டிருந்தாய்? ஆம். உன் தெய்வமே கல் என்றால் அதைவிட மட்டமான கல் அல்லவா நீ? அப்படிக் கல்லாயிருந்த உன்னை, எமது அறிவாகர அருளமுத ஊற்றில் படியவைத்து மாற்றி, உன் உள்ளத்தைக் கனிவித்து, தேவனைப் பிறப்பித்தோம். நீ அப்போது கிடந்த அறிவற்ற நிலையில், உனக்கு மறுபிறவி தர நாம் பட்ட நெடும் பாட்டின் வழிமுறையை நீ அறிய வில்லை. அறியவும் முடியாது. இப்படிக் கல்லாய் இருந்த ஒரு வனை மனிதனுக்கிப் பிறகு வல்ல சுரராக்கி, முனிவராக்கி, தேவராக்குகின்ற அரிய தவத்திக்கச் செயலையே 'பிரம்ம வித்தை' என்று முன்மறையாதிகள் பேசிவருகின்றனர்.

மேலே கூறிவந்துள்ளபடி மறுபிறப்பெய்திய தேவ மக்களுக்கு, தங்கள் தேகமாகிய காயத்துள்ளே நின்று கமழுகின்ற பஞ்ஞாட்சர ரூபியாகத் திகழும் வாசவி, நேருக்கு நேர் தரிசனையிலுள்ளாள். ஆகவே அப்பரதேவியினிடத்தில் அவர்களின் நினைவு சதா ஒட்டி, உயிர் ஆட்டம் நிகழ்வதால், அவர்களினது பிராணனின் அசைவை, ஐயறிவு ஜீவர்கள் விடும் மூச்சு என்ற வார்த்தையால் குறிக்காமல் 'சுவாசம்' என்று தனி நாமம் தந்து சிறப்பித்துக் கூறினர்கள். ஆனல் மெய்நிலை அறியாதவர்களுக்கு மூச்சுக்கும் சுவாசத்துக்கும் உள்ள வித்தியாசம் தெரியவராது.

'சு- மந்திரக்காளி' என்று மக்கள் பேசுவதை நீங்கள் கேட்டிருப்பீர்களே! ஆகவே 'சு' என்ற அக்ஷரம் சுகம் அளிக்கும் மந்திரவாசம் என்று பொருள் படுகிறது.

வாத்தியார் ஊமைபோல் பேசாமலிருந்தால், அவரது ஆற்றல், கல்வி வல்லமை உனக்கு எப்படித் தெரியும்? பேசினல்தானே தெரியும். அதுபோலவே பிரம்மோபதேச எல்லையில்தான் மறைமொழி மன்னவாகிய உன் குருகொண்டவர்களின் தனித்த தெய்வ ஆற்றல் உனக்குத் தெரியவரும். பிறகுதான் தெய்வ அன்பு உன்பால் உண்டாகும்.

★★★★★★★★★★★★★★★

வான்மதிக் கொரல்
தொடர்ச்சி

127

பிரம்மாதிட்சா ௵ ஆனி மீ 25 உ திங்கள் (9 - 7 - 73) காலே அருளப்பெற்ற பிரம்மோதய சாலே ஆண்டவர்கள் வாக்கியம்:-

ஒரு அதிசய புதிய மனிதன் னீ

மனிதன் வீணுக்காகப் படைக்கப்படவில்லே. னித்திய வஸ்துவாகிய அறிவு இவனுக்குள் வைத்துப் படைக்கப் பெற்றிருக்கிறது. ஆகையால் இவனும் னித்தியன். இவன் சாவதே கிடையாது. இதை னிரூபிக்கவே ஞம் வந்துள்ளோம்.

எழுவகைத் தோற்றத்தைப் படைத்தானே— அவற்றில் - யானே முதல் எறும்புகடை எண்பத்து ஞன்கு னூருயிரம் ஜீவராசிகளில் - ஏதாவது சாவைப்பற்றி னிணேக்குதா? அல்லது னிணேக்கத்தான் முடியுமா? முடியாது - ஏன்? அவைகளுக்கு அறிவு என்கிற இந்த மாணிக்கம் கொடுக்கப் பெறவில்லே. ஆனல் அவைகளுக்கெல்லாம் கொடுக்கப் பெருத மேலாம்பரமான சக்தி - அறிவு – மனிதனுக்கு மட்டும் பிரத்தியேகமாகத் தரப் பெற்றிருப்பது, இவன் சாவைப்பற்றி னிணேக்கவே தான். இந்த அரிய னிணேப்பே இறுதியில் இவனுக்குப் பெரும் லாபகரமாக விளேகிறது.

வெள்ளேக்காரன் ஞட்டில் கடும் குளிர். தரையில் உட்கார முடியாது. உள் அங்கி, சொக்காய், கோட்டு டை காலர், கம்பளி னிஜார், கம்பளி மேஜோடு, தடித்த

பூட்ஸ் இவையெல்லாம் அணிந்து நாற்காலியிலேயே உட்கார்ந்து காலை எப்போதும் தொங்கப் போட்டு இருப்பது பழக்கம். ஆனால் நம் நாட்டில் ஒருவன் அவனைப்போல கடும் வெப்பத்திலும் உடை அணிகிறானே எதற்கு? தன் சொந்த உடல் வசதிக்குக் கூடப் பங்கம் விளைவித்துக்கொள்கிறான். கேவலம் பொய்மதிப்புக்காகத் தன் உடலையே இம்சைப்படுத்திக் கொள்வதா? என்ன தோசித்தனம் – அவன் மாடமாளிகை கட்டிக் கொண்டிருக்கிறான். நாம் எளிமையாக இருக்கிறோம்; அதனால் நமக்கு ஏதாவது உடல் வசதி குறைந்துவிட்டதா? நம் தமிழ் நாட்டில்தானே எளிமையாக உடுத்தி இப்படித் தரையில் சம்மணம் போட்டு உட்காருகிறோம். உடலுக்கு எவ்வளவு வசதியாகவும் சுகாதாரமுமாக இருக்கிறது. இவன்கள் நினைப்பது, செய்வது, தேடுவது, அனைத்து வேலைகளும் இவனைச் சாவுக்கே துரிதப்படுத்துகின்றன. பெரிய உத்தியோகஸ்தன் என்று சொல்லிக்கொள்பவன் ரூ. 1000 கொடுத்து வேலூரில் ஆபரேஷன் செய்துக்கொள்கிறான். எதற்கு? பிழைக்கிறதற்கா? எல்லாம் கடைசியில் சாகிறதற்கேதான். மனிதனைப் படைத்தது சாவைப்பற்றி நினைக்கவேதான். இவனுக்கு வாய்மையும் படிப்பும் கொடுத்ததும் சாவைப்பற்றிப் பேசவேதான். இந்தச் செயலையே சதா நினைப்புக்குக் கொண்டு வருவது மகா மகா முக்கியம். 'இதை நினைக்காதவன் மனிதனல்ல' என்று இதை எடுத்துப் பேசினவர்களுக்கு இடைஞ்சல் செய்யும் உலகமாகயிருக்கிறது. ஆனால் இதைப்பற்றிப்

பேசினவர்கள் அனைவரும் ஜீவப்பிரயாண மானுர்கள் - இதைப்பற்றி நினைக்காதவர், பேசாதவர் அனைவரும் சாவுப்பிரயாணமானுர்கள்.

இது உலகத்தில் முடியாத காரியம், இதைப் பேசுவதே தப்பு என்று நஸ்திகன் முடிவுக்கு வந்து விட்டான். நனைக்காதகாடு உழவுக்காகுமா? ஆகாது - இவ்வளவு விஸ்தீரணமான பூமியில், இந்தப் பிரம் மாண்ட உலகில், நம் எல்லையைத் தவிர, சாவைப்பற்றி யாரும் நினைப்பதும் இல்லை, பேசுவதும் இல்லை. இது சிறு அவாந்திர இடம், அங்கு இருப்பதுபோல் மாட மாளிகை கூடகோபுரங்கள் இல்லை; ஆகையால்தான் இதைச் சிறிதாக நினைக்கிருன். சாவை இவ்வளவு முக்கியமானது என்று சதா நீ நினைக்கிருயே, அந்த நினைப்பே அங்கு கிடையாது. நினைக்காவிடில் அதைப் பற்றிய பேச்சு வராது. பேச்சு இல்லாவிட்டால் செய லில்லை. ஆகையால் முடிவில் வீணுகிப் போகிருர்கள்.

ஈசன் மனுவை எந்த உன்னத செயலுக்காகப் படைத்தானே அந்த செயல் எல்லைக்கு வந்தவன் நீ. மனிதனை இந்த ஒரே ஒரு வேலைக்காகவே படைத்தும், தனக்கு இதில் சம்பந்தமில்லாமல் ஆக்கிக்கொள்கிருன். உலகில் வேறு எங்கும் இல்லாததான — சாவை நினைத்து அதனுல் வரும் லாபகரத்தை நீ நினைக்கிற படியால் — உன் நினைவு புதிது, உன் செயல் புதிது - இவ்வாறு உன் வாழ்வு எல்லாமே புதிது, ஆகையால் இன்று காலை முதல் நீ ஒரு புது மனிதன். மற்ற உயிர்ச்

சாதிகளுக்கு இதை நினைக்கவே முடியாதே. ஈசன் உன்னை எதற்காக நினைத்துப் படைத்தானோ அந்த எல்லைக்கு வந்தவன் நீ. உலகில் இது வேறெங்கும் இல்லாததாலேயே இது ஒரு அதிசயம் – ஆகவே, நீ ஒரு அதிசய புதிய மனிதன்.

என்று சாவா வரம் தந்து சாயுச்சியக் குன்றேற்றும் நம் குலதெய்வம் பிரம்மோதய சாலை ஆண்டவர்கள் திருவாய் மலர்ந்தருளினார்கள் –

128

பிரம்மாதீட்சா ௵ ஆனி மீ 26 ௳ செவ்வாய்க் கிழமை (10 – 7 – 73) காலை: ஆண்டவர்கள் வாக்கியம்:

800 ஆண்டுகளுக்கு முன்னதாகத் தோன்றிய வேதாந்தத்தேசிகர், "மெய்விரத மான்மியம்" என்ற தலைப்புக் கொடுத்து "தொண்டையெனும் மண்டலத்தில்" தமிழ் நாட்டில் எழுந்தருளுவார்கள் என்று தீர்க்கத் தரிசனமாக எம் வருகையையும் செயலையும் பாடியிருக்கிறார்களே! என்ன அதிசயம்! எம் கூடவே இருந்து பிரத்தியக்ஷத்தில் இங்கு நீ அனுபவித்துக் கொண்டிருந்தும் உனக்கு இதைப்பற்றி ஒரு வார்த்தை கூடப் பேசவரவில்லையே. அவர்கள் உன்னைப்போல் ரூபத்தில் இங்கு கூடவே இருக்கிறதுபோலல்லவா எழுதியிருக்கிறார்கள். இதைத் தம் தவப்பாட்டினால், ஞானக் கண்ணால், 'புண்ணியத்தில் நிகரில்லா விரதம் பூண்டதால்' கண்டு களித்ததை எழுதிவைத்துள்ளார்கள். நாம் இதைப்பற்றிச் சொல்லும்போதுமட்டும் உன் நினைவு

இங்கு உட்காருகிறது. சற்றுக் கண் சிமிட்டினாலும் இதை மறந்துவிடுகிறாய்.

இவன் சாவாவரமாகிய னித்திய னல்வாழ்வு பெற வேண்டும் என்று ஒரு ஆயுட்கால மெல்லாம் அரும்பாடு பட்ட அந்தத் தெய்வத் திருமேனியருக்குத் தீங்கிழைத்த வன்கள் முடிவு என்ன ஆயிற்று? அவர்கள் ஜீவப் பிரயாணமானார்கள். இவன்களோ சாவுப் பிரயாண மாகி மீளா னரக தண்டனைக்கு ஆளானான்கள்.

னிஜமாகக் காது படைத்தவன் இங்கு வந்து சேர்ந்துகொள்வான். இந்த அரும் பெரும் அத்தியா வசியச் செயலைப் பேசவேதான், இதற்குப் பிரயோசன மாகவேண்டும் என்றேதான் இவனுக்கு வாய்மை படைக்கப்பெற்றது. வயிறு வளர்க்க வாய்மை தேவை யில்லையே. மற்றைய எந்த ஜீவராசிக்கும் இந்த வாய்மை கொடுக்கப்பெறவில்லையே! இந்தப் பெரும் ஆபத்திலி ருந்து மீட்படையவேதான் இத்தகைய அருமையான அங்கக்குலங்களையுடைய மானிடதேகம் உனக்குக் கொடுக்கப்பெற்றது.

ஒரு பணக்காரனை, ஒரு அரசனை, னீ என்ன வென்று னினைக்கிறாய்? ஒசத்தியாக இருக்கிறான், செல் வாக்காக இருக்கிறான், அம்சமாக இருக்கிறான் என் றெல்லாம் னினைக்கிறாய். னீயும் அவனும் ஒருமாதிரி யாகத்தானே படைக்கப்பெற்றீர்கள் - ஒரே உரு, ஒரே வஸ்து, எல்லாம் ஒன்றுபோலவேதான் - னாமும் எல்லோரி டத்தும் ஒன்று போலவேதானே பேசுகிறோம் -

இருந்தும் அவன் காதில்மட்டும் ஏன் இது படவில்லை? காரணம் அவன் பொய்ப்பொருளைப் பெரிதென்று மதிக்கிறான். நீயோ மெய்யான பொருளை அவ்வாறு மதிக்கிறாய். நிஜமான பொருளைக் கொடுத்துத்தானே மெய்யை வாங்க முடியும். அந்த நிஜமான பொருள், அழியாத செல்வம் அவனிடம் இல்லை - ஆகையால் அவன் நிஜமான பணக்காரன் அல்ல - அல்லவே அல்ல-அவஸ்தைக் காரனே - மெய் மதித்தனம் ஒன்று தான் வரநிற்கிற அந்த அமளி நேரத்தில் உன்னை ரக்ஷிக்கும்.

இதுவரை ஈசன் அரூபமாகத்தான் இருந்தான். ஆனால் ஈசனுக்கு இன்ன இன்ன அடையாளம் இருக்கிறது என்று படித்திருக்கிறாய். சங்கு சக்கரம் ஏந்திய வர் என்றும் சூலம் வேல் தாங்கியவர் என்றும், படித்திருக்கிறாய். ஆனால் அதை யாரும் பார்க்கவில்லை - இதுநேரம் ஒரு திருமேனியர் இந்த சன்னத அடையாளங்களைத் தங்கள் திருக்கரங்களில் ஏந்தி வந்திருக்கிறார்கள் என்றால், அவர் யார்? சாக்ஷாத் அந்த ஈசன் தானே-இப்படியெல்லாம் கேள்வி கேட்டு அறிவைத் தூண்டி இந்தக் கலியன் நினைவை இந்த மா பெருஞ்ஞெயலுக்குத் திருப்பவேண்டியிருக்கிறது.

இவனது ஜீவ ரக்ஷிப்புக்காக மனுக்கோலத்தில் அனுப்பிய தனது திருத்தூதர்களை யெல்லாம் இவன் இம்சித்துக்கொண்டே வருகிறான் என்பதை உணர்ந்து மாநெடுங்காலமாக அரூபத்திலேயே இருந்த அந்த

ஈசன் இன்று இறுதித் தீர்ப்பு நடத்துவதற் கென்றே உன்னைப்போல் மனுக்கோலம் தாங்கிவந்திருக்கிறார்.

கற்ப கோடி காலங்களாக வந்த வந்த ஒவ்வொரு செம்மலும் இந்த மெய்ப்பயிர் ஏற்றுவதற்காகத் தானே அரும்பாடு பட்டார்கள்-ஆனால் ஒரு சிறு கூட்டத்தைக்கூட அவர்களால் உண்டாக்க முடியவில்லையே. இப்போதோ, எப்போதும் சுமங்கலமாகவே இருக்கும் பெருவாழ்வுபெற்ற 67 சாதிகளடங்கிய ஒரு ஊரையே உண்டாக்கி யிருக்கிறோமே. மேலும் உலகில் பல ஊர்களிலும் இந்த நித்திய சுமங்கல மெய் பரவி யிருக்கிறதே. சதுர்யுகத்திலும் எப்போதும் நிகழாத இந்த ஆச்சரியம் இப்போது நடக்கிறதெனில், இது ஏதோ நிச்சயமாக ஒரு முடிவு காலமேதான் என்று உங்கள் நினைவிற்குப் புலப்படவில்லையா? என்று

ஞானதாந்தப் போத புராதன முதுமொழித் திருவருள் புதுமை சிந்தும் பிரம்மோதய மெய்வழிச் சாலை ஆண்டவர்கள் திருவாய்மலர்ந் நருளினார்கள்.

—

3-12-72 பரிதாபி ஸ்ரீ கார்த்திகை மீ 18உ ஞாயிறு
பிர்ம்மோதய ஆண்டவர்கள் வாக்கியம்

129
வேதத் தலை இரகசியம்

உலகத்திலுள்ள மனுத்திரள்கள் அனைத்திற்கும் ஆங்காங்கு வந்த வேதத்தின் தலை ரகசியம் இன்னதென்று சொல்லுகிறோம் – கேளுங்கள்.

இவன் தேடி வைத்திருக்கும் எந்த அமலாண்மையும், எந்த குபேர சம்பத்தும், எந்த அறிவு ஆற்றலும், எந்த ஒரு உதவியும் வந்து எட்டித் தீண்ட முடியாத தலமே–ஒருவனை எமன் வந்து சந்திக்கும் அந்தத் தலம்.

ஒருவருடைய திருக்கரம் அந்தத் தலத்திற்கு ஏறி எட்டி வந்து, "இவன் நம்மவன், நாம் இவனைக் கவனித்துக் கொள்ளுகிறோம்" என்று எமன் கையினின்றும் ஒருவனைத் தப்புவித்துப் பரமபத சுவர்ணபதிக் காட்சியில் புகுத்தாட்டி வைக்கும்போது – அவனுக்கு அது திருத்தலம் ஆகிறது. அப்போது அவன் எல்லாம் உடையவன் ஆகிறான். அத் திருத்தலத்தின் உதவியைத் தேடாமல், அந்தத் தலத்தில் தவறுகிறவன் எப்பேர்க் கொத்தவனாய் இருப்பான்?

சபையோர்: எல்லாம் இழந்தவனாய் இருப்பான்.

ஆண்டவர்கள்: அவனும் எல்லாம் உடையவன் தான்! எதில்? நரக அவஸ்தையில் வரம்பு கோடு காண முடியாத காலம் சிக்கித் தவிப்பதில்!

130

(பிரம்மதீட்சா ஹூ ஆடி மீ 28 உ. வெள்ளிக்கிழமை அருளப் பெற்றது)

மனு உடலாகிய இது, பச்சை மாமிச தேகம் - இதையே னித்திய தேகமாக மாற்ற முடியாது - மண்ணுக்குள் இதைப் போட்டு மிதிச்சே னித்திய தேகம் ஆக்கவேணும்- இப்படியே இதுனாள்வரை னடந்து வந்நது - ஆனல் இப்போ இந்ந எல்லேயில் உனக்கு ஜீவன் முத்தியோடு தேகமுத்தியும் அளக்கப் பெறுகிறது - அதற்குத் தகுதியாக இந்ந மெய்யில் னீ ஒட்டியிருக்க வேண்டும் அல்லவா?

தேக முத்தியாகிய பரிசுபதத்தைப் பெறுவதற்கு மாமிச உணவு ஆகவே ஆகாது - மாமிசம் உண்பது ஈனம் என்று உன் மனதிலேயே படுகிறதே - அப்படியிருக்கப் புலாலே ஒதுக்கி மகிழ்ச்சியாக இந்த மெய்யோடு ஒட்டி வந்நால் என்ன? இன்னும், எவனே சமைக்கிருன் - விற்கிருன் - கிளப்பில் - அதை வாங்கித் தின்னிருன் - வெளியூரில் கிளப்பில் சாப்பிடாமல் எங்கேசாப்பிடுவது என்று கேட்கிருன் - என்ன ஜவாபா? எமன் வரும்போது ஜவாப்பு சொல்லு பார்க்கலாம்.

எமன் அணுகா அரும் பெரும் செயலே னுவு ருசியாகிய அற்ப இச்சைக்குக் காவு கொடுப்பதா? உன் எண்ணமே ஈனத்தைத் தருவித்துத் தருகிறது. எம்முடைய இந்ந வார்த்தைக்கு எல்லா வேதமும் சாட்சி சொல்லுகிறதே!

புலால் உண்பவன் மிலேச்சன் - அப்படியான மிலேச்சனை இனியும் ஒதுக்கியேதான் வைப்போம். இது- நிச்சயாதி நிச்சயம் - மாமிச உணவால் உன் தேகத்தில் எவ்வளவோ தீங்கு விளையுது - அதோடு உன் கீர்த்தியும் மாறுகிறதே - அபகீர்த்தி யுடைய அதிகச் செலவு வேறே செய்கிறதா? ஒரு பாடும் படாத உனக்கு இந்தத் தேக முத்தி வந்து வாய்க்கிறதே - அதற்கு - உன் மனசே அசுத்தம் என்று சொல்லுகிற புலால் உணவை நீக்கிப் பரிசுத்தமாக இருக்கக்கூடாதா?

இந்த மெய்யில் ஆகியும் மாமிசம் தின்னுகிறவன் நரகலைத் தின்கிற மிலேச்சனே ஆவான் - பலம் வருதாமே பலம் - ஒரு சாண்டோவை ஒரு வண்டியில் மாட்டுக்குப் பதிலாகப் பூட்டி ஓட்டினல் இழுப்பானு? மாடு மாமிசமா தின்னுது - அது வைக்கோலைத் தின்று அவ்வளவு பலமாக இருக்கிறதே- அதைப்போலப் பலம்பெற இவனும் வைக்கோலைத் தின்னட்டுமே.

பன்றி, மலம் தின்பதால்தான் அவ்வளவு பலமாக இருக்கிறது. பாம்பு கடித்தாலும் விஷம் ஏருத அளவு பலமாகக் கொழுப்பு மயமாக இருக்கிறது - அதற்காக அதன் உணவை யாராவது விரும்புவார்களா? மெய்வழிக் குலத்தில் பிறந்தும் புலால் உண்ணும் மட்டமான நரனுகப் போனுல், எமன் கடைசியில் உரசிப் பார்ப்பானே - அப்போது என்ன செய்வாய்?

புலையர் என்று மக்களில் வைத்துச் சிலரை ஒதுக்கி வைத்தது, ஆடு மாடு உரித்துத் தின்று உழலும் அவர்

களுடைய அந்த அசுத்தச் செயலால்தானே? இது இப்ப உங்கள் அறிவுக்குப் புலப்படுகிறதல்லவா? நும் இவனை எமன் அணுகாச் சத்திய பரிசுத்த ஆகாயத்தில் தூக்கி வைக்கிறோம். ஆனால் இவனோ தன் செயலால் படுபாதாளத்தில் பாய்ந்து விழுகிறான் - எம் எண்ணத் திற்கு மாற்றமாக னடக்கிறவன் எங்கே போவான்? னரக அவஸ்தைக்குத்தான் போவான் - மகா பலம் உள்ள பிரம்மாண்ட தோற்றமுடைய யானை தழை குழையே தின்கிறதல்லாமல் மலைப்பாம்பையா தின்னுது? இல்லையே -

யார், என்ன, எப்படிச் சொல்லிக்கொண்டாலும் சரியே-மாமிசம் சாப்பிடுவோரை நும் இனி இந்தச் சத்திய தேவ் பிரம்ம குலத்திலிருந்து ஒதுக்கித் தள்ளியே வைப்போம் - வைக்கிறோம். இப்போதிருந்து வணக்கத்தின்போது - மெய்வழி ஆண்டவர் திருக்குழாம் என்பதற்கு னீங்கள் 'ஓங்க ஓங்கவே' என்று கூறிவந்ததை - இனி -'பரிசுத்தமாக ஓங்க ஓங்கவே' என்று சொல்லி வணக்கம் முடிக்கவேணும். னம் தேவ மக்களுக்கிடையில் மாமிசம் சாப்பிடும் அசுத்தம் கூடவே கூடாது - மாமிசம் தொடாத பரிசுத்தம் ஓங்க ஓங்கவே - என்று னம் பரிசுத்த பிரம்ம குலாதிபர்களின் தனித்தந்தை சாலை ஆண்டவர்கள் திருவாய்மலர்ந் தருளினார்கள்.

131

(பிரம்மதீட்சா ஹு ஆவணி மீ" 1 உ அருளப்பெற்றது)

உங்கள் எல்லோருக்கும் இன்று முதல் ஒரு விரதம் வைக்கிறோம். மூன்று வருஷத்திற்கு என்று முன்பு வைத்ததையே இப்போது ஒன்பது மாதத்திற்கு அதாவது முக்கால் வருஷத்திற்கு என்று குறைத்து வைக்கிறோம். இன்று முதல் உன் மனைவியை உன் கூடப் பிறந்த இளைய சகோதரி என்று நீ நினைத்துப் புழங்க வேண்டும். உன் மனைவியும் உன்னைத் தன் கூடப் பிறந்த அண்ணன் என்று நினைத்துப் புழங்கவேண்டும். திருமணம் ஆகப் போகிறவர்களுக்கு இந்த ஒன்பது மாத விரதத்தில், திருமணத் தேதி இன்னும் ஒரு மாதம் கழித்து வருவதால், ஒன்பதில் ஒருமாதம் குறைந்து, எட்டு மாத விரதமே ஆகிறது. மூன்று வருஷ ஜீவரஸ்து உங்கள் கையில் இருக்கவேண்டும் என்று முன்னே சட்டம் ஏற்படுத்தி ஒரு கட்டுமானம் வைத்தோம் அல்லவா? அதை இப்போது நினைவு கூருங்கள் -

மூன்று வருஷ ஜீவ ரஸ்து உங்கள் கையில் இருக்கவேண்டும். கம்மியாக இருந்தால் நிச்சயம் அந்த அமளி நேரத்தில் யாராயிருந்தாலும் அவஸ்தைப் பட்டே தீரவேண்டும். பால் சுரக்கிறவர்களுக்கும் கருப்பிணிகளுக்கும் அந்த நேரம் கொடிய அவஸ்தை நேரமாக இருக்கும். முத்தர்கள் பதித்த சித்திபுரமாகிய இந்த நீதி நகரத்தில், அதாவது நம் சாலை எல்லைக்குள் அவர்

கள் இருக்கலாகாது. இருந்நால் இந்நப் பூமியும்சேர்ந்நு அதமாகும். னீங்களும் அதில் மாட்டிக்கொள்ள னேரும். அப்படி னேர்ந்நால் னும் மட்டும் துண்டாக உங்களை விட்டு ஒதுங்கிக்கொள்வோம். ஆகவே, அவர்கள் இத் தேவ பூமியைவிட்டு வெளியேறவே வேண்டும். அவர் கள் இங்கே திரும்பி வரவும் கூடாது. இங்கிருக்கும் னீயும் இத் தேவ சட்டத்தை மீறியவர்களுடன் யாதொரு தொடர்பும் கொள்ளக்கூடாது. தொடர்பு கொண்டால் உன்னையும் அது இழுத்துவிடும் – ஜாக்கிரதை!

னீ எப்பொழுதும் எம் னினைவிலேயே ஒட்டி இருக்க வேண்டும். பிரளையனேர அவஸ்தையிலிருந்நு தப்பிப் பிழைக்கிற ஆண் பெண் எல்லோரும் மேற்சொன்ன பத்தியத்தில் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். வெளி உலகத்திற்கும் இத் தேவபூமிக்கும் இடையில் வித்தி யாசம் தவத்தளவில் வைத்து எவ்வளவோ கோடா கோடி இருக்கிறது. அது உனக்குத் தெரியாது. னீ இருக்கவேண்டியது இந்நப் பத்தியமாகிய ஒரு எண் ணத்தில்தான். வயோதிக மானவர்களுக்கும் பால்யமாக இருக்கிறவர்களுக்கும், ஆண் பெண் எல்லோருக்கும் ஒரே சட்டம்தான். ஓர் அற்பனேர னினைவுதானே அது– ஏன் அதை மாற்றிக்கொள்ளக் கூடாது? ஆண்கள் கௌ பீன சுத்தராயும், பெண்கள் தங்கள் மறைவிட சுத்த ராயும் இருக்கவேண்டும், பிழைக்கிறவர்களுக்கு இந்நக் கட்டுமானம் வேண்டும். னும் இப்போது உங்களுக்கு உத்திரவிட் டருளியதை னீங்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் இது உங்கள் னினைவில் படியும்.

இப்படி முன்னே நம் மூன்று வருஷம் என்று வைத்ததைக் கால் பங்கு ஆக்கி முக்கால் வருஷம் என்று இப்போது வைக்கிறோம். மீதி முக்கால் பங்கு, இரண்டே கால் வருஷம் என்ன ஆகிறது? அதை ஈடு செய்ய நம் எம் தவத்தைப்போட்டு நிரப்புகிறோம். முந்தி எடுத்து வைத்த விரதத்தை மேலும் ஞாபகத்துக்குக் கொண்டு வாருங்கள் – முன் வைத்த சட்டம் என்ன என்று கவனி யுங்கள் –

இன் நேரத்திற்கு வேண்டிய சத்திய ஒழுக்கத் திற்கு இணங்கி நடக்காதவர்கள் இங்கு இருந்தால் நல்ல பதார்த்தத்தோடு கூடிய உணவில் கொஞ்சம் நரகலை வைத்தது போல, அவ்வளவும் வீணாகப் போய் விடும். தீ ஒரு துளிதானே பட்டது. அது எல்லா வற்றையும் அல்லவா எரித்துவிட்டது. அதுபோல் ஒரு தலையானது சத்தியக் கேட்டில் இருந்தாலும் அந்தத் தீங்கு எல்லோரையும் பற்றிக்கொள்ளும். எம்முடைய இந்த வார்த்தைகளை மலைபோல எண்ணிக் கைக்கொள்ள வேண்டும். இது மகா முக்கியம். கர்ப்பக் குடலானது திருகித் திருகித் துண்டாடி வாய் வழியாகக் கக்கும் நேரம் வருகிறது. உலகம் கண்டிராத ஒரு அரிய பெரிய காரியம் நடக்கப்போகிறது. அதை நின்று முட்டித் தாங்குகிறவர்கள் தாங்குகிறார்கள். பாரதூரமாக நினைத் தால்தானே அது பெரியதென்று தெரியும். அழிய நிற்கிற அந்த பூமிக்கும், நம் இருக்கிற இந்தச் சத்திய பூமிக்கும் இடையே உள்ள வேறுபட்ட அடையாளம் இதுதான். இந்தச் சத்திய ஒழுக்கமே நம் வாழும் இந்தப் பூமிக்கு ஒரு வேலியாகும்.

உன் யோசனை, குயுக்தி எல்லாம் அந்த நீதி உலக உற்பவ காரியத்தில் செல்லாது. ஆதி பிரம்மத்தின் வேத நாத ஒலி இது - பேதகமாக எண்ணிவிடாதே. அப்படி எண்ணினயேயானல் உன் தலை அழிவுக்கே போகும். மறுபிறப்புப் பெற்றுள்ள உங்களுக்கு இந்த ஜாக்கிரதை கட்டாயம் வேணும்.

ஆண் பெண் அடங்கலுக்கும் இந்த விரதத்தின் உணர்ச்சி அழுத்தமாக இருக்கவேண்டும் - அதிலும் பெண்களுக்கு நிரம்ப இருக்கவேண்டும். புருஷன் இச்சை நினைவால் பக்கத்தில் நெருங்கினல், நம் விரதம் எடுத்து வைத்திருப்பதை ஞாபகப் படுத்தி, இடித்துச் சொல்ல வேண்டும். ஒரு நிமிட நேர நினைவுதானே- அதை எளிதாக மாற்றிக்கொள்ள முடியுமே. மாற்ருவிட்டால் ஆபத்தோ அளவு கடந்ததாய் வருமே- மீளமுடியாதபடி மாட்டிக் கொள்ள நேருமே. அடுப்புத் தீயில் போட்ட கொட்டாங்கச்சி சிர்ரென தீப்பிடித்துச் சீறுமே, அப்படி இந்தச் சட்டம் மீறியவர்கள் சுவாசத்தில், வரும் பிரளைய அமளி நேரத்தில் செஞ்ஞுவாலை சீறும். அதுநேரம் என்ன செய்வாய்? உஜார் - —பத்தியத்தை முறித்துவிட்டு இச்சைகொண்டு பக்கத்தில் நெருங்குவதை, கொதிக்கிற வடைச் சட்டியின் எண்ணெயால் முகம் கழுவுகிற கொடிய வேதனையைப்போல் ஆயிரமடங்கு அவஸ்தையை அனுபவிக்கத் தயாராகிறேம் என்று நினைத்து ஒதுங்கவேண்டும். ஒரு சிறு நேர நினைப்பாகிய அதில் தப்புவது லேசுதானே. சித்திரை மாதம் இன்னும் எவ்வளவு காலம் எட்டியிருக்கிறது. ஒன்பதே

மாதந்நானே. அதுவரை சத்தியமாக புருஷன் தன் மனைவியை உடன் பிறந்த தங்கச்சி என்றும், மனைவி தன் புருஷனை உடன் பிறந்த அண்ணன் என்றும் நினைத்தே புழங்க வேண்டும். எம் மக்களாகிய அவ்வளவு பேரும் – ஜாடா எல்லோரும் – இப்படியே இந்தப் பத்திய விரதம் கட்டாயமாகக் கைக்கொள்ள வேண்டும்.

கிழவன் இளமையாக வருகிறது என்றால், பிரளய அவஸ்தை பேரின்ப மகிழ்ச்சியாக மாறுகிறது என்றால், அது என்ன சின்னக் காரியமா? காலையில் விதைபோட்டு மாலையில் பலன் எடுக்கவருகிறது என்பது முடியக் கூடிய காரியமா? இந்தச் செயல்கள் முடியக்கூடியதே அல்ல என்றுதான் எல்லோருக்கும் நினைக்க வரும் – அப்படி நிஜமாகவே உண்டாகி வரக்கூடியதாக- மண், தண்ணீர், காற்று, ஆகாயம் முதலிய எல்லாம் புரண்டு வரப்போகிறது. அந்த நித்திய பூமியில் உங்களை ஆக்கவே எம்முடைய இந்த நெடுங்காலப் பாடு.

இந்த மனிதனை ஒரே அழகுடைய யௌவன வயதில் வைப்பதாயிருந்நால், அதுவும் பிணி மூப்புச் சாக்காடு அணுகாத ஒரு சுத்த நித்திய மேனியில் ஒரே அளவில் எக்கோடி காலத்திற்கும் வைப்பதாயிருந்நால், அது எப்படியானதாக இருக்கும்! இப்பொழுதுள்ள பறவை மாடு மரம் ருசி பசி அனைத்தும் மாறி, ஒரு புதிய உலகமானது நித்திய அழகினை உடையதாய் உதயமாகப் போகிறது. அதில் உங்களைப் புகுத்தாட்டவே எம்முடைய இந்தத் திட்டம். இதுநேரம் முதல் நீங்கள்

னெய் பால் என்று வலுவான தீனி தேடிச் சாப்பிடக் கூடாது. உடலில் ரத்தம் அதிகமாக ஊறும்படிச் செய்கின்ற எதையும் உண்ணுதீர்கள். மனதிலே பிரளைய பயங்கரம் பதிந்திருந்நால், அதோடு கொஞ்சும் வைராக்கிய எண்ணமு மிருந்நால் இது ஒரு பெரிய காரியமா? இதில் தூசி அளவு சிரமங்கூட இல்லேயே - அப்படி யில்லாமல் தீனி வெறி மேலோங்கி இருந்நால், அது னேரம் அவஸ்தை னிச்சயம் வந்து சந்திக்கும்.

இப்போது னும் வைக்கும் இந்ந விரதம் உன் எண்ணத்தை விட்டு ஒரு னிமிடம் மாறினாலும், னீ எக்கோடி காலமும் எம்மைக் கைவிட்டு விலகவேண்டியதாய் வந்துவிடும்; எம்மிடம் கிட்டி, ஒட்டி, னெருங்கிச் சதா அருகிலேயே இருந்நாலும், உன் னினைவு தடுமாறிய அந்ந னிமிடம் முதல் விலக்கப்பட்டுத் தொலை தூரத்தில், அவஸ்தைக்குள் எட்டித் தூக்கிஎறியப்படுவாய். இந்நா-கற்பகோடி காலத் துன்பமாகிய னரக அவஸ்தை ஒரு புறம் - லேசாக வரும் இச்சை னினைவை மாற்றிக் கொண்டு பேரின்ப முத்திக்கான எம் சட்டப்படி னிற்பது ஒரு புறம் - இவற்றில் உங்களுக்கு எது வேண்டும்?

பெண்கள்தான் இதில் மிக்க சாக்கிரதையாய் இருக்க வேண்டும் - அந்ந னெடி னேர இச்சை னினைவு உன் எண்ணத்தில் லேசாகப் படரும்போதே, அந்ந னினைவைப் பக்தி வைராக்கியச் செருப்பால் அடித்து விலக்கினுல் என்ன? அது என்ன, முடியாத காரியமா? கருப்பம் ஏற்பட்டது முதல், பால் ஊறிப் பால் னிற்கும் காலம் வரையும், அது உன் உடலில் சனியனுக னின்று

தீங்கைத் தொடரச் செய்யுமே — அது இங்கே தெரிந்ததும் எம்மைவிட்டுக் கட்டாயம் விலக வேண்டியதாய் வந்துவிடுமே - அப்போ விசனப்பட்டுப் பிரயோசனமா? ஆகவே, அந்தத் தீங்கிலிருந்து இப்பவே தூர விலகு.

வியாபாரம் செய்ய மனைவியை விட்டுப்பிரிந்து இரங்கூனுக்குப் போவதில்லையா? அதுபோல, வியாபாரம் செய்ய ஒன்பது மாதம் போய்விட்டதாக நினை. இந்தச் சத்திய விரதத்திற்கு மாற்றமான நினைவு வந்து, புருஷன், மனைவி ஒருவரை ஒருவர் நெருங்கும் போது, அங்கே நானும் குறுக்கே இருப்பதாக எண்ணிக்கொள். உடனே அந்த அழி நினைவு மாறும் — அந்த இச்சை நினைவு வந்தாலே போதுமே - உடனே உன் தலையில் சூடு அடிக்கும் - ஜாக்கிரதை.

இந்த விரதத்தைக் காப்பாற்ற நீ போடவேண்டிய முதல் வேலி, உன் தீனியில் நீ வைக்கும் சாக்கிரதை தான். நெய் என்றும், பால் என்றும், சாப்பிட்டு அதனால் ரத்தம் ஊறி, உடலில் கொழுப்பை ஏற்றுகின்ற தீனியைக் குறைக்கவேண்டும். அரிசி பருப்பு காய்கறி எதுவாயிருந்தாலும் பசிக்காக அரை வயிருகச் சாப்பிட வேண்டுமே ஒழிய, ருசிக்காகவும் உடலில் பலம் ஏற்றுவதற்காகவும் உன் வயிற்றில் வைத்துத் திணிக்கக் கூடாது. கண்டதைக் கடியதைத் தின்னவே கூடாது. இப்போதிருந்து, ஒத்தைக் கயிற்றில் தொங்குகிறதாக நினைத்து இந்த ஒன்பது மாதங்களையும் கழிக்கவேண்டும் — பிரளய அவஸ்தையினின்று தப்பிக்க இது

ஒன்றே வழி. நும் எம் பசிக்குச் சப்பாத்திக் கள்ளியையே தின்று வந்தோமே- ஒருநாளா, இரண்டுநாளா- பல வருஷங்கள் அப்படித் தின்றோமே- அதை அறுத்துத் தின்பதற்கு உபயோகித்த கத்திகூட பிறை வடிவமாகத் தேய்ந்துபோச்சே- அப்படி நும் இருந்ததால் எமக்கு என்ன தீங்கு வந்து விட்டது? ஒரு தீங்கும் வரவில்லை- மேற்கொண்டு எம் அறிவு மெய்க்கூர் கொண்டு மலைபோல வளர்ந்தது. இதோ மறுமுறையும் சொல்லுகிறோம்- உன் உடலில் ரத்தம், கொழுப்பை மேலும் மேலும் ஏத்துகிற தீனியை நிறுத்து- பலசாலியாக வேண்டுமென்றுதானே நெய், பால் என்று யாரும் தின்கிறது - பலசாலியாம் பலசாலி! இவனை என்ன கட்டிடத்திற்கு விட்டமாகவா, சட்டமாகவா போடப்போகிறீர்கள்? எம்முடைய இளமை காலத்தில் கடிசான பார் வேலையெல்லாம் பழகினோமே- அப்போது கம்மஞ்சோறு, பழைய கஞ்சி இவற்றைத்தானே சாப்பிட்டோம்- எமக்குப் பலமில்லாமலா போச்சு? காட்டில் நும் உழுதுகொண்டிருக்கிற சமயத்தில் பானையில் கம்பஞ்சோறு கரைச்சு வரும்- அந்தக் கஞ்சியை எம் கையில் ஊற்ற, மிளகாய், வெங்காயம் இதில் ஏதாவதொன்றை கடித்துக்கொண்டு வாங்கி வாங்கிக் குடிப்போம்- நெய், பால் ருசிபுசியாகவா சாப்பிட்டோம்- இல்லையே- அதனால் சக்தி குறைந்தா போச்சு? பகலெல்லாம் வெயிலில் நின்று ஓயாமல் பாடுபடுவோம்- களைப்பே இருக்காது - பலம் வரும் என்று தின்பது வெறி நினைவுதான். ஆட்டுக்கறி வேண்டாமென்றால் நெய், பால் தேவலாம்

கோழிக்கறி வேண்டாமென்ருல் முட்டை சாப்பிடலாம் என்று னினைக்கும் உன் குயுக்தியை விடு - எரிகிறதைப் பிடுங்கினுல்தான் கொதிக்கிறது னிற்கும் - னெய், பாலென்று ருசி புசியாகச் சாப்பிடுகிற தீனியைத் தள்ளாமல் னீ இந்நப் பத்தியத்தை எளிதாக னினைத்து னடந்நால் - உன் தலை தொலேஞ்ஞே போகும். ஆகவே, சாலையில் உள்ள ஆண் பிள்ளைகள் அவ்வளவு பேரும் ஒன்ருகக் கூடிப் புழங்கிப் பழகி இதைப்பற்றி எடுப்பெடுத்துப் பேசவேண்டும். அப்படியே பெண்களும் ஒன்ருகப் புழங்கியும் பழகியும் இந்ந விரதத்தைப் பற்றிப் பேசவேண்டும். சதா இந்ந னினைவாக னின்று, வரும் தீங்கைத் தடுப்பதில் எம்மோடு இணக்கமாக னில்லுங்கள் - இதை உங்கள் எல்லோருக்குந்நான் சொல்லுகிறேம் - காது கேட்குதா?

அனந்நாதி தேவர்கள்: அப்படியே சாக்கிரதையாக னின்று சத்தியமாக னடப்போம் என்று ஆரவாரிக்க-

தொடர்ந்து ஆண்டவர்கள்:— எம் னினைவுக்கு ஒட்டி இணக்கமாக இல்லாவிட்டால், எம்மை விட்டுத் தூரப்பட்டு னைசமே ஆவீர்கள் - சாக்கிரதை! மூன்று வருஷத்தைப் பங்கிட்டுக் கால் பங்குதானே பத்தியம் வைக்கிறேம். முக்கால் பங்கிற்கு எம் தவத்தை அள்ளிப் போட்டு னிரப்புகிறேமே. இந்நச் செயல் உலகமெல்லாம் சேர்ந்நாலும் னடக்கக் கூடியதா? ஒன்பதே மாதம் தானே இந்நப் பத்தியம் - உடன் பிறந்ந தங்கை

என்று மனைவியைப் புருஷனும், உடன் பிறந்த அண்ணன் என்று புருஷனை மனைவியும் நினைத்து நடந்தால் தப்பிப்பது எளிது-கட்டாயமாக அப்படியே நினைத்துத் தப்பித்துக்கொள். ஒருவர் ஆயிரம் பவுன் கொடுக்கிறார்- அதற்குப் பதிலாக இவன் ஒரு அரைக்காசு கடுதாசி அவருக்குத் தருகிறான் - அதுபோலத்தான் நீ எடுக்கும் பாடு இந்தச் செயலுக்கு. யுகங்கோடி காலம் நடக்காத செயல், எந்தக்கோடி காலத்தும் கிட்டாத வரவு, இதோ கிட்டுவதற்கு நிற்கிறது. அதைப் பெற நீ என்ன பாடுபடப்போகிறாய் - மலையையா புரட்டப் போகிறாய் - இல்லையே - அல்ப இச்சை வரும்போது அதைக் காரித் துப்பிவிட்டு எம் உத்திரவுக்கு எம் பக்கம் திரும்பு என்று சொல்லுகிறோம் - இந்த அற்ப முயற்சி கூடச் செய்யமுடியாத தோசி நித்திய உலகுக்கா ஆகப் போகிறான் - இல்லை - இரண்டேகால் வருஷ பத்தியப் பலனை எம் தவப்பாட்டுத் தனத்தால் நிரப்புகிறோமே! நீ முக்கால் வருஷம் அதாவது ஒன்பது மாதம் எம் உத்திரவுக்குப் பத்தியமாக இருக்கக் கூடாதா? சாதிக் குதிரைக்குச் சாடையாகத் தட்டினால் போதும் - சண்டிக் கழுதைக்கு என்ன செய்தாலும் வராது - எமக்கு யார், என்ன சொன்னார்கள் - உங்கள் பாட்டையரைச் சந்தித்த அதே க்ஷணத்தில் சர்வத்தையும் விட்டுவிட்டுப் புறப்பட்டுப் போனோமே - உன் பாடு அப்படியா? இல்லையே -

சாக்கிரதை - யாராயிருந்தாலும் சரி - இந்த விரதம் தவறியவர்களின் சுவாசத்தில் தீயில்போட்ட கொட்டாங்கச்சி சீறுவதுபோல் அக்கினி குமுறிச் சீறும் -

நிரிக்குடல், கர்ப்பக்குடல், வாய் வெளியே கக்கும்- இப்படியான அவஸ்தையில் படாதபாடு பட னேரும் - அது மட்டுமா - கற்பகோடி கால னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரவு அடியோடு தொலைந்து போய்விடுமே - எம்முடைய இந்த வார்த்தைகளை எளிதாக னினைத்தால், கத்தியை எடுத்து உன் கழுத்தை னீயே வெட்டிக்கொண்டது போல் ஆகும் - உஜார் - ஞம் எடுத்துவைத்த இந்த ஒன்பது மாத விரதத்தில் னீங்கள் எல்லோரும் உயிர்ப் பிடியாய் னிற்பீர்களா? (னிற்போம்). அவ்வளவு பேருக்கும் இதைச் சொல்லவேண்டும் - அழுத்தமாக, ஆத்திரத்தோடு எடுத்துச் சொல்லவேண்டும். (பெண்கள் பக்கம் திரும்பி) உங்கள் காதில் விழுகிறதா? னீங்களும் சொல்லுங்கள்-சின்னகாரிய மல்ல. தவறுதல் ஏற்பட்டால் மண்டை னொறுங்கிப்போகும்- ஜாக்கிரதை! இன்றைக்கு ஆவணி மாதம் முதல்தேதி என்று எமக்குத் தெரியாது- இன்று இந்தப் பத்தியம் எடுத்து வைக்கிறோம்.

ஆண்டவர்கள் (ஆண்கள் பக்கம் திரும்பி): எல்லோரும் சொல்லுங்க - சத்தியமாக னிற்பீர்களா - அனந்நாதி தேவர்கள்: சத்தியமாக னிற்போம்.

(பெண்கள் பக்கம் திரும்பி)

ஆண்டவர்கள்: சத்தியமாக னிற்பீர்களா?

(சத்தியமாக னிற்போம்) -

"னன்றாக ஓங்கிச் சொல்லுங்கள் - ஆத்திரமாகச் சொல்லுங்கள்"

என்று இடரிடுங் கடைஞள் னமக்கு அருந்துணையாய்க் கலிவலி தொலைத்த கலியுக வரதர் பிரம்மோதய சாலை ஆண்டவர்கள் அருளிச்செய்தார்கள்.

132

இறைவன் படைத்துள்ள சர்வ படைப்புக்களி லும் வைத்து மேலானவன் மனிதன் - மனிதனைவிட் உயர்ந்நது, மேலானது இவனுக்குத் தனிச் சீதன மாகக் கொடுக்கப்பெற்றுள்ள அறிவு - அந்த அறிவு ரூபமாகத் தோற்றத்தில் வந்துள்ளதுவே உன் ஆசான். அவர்களைத் தேடி அடையவே மனிதனுக்கு நூறு வயது தரப்பெற்றது.

133

தேசபக்தி என்பது ஒரு தேசத்திலுள்ள மக்கள் மேல் வைக்கும் மாருத அன்பல்லவா. அது மனிதர்க ளிடத்தில் இருக்க முடியாது. ரூபமெடுத்து வந்துள்ள இறைவனிடத்தில், அதாவது ஒரு தேவ மூர்த்தத்தி னிடத்தில்தான் அது இருக்கமுடியும் - மனிதகுலம் முழு வதும் கொடிய நரகத்தில் நுழையும் அந்த அனியாய மரணத்திலிருந்து தப்பிக்கவேண்டுமே என்ற கான் ஞெழுகும் அன்பு அவர்கள் ஒருவருக்குத்தான் இருக்க முடியும். "தேசபக்தி" என்று இவன்கள் தம்பட்டம் அடித்து மக்களை ஏமாற்றுகிருன்களே, அதனுல் வரும் பயன், இகத்தில் இப்பவே துன்பம் - பிறகு எமனிடம் சிக்குகின்ற நீங்காக் கொடிய நரக அவஸ்தை.

134

தாய், தந்தை, குரு மூன்றும் சேர்ந்த ஒரு உருவே சற்குரு. முகமுகத்தில் அன்பு காட்டி, இந்த அழிந்து போகிற தேகத்தை வளர்க்கிறவள் தாய் - ஆனுல் அக

முகத்தில் அன்பு வைத்து அணு அணுவாகச் சதா நினைத்து உன்னை நித்திய தேகத்தில் புகுத்தாட்டி வைத்து வளர்க்கின்றவர்களே சற்குரு.

135

எமன் தோற்றமுடையவனா? இல்லை. அப்படி யிருந்தும் அவன் பெயரை, அவன் செயலைக் கேட்கும் போதே பயம் வருகின்றதென்றால், சர்வ உலகத்திலும் வைத்து அவனுடைய வல்லபம்தானே முழு வல்லபம்? ஆம். அதை முறியடிக்கின்ற ஒரு வல்லப வசந்நம் இந்நா வந்திருக்கிறதே - அதன் கையில் நும் சிக்கியிருக் கிறோமா - அல்லது அந்த அழினரக அரசாட்சியனாகிய மறலியின் கையில் சிக்கியிருக்கிறோமா என்று தன் அறிவை வைத்து நினைத்துநினைத்துப் பார்த்துத் தப்பிக்கிறவனே மனிதன். ஒரே வார்த்தையில் சொன் னால், முத்தி தேகத்தை இப்பவே கைபோட்டுக்கொண்ட வனே மனிதன் - அப்படியில்லாதவன் நரன்.

எழுவகைத் தோற்றத்தில் புல் பூண்டு பறவை முதலிய இனங்களைச் சேர்த்தவர்கள், நரனைச் சேர்க்க வில்லையே - இது யார் நினைவிற்காவது வந்ததுண்டா? அதை உனக்கு எடுத்துக்காட்டி, நரனாக இருந்த உன்னை மனுவாக்கி மேலும் தேவனாக்கிய அத் தனிப் பெரும் உதவி, நீ நினைத்துப் பார்க்கக் கூடிய ஒரு செயலா? ஒரு புல் அழகிய பறவையாக ஆச்சு என்று கேட்டால் என்ன ஆச்சரியப்படுவாய்! அப்படியிருக்க, புல்லிலும் கேடாக இருந்த உன்னைத் தேவனாக ஆக்கியது

கண்டும் உனக்கு ஒரு பூரிப்போ ஆச்சரியமோ வர வில்லேயே—ஏன்?

இந்த உலகத்தில் ஏற்படும் னஷ்டம் எல்லோருடைய கண்ணுக்கும் தெரியும். ஆனல் இந்த மறு பிறப்பு வாழ்வைப் பெருவிட்டால், பெற்று அதன்படி னடவாவிட்டால் ஏற்படுகின்ற னஷ்டம் யாருக்கும் தெரியாது. அந்த னஷ்டத்தைப்பற்றித் தீர்ப்பளிக்கிற பவர், அந்த வல்லபம் எம் மக்களாகிய உங்கள் அறிவில் ளும் வைத்தாச்சு. இனி உங்கள் பாடு. தன்னினேவில் சதா மரண அச்சம் பூத்து னிற்கின்றவனே ஞான சீமானுக, ஞான கோமானுக ஆவான்.

136

சிவபெரு மானென்று னுனழைத்து ஏத்தத்
தவபெரு மானென்று தான்வந்து னின்ருர்
அவபெரு மானென்னே ஆளுடை னுதன்
பவபெரு மானென்று பணிந்துனின் றேனே

என்ற திருமந்திரச் செய்யுள் திருச்சன்னிதியில் படிக்கப் பெற்றபோது —

ஆண்டவர்கள்:— இறைசத்தியில் மூன்றிலொரு பங்காகிய சிவம் என்ற அருபத்தில் உள்ள அது, ரூபத்தில் வந்துவிட்ட இவனுக்கு என்ன செய்யமுடியும்—மும்மூர்த்திகரமும் ஒருங்கிணைந்து பெற்று அதோடு அவற்றை வைத்து னடாத்த இத் தூல சக்திகளனைத்தும் பூரணமாக ஏற்று வந்துள்ள ஒரு குரு மூர்த்தமாகிய

தவபெருமான்தான் இவனை மெய் வீட்டில் ஏற்றமுடியுமே அல்லாமல், அவபெருமானுகிய இவனை அந்த அரூபசக்தி எப்படி அடக்கி ஆளமுடியும்?

137

ஒருவனைத் தேள் கொட்டுகிறது. அதே சமயத்தில் அவனை ஒரு நாகமும் தீண்டுகிறது. இவற்றில் எந்த விஷத்தை அவன் முதலில் தீர்த்துக்கொள்ளப் பார்ப்பான்? பாம்பின் விஷத்தைத்தான். ஆனால் தேளின் விஷம் கடு கடு வென்று வலிக்கிறது, நாகத்தின் விஷம் அப்படியில்லையே என்று தேள் கொட்டிய வலிக்கு மருந்துதேடித் திரிகிறவனுடைய புத்தியைப் போன்ற புத்திதான் எல்லா மனிதர்களிடத்திலும் இருக்கிறது. இந்த உலகத்தில் நேரிடும் சிறு சிறு துன்பங்களை நிவர்த்திப்பதில் ஆத்திரமாயிருந்துகொண்டு வரனிற்கிற நீண்டகால அழிவுரக அவஸ்தையை இவன் மறந்து திரிகிருன். இச் சன்னிதி முகத்தில் அடிக்கடி வந்து சந்தித்து இங்கு நேரத்துக்கு நேரம் வெளியாகும் தேவ வசனங்களைக் கேட்காவிட்டால், நிச்சயம் அந்தப் புத்தியே உங்களுக்கும் வந்துவிடும். சாலையிலேயே குடியிருந்தாலும் குறித்த நேரங்களில் வந்து இச் சன்னிதியில் கூடிக்கொள்ளாமல் இருந்தால், தூரத்தில் இருப்பவர்களுக்குள்ள பலனேதான் இவர்களுக்கும் இருக்கும்.

இன்று திருந்துவான், நாளை திருந்துவான் என்று அந்தப் பெரிய திருவுள்ளம் காலகாலம் இரக்கத்தோடு

பார்க்கும். முடியாவிட்டால் கற்றூண் பிளந்து உடைந்துபோவதுபோல் போகுமே ஒழிய, தளர்ந்து வளைந்து கொடுக்காது. பிளந்த பிறகு ஒட்டவும் ஒட்டாது. உஜார்.

138

மனம் பூரிக்கப் பூரிக்க, பாவமே கைவரவாகும். ஆனல் அறிவு பூரிக்கப் பூரிக்கச் சாவாவரமாகிய ஞானம் வந்து கிட்டும்.

அறிவு என்ருல் என்ன?

ஞம் உங்களிடத்தில் பதித்து வைத்துள்ள பிரணவக் கலையின் கிரண வீச்சே அறிவாகும்.

139

"மறலி கைதீண்டாத மெய்ச் செயலைப் பயிற்றுவிக்கும் ஞம் சாகாக்கலையை, இன்னும் எந்த அளவில் சுருக்கி மக்கள் மனத்தில் சுள்ளென்று தைத்துப் பதியும்படிப் பேசினல் சர்வ உலகமும் இதைக் கைப்பற்றும்?" என்று நினைத்து நினைத்து, தெளித்துத் தெளித்து, ரகரகமாக, எவருடைய நினைவும் எட்டி ஏறி அறியாத எல்லைகளையெல்லாம் எடுத்து எடுத்து ஆத்திரங்கொண்டு பேசுகிருேம். அதைக் கேட்ட நீங்கள், 'ஆண்டவர்கள் புதிது புதிதாக, ஞம் என்றும் கேட்டறியாதனவற்றைப் பேசுகிருர்கள்' என்று ஆச்சரியமுறுகிறீர்கள். ஆனல், எந்த வார்த்தை, எந்தப் பொருள், இவர்கள் மனத்தில் போய்த் தைத்து இந்த மெய்யில்

வந்து விரைவில் கூடிக்கொள்வார்கள் என்பதே எம் கவலே.

140

(சபைக்கரசர் மெய்வழி கபிலே அனந்நரின் வீட்டிற்கு ஆண்டவர்கள் எழுந்நருளியபோது)

பிரசவம் என்ற சொல் எதைக் குறிக்கிறது என்று அட்வகேட் மெய்வழி ராமானுஜ அனந்நரை வினவியருள, 'தெரியாது' என்று பதில் சொன்னூர் - தொடர்ந்து ஆண்டவர்கள்:- பிரசவம் என்ற சொல் இன்னதைக் குறிக்கிறது என்பதையும் ஏழு பிறப்புக்கள் இன்னது இன்னதென்பதையும் விளக்கமாக அருளிச் செய்தார்கள் - அது கேட்ட மெய்வழி ராமானுஜ அனந்நர் கண்ணில் னீர் மல்கி னிற்க - ஆண்டவர்கள் - இப்ப உனக்கு வயது எழுபதா? இல்லே. அந்த வயதிற்கு இந்த உணர்ச்சி வராது. உன்னேப் பதினறு வயதில் கொண்டுவந்து வைத்துக்கொண்டுதான் னும் இதைச் சொன்னேம். அதனுல்தான் இந்த அரிய வேத விளக்கம் உனக்குப் புரிந்தது. இப்படியே எம் மிடத்தில் னீ அடுத்தடுத்து வந்து இந்த அறிவாகாரப் பொருளுணவை உன் ஜீவனிடத்தில் மேலும் மேலும் ஏறப் பெற்றுக்கொண்டால்தான், உன் ஜீவன் வீறு கொண்டு வளர்ந்தேறி எமன் எல்லேயிலும் தப்பிக்கும் ஆற்றல் பெறும். ஆனல் னீயோ எம்மிடம் வாங்கின உபதேசத்தைப் பெரிதென்று னினேத்துக் கொண்டிருக்கிருய் - அது எம்மை இன்னுரென்று உனக்குக் காட்ட

வந்நதே தவிர அதற்குமேல் அதனிடத்தில் ஒன்றும் இல்லை; அது உனக்கு ஒன்றும் செய்யவும் முடியாது. ஆகவே கவனி. அடிக்கடி வந்து எம்னோர் சந்நிப் புக்கு இலக்காகு. இல்லையென்றால் உனது ஜீவன் அந்ந எமன் சந்நிப்பு னேரத்தில் எந்நக் கதியிலிருக்கு மோ! அப்ப எம்மைக் குறை சொல்லாதே. இவ்வளவு தானே னும் சொல்லமுடியும். உன் அறிவைக் கொண்டு னீயேதான் தப்பித்துக்கொள்ள வேண்டும்.

"தெய்வமவர்களுக்கு என்னால் கவலை உண்டாகு மே என்றுதான் என் வியாதிபற்றி சாலைக்குத் தெரிவிக்க வில்லை" என்று சபைக்கரசர் மெய்வழி கயிலை அனந் நர் சொல்ல ஆண்டவர்கள்:–

மனிதகோலம் எடுத்த எவரையும் கட்டாயம் பிடிக்க னிற்கும் எமனுடைய கையில் சிக்கி, எக்கோடி காலத்திற்கும் மாறாத னரக அவஸ்த்தையாகிய அதோ கதியில் மாட்டிக்கொண்டு விழிக்கப்போகின்ற அந்ந னெடிய கவலையை னீக்கக் கங்கணம் பூண்டு அதற்கே இந்ந உடலைத் தேய்த்துவிட இருக்கும் எம் வேலையை உன்னுடைய இந்ந அற்பகவலையா வந்து தடுத்துவிடும் என்று னினைக்கிறாய்? உங்களுடைய எல்லாக் கவலை களையும் னீக்குவதே எம்மது வேலை.

என்று – பொற்புகு உற்பன கற்பகத் தருவாகிய எம்மான் மெய்வழிச் சாலைஆண்டவர்கள் திருவாய் மலர்ந்நருளினார்கள்.

141

கடவுள் வழிபாடு என்று சொல்லிக் கொண்டு இந்த உலக மக்கள், தெய்வத்திடம் தங்கள் உடம்பு நோய் நொடி யினின்றும் நீங்கி நல்லாயிருக்க வேணும் என்று பிரார்த்திக்கின்றார்கள். அந்த வேலையைச் செய்யத்தான் டாக்டர்கள் இருக்கிறார்களே - தனது பெண்டு பிள்ளைகள், உண்டு உடுத்தி நல்லா க்ஷேமமாய் வாழ வேண்டும் என்று வேண்டுகிறார்கள். அதைச் செய்யத்தான் ஆண்பிள்ளையாகிய இவன் இருக்கிறானே - பிள்ளைகள் படித்துப்பாசாக வேணும் என்று பிரார்த்தனை செய்கிறார்கள். அதைக் கவனிக்க வாத்தியார் இருக்கிறாரே - கோர்ட்டில் கேஸ் ஜெயிக்க வேண்டும் என்று தெய்வத்திடம் வணங்கிக் கேட்டுக்கொள்கிறார்கள். அந்த வேலையைப் பார்க்கத்தான் வக்கீல்கள் இருக்கிறார்களே; பெண்ணுக்கு நல்ல மாப்பிள்ளை கிடைக்க வேணும் என்று வேண்டுகிறார்கள். அதற்குத்தான் உற்றார் உறவினர்கள் இருக்கிறார்களே - இப்படியே உலகத்திலுள்ள எல்லா வேலை களையும் செய்து முடிக்க எல்லா உதவிகளும் நிறைந்து இருக்கின்றன.

ஆனால், ஒரே ஒரு எல்லையில் மட்டும் யாருக்கும், எந்த உதவியும் கிட்டுவதில்லை. கடைசியில் எமன் வந்து சந்திக்கும் அது நேரம் அவன் கையில் சிக்கி நொறிப்போய்ச் சாவோமே அந்த எல்லையே அது. அங்கு யாதொரு உதவியுமின்றி அநாதையாய் மாட்டிக்கொண்டு விழிக்க நேரும். எமனின் அந்தக் கோரப்பிடியினின்றும் விலக்கிச் சாக்காடு என்னும் பிறவிப்பிணிக்கு மருந்து தந்து காக்கின்ற ஒரு அநாத ரட்க்ஷகர், ஆபத்பாந்தவர் நமக்கு வேண்டும் என்று பிரார்த்திக்-கின்றவர்கள் உலகத்தில் எவருமில்லை. அந்த அகமிய அதி வல்லப ஜீவ ரட்சக வேலைக்குத் தான் தெய்வ உதவி வேண்டும். அந்தத் தெய்வமும் உன்னைப் போல் உடலில் வந்திருந்தால்-தான் உன்னோடு புழங்கி உனது சாவாகிய வென்னோய்க்கு மருந்து தந்து அதை அகற்ற முடியும். வந்த சர்வ வேத வேதாந்தக் கலைகளும் இந்த உண்மையைத்தான் கூவிக் கூவி எச்சரித்து அழைத்தாலும், மக்கள் அந்த அமிர்த ஒலியைக் கேட்காத ஊரில் போய் உட்கார்ந்து கொண்டு தங்கள் தங்கள்

மனம் போன போக்கின்படி தெய்வ வழிபாடுகளை வெறும் கேலிக் கூத்தாக்கி விட்டார்கள். இதை எடுத்துப் போதிக்கின்ற வான வேதாந்த சஞ்ஜீவி னின்று உலாவும் திருஸ்தலமாகியதே னம் சாலை.

142

னமது ஆதி மெய் உதய பூரண வேதாந்த னூல் உதயமாவதற்கு முன்பு அதிலுள்ள சில மலர்கள் சிறு சிறு புத்தகங்ஙளாகவும், பிறமலர்கள் அச்சேருமலும் இருந்நநால் னமது பிறவியர்கள் எல்லா மலருடன் மற்றும் அச்சேருமலிருந்ந பாடல்கள் பூராவையும் ஒன்று சேர்த்து ஒரு பெரிய னூலாக அச்சிடலாம் என்ற எண்ணத்தில் னமது தெய்வம் அவர்களிடம் விண்ணப்பிக்க, னமது தெய்வம் அவர்களும் அதற்குச் சம்மதித்துக் காரியதரிசி மெய்வழி கலைமகா அனந்நர் அவர்களைச் சென்னைக்கு அனுப்பினார்கள்.

அச்சேற்ற வேண்டிய எல்லா பிரதிகளையும் அவர் சென்னைக்கு எடுத்துச் சென்று அங்ஙு மெய்வழி ரவை மாணிக்க முதலியாரின் ரவை அச்சகத்தில் னம் வேதாந்ந னூலை அச்சேற்றினார்கள். அச்சேற்றும் எல்லா வேலைகள் முடிந்நதும், ஒரு புத்தகம் வெளியிடுவதென்றால் அதனுடைய கிரயத்தையும் வெளியிட வேண்டுமே, அதற்குக் கிரயம் என்ன னிர்ணயிக்கலாம் என்று முடிவு செய்ய மெய்வழி ரவை மாணிக்க முதலியாரும் மெய்வழி கலைமகா அனந்நரும் திருச்சி வந்நு மெய்வழி வீராச்சாமி அனந்நர், பிரசிடெண்ட் மெய்வழி கயிலை அனந்நரையும் உடன் சாலையம்பதிக்கு அழைத்து வந்நு னமது தெய்வம் அவர்களைத் தரிசனை செய்தபின் திருமுன்பாக உட்கார்ந்நார்கள். "னம் மெய்வழி ரவை மாணிக்கம் அதிகமாக இங்ஙு வரமாட்டாரே, ஏதாவது முக்கியமான ஜோலியாக இருப்பதால் எல்லோரும் ஒன்று சேர்ந்நு வந்நிருக்கிறார்கள்" என ஆண்டவர்கள் எண்ணியவர்களாய், என்ன விசேஷம் என்று தெய்வம் அவர்கள் மறு முறையும் வினவ, மெய்வழி ரவை மாணிக்க முதலியார் னமது வேதாந்நனூல் பூராவும் அச்சேற்றி விட்டோம். அதற்குக் கிரயம் வைக்க வேணுமே அது தெரிந்நால் அச்சேற்றும் வேலையை முடித்து விடுவோம் என்று விஷயத்தை மெதுவாக இழுத்தபடி தெய்வத்திடம் கூறினார்கள்.

அதைச் செவியுற்ற னமது தெய்வம் அவர்கள் னம் னூலுக்குக் கிரயமா? எனக் கோபத்துடன் கூறிவிட்டு "அதற்கு

உன்தலே தான் கிரயம்'' என்று பகர்ந்த பின் சட்டெனத் திருமாளிகைக்கு எழுந்தருளி விட்டார்கள். வந்தவர்கள் எல்லோரும் தெய்வம் அவர்கள் திரும்பி வந்து விடையளிப்பார்கள் என்று அமைதியாகத் தெய்வ வருகையை எதிர்பார்த்திருந்தார்கள்.

மேற்கொண்டு செய்வதறியாமல் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். சிறிது னேரத்தில் தெய்வம் அவர்கள் ஆலயத்திற்கு எழுந்தருளினுர்கள். அப்போது ஒரு துண்டுப் பேப்பரில் ஒரு தெய்வ வாசகம் எழுதி வந்து அதை மெய்வழி ரவை மாணிக்க முதலியாரிடம் கொடுத்து '' இதை னூல் முகப்பில் அச்சேற்று'' என்று உத்திரவிட்டருளினுர்கள். அவரும் மிகவும் மகிழ்ச்சியோடு அதைப் பெற்றுக் கொண்டார். அதில் :-

''வையகத்தையும் வானகத்தையும் சர்வ கால காலங்களேயும் சர்வ காலத்திற்குள் அடங்கிய அழிவிலா னித்திய பூரண மேம்பாடுகள் அனேத்தையும் கையில் வரவழைத்துத் தரும் கிரயத்தையுடையது இந்தக் கிரந்தம்.

இந்தக் கிரந்தத்தில் செயலில்லாத வாசகமே கிடையாது. இச்செகத்து மனுமக்களுக்கு மெய்வழிச் சபையாரின் ஜீவப் பரிசு'' என்றிருந்தது. மேலும் ஆண்டவர்கள் -

எந்த னூலேயும் கிரயம் கொடுத்துத்தானே வாங்குவோம்; ஆனும் னம் ஆதி மெய் உதய பூரண வேதாந்தமோ வாங்கியவர்களுக்கு சர்வ மேம்பாடுகளேயும் கொடுக்கக் கூடிய வரமனேத்தும் தரும் வரப்பிரசாத னூலாகும் இது.ஏனென்ருல் -

''மானெடுங்காலங் கொண்ட இப்பூமண்டலத்திற்கே பாரவான்களின் தீர்க்கத் தரிசனச் செயல் கைக் கொண்டேறி வருகின்ற கிரந்தம் இது ஒன்று தான் முதல் னூல் என்று திட்டமாக மக்களினங்கள் அனேவருக்கும் தெரிவிக்கும் னூலே இது. பூமியடங்கலுக்கும் ஆ-மனு ஈசனே வந்து அருளிச் செய்துள்ள அருந்தவ ஜீவப் பரிசாகும் இந்தக் கிரந்தம்'' என்றும் வெளியாக்கினுர்கள்.

143

மதும் வந்தது எதற்கு? எமபயம் கடத்தும் எந்திரத்தை இவன் கையில் தருப்பிச்சுத்தரவும், இன்னும் எமபடரடிபடு கோடாயிதக்கூரை இவனுடைய அறிவுத் தலையில்

ஏற்றிப்பதிப்பிச்சு அதனுல் எக்கோடி காலத்துக்கும் மங்காத தெய்வீக வலிமையை ஜீவனில் ஊட்டிப்பரமபத னித்திய பூரண வாழ்வாகிய ரட்சிப்பை அளக்கவுமே, ஒவ்வொரு மதமும் இன்னில உலகிற்கு இறக்கப் பெற்று வந்நது. ஆனுல் மக்கள் என் மதம் பெரிது உன் மதம் சிறிது என்ற வெறிகொண்ட போட்டி ஆராய்தலில் திரிந்து அலேவதால் 'மதம் வந்நது எதற்கு?'' என்று அறியும் அறிவிற்குத் தூரப் பட்டுப் போயே போய் விட்டார்கள்.

144

''வெளிச் சபைகளில் தியானம் பண்ணுகிற னேரம் முதலியன வைத்திருக்கிருர்களே-அதுபோல் உங்கள் சபையில் ஒன்றும் எடுத்து வைக்கக் காணுேமே'' என்று னம் மெய்வழியிலுள்ள மக்களேப் பிறர் கேட்கிருர்களே என்று சபையில் பேசப்பெற்ற போது -

ஆண்டவர்கள் :- தெருவாடு மதலே போன்ற அறிவில் இருக்கின்ற உங்களே, அவரவர்களுக்குத் தக்கபடி ஆசை காட்டிச் சேர்த்துக் கூட்டி விளேயாட்டுப் போலே னிஜ உளவு சொல்லி, பையப் பைய அக விளேவு சூடியேற்றி, இந்நச் சாகாக்கலேயாகிய மெய்க்கல்வியை வெகு எளிமையாகக் கற்பிக்கும் போதே, இங்கு திரளாக மக்கள் சேரக் காணுேமே - இதை விட்டு விட்டு உடல், பொருள், ஆவியைத் தத்தம் பண்ணி, பத்துப் பன்னிரெண்டு ஆண்டு புலன்கள் ஒடுங்கி, அறிவின் வழி ஒட்டிப் படிந்து, மாருது ஒடி, ஞுதாந்த ஒத்தை மனம் படைத்து னின்று, பிறகு மூச் சடங்கி தியானத்தில் அமர இந்நக் கலிக் கடையில் ஒரு தலேயைத் தேடிக்காண முடியுமா? எமது தபோ பெலத்திஞல் எத்தி ஏற்றும் இந்ந வழியல்லாமல் வேறு வழியில் னிஜ ஞானத்தின் பக்கம் எவரும் திரும்ப மாட்டார்கள். வெளியே உள்ளவர்கள் தியானம் என்று செய்யும் பிறரை ஏமாற்றும் பாசாங்கு னம் சபைக்கு வேண்டாம். மற்றவர் மதிக்கச் செய்கின்ற அது அந்ந எமன் எல்லேயில் செல்லாதே ஐயா.

145

ஒருவன் செய்த சிறு குற்றத்திற்காக போலீஸ் பிடித்துக் கொண்டு போய்த் தண்டிக்க முற்பட்டால், அந்ந அவமானத்திலிருந்து விடுபட ஐம்பது ஹூறு என்று செலவு செய்து முயற்சி எடுத்துத் தப்பித்துக் கொள்ளுகிற அறிவு

இவனிடத்தில் இருக்கிறதல்லவா? ஆம், அப்படியான அறிவு பெற்ற இவன் எக்கோடி காலத்துக்கும் அவமானமுற்று அவஸ்த்தைப்படப் போகிற னரகத்தில் புகுத்தாட்டும் சாவுடைய னேரம் வருதே, அது எந்த னொடியிலும் எதிர்பாராமல் வந்து விடுமே, அதிலிருந்து தப்பிக்க என்ன செலவு செய்து, எந்தப் பாடுபட்டு அதற்கான உதவியை முற்கூட்டியே தேடி வைத்துக் கொள்ள வேணும்? அந்த ஆத்திரம் யாரிடமும் காணுேமே!

இந்த மெய்யைப் பெற்ற பின்னும் சாலேக்கு வந்து போவதைச் செலவுபாடு என்று னினேக்கிறவன் கடைசியில் னரகவாதியாகவே ஆகி விடுவான். இந்த உஜார் எல்லோர் னினேவிலும் இருக்க வேண்டும்.

146

''னம் தெய்வீகத் தமிழ் பூமியில் னடந்த னுஸ்தீக மகா னுட்டுக்குத் திரளான மக்கள் போயிருந்நார்களாம்'' என்று கவலேயுடன் சபையில் பேசப் பெற்ற போது -

ஆண்டவர்கள் :- போனவர்கள் எல்லோரும் னுஸ்தீகக் கொள்கையில் இச்சை கொண்டு போயிருப்பார்கள் என்று னினேக்க வேண்டாம், னும் சொல்வதைக் கவனமாகக் கேளுங்கள் ஒரு எல்லேயைக் குறித்து தடபுடலாய் விளம்பரம் செய்து அங்கு மலத்தைக் கொட்டி வியாபாரம் செய்கிருர்கள் என்று பரத்தி விட்டதைக் கேள்விப் பட்டால் அதை வாங்காதவர்கள் கூட ''மலத்தை எப்படி அள்ளி, எப்படி னிறுத்துப் போடுகிருர்கள், அதை எத்தனே பேர் வாங்குகிருர்கள்'' என்று மூக்கைப் பிடித்துக் கொண்டு வேடிக்கை பார்க்கப் போய் பெருங் கூட்டமாகக் கூடி விடுவார்கள். அதுபோல் அம்மகானுட்டில் கூடிய பெரும் பகுதிக் கூட்டம் கூடியிருக்கும். (சபையில் மகிழ்ச்சி) இப்ப உங்கள் கவலே தீர்ந்நதா? இனி விடுங்க அந்தப் பேச்சை.

147

''னுன் பர்மாவிலிருக்கும் போது மனித சஞ்சாரமே இல்லாத காட்டுப் பகுதியான ஒரு இடம் தேடிப் பார்த்துப் போய் இரவில் தியானம் செய்யலாம் என்று உட்காருவேன். கண்ணே மூடினதும் புலி, ஒனுய், னரி, பாம்பு முதலியன என்னே னுேக்கி வருவது போல னினேவு வர ஒரே பயமாயிருக்கும் - உடனே எழுந்து வீட்டுக்கு வந்து விடுவேன்'' என்று மெய்வழி

அங்கத்தினர் ஒருவர் சபையில் தெரிவித்தபோது :

ஆண்டவர்கள்:- மனித சஞ்சாரம் இல்லாத என்றுயே, அங்குதான் நீ மனித எண்ணத்தில்-அதாவது மனிதச் சட்டையிட்ட பேயாயிருக்கிற நீ இருக்கிறுயே, உன் பேய் நினைவு அழிந்தபின் அல்லவா அங்கு மனித சஞ்சாரம் இல்லாமலிருக்கும். மேலும், புலி, நரி, பாம்பு முதலியன வருவது போல் இருக்கும் என்றுயே, அது உன்னைத் தவிர, அதாவது உன் பேய் நினைவைத் தவிர வேறு எது?

திருப்பரங்குன்றத்துக் குகையில் நாம் தனித்துத் தவத்தில் இருந்தோமே - அது போல நீ, ஒரு இரவு நார்த்தாமலைக் காட்டில் போய் தனித்து உட்கார்ந்திருக்க முடியுமா? முடியாது. உன் நினைவு இருக்கும் வரை அப்படி இருக்க முடியாது தான். அங்கு பாம்பு, புலி இல்லாவிட்டாலும், உன் கண்ணை மூடி உட்கார்ந்ததும் அவையெல்லாம் உன்னிடம் சுற்றிச் சூழ்ந்து வருவது போலிருக்கும். ஆனல் தன் நினைவற்றுப் போய் சவத்தைப் போல் நீ ஆகிவிட்டால் பயம் வராது. தியானத்தில் அமர்ந்ததும் சுவாசம் ஒடுங்கும். அது ஒடுங்கியவுடன் இத்தூல உணர்வற்றுப் போகும். பிறகு ஏக ஒளிவாகிய அகமியப் பிரகாசம் எழுந்து சூழ்ந்து கொள்ளும். அதன் பின் வெளி நினைவு ஏது?

நாம் திருப்பரங்குன்றம் குகையில் தவத்திலிருக்கும் போது சில நேரங்களில் எமக்கும் வெளி நினைவு வரும். அப்படி நினைவு வரும்போது பகல் நேரமாகயிருந்நால் குகையை விட்டு வெளியே வந்து ஒன்றிரண்டு இலைக் கள்ளியை அதன் முள்ளை நீக்கித் தின்று விட்டு பக்கத்திலிருக்கும் சுனையிலுள்ள ஜலத்தைக் கொஞ்சம் அருந்திய பின் சூரியாஸ்தமனம் ஆவதற்குள்ளேயே, தியானத்தில் அமர்ந்து விடுவோம். தியானத்தில் அமர்ந்ததும் அது எமக்குப் பழகிய பாதையானபடியால் எம் நினைவு விரைவில் வெளிச்சக் காலுக்கு ஓடிக் கலந்து ஒடுங்கி விடும். பிறகு, வெளி ஸ்மரணை அற்றுப் போகும். சில நேரங்களில் நிஷ்டை கலைந்து, கண்விழிக்கும் போது அப்போது பகல் நேரமாக இல்லாவிட்டால், மறுபடியும் தியானத்திலேயே அமர்ந்து விடுவோம்.

148

தன் ஜீவனைக்காணர், தன் உயிரைக் காணர் இறை பொருளைக் காணர்.

கடவுள் இல்லை என்று சொல்லுகிறவன் தன்னிடத்தில் அதாவது தன் கடத்தினுள் உயிர் இல்லை என்று சொல்லு கிறவனே ஆவான். அப்ப ஓடியாடி நடக்கிறானே என்கிறாயே அது ஒரு நடைபிணம் என்று சொல்லலாம்.

149

''நன்மை தீர்ப்பேறிய பட்டோலையை எங்கள் கையில் தருப்பிச்சு'' என்ற வாசகம் ''நன் நம்பிக்கை வைப்பு'' என்னும் பாவ விமோசனத் திருமந்திரத்தில் வருகிறதல்லவா? அது திருபுசுண்டர்பிரான் அவர்கள் தீர்க்கதரிசனமாக எழுதி-வைத்துள்ள ஜீவ மந்திர நாடியைக் குறிக்கிறது. அந்தத் தீர்ப்பு ஏட்டில்-எம்மிடத்தில் உங்கள் ஒவ்வொருவருடைய ஒட்டு-தலின் அளவையும் எழுதியிருப்பதாகத் தெரிகிறது. இது மனிதர்களின் அறிவுக்கு எட்டக்கூடிய செயலா? இல்லை. அந்த அருங்காரணச் செயலைப் பற்றி நாம் அதிகமாகச் சொன்னால் நீங்கள் எந்த மாதிரி எண்ணுவீர்களோ என்றஞ்சி, இத்துடன் நிறுத்துகிறோம்.

205

எமனுடைய சந்திப்பு எல்லையில் தப்பிப்பது, புலி வெரட்டி வரும் போது ஏற முடியாத ஒரு மேட்டில் ஏறித் தப்பிப்பது போன்றது. அப்படித் தப்பிக்க ஏறும் போது, இந்த அழி உலக சம்பத்து புகழ் என்ற கால் விலங்கு, கை விலங்கு முதலிய வற்றை வலிய வாங்கிப் போட்டுக் கொண்டு ஏற முயற்சிக்கின்றவன் போல் மனு இருக்கிறான். அந்த கைகால் விலங்குகளை நீக்கி விட்டு ஏற, யோசனை சொல்ல வந்த மதி மகத்துக்களை வெறுத்து மட்டப்படுத்தி ஒதுக்கி விடுகிறான்.

உங்கள் ஒவ்வொருவருக்கும் நும் தந்நுள்ள தீர்க்கத்தரிசன வசனங்களை னன்ருகப் பிழையின்றிப் படித்து னினைவில் வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் வாயினிடத்தில் அது சதா புழங்கிக் கொண்டிருக்க வேண்டும். அதை ஆத்திரத்துடன் உரக்கக் குரல் கொடுத்துச் சொல்வதிலாவது னம் பாவம் தொலையாதா என்று னினைத்து அதை ஓயாது உரக்கப்படியுங்கள்.

செத்துப் போய் விட்டான் என்ற பெயர் வந்து விட்டால் அலகையாகப் போய் விட்டவன் என்றே ஆகிறது. கசப்பு ஜலம் தீட்டுடனே கனத்து பெருனுற்றமில்லாமல் பரிசுத்த அடையாளத்துடன் அடக்கமாவதுவே ஒருவன் சாகாக்கலை பெற்றதன் அடையாளம். அப்படி அடக்கமானவர்களே சாகாவரம் பெற்றவர்கள்.

இந்த மெய்யைப் பெருத பிறர் பேசும் பேச்செல்லாம் உன் ஜீவனுக்கு ஒரு பயனும் தராத வெறும் சத்தமே. அதற்குச் செவி கொடுத்துக் கேட்டு ஏமாந்து விடாதே - உஜார்.

மும் மூர்த்திகள் சாட்சியாகக் காயத்திரியை னேரில் தரிசித்த பிராமணனுக னீ ஆக்கப் பெற்றிருக்கிருய். ஆகவே னீ பிறரைக் கையெடுத்துக் கும்பிடக் கூடாது-அப்படிக் கும்பிட்டால் அவன் தலைக்கு ஆபத்தே வரும்.

206

இன்னெடிய உலகில் பிரம்ம வித்தையாகிய சாகாக்கலை இவ்வளவு எளிதாக இது காலம் வரை யாருக்கும் கிட்டியதில்லை. இப் பூமண்டலத்திற்கு இறுதிப் பிரளய னுள் னெருங்கி விட்டதால் மெய்யில் ஆகின்ற தலைகள் ஆகிக் கொள்ளட்டும் என்ற எமது பெருங்கருணை எடுப்பே னம் மெய்வழி மனுக்குலத்தின் மீது னும் வைத்துள்ள பேரிரக்கமே இத் தெய்வ விரிப்பின் காரணம்.

இப்போது னீ இருக்கும் உடல் னுற்ற உடல். இதனுள்ளே பரிசுத்த பிரணவ உடல் ஒன்றிருக்கிறது. அதனுள்ளே எமனனுகா னித்திய தெய்வீக உடல் இருக்கிறது. அதில் இப்போதே னீ புகுந்து கொள்ள வில்லை என்ருல் இறுதியில் னரகம் உன்னைச் சொந்தமாக்கிக் கொள்ளும் - உஜார்.

இப்போது னிகழ்ந்து கொண்டிருக்கிற காலத்திற்கு - னீ அரை வயிருகச் சாப்பிடுவது னல்லது. அப்பத்தான் உன் உள்ளே இருக்கும் கருவிகள் அதை வாங்கி விரைவில் அரைத்து எரித்து விடும், முழு வயிறு சாப்பிட்டால்

செரிமானமாகாமல் அழுகித் துகடத்தை உண்டாக்கும். பூச்சிக் கொல்லி மருந்து ரசாயன உரம் என்று என்னென்ன இழவையோ போட்டு இப்போது உணவுப் பண்டங்கள் அவ்வளவும் நஞ்ஞாகி விடுகின்றன. அப்படி விஷமாகவே ஆகிவிட்ட உணவுப் பண்டங்களை அரை வயிருகச் சாப்பிட்டால், அவை உடனே சீரணமாகி விடும். நம்முன்னே இருக்கும் ஜீவாக்கினி உணவினது விஷத்தை எரித்துத் தகித்துச் சரி செய்து விடும்.

சாப்பிட்டுக் கை கழுவி எழுந்தபின் எட்டு நிமிடங்கள் பொறுத்து ஏப்பம் வர வேண்டும். நீ சாப்பிட்ட உணவு இரண்டரை நாழிகை நேரத்துக்குள் சீரணம் ஆகிவிட வேண்டும். அந்த அளவு தான் நீ சாப்பிடவேணும். அதற்கு மேல் அதிகமாகச் சாப்பிட்டால், அடுத்து நீ சாப்பிடும் போது வயிற்றில் செரிமானமில்லாமல் உணவு தங்கி இருக்கும். அது உடலின் ஆரோக்கியத்தைக் கெடுத்து நோய் உண்டாக்கும். இன்று முதல் நீங்கள் இந்த விரதத்தைக் கட்டாயம் கைக்கொள்ள வேணும். நாம் சொன்ன அளவுக்கு மேல் சாப்பாடு இலையில் யாராவது உணவு படைத்ததை வைத்தால், அது எவ்வளவு உயர்ந்த ருசியுடைய உணவாகவே இருந்தாலும் வேண்டாமென்று எழுந்து விட வேண்டும்.

207

''பாய்மன விட்டிற் பேய்குடி யிருக்கும்
பேரறி வடிமையங் ஙாகும்
வாயினில் நாயும் நாசியில் வண்டும்
மதுசெவி தனில் விஷப் பாம்பும்
ஈயனேந் நிடும்கண் ணிபுலிசன் விடா
மிப்படிக் கென்றுனி தெளிந்து
பாய்வாசி முனேக்கால் வழிகண்டு செவ்வேட்
பதிபுரு வத்திடை யடிக்கீழ்,

''வாசிகா லுச்சி கண்டத்தின்வழியாய்
ஊசியின் தமர்வழி யோடிப்
பேசருமூளை மண்டலக் குகை மேல்
பெலஞானக் கண்ணென்றங் கிருந்து
வாசனே கேள்வி யிருகண்வா யெவைக்கும்
வல்லமை யளிக்குமக் கண்னே.
ஈசன்றன் னிருப்பும் ரவிகோடி வீசும்
இருதய மலர் விரிந் தெழும்பும்''

ஆதிமெய் உதயபூரண வேதாந்தம் - ஞான முறையிட்டில் உள்ள மேற்கண்ட செய்யுட்கள் ஓதப் பெற்ற போது பிறந்த ஆண்டவர்கள் வாக்கியம் :-

உன் புலன்களைப் போலத்தான் மெய்ஞ்ஞானிகளுக்கும் புலன்கள் இருக்கின்றன. ஆனால் அவைகளின் மாத்துத்தான் வேறு. உன் புலன்களின் மாத்து மகா மட்டமாக இருக்கிறது - ஆனால் மெய்ஞ்ஞானிகள் தங்களின் மெய்ஞ்ஞான நிஷ்டையெனும் குகையில் வைத்து ஊதி ஊதி அவற்றை உன்னத மாத்துடைவைகளாக ஆக்கிக் கொள்ளுகிறார்கள். தங்களின் ஓயாத்தவப் பாட்டால், அவற்றிலுள்ள மாசுகளை நீக்கி அவற்றின் சுத்தத்தை மேலும் மேலும் அதிகரிக்கச் செய்து கொண்டேயிருக்கிறார்கள். இவ்வாறாகத் தேய்த்துத் தேய்த்து அப்புலன்களில் மெருகு (பாலிஷை-Polish) ஏற்றிக் கொண்டேயிருக்கிறார்கள்-ஆனால் உலக மக்கள் எல்லோரும் அவற்றை அஞ்ஞானத் துருப்பிடிக்க விட்டு விடுகிறார்கள். இன்னும் சிலர் அவற்றில் அழிகலி நினைவு மண்ணை அள்ளிப் போட்டு கெடுத்துக் கொள்கிறார்கள் அவர்கள் தான் தன்னறிவில் சாய்ந்த நூல் அறிவு ஆராய்ச்சியாளர்கள்.

அப்படியிருந்தும் புலன்களைக் கொண்டு உலக இன்பத்தை அதிகம் அனுபவிக்கிறவர்கள் நீங்கள் தான். ஞானிகளுக்குப்-பாடு தான் மிச்சம்.

நீயோ கவலையில்லாமல் தூங்குகிறாய். ஆனால் எமக்கோ உங்களைப் பற்றிய கவலை சதா எம் உள்ளத்தில் ஏறி தூக்கம் என்பது வேர்ப்பிடுங்கலாப் பிடுங்கப்பட்டு எம்மிடத்தில் இல்லாமலே போய் விட்டது. எமன் கை வசப்படாமல் உங்களை ரக்ஷித்து, பரமபத வாழ்வில் ஏற்றுவிக்கும் கவலையே அது. நும் அஷ்டாவதானம் பழகியிருக்கிறோம். அதில் தூக்கமின்மையும் ஒன்று.

உலகத்தில் எல்லோரும் அழி மதிப்புத் தேடுவதிலேயே ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால் நாமும், எமக்கு முன்னர் வந்த பாரவான்கள் எல்லோரும் தேடி அடைந்த மதிப்பு எவ்வாறானது என்று சொல்லுகிறோம் கேளுங்கள் - அவர்களின் கால் பெருவிரல் முதல் சிரசின் உச்சி வரை ஒவ்வொரு ரோமக்காலிலும் கட்டுப் போட்டிருக்க, அவர்கள் கைகளில் ஒரு பாத்திரம் ஏந்தியிருந்தார்கள் - அப் பாத்திரம் சிறிது அசைந்தாலும் தளும்பிவழிந்து சிந்திவிடும் அளவிற்கு அதில்

உருக்கின நெய் நிரப்பப் பெற்றிருக்கும். அவர்கள் கண்ணெதிரிலோ கூத்தாட்டம், கேளிக்கை அதோடு சகல விதமான அரச போகம் முன்னும், இரு மருங்கிலும் மனதைக் கவர்ந்து இழுக்கும் வண்ணம் ஏராளமாக, கூட்டம் கூட்டமாக இருக்கின்றன. இவைகளன்றி அவர்களின் கழுத்தை லேசாக காயம் படாதபடி உரசித் தொட்டுக் கொண்டு இரண்டு கூரிய வாள் முனைகள் ஏந்திய வண்ணம் அவர்களின் இருபக்கத்திலும் இருவர் தொடர்கிறார்கள். இந்த நிலையில் அவர்கள் நடக்க வேண்டும். அப்படி நடக்கையில் அவர்களின் சிந்தை சிறிது மாறி நெய் ததும்பி கொஞ்சும் சிந்தினாலும், கூறிய வாள்களுக்கு அவர்கள் இரையாக வேண்டியது தான். இவ்வாறு நெருக்கத்தில் நடந்து போய் குறித்த தவ மேடாகிய எல்லையைச் சேருகிறார்கள். அவர்களே மெய்ஞ்ஞானிகள். இதுவே மெய்ஞ்ஞானிகள் அடைகிற மதிப்பு. பார்க்கிறவர்-களுக்கோ சுற்றிலும் நிறைந்துள்ள கேளிக்கைகளையும், அரச போகங்களையும் அவர்கள் அனுபவித்துக் கொண்டு போகிறது போல் தோன்றும். ஆனால் உண்மை அப்படியல்ல. வைராக்கிய மணிக்கம்பத்தில் அவர்கள் ஏறும் பாதை அத்தகைய கூரோங்கி நிற்கிறது.

நாம் உன்னுடன் பேசும் போது ஒரு எல்லையில் நினைவை வைத்த வண்ணம், கட்டுப்பட்டே பேசுகிறோம். ஆனால் அவ்வாறான சமயத்தில், உன்னைத் திருத்த வேணும் என்ற ஆத்திரத்தில் அந்த எல்லையை விட்டு சற்றுப் பிரண்டு நகர்ந்து இறங்க வேண்டி வரும் - ஏனெனில் உன் போல் நாமும் தூலம் எடுத்திருக்கிறபடியினாலே தான். ஆனால் சில நொடியில் சட்டென்று உஷாராகி எம் சொந்த எல்லைக்கே மறுபடியும் பாய்ந்து, திரும்பி ஏறிவிடுவோம்,

நீ இப்போது நாம் குறித்த எல்லையில் உன் நினைவை வைத்துக்கொள். அது நேரமே உன் சுவாசம் ஓடுவது கட்டுப்படும். அந்த எல்லையை விட்டு உன் நினைவு சற்று அசைந்தாலும் மூச்சு அதிகமாய் ஓட ஆரம்பிக்கும். உன் மூச்சை வீணில் அசைய விடாமல் வைக்க வேணுமானால் உன் மூச்சை ஒரே எல்லையில் மாறாது நிலைக்க வைக்க வேணும். இவ்வாறு குறித்த எல்லையிலிருந்து சிறிதும் பிரளாமல் தங்கள் நினைவை ஊன்றி உரத்து நின்று, காலமெல்லாம் நடக்கிறவர்களே மெய்ஞ்ஞானிகளாகிய நாம். இதுவே, எங்கள் மெய்ஞ்ஞானப்

பரம்பரையினர் அடைகிற நித்திய மதிப்பு.

எத் தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும்
முத்தர் மனமிருக்கும் மோனத்தே - வித்தகமாய்
காதி விளையாடி இருகை விசி வந்நாலும்
தாதி மனம் நிர்க்குடத்தே தான்.

இது தான் மெய்ஞ்ஞானப் பாரவான்கள் நடந்த ஓர் முனைக் கூரேறிய பாதை

208

மனிதனின் அகமிய உலகத்தில், இருக்கும் ஒவ்வொன்றையும் பிரட்டிப் பார்த்து அறிவதே தவம்.

சுய தேவராக கல்பத்தில் பிறக்கும் பிள்ளைகளே, அழியா மனுக்கள் - பழுதில்லாத முழுவேத மக்கள்.

தண்ட காரண்யம் என்பது - ஒரு தெய்வ சன்னிதியில் தண்டம் சமர்ப்பிக்கின்றவர்களைக் கார்க்கின்ற ஆரண்யம் - வனம் உத்திமலிந்து ஓங்கும் ஒரு நற்திரு மேனியர் முன் வணக்கம் செலுத்த அவர்களால் காக்கப் பெறுகின்ற உத்தியோ வனக் கானகம்.

மனிதனின் அற்பவாழ்வு உடலை வளர்ப்பதற்காக இவனுக்கு உண்ண வாயைக் கொடுத்தான். ஆனால் கற்பகோடி காலப் பேரின்ப நித்திய உடல் வளர்வாழ்வினுக்காக இவனுக்குச் செவியைக் கொடுத்துள்ளான் -

ஜீவ ஒட்டுதல் என்பது தாங்கிப் பிடிப்பது, தூக்கிப் பிடிப்பது அல்ல. ஜீவனிடத்தில் அந்த ஒட்டு இல்லா விட்டால், வழுக்கி நழுவிக் கீழே நரகக் கிடங்கில் விழுந்து விடநேரும். அந்த இலக்கில் தேவையானது தான் ஜீவ ஒட்டுதல் என்பதாகும்.

209

விருத்தாசலம் அட்வகேட் - மெய்வழி நாராயணசாமி அனந்தர் கொடுத்தனுப்பிய காணிக்கையை சன்னிதானத்தில் சமர்ப்பித்து ''தெய்வமவர்களின் ஆசனத்திற்காக இதைச் சமர்ப்பிக்கச் சொன்னார்'' என்று சன்னிதியில் தெரிவிக்கப் பெற்ற போது

ஆ - சனம் அதாவது ஆகும் சனம். இந்த நித்திய மெய்யில் ஆகிக் கொள்கின்ற சனத்தை சேர்க்கின்ற காரியத்திற்கு இதை வைத்துக் கொள்கிறோம். (திரு முகத்தில் இளநகை பூக்க) எமக்கு அவன் சும்மா கொடுக்க வில்லையே. இன்னதைச்

செய்யுங்கள் என்று உத்திரவு போட்டல்லவா கொடுத்-திருக்கிருன் என்று அருள் பாலிக்க சபையில் மகிழ்ச்சி.

210

உலகத்தில் ஞானவேடம் பூண்டு திரியும் பாசாண்டியர்கள் சிலர், பேசாது வாய் மூடிக் கொண்டிருப்பது தான் 'மௌனம்' என்று தங்களின் வாய் திறந்து பேசாதிருந்து கொண்டு உலக மக்களை ஏமாற்றுகிருர்கள். வேதத்தின் சட்டப்படி மௌனமாயிருந்தால் மோட்ச சாம்ராஜ்ய முத்தினிலே கிட்டு மென்பது உண்மையே. ஆனல் வாய் பேசாதிருப்பதே மௌன மென்று கொண்டால், படைத்த முதல் ஞளிலிருந்து இது வரை வாய் பேசாது வாழ்ந்து வருகின்ற ஆடு மாடுகள் முதலிய விலங்கினங்கள் முதலில் முத்தி பெற்ற பின்னர் தானே இப்பத்தான் வாய் பேசாதிருக்க ஆரம்பித்துள்ள இவனுக்கு முக்தி கிடைக்கும். ஆகவே வாய் பேசாதிருப்பது மௌனம் என்பது மக்களை ஏமாற்றப் போடும் வேடம் என்று தெரிகிறதல்லவா? இவனது கருவி கரணதிகளெல்லாம் ஒடுங்கி, மனம் சலன மற்று, முத்தி விருட்சத்தடிநிழலில் சுத்தம் வடித்துத் தெளித்த ஓர்மையுற்ற நிலையில் ஊன்றி நிற்கவும், மூச்சானது ஞசிக்கு வெளியே ஓடாது எழில் பிறங்க உள்ளுலாவும் தவநிலையே மௌனமாகும்.

''கலைமலை யரசன் மகள்மதி யரசி
கலைமறை மணித் தவிசில்
கண்டிடும் மௌன மென்று'' ஞம்

எம் ஆதிமெய் உதய பூரண வேதாந்த னூலில் உள்ள பிள்ளைத் தமிழில் பக்.(105) மௌன நிலையின் உன்னதத்தைக் குறித்து ஞம் பேசி வைத்துள்ளோம்.

211

ஒரு மனிதன் இறுதித் தருவாயில் அவனது பேச்சு, பார்வை, அங்கக்குலங்களின் அசைவுகள் முதலிய யாவும் அற்றுப் போகின்றன. அப்பவும் அவன் இறந்து போய் விட்டதாக யாரும் நினைப்பதில்லை. ஆனல் அவனுடைய கடைசி மூச்சு நின்றதும், அவன் இறந்து போய் விட்டான் என்று எல்லோரும் அழுகிருர்கள். இதிலிருந்து ஒரு மனிதனது வயது வாழ்ஞள் அவனுடைய முதல் மூச்சிலிருந்து சாவு தொடும் கடைசி மூச்சு வரை கணக்கிடப் படுகிறது என்று

தெரிகிறதல்லவா? இச் செயலைச் சிந்தித்துப் பார்க்குங்கால், மனிதன் தனது ஒவ்வொரு மூச்சிற்கும் மரணித்துக் கொண்டே வருகிறான் என்றாகிறதல்லவா? இப்படி இவன் மூச்சுக்கு மூச்சு சாவதை நினைத்து அழாமல் இறுதியாக விடுகின்ற கடைசி மூச்சிற்கு மாத்திரம் வருந்தி அழுவது விந்தையாக இருக்கிறதல்லவா? அப்ப மூச்சு வெளியேறாமலேயே மனிதன் வாழ முடியுமா என்ற கேள்வி பிறக்கலாம் - வாழ முடியாது தான். அது எந்த வாழ்க்கை? இந்தப் புற உலக வாழ்க்கையில் தான் அப்படி வாழ முடியாது. ஆனால் நித்திய முத்திப் பேரின்ப வாழ்க்கையை அடைய மூச்சு வெளியே ஓடாது நிலைப்பில் நிற்க வைக்கப் பழக வேண்டியிருக்கிறது. அத்தகைய தவ வாழ்வு சித்தியாகி விட்டால், அழியா மதிப்பு வாய்ந்த பெருநல செல்வ நிதியானது வேகமாகவும் அதிகமாகவும் வீணில் செலவழிக்கப்படாமல் அகமுக சிறந்த பாதுகாப்புக்குள் வைக்கப்படுகிறது. அது நேரம் இவனது மூச்சு நாசிக்கு வெளியே ஓடாமல் இயங்குகிறது.

மனிதன் சாதாரணமாக இருக்கும் போது 8 அங்குல மூச்சை உள் வாங்கி 12 அங்குல மூச்சை வெளி விடுகிறான். இவ்வாறு 4 அங்குல மூச்சு துண்டாடி நஷ்டமாகிறது. கடுமையாக வேலை செய்யும் போது 20 அங்குல மூச்சு வெளியேறி 10 அங்குல மூச்சுத்தான் மீளுகிறது. போக நேரத்தில் இவனது முழு வலிமையாகிய 64 அங்குல மூச்சு வெளியேறி ஜீவ உஷ்ணம் மட்டும் தேகத்தில் ஒட்டி நிற்கிறது. இவ்வாறு இவன் வாழ்வு வயது தேய்ந்து கொண்டே வருகிறது. ஆனால் தன் சிந்தையைத் தெய்விக சம்பந்தத்தில் நிறுத்தி உரையாடினாலோ, பாடினாலோ மூச்சு வேகமாக வெளியேறாது. குரு சன்னிதியில் இருக்கும் போது, அவர்களின் அருளமுத வாசகங்களைக் கேட்கும் போதும், கேட்டு மறுமுறை சிந்திக்கும் போதும் சுவாசம் லாபத்தில் மாறி ஓடும் - அதாவது உள் வாங்குவது அதிகமாகவும் வெளியேறுவது குறைவாகவும் இருக்கும். இவ்வாறு சுவாசம் லாப முகத்தில் இயங்கும். இது தான் பிராணாயாமத்தின் ரகசியம். இதை விட்டு அருமையான சொத்தாகிய தன் மூச்சை வீண்பாட்டில் செலவு செய்து, அழிந்து போகும் மனிதன், என்ன மதியற்றவன் என்று பார்.

துறவறம்

பரிசுத்தமான தெய்வீக பிரம்ம பத வாழ்க்கையை னடத்த முதல் உற்பவ உதவியாக இருப்பது துறவு என்பதுவே வேத விதி. இதை அறிந்த ஞான இச்சையுள்ள னூலறிவு ஆராய்ச்சியினர் சிலர், உலக முப்பொருள்களாகிய மண், பெண், பொன் இவைகளின் மீது பற்று வையாது அவற்றின் தொடர்பை விட்டு னடப்பதே துறவறம் என்று கருதி, 'காம முதல் அறுசுவையும் மனைவி மக்களை கட்டறவே விடுத்துப்பின் காவி தாங்கித் திரிகிறார்கள். இவ்வாறு திரிவதால் துறவின் மெய்ப் பலனாகிய, இறை இன்ப எழில் பூக்கும் மாதவச்சந்திப்பு, அவன்களைத் தேடி வந்திடுமா? ஒருக்காலும் வரவே வராது. முதலில் இவனது அழி தூலத்தின் மேல் வைத்துள்ள பற்றாகிய, பசி தாகம், தூக்கம் முதலியனவற்றை இவன் எப்படி ஒழிப்பான்? இத்தூலந்நானே பற்றுக்கள் அனைத்திற்கும் ஆணிவேர் போன்றிருப்பது -

பிறந்து ஒற்பது னாளைக்குட்பட்ட வயதிலுள்ள குழந்தைகள் இமை கொட்டாமல் தன் மனோனிலையை அதாவது னினைவை எங்கேயோ ஓரிடத்தில் ஊனி ஒட்ட வைத்துக் கொண்டு, வெளிப் பார்வையின்றி இருப்பதைனும் பார்க்கலாம். ஆனால் அந்த அகமிய னிலைப்பின் அனுபவ உணர்ச்சியை அறிகின்ற அறிவு அதற்கு இல்லை. அத்தகைய அனுபவ தவ னிலைப்பு தன் ஆசானுடைய திரு அடினிழலாகிய அருள் உற்பவ வினா விடையால் பெறுகின்ற அறிவின் வழி புலன்கள் ஒட்டிப் படிந்து னிலை பெற்று வெகு காலம் ஒடுவதால் கிட்டுகிறது.

தேவ சன்னத முத்திராலங்கிர்தம் பெற்ற ஒரு இறை குரு சன்னிதியில் மறு பிறப்படைந்து மெய்ப் பொருளைப் பெற்று, இதயலோக முத்தி மூல விருட்சமாகிய கற்பகத்தடி னிழலில் ஒத்தை மனம் படைத்தூன்றி னவ வாசலையும் உட்த்தாளிட்டு, வெகுகாலம் னின்றால், மேல்மாடியாகிய மெய் உலகம் திறக்கும். அங்கே உள்னுழைந்ததும் கோடி சூரியப் பிரகாசக் கதிர்களுக்கிடையில் இவன் சிக்கிக் கொள்வான். இவ்வாறு திறந்து உள்ளே செல்வதே மெய்த்துறவு. அன்னிலையில் இத்தூல உணர்வு முழுதும் இறந்து பட்டுப் போகிறது. இது எமது கையேட்டு அனுபவம்.

சபையோர்:-

''னேரான துறவறத்தை விபரத்தோடு
　　ஙிகழ்த்துகிறேன் ஙீகேள் என் குலமாணுக்கா
வீரான புலன்களனைத்தும் உட்தாளிட்டு
　　வெளிக்கதவு வெடிவாக மெதுவாய்ச் சாத்தி
பாராதி அண்ட மெலாம் படைத்த வித்தில்
　　பகருகின்ற மூலவனல் பரிந்நங் நேற்றி
தேராத தூலவுணர் வனைத்தும் விட்டே
　　சிவான்மாவிற் கலக்கும் துறவு கேளே''

என்று ஆண்டவர்கள் அருளிச் செய்துள்ள அமுத கலைக் ஞான போதம் இரண்டாங் ஙாண்டத்தின் செய்யுள் ஓதப்பெற்றது - தொடர்ந்து ஆண்டவர்கள் :- ஒருவன் ஒரு ஆட்டுக் குட்டிக்குப் புல் கொடுத்துத் தின்னப் பழக்கி விட்டால் அது அவ்வாறு தன்னைப் பழக்கியவன் பின்னேயே தொடருகிறது. அதே போல அந்த அருங்ஙாரணைப் பரப்பாகிய மின்னல் கதிர்களுக்-கிடையில் மாட்டிக் கொள்வதால் வரும் ஆனந்தப் பரவசத்தை அனுபவித்த ஜீவன் அந்த இச்சையில் கால மெல்லாம் தொடருவதிலேயே ஙிலைத்து விடுகிறது.

213

ஸ்ரீ ரங்கம் பெரிய கோயிலில் உள்ள எழுந்தருளும் ஐம் பொன் சிலைக்குள், பசும் பொன் சுவர்ண விக்கிரகம் ஒன்றிருக்கிறதாம். வருடத்திற்கு ஒரு முறை அதை வெளியே எடுத்து அதற்கு அபிஷேக ஆராதனை செய்யப் பெறுகிறதாம் என்று சபையில் பேசப் பெற்ற போது. ஆண்டவர்கள்:-இப்புலால் உடம்பாகிய மனித தூலத்திற்குள் தங்கமயமாயிலங்ஙும் அதி சூக்கும காரண உடல் இருந்து விளங்ஙிக் கொண்டிருப்பதை, மக்களுக்கறிவிக்கவே, வெளி னடை முறையில் இப்படி எடுத்து வைத்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. அந்தப் பிரணவ தூலமாகிய சுவர்ண பூரண பேரின்பத்தூலமே - சிர் + அங்ஙம் = அதாவது சிர் ஙிலவும் அழிவற்ற தேவ அங்ஙம் - அந்தத் தேவ அங்ஙத்தை கை போட்டு அதை என்னாளும் அழியாத, பல கற்ப கோடி கால ஙீடிய வாழ்வுடையதாக, தங்ஙள் தவ வலுவால் ஆக்கிக் கொண்டவர்களே, மெய்ஞ்ஞான புருடோத்தமர்கள்.

அத்தகைய சிவ செம்மல்களாகிய ஞான மகத்துக்கள், கோடிக்கணக்கான பேர்கள், மனு முளை துவங்ஙிய கால

வரம்பிலிருந்து இது காலம் வரைக்கும் இப் பூமிக்கு வந்து கொண்டேயிருக்கிறார்கள் அல்லவா? அவர்கள் எல்லோரும் ஒன்று கூடிச் சேர்ந்து தங்கமயமாயிலங்கும் முத்தர் கோடிகளாக நித்திய வான் உலகில் வாழ்ந்து வருகிறார்கள். அந்த வான் உலகிற்கும், மனிதனின் உணர்ச்சி உலகிற்கும் இடையில் ஒரு திரையானது இருக்கிறது. அத் திரையை நீக்கும் வல்லபம் இது நாள் இறைவன் எம்முடைய கையகத்தில் தந்துள்ளான்! வஞ்சமில் பரமார்த்த தவத்தால் அது எம்மால் பெறப் பெற்றது. வஞ்சம் நீங்கி எம் முன்னம் பழகில் அந்த வான் உலக வல்லபம் உனக்கும் கிட்டும்.

214

பொய் விளக்கப் புகுகின்றீர் போது கழிக்கின்றீர்
புலை கொலைகள் புரிகின்றீர் கலகல என்கின்றீர்
கை விளக்குப் பிடித்து ஒரு பாழ்ங்கிணற்றில் விழுகின்ற
கடையரினும் கடையீர் - என்று

திருவருட்பா வள்ளல் கூறியிருக்கின்றார்கள். எனத்திருச் சபையில் பேசப்பெற்ற போது ஆண்டவர்கள் :-

''கை விளக்குப் பிடித்து'' என்று அவர்கள் கூறியுள்ளதால் அது இரவு நேரம் என்கிறது. அவர்கள் காலத்தில், மக்கள் அப்படியிருந்திருக்கலாம். இரவில் கை விளக்கைப் பிடித்து கொண்டு போய் பாழ்கிணற்றில் விழுந்திருக்கலாம். ஆனால் இக்கலியில் பட்டப் பகலில் நல்ல உச்சிநேரத்தில், தங்களுக்கு முன்னே போகிறவர்கள் கண்களை நன்றாக விழித்துக் கொண்டபடியே போய் பாழ்கிணற்றில் விழுந்து சாகின்றதைப் பார்த்தும், அந்தப் பாதையை விட்டு விலகி ஒதுங்காமல் தாங்களும் போய் அதில் விழுந்து சாகின்றதையே நாம் பார்க்கிறோம்.

215

எம்மிடம் பிரம்மோபதேசம் பெற்றால் உன் அறிவு இப்போ இருப்பதை விட புது வனப் பேறி பல மடங்கு அதிக மெய்ஞ்ஞான புஜ பலத்தோடு விளங்கும். மேலும் அது திட்டமான அறிவுத் தெளிவுடன், வேத விரத விதி வழியில் ஒரு பாணம் மாதிரி கன கவன வேகங்கொண்டு பாய்ந்து செல்லுவதையும் உன் அனுபவத்தில் நீ காண்பாய்.

216

வேண்டுதலை என்று சொல்லித் திருப்பதிக்கு முடி விடுகிறானே, அது அந்தத் தெய்வத்திற்கு அவ்வளவு

தித்திப்பாக இருக்கும் என்பது இவனது என்னமோ? பக்தி என்ற பெயரில் தெய்வத்தை அவமானப் படுத்துகிற எந்த மட்டரகமான மோடத்தனம் அதுபார்?

217

''என்னன்றி கொன்ருர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்னன்றி கொன்ற மகற்கு''

என்ற திருவள்ளுவ ஞயனுர் தங்கள் திருக்கொரலில் கூறியுள்ளார்களே, மகற்கு என்று அந்நச் செய் னன்றி கொன்ற மனுச் சதளங்ஙளைப் பார்த்துச் சொல்லலாமா? அவர்களைப் பன்றி, ஞய், பேய் என்றல்லவா சொல்ல வேண்டும் என்று அறிவுடையவர்களுக்கு னினைவு வரலாம். ஆனுல் அவர்கள் அப்படிச் சொல்லியிருந்நால் ''அந்ந வாசகம் பன்றி, ஞய், பேயைக் குறிக்கிறது - னம்மை அல்ல'' என்று னினைத்து விடுவார்களே என எண்ணியே 'மகற்கு' என்று குறித்திருக்கிருர்கள் என்பதாக ஞம் னினைக்க வேண்டியிருக்கிறது.

218

அஸ்திவாரம், தூண், சுவர் என்பவை ஏதும் இல்லாமல் அந்நரத்தில் ஒரு கட்டிடம் இருக்குமா? இருக்காது (தஙுகள் திரு மேனியைத் தொட்டுக் காட்டி) னிங்ஙள் பார்க்க அப்படி தேவவல்லபம் பெற்ற ஒரு கட்டிடம் இதோ னிற்கிறதே - மனுத் தூலமாகிய இந்நக் கட்டிடம் னிற்பதற்கு வேண்டிய மூச்சு, ஊன் உறக்கம் இல்லாமல் இதோ னிங்ஙள் காண னிற்கிறதே இதை ஏன் னிங்ஙள் சிந்நித்துப் பார்ப்பதில்லை.

ஞசிக்கு வெளியே எமது மூச்சு ஓடாதபடி, மூக்கின் ஓரக் கங்ஙு வரை வந்நு அது திரும்பி உள்ளே போகிறது என்பது எமக்கு இப்பத் திட்டமாகத் தெரிகிறது. னிங்ஙள் ஒரு வேளைக்குச் சாப்பிடும் உணவு எமக்கு ஒரு வருஷத்துக்குப் போதுமாய் விட்டது. தூக்கம் எம்மை விட்டுப் போய் வெகுகாலமாகி விட்டது. அப்படியிருந்நும் அயர்வோ களைப்போ சிறிது மில்லாமல் இந்ந உடல் எல்லா வேலைகளையும் செய்கிறதே - இது என்ன ஆச்சரியம்? என்று பிரம்மோதய மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் அருளிச் செய்தார்கள்.

219

13 - 12 - 1969-ல் வெளியான சுதேசமித்திரன் ஞாயிறு மலரில் ''விஞேதப் பரிசு'' என்ற தலைப்பில் கடவுளைக் காட்டுகிறவர்களுக்கு பெரும் ரொக்கப் பரிசு தருவதாக ஒரு

தொழிலதிபர் பேப்பர்களில் சவால் விட்டிருந்நதற்கு - மெய்வழி சிவச்சுடர் அனந்நர் எழுதியிருந்ந பதிலே திருச் சபையில் படிக்கப் பெற்ற போது ஆண்டவர்கள் :-

னம் சிவச்சுடரைத் தவிர வேறுயாருக்காவது அவர் விடுத்த சவால் சுருக்கென்று தைத்து இப்படி காரமான வார்த்தைகளால் டோஸ் கொடுக்க வருமா? சன்னதப்பார வான்ஙளின் பாடுடைப் பார ரகசியக் கை முதலாகிய பிரமாதிக்கச் செயலே லேசாக எண்ணிச் சவால் விட்டுப் பேப்பரில் வெளியாக்கினதும் அவனுக்கு அப்படி ஒரு பதில் எழுத வந்துள்ளது. னம்மை வந்து சிவ சுடர் சந்தித்து யோசனே கேட்டிருந்நானுனல் இன்னும் கொஞ்ஞம் அலங்ஙாரமாக எழுதச் செய்திருப்போம்.'' அந்நத் தனவானின் கடவுள் (கடத்துக்குள்ளே இருப்பவர்) கடைசியில் கசப்பு தீட்டுப் பிண னுற்றமாக வெளியாகி அண்டனிக்க முடியாமல் னுறுவார். அதைப் பார்த்த பார்த்தவர்களெல்லாம் உடனே குளிக்கப் போவார்கள்'' என்று எழுதியிருந்நால் எவ்வளவு னேரான, மெய்யான பதிலாக இருக்கும்.

னுதை முழுதும் இழந்து கண் காதெல்லாம் கெட்டுப் போய், தானே எழுந்திருக்கக் கை கால்கள் வராமல் பிறர் கைலாகு கொடுத்துத் தூக்கி னிறுத்த வேண்டிய கெதியிலிருக்கிற ஒரு கிழவன், யௌவனமான ஒரு பெண்ணேப் பார்த்து ''எங்ஙே எம் மூலமாக னீ ஒரு பிள்ளே பெறு பார்க்கலாம்'' என்று சவால் விடுவது போலிருக்கிறது அன்னுரின் பேச்சு.

பிறர் செய்ததைப் பார்த்து க்ஷவரப் பிளேடு முதலியன செய்கிற கெட்டிக்கார னூதன விவேகியாகிய அவனுடைய செயலுக்கு கடவுளேச் சந்திக்கும் செயல் மட்டமாகத்தானே இருக்கும் - சரி உருவில் உலாவும் அந்ந அலகையின் பேச்சை இதோடு விடுங்ங.

220

ஒருவனேப் பார்த்து ''னீ வடலூர் வள்ளலாரைப் போல ஆக முடியுமா?'' என்று கேட்டால் ''அவர்கள் தெய்வம், மகா புண்ணியாத்துமா - னுன் பாவி - அவர்களேப் போல னுன் எப்படி ஆக முடியும்'' என்று பதில் சொல்வான். எல்லோருடைய னினேவும் அப்படித் தான் எண்ணும், கூறும். இந்ந னிலேயில் இருக்கும் ஒரு பாவி இன்னெருவன் செத்தால் அவனேப் போய்ப் பார்த்ததற்காகக் குளிக்கிருன் என்ருல் செத்துப் போனவன்

என்ன அதோ கதிப் பாவியாக போய் விட்டான் என்று எண்ணிப் பாருங்கள் - அதே சமயத்தில் ஞானிக்கு இவனது கதி என்ன என்றும் னினைத்துப் பாருங்கள்.

221

10 - 7 - 1970 முதல் 13 - 7 - 70 வரை சாலை ஆண்டவர்கள் ராய வேலூருக்கு எழுந்தருளிய போது ஆண்டவர்கள் :-

சாமியார் என்று பேப்பர்களில் வெளியாக்கினால்தான் இங்குள்ள மக்களுக்கு ''யாரோ பெரியோர்கள் வந்திருக்கிறார்கள்'' என்று தெரியும் - ஆண்டவர்கள் என்று எழுதினால் தெரியாது எனப் பத்திரிக்கை னிருபர்கள் கூற ஆண்டவர்கள் :- சாமி (சா + மீ) சாவாகிய எமனது கொடிய வாதனை அமலைத் தங்கள் தவப்பாட்டால் தாங்கள் மட்டும் மீறி ஜீவ சிம்மாசன வீரக்குன்றேறிக் கொண்டவர்களே சாமியார். ஆனால் தங்களின் எழுபது ஆண்டு ஓயாத, வாடாத தவ விளைவால் இக் கலிக் கடையிலுள்ள காமலி தேக மக்களை ஆண்டு, அவர்களுக்கு ஒரு பாடுமில்லாமல், அவர்களை எமனணுகா பரிசுத்தவான்களாக ஆக்குகின்ற வல்லபம் உடையவர்களே ஆண்டவர்கள். இந்த செயல் விளக்கம் உங்களுக்கு தெரியாது அல்லவா? ஆம் தெரியாது.

''சிவா, சிவா'' ''முருகா, முருகா'' என்று கால மெல்லாம் கூவிக் கூவி மக்கள் அழைக்கிறார்களே-கடைசியில் எமனைத் தானே சந்தித்தார்கள்- அதற்கான அடையாளங்களும் வந்து விடுகின்றனவே. கசப்பு ஜலத் தீட்டாக அவன் ஜீவ வித்து சிதறி விடுகிறதே. அது ஏன் என்று சிந்தித்துப் பார்ப்பார் இல்லை. அவர்கள் சந்நியா வந்தனம் அதாவது சந்திக்காத வந்தனந் நான் காலமெல்லாம் செய்தார்கள். ஒரு ஞானாவது சந்தித்து வந்தனம் செய்திருந்தாலல்லவா இது விளங்கும்.

222

மெய்வழி இளங் கலைக் கோட்டு அனந்தரின் தூலத் தந்தையினுடைய உடல், உயிரோடு இருக்கையில் வியாதியால் துர் ஞற்றம் அடித்துக் கொண்டிருந்தது - ஜீவப் பிரயாணம் ஆனதும் தேவ மணம் வீசியது என்று சபையில் அறிவிக்கப் பெற்ற போது ஆண்டவர்கள் :- ஒன்று, பத்து, ஆயிரம் பதினாயிரம், லக்ஷம், பத்து லக்ஷம், கோடி, பத்து கோடி இப்படியே பல கோடி தவ வரவுகள் ஞாளுக்கு ஞாள் எம் கையில் ஏறிக் கொண்டிருக்கின்றன. அந்த மெய் மாதவப் பெருக்கின் கிரண

விச்சிற்குள் எப்படியோ அவன் தலை மாட்டிக் கொண்டது. அதனால் விளைந்த விளைவே அந்த தேவ மணம் வீசும் அடையாளம்.

223

1947 - ம் ஆண்டு 10 - ஞள் ஆண்டவர்களைத் தரிசிக்க ஒரு புலவர் குழாம் வந்திருந்தது. அதில் ஒருவர் ''மனம் ஒரு குரங்கு, அது கிளைக்குக் கிளைதாவும்'' என்று தனது புலமையைத் தெரிவிக்க - அதற்கு ஆண்டவர்கள் அருளிச் செய்த வாக்கின் சாரம். மனம்

மனம் என்பது ஒரு குரங்கு அல்ல - அது ஒரு குதிரை. நீ அடக்க அடக்க மீறிப் பாயும், முரண்டு பிடிக்கும் முரட்டுக் குதிரை. அது நித்திய எல்லையையே நோக்கி ஓடும் நல்ல ஜாதிக் குதிரைதான்.

இவனுக்கு நித்தியம் எது - அநித்தியம் எது என்று தெரியாது. அநித்தியத்தை நித்தியமென நினைக்கின்றான். அந்தக் குதிரையை அநித்திய பாதையில் திருப்புகின்றான்.

அறுபது வயதுக் கிழவன் ஏழுதலை முறைக்கு நிற்கும்படி வீடு கட்டுகிறான். ஆனால் அதில் பத்து வருடங்கள் கூட இருக்க மாட்டான். மண்டையைப் போட்டு விடுவான். இவனை அவ்வாறு செய்யத் தூண்டுவது இவனிடத்தில் பொதிந்திருக்கும் நித்தியமே.

மனக் குதிரை நித்தியத்தையே நோக்கி ஓடுவதனால் வேறு எந்த வகை அநித்தியப் பொருள் கொடுத்தும் அதனைச் சரிக் கட்ட முடியாது. நித்தியப் பொருளைக் கண்டால்தான் அதன் மனம் சாந்தி அடையும். அந்த நித்தியப் பொருள் எமது கையில் இருக்கிறது. அந்த நித்தியப் பொருளின் பிரகாசம் அந்த குதிரையின்கண் நுழைந்து ஒளி வீசியதும் அதன் கொட்டம் அடங்கி ஒடுங்கும்.

அது அப்போது சாதாரண குதிரையல்ல. பஞ்சவர்ணக் குதிரை - பஞ்ச கல்யாணிக் குதிரை. அது பிரம்ம சொரூபியாகிய ஆசானையே வலம் வரும் குதிரை. ஆசானின் அருட் பிரகாச வீச்சின் வட்டத்திலேயே சுற்றி வரும் குதிரை. அது மண்குதிரையல்ல - ஆசானின் ஆக்ஞையை அறிந்த அறிவுக் குதிரை. ஆசானின் அருட் ஜோதி நடனத்தைக் கண்டு ஆனந்த நடனமாடும் நாட்டியக் குதிரை. அதற்கு நிகர் அதுவே.

மனத்தை அறிவாக மாற்றுவதே பிர்ம வித்தை. அந்த பிர்மவித்தை ஒன்று தான் எமது கை அடக்கம். அதனைப் பெற்று அனுபவிக்கவே இங்கே எமது மக்கள் கூடி இருக்கின்றார்கள்.

224

அறு சுவையும் - மனிதனின் குணமும்

மனிதன் தான் உண்ணும் ஒரு பொருளை வாங்கும் போது, அது அதிக ருசியுடையதாக இருந்தால், அதிக விலை கொடுத்து வாங்குகிறான்.

வெள்ளரிப் பழத்தின் விலையை விட மாம்பழத்தின் விலை அதிகம். ஏன்? அதன் சுவை. அதிக சுவைக்காக அதிக விலை கொடுத்து வாங்குகிறானே, அந்த ருசி நீ விழுங்கிய உடன் எங்கேயோ சென்று மறைந்து விடுகிறதே, அது என்னவாயிற்று என்று ஆராய்ந்து பார்த்தானா? இந்த ஆராய்ச்சியில் இறங்க இவனது குட்டை அறிவிற்கு எட்டவே எட்டாது.

நீ அருந்தும் உணவு நாவின் அடிப்பாகத்தில் சென்றதும் மறைந்து விடுகிறது. நீ விழுங்கும் போது, மேலேயிருக்கும் உண்ணாக்கு அச்சுவையை ஒற்றி உறுஞ்சிக் கொள்கிறது. அவ்வாறு உறுஞ்சப் பெற்ற ருசி ஜீவனில் ஒன்றிக் கொள்கிறது. ஜீவனும் அரூபம், சுவையும் அரூபம். இவ்விரண்டும் எளிதில் கலந்து விடுகின்றன.

ஒரு பொருள் இனிப்பு அல்லது புளிப்பு என்று சொன்னால் அதில் இனிப்பு அல்லது புளிப்பு சற்று தூக்கலாக இருக்கும். மற்றைய சுவைகளும் சிறிதளவு கலந்தே இருக்கும். மாம்பழம் இனிப்பு ருசி என்றால் அதில் இனிப்பு அதிகம், மற்றைய ருசிகள் குறைந்து மறைந்து காணப்படும்.

இந்த அறுசுவை ஜீவனில் கலப்பதால் ஜீவனின் அடையாளமாகிய மூச்சிலும் அந்த அறுசுவை கலந்தே ஓடும். மூச்சில் அதிக அளவு இனிப்பு கலந்தோடும் போது. கருத்தரிக்குமானால் அக்குழந்தைக்கு இனிமையான சாரீரம், நற்குணப் பண்புகள் இயற்கையாகவே அமையும். அவ்வாறே கசப்பு ஓங்கி இருக்கையில் கருத்தரித்தால் அக் குழந்தையின் குணம் அதற்கேற்ப மாறும்.

ஒரு மனிதன் பூரூவும் நல்லவனுமல்ல, முழுமையாகக் கெட்டவனுமல்ல. நல்லதும். கெட்டதும் கலந்தே இருக்கும். நல்ல மனிதன் என்று எண்ணப்படுபவனிடத்தில் சில தீய குணங்கள் ஒளிந்து காணப்படும். தீயோன் என்று வெறுக்கப் படுபவனிடத்தில் சில நற்பண்புகள் ஒளிந்திருந்து தகுந்த

தருணத்தில் வெளிப்படும். இது ஏன்? அறுசுவையும் கலந்நோடும் மூச்சுள்ள மனிதனிடத்திலிருந்து இவன் உருவானதினுல், அந்த அறுசுவையின் குணங்களும் இவனிடத்தில் கலந்து காணப்படுகின்றன.

225

சாலோகப் பதவி

மிகவும் பிரியமாக வளர்ந்து வந்த மயில் குஞ்னுகளில் ஒன்று இறந்து விட்டது. அதனே முகப்பில் முன்னே மண்ணடக்கம் செய்தபோது :-

இந்த மயில் குஞ்னு சாலே எல்லேக்குள் எனது பிரியத்திற்கு ஆளாகி இருந்து இங்கேயே இறந்து மண் அடக்கம் செய்யப் பெற்றிருக்கிறது. ஆதலால் இதற்கு சாலோக பதவி சித்தியாகியிருக்கிறது. அதாவது இதற்கு அடுத்து வரும் ஜென்மத்தில் பூமியில் மனித பிறவி எடுக்கும் பாக்கியத்தைப் பெற்றிருக்கிறது. சாகின்ற தன்மையுடைய இந்த மண் உலகத்தில் பிறப்பெடுப்பதுவே சாலோக பதவி அடைதல் என்பது.

மண்ணில் பிறந்த மனிதன் தனது அதர்மச் செயலினுல் னரகத்திற்கு வழி வகுத்துக் கொள்ளலாம், அல்லது ஆசானே அடைந்து தர்ம காரியங்கள் செய்து சுவர்ண பதியையும் அடையலாம். அது அவனவன் மெய்யில் ஒட்டுவதைப் பொருத்திருக்கிறது.

பிண்டோற்பத்தி

இன்று மண்ணில் மறைவு செய்யப் பெற்ற இந்த மயிலின் ஜீவன் தேகத்திலிருந்து பூருவும் விடுதலேயடைய 40 னுட்களாகும். பின்னர் அதன் ஜீவன் மண்ணில் ஐக்கியமாகி இறைவனின் கட்டளேக்கு காத்து னிற்கும். அக்கட்டளே பிறந்ததும் ஒரு தாவரத்தின் வேரின் வழியாக இலேயிலோ காயிலோ, கனியிலோ கலந்து மனிதனின் வாயின் வழியாக இரைப்பையை அடைகிறது. அங்கு உணவு ஜீரணிக்கப்பட்டதும் ஜீவன் தனித்து னின்று இரத்தத்தில் கலந்து பீஜத்தை அடைந்து ஆண் விந்துவாகி தாயின் கருவறையில் பாயத் தயாராக னிற்கின்றது. அதற்குரிய காலமும் னேரமும் னெருங்கி வந்த போது தாயின் யோனியில் பாய்ந்து அங்கு

பல்லாயிரக்கணக்கான ஆண் விந்துக்கள் அண்மையிலிருந்நாலும், இது மட்டும் முந்நிக் கொண்டு மிக னெருக்கமான குழாய் பாதையினுள் வெகு எளிதாக னீந்நிப் பெண் கருவறையினுள்ள முட்டைக் கருவின் அருகில் வரும். அருகில் வந்நதும் அதன் தோல் இளகி விந்து உள்ளே இழுத்துக் கொள்கிறது. உடனே ஆண் விந்நணுவும், பெண் முட்டைக் கருவும் ஒன்ருகக் கலந்து ஐக்கியமாகி ஒரே ஒரு அணுவாகிறது. இந்த னிலேயில் அதில் ஆண், பெண் என்ற பாகுபாட்டினேப் பிரித்து அறிய முடியாத ஒரே அணுவாக - ஏகமாக அமையும்.

பத்து மாதங்ஙள் முடிவடைந்நதும் பிண்டத்தின் தலேவாசல் மூடப் பெற்று தாயின் யோனி வாசல் திறந்து அதன் வழியாகப் பிண்டம் வெளியேறுகிறது.

வெளிவரும் வரை அதற்கு மூச்சு கிடையாது மூச்சு இருந்திருந்நால் னுரையீரலில் னீர் னுழைந்து பிண்டம் சேதமடைந்நிருக்கும். பிறந்நதும். ''குவா'' என்று ஒலி எழுப்பும் போது தான் அதன் னுரையீரல் வேலே செய்யத் துவங்ஙுகிறது.

இந்நச் செயல் ஏதோ தற்செயலாக னடப்பதல்ல - இறைவனின் கட்டளேப்படி - ராஜ பாட்டையில் தேவ ரதம் செல்வது போல் - அவ்வளவு இயல்பாக னடைபெறும். அணுவளவேனும் பிசகாது.

முதலில் உருவான ஆதி அசல் புள்ளி தான், னீ சீதனமாக வாங்கி வந்த அமானிதப் பொருள். அது உனது தேகாலயத்தினுள் ஆத்ம மர்ம ஜலக்கடலில் பிரகாச வடிவமாகப் பொதிந்துள்ளது. ஆனல் அதன் பிரகாசம் உனது ஊனக் கண்களுக்கு மறைக்கப் பெற்று ஒரு பளிங்ஙு மாளிகையினுள் குடியேறி இருக்கிறது. அப் பளிங்ஙு மாளிகையின் திறவு கோல் பிர்மசொரூபியாக னிற்கும் ஆசான் கையிலிருக்கிறது. அத்திறவு கோல் கொண்டு உனது ஜீவ தேக மாளிகைக் கதவை ஆசான் திறந்நருள அம்மாளிகையில் பொதிந்து காணப் பெறும் கோடி பொக்கிஷங்ஙள் உனது தோற்றத்திற்கு வரும்.

இது எளிதில் கிட்டுவதல்ல, இதற்கு னீ சாவாது சாக வேண்டும். செத்துச் செத்து னீ தினமும் பிழைக்கும் உளவு தெரிய வேண்டும். உனக்கு உளவைப் போதிப்பதுவே பிர்ம வித்தை இந்த வித்தையைக் கற்க வேண்டும். அந்நப் பிரம்ம தேவனின் மாணுக்கனே பிராமணன். அவனே மேல் ஜாதி. உன்னே இரட்டைப் பிறப்பாளுக மாற்றுவதே எமது பிரதான வேலே.

226

ஆண் பெண் இன வேறுபாடு - ஆண் பெண் பாகுபாடு ஜனித்தல் - கருத்தரித்தல்

மனிதனின் சுவாசம் ஞசியின் இரு துவாரங்களிலும் சமமாக ஓடுவதில்லை. சூரிய கலையில் 2-1/2 ஞழிகையும், சந்திர கலையில் 2-1/2 ஞழிகையும் மாறி மாறி ஓடுகிறது. சூரிய கலையில் ஓடும் போது விந்து வெளியாகி கருத் தரித்தால் அது ஆணுகப்பிறக்கும். சந்திரகலையில் ஓடும் போது கருத்தரித்தால் அது பெண்ணுக இருக்கும்.

ஒரு கலையிலிருந்து மறு கலைக்கு மாறும் போது இருகலையிலும் சமமாக சில விஞடி னேரம் ஓடும். கலைமாறும் போது இருகலையிலும் சமமாக ஓடுகையில் கரு தரித்தால் அப் பிண்டம் உயிரற்றுப் பிறக்கும். பிறக்கும் குழந்நை ஆணு அல்லது பெண்ணு என்று னிர்ணயிப்பது புருஷனின் மூச்சு எந்நக் கலையில் ஓடுகிறதோ அதனை அனுசரித்தே இருக்கும். இதில் மனைவிக்குப் பங்கு இல்லை.

227

மனித வயதின் இரகசியம்

பிறக்கும் குழந்நையின் வயது அது ஜனிக்கும் போதே னிர்ணயிக்கப்படுகிறது. அது தகப்பனின் மூச்சு கலை மாறிய னேரத்தை அனுசரித்தது.

ஒவ்வொரு கலையிலும் 2-1/2 ஞழிகை னேரம் மூச்சு ஓடும். பிறகு மறு கலைக்கு மாறும். கலைமாறினவுடன் விந்து வெளியாகிக் கருத்தரித்தால் அக்குழந்தையின் ஆயுள் னூறு (100) வயதாகும். ஒவ்வொரு 1/2 ஞழிகைக்கும் (20) இருபது ஆண்டுகள் என்ற கணக்கில் குறைந்து கொண்டே வரும்.

ஓராண்டு காலம் என்று சொன்ஞல் அந்த ஆண்டு 365 நாட்கள் கொண்டதல்ல. ஓராண்டு காலத்திற்கு இத்தனை லட்ச மூச்சு னீளம் என்ற கணக்குண்டு. அந்நக் கணக்கிட்ட மூச்சு வெளியாஞல் ஓராண்டு காலம் முடிவடையும். இதே போல் இவன் எவ்வளவு அங்குலம் மூச்சை வெளியாக்கி ஞசமாக்குகிருன் என்பதை அனுசரித்தே இவனது வயது அமையும்.

சாதாரணமாக ஒரு மனிதனுக்கு ஒவ்வொரு மூச்சிலும் 12 அங்குலம் சுவாசம் வெளியேறி 8 அங்குலம் உள்ளே வரும். ஆதலால் ஒவ்வொரு சுவாசத்திலும் இவனது வயதின்

னீளத்தில் 4 அங்ஙுலம் குறைகிறது. தூங்கும் போது 48 அங்ஙுலம் வெளியேறி 24 அங்ஙுலம் உள்ளே வரும். அதனுல் 24 அங்ஙுலம் வீணுகிறது அதிக மூச்சு வெளியாவதனுல் ஆயுள் பாகம் குறையும். அதனுல் தான் தூங்கினுல் ''துக்கிரித்தனம்'' என்று சொல்லுவது வழக்கத்திலுள்ளது. தூக்கத்தைக் குறைத்தால் ஆயுள் விருத்தியடையும். அதனுல் தூக்கத்தைக் குறைக்க பல வழிகளைக் கையாள வேண்டும்.

பாரா வணக்கம், பஞ்ஞனே எழுச்சி, பகலில் தூங்காதிருத்தல் இவைகள் தூக்கத்தைக் குறைக்கும் சில வழிகள்.

போகிக்கும் போது 64 அங்ஙுல னீளமூச்சு வெளியாகிறது. அதுவே இவன் மூச்சு வெளியாகும் னீளத்தின் உச்சவரம்பு. ஆனுல் இவன் சாவதில்லை ஒரு வில்லானது வளைந்து னிமிருவதைப் போல் இவனது ஜீவாக்கினி வெளி போன மூச்சைத் திரும்ப இழுத்துப் பிடித்துத் தன்பால் சேர்த்துக் கொள்கிறது.

சாகும் போது 64 அங்ஙுலம் வெளியேறி திரும்பாது னின்று விடும்.

ஒவ்வொரு தடவையும் போகிக்கும் போது செத்துத்தான் பிழைக்கின்ருன். அதனுல் தான் உடலில் அசதி, மனச்சோர்வு, ஒரு வெறுப்புத் தோன்றி பின்னுல் மறைகிறது. ஆகையால் போகத்தைக் குறைத்து சுக்கில சக்தியை அதிகரித்து வயதையும் னீடித்துக் கொள் என்கிறேன்.

போகிக்கும் போது மூச்சின் னீளம் அதிக பக்ஷம் செலவாகிறது. ஆனுல் யோகத்திலிருப்பவர்களுக்கு மூச்சு ஓடாது. ஆதலால் ஆயுள் குறைவதில்லை. மூச்சு ஓடாதென்ருல் மூச்சு னின்றுவிடும் என்பதல்ல. மார்பறை விரிந்து சுருங்கும் ஆனுல் மூச்சின் னீளம் வீணுவதில்லை. வெளியேறிய மூச்சின் னீளம் அவ்வளவும் ஞசித் துவாரத்தை விட்டு வெளியேருமல் அப்படியே சுருட்டிக் கொண்டு உள்ளேயே சுருண்டு விடும். ஆகையால் மூச்சின் னீளம் வீணுவதில்லை. ஆகையால் ஆயுளும் குறைவதில்லை. யோகிகள் மனம் வைத்தால் தனது ஆயுட் காலத்தை எவ்வளவு ஆண்டுகள் வேண்டுமென்ருலும் னீடித்துக் கொள்ளலாம். ஆனுல் தேகம் க்ஷீணிப்பதைத் தடுக்க இயலாது. தேகம் வலுவிழந்து னைந்து போகும். னைந்த சட்டையைக் கழற்றி எறிந்துவிட்டுப் புது சட்டையில் குடியேறவே அவர்கள் விரும்புவார்கள்.

மூச்சின் நீளத்தை மனிதன் சுவாசிக்கும் போது ஒரு மெல்லிய பட்டு நூலே அவனது நாசியின் முன்பு தொங்கவிட்டு அது எந்த இடம் வரை அசைந்தாடுகிறது என்று குறித்து நாசிக்கும் அந்த இடத்திற்குமுள்ள தூரத்தை அளந்து பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

228

சிவலோக பதவி அடைதல்

ஒரு சைவன் இறந்ததும் இன்னார் சிவலோக பதவி அடைந்தார் என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவிக்கிறேன் என்று கடிதம் எழுதுகிறான். காலகாலமெல்லாம் சிவலோக பிராப்தி சித்திக்க வேண்டு மென்று தவமிருந்தவன் அந்தப் பதவி கிடைத்ததும் வருத்தம் ஏன் அடைதல் வேண்டும்? சந்தோஷமல்லவா பட வேண்டும்.

பதவி அடைந்தது உண்மையா அல்லது வருந்துவது உண்மையா என்று பார்த்தால் இவன் வருத்தப் படுவது தான் உண்மை என்று தோன்றும். மேலும் அவன் ஆன்மா சாந்தி அடைதல் வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன் என்கிறான். அப்போ அன்னாரது ஆத்மா சாந்தியடையவில்லை, பேயாக அலைகிறது என்று இவனே ஒப்புக்கொள்கிறான்.

இவன் வேண்டினால் செத்தவனுக்கு சாந்தி கிட்டுமா? அதனை அவன் உயிருள்ள போதே தேடிக் கொண்டிருக்க வேண்டும். உனக்குப் பசிக்கக் கூடாது என்று நான் வேண்டிக் கொண்டால் உனது பசியாறுமா? நீ தின்றால் தானே உனது பசியாறும். நீ உயிருடன் இருக்கும் போதே சாந்தியை அடைந்திருந்தால் இறந்ததும் அது கைக் கொடுக்கும். நீ சாந்தியடைவாய் -

229

இறைவனின் கட்டளை - சாவாவரம்

மனிதன் பிறக்கும் போதே இறப்பும் உண்டு. இவன் பிறக்கும் போதே எம பயம் இவனது தலையில் ஏற்றப்படுகிறது. அந்த எமபயத்தைப் போக்கி சாவாவரம் பெற்று வாழ வேண்டுமென்பதே இறைவனது கட்டளை. சாவு என்பதனை ஏறி மிதித்து சாகாக்கலை கற்கவே இறைவன் இவனைப் படைக்க, இவன் அதைப்பற்றி சிந்தனை ஏது மின்றி சாவு என்ற சொல்லைச் சொன்னதுமே நடுங்குகிறான் கலியாணப் பேச்சு எடுக்கும் போது சாவு என்று யாராவது வாய் தவறி சொல்லி விட்டாலும்

அதனை அபசகுனம் என்று கருதி அக்கல்யாணப் பேச்சே னின்று விடுகிறது.

பல மைல்களுக்கு அப்பால் இருந்நாலும் சாவு என்ற செய்தி கிட்டியவுடன் அது தீட்டு - உடனே குளிக்க வேண்டுமென்ற னிபந்நனை இருக்கிறது. அப்போது எவ்வளவு அசுத்தம் பார்.

மனிதனை னன்ருகத்தானே இறைவன் படைத்தான். பிறக்கும் போது இவனது வாய் ஞுருது; மூத்திரம் ஞுருது; வியர்வை ஞுருது அவ்வளவு பரிசுத்தமாகப் பிறந்நவன் ஏன் இப்படி ஞுறிச் சாகின்ருன்?

இவனுக்கு முதற்கடமையாக விதிக்கப் பெற்றது தனது ஆதாரத்தலைவனை அறிந்து, தன்னைத்தானே அறிதல் வேண்டும் என்பது. தன்னைத் தானே அறியும் தேவ பாதையில் செல்லாமல் அவபாதையில் செல்லுவதனுல் எமனின் கொடிய சவுக்கடி இவனது முதுகில் இறங்ஙுகிறது.

மனிதன் தனது முதற்கடமையைச் செய்ய ஒரு ஞுள், இரண்டு ஞுளா கெடுவு தந்நான்? சாகும் கடைசி னிமிடம் வரை தன்னைப் பார்க்க மாட்டாஞு என்று ஏங்ஙிக் கிடக்கிருன் இறைவன். பின்னரே தண்டனை வருகிறது. தண்டனையிலிருந்து தப்பிக்க ஒரே ஒரு உபாய முண்டு ''சாகாமல் சாகும்'' சாவா வரம் பெற்ற ஒரு தேவ ஆசானை னீ அணுகுதல் வேண்டும். அவரிடத்தில் அண்டிப் பழகுதல் வேண்டும். அப்போது உனது எமபயம் னீங்ஙி சாவாவரம் பெற்று அழியாப் பதியில் குடியேறுவாய். இது ஒரே ஞுளில் வருவதல்ல. பழக்கத்தாலேயே வருதல் வேண்டும்.

பழஞ்ஞாலையில் வண்டி மாடு ஒன்று இருந்நது. அதனை வண்டியில் பூட்டும் போது ஞுகத்தடியில் தனது கழுத்தை னீட்டிக் கொண்டே ''தொப்'' என்று விழுந்நு இறந்நு போயிற்று. அதன் கழுத்தை ஞுகத்தடியில் விட்டுப்பழகியிருந்தால் சாகும் னேரத்திலும் தன்னையறியாமல் தனது கழுத்தை ஞுகத்தடியில் னுழைத்தது. அது போல் உனக்கும் பழக்கம் வர வேண்டும்.

சாகும் போது உனது கை, கால் கண், காது ஒன்றும் வேலை செய்யாது. செயலற்றுப் போகும். அந்ந னேரத்திலும் னீ தேவபிரானை மறக்காமல் அவரது பொற்பாதகமலங்ஙளைப் பற்றுதல் வேண்டும். அப்படிப் பற்றினுல் அத்தேவனுட்டரசர் உன்னை சுவர்ணபதியில் குடியேற்றுவார்.

அந்த இக்கட்டான நிலையில் அவர்களைப் பற்றுவது அவ்வளவு எளிதல்லவே. ஆசானிடத்தில் அண்டி அடிக்கடி பழகியிருந்நால் தான் இது சாத்தியமாகும். இதனைச் சாதித்தவனே ''சாவா வரம்'' பெற்றவன்.

230

செத்தால் தெரியும் செட்டியார் வாழ்வு

எது தர்மம், எது அதர்மம் என்று எமன் ஒருவனுக்கே தெரியும். அவன் ஒருவனே நியாயம் தவறுமல் - நீதி தவறுமல் - பாரபக்ஷமில்லாமல் - தருமத்தை நிலை நாட்டும் தருமவான். அதனுல் தான் அவனுக்கு ''எம தரும ராஜா'' என்று பெயர் வந்தது. அவன் ஒருவனே நீதி தவருத நீதிமான். அவன் நெருப்பாறு மயிர்ப்பாலத்தில் அமர்ந்து தீர்ப்பளிப்பவன். அவனது தீர்ப்புத் தவறிஞல் மயிர்ப்பாலம் அறுந்து தீயில் விழுவான். அவன் நீதி என்றுமே தவருது.

அவனது கையில் நீதித் தராசு இருக்கின்றது. ஒரு தட்டில் இவன் செய்யும் தருமமும், மறுதட்டில் அதர்மமும் ஏற்றப்பட்டு முள் எந்தப் பக்கம் சாய்கிறதோ அதனை அனுசரித்தே எமதர்மன் தீர்ப்பளிப்பான். அதனுல் இதனை அவ்வப் போது ரிக்கார்டு செய்யும் கணக்கப் பிள்ளைகளான சித்ரா புத்திரர்கள் இருவர் உன்னிடத்தில் இருக்கிருர்கள். உனது கண்பார்க்காமல் நீ ஒன்றும் செய்ய முடியாதல்லவா? உனது கண் பார்த்ததுமே அதனை அப்படியே ரிக்கார்டு செய்யப்படும். அந்த ரிக்கார்டை திருப்பி வாசித்தால் உனது வண்ட வாளங்கள் அனைத்தும் அப்படியே வெட்ட வெளிச்சமாகி விடும்.

செட்டியார் பெரிய தனவந்தன். தானம், தருமம் ஒன்று விடாமல் செய்தார். கோயில் கட்டினுர், குளம் வெட்டினுர். தர்ம சாலை ஏற்படுத்தினுர். ஆனுல் அவர் செய்தது தர்மமா அல்லது அதர்மமா என்று எப்போது வெளிப்படும்? அவர் செத்த பிறகே தெரிய வரும். சாகும் போது முழுக்கு வெளியானுல் அவன் அசுத்தன். அதர்மன், முழுக்கு வெளியாகாமல் பரிசுத்தப் பிரயாணம் செய்திருந்நால் அவன் சுத்தவான், தருமவான் - என்று தெரிய வரும்.

செட்டியார் பெரிய பணக்காரர் தருமம் பல செய்தார். ஆனுல் அவர் கடன் வாங்கி தர்மம் நடத்தியிருக்கலாம். அவர் இறந்த பின்னரே அவரது உண்மையான பொருளாதார நிலைமை தெரிய வருமென்று நினைப்பார்கள். உண்மை

அதுவல்ல. செட்டியார் இறந்ததும் அவரது ஞுதமெனும் சுக்கிலம் வெளியாகி இறந்தாரா அல்லது ஞுதம் உள் இழுக்கப் பெற்று மேலேறி பரிசுத்த ஜீவ பிரயாணம் செய்தாரா என்று அவர் செத்த பின்னரே பகிரங்கமாகத் தெரிய வரும்.

''ஞுதம் மேலேறிஞல் சுல்தான் - கீழே போஞல் சைத்தான் என்பார்கள் - இது செத்தால்தான் தெரியும். இதனைத்தான் ''செத்தால் தெரியும் செட்டியார் வாழ்வு'' என்று எடுத்து வைத்தார்கள்.

231

ஜீவப்பிரயாணம் - மரணம்

சாவு வந்தவுடன் மனிதன் எப்படி யெல்லாம் மாறிவிடுகிருன் பார். அவனது ஞமம் பறிபோய், ''பிணம்'' என்ற ஞமம் வருகிறது. அவனது பக்கத்தில் படுத்திருந்து இன்பம் தந்த மனைவி அவனைக்கண்டு அஞ்ஞுகிருள். துணைக்கு ஆள் சேர்த்துக் கொண்டு, விளக்கைக் கொளுத்தி வீட்டை வெளிச்சமாக்குகின்ருள்.

செத்த இவனைக் கண்டு இப்படி னடுங்குகிருர்களே, பிறந்ததிலிருந்து பசித்தால் சூடான இரத்தத்தைத் தவிர வேறு ஒன்றையும் குடித்தறியாத புலி செத்தால் இப்படி யாரும் பயப்படுவதில்லையே. அதன் தோலுக்கு அலைகிருர்கள்.

இவன் புதைக்கப்பட்ட இடமே அசுத்தப்பட்டு போகிறது. யாரும் அங்கு செல்ல அஞ்ஞுகிருர்கள். அங்கு போக மறுக்கின்ருர்கள். ஆஞல் பெரியோர்கள் அடக்கமான இடத்தில் பயமில்லாமல் அணுகி, ''எனக்கு நல்ல மகஞகப் பிறக்க வேண்டும். நானும் எனது கணவனும் னல்ல படியாக வாழ வேண்டும்'' என்று வேண்டிக் கொள்கிருர்களே ஏன்? அவர்கள் சாகவில்லை. தன்னுள் ஜீவனை அடக்கிக் கொண்டவர்கள். அவர்கள் அடக்கமானவர்கள். ஆஞல் இவஞே அதிமகோன்னத பரிசுத்த பரிமள சுகந்தம் வீசும் ஜீவ வித்தை சுருக்கி ஞசமாக்கி அசுத்தமாக வெளியிட்டவன்.

சாவதில் இரண்டு வகைகள் உண்டு. ஒன்று செத்துப்போவது. மற்ருென்று அடங்குதல் - இரண்டையும் ''சாவு'' என்று தான் சொல்லுகிருேம். அடங்குதல் பெரியோர்களுக்குரியது சாவது பாவிக்குரியது.

ஜெயில் சூப்பிரண்ட் ஜெயிலுக்குப் போகிருர். திருடனும் ஜெயிலுக்குப் போகிருன் இரண்டும் ஒன்ரு? ஜெயில் என்ற

வார்த்தை பொதுவானதே. ஜெயிலில் அதிகாரம் செய்ய சூப்ரண்ட் போகிறார். ஆனால் திருடனோ தண்டனை அனுபவிக்கச் செல்லுகிறான் எவ்வளவு வித்தியாசம் பாருங்கள்.

''சாவு'' என்ற சொல் ஒன்றே. ஆனால் ஒருவன் சுவர்ணபதிக்குப் போகின்றான் இன்பம் அனுபவிக்க. மற்றொருவன் மீளா னரகத்திற்குச் செல்கிறான் துன்பம் அனுபவிக்க. இரண்டும் ஒன்றா? இதில் எது வேண்டும் சொல் மகனே. ஒருவன் தன் சொந்தப் பிரகாச மாளிகையில் குடியேறுகிறான். மற்றொருவன் தனது பிரகாச பளிங்கு மாளிகையை இடித்து தூளாக்கி அதையே அழித்து விடுகிறான்.

பிரகாச மாளிகையில் குடியேறுகிறவனுக்கு ஜீவன் பிரிவது சிரமமில்லாமல் வெண்ணெயில் உரோமத்தைப் போட்டு இழுப்பது போல் சரளமாக வரும். இது அடங்குதல். ஆதியிலுண்டான வித்தினிடத்தில் ஜீவன் இழுக்கப் பெற்று அந்த வித்தினுள் அடங்கி விடுகிறது. இதுவே முத்தர்கள் செல்லும் பாதை. இது ஜீவப்பிரயாணம்.

மற்றொன்று மயிர்க்கால் தோறும் பிய்ந்து முள்வேலியில் போடப்பட்டு இழுக்கப்படும் பட்டுச் சேலையைப் போல் சல்லி சல்லியாகக் கிழிக்கப்பட்டு னைந்து சாவது. அப்போது மரண அவஸ்த்தை ஏற்பட்டு புஜங்கள் தூக்கிப் போட்டு, மூச்சுத்திணறி, முழுக்கு வெளியேறி னறிச் சாகின்றான். இது துர் மரணம்.

மரணமடைந்தவர்களை எரித்தலே னியாயமாகும். எரிக்கப்பட்ட வித்து மறுபடியும் முளைத்து எழாது. தீய்ந்தே போகும் ஆனால் அடங்கிய வித்து மறுபடியும் துளிர் விட்டுத் தழைக்கும். வாழை முளைத்தால் அதன் அடியில் கன்று தோன்றுவது போல் வாழையடி வாழையாய் மெய்க்குலம் வந்து கொண்டே இருக்கும்.

232

அடக்கம் அமரருள் உய்க்கும்

ஒரு புள்ளியிலிருந்தே இத்தேகம் விரிந்தது. ஆதி-புள்ளியில் னின்று ஆடத்துவங்கிய ஜீவன், தேகாதியந்தமும் பரவி, இத்தேகமெனும் னடமாடும் தேவாலயத்தை னிர்மாணம் செய்தது. அதுபோது உனக்கு எந்தவித வலியும் தெரியவில்லை. அது போலவே தேகமெங்கும் வியாபித்து னின்றாடும் ஜீவனை வலி இல்லாமல் திரும்ப இழுத்து உனது சொந்த மாளிகையான அந்த ஆதிப்புள்ளியில் அடங்க வைப்பதுவே அடக்கம்.

இந்நச் செயலேயே ''அடக்கம் அமரருள் உய்க்கும்'' என்றூர்கள். இவ்வாறு அடங்கினவர்கள் அமரர் ஆகின்றூர்கள். அவர்களின் சமாதி ஸ்தலம் கோயிலாக மாறுகிறது.

இவன் 'அடக்கம்' என்றூல் பிறர் சொல்லுக்குக் கட்டுப்பட்டு அடங்கி இருக்க வேண்டும் என்பான். இதனுல் அமரத்துவம் கிட்டவே கிட்டாது.

பாம்பு சீறி வந்நால் உனது அடக்கத்தை அதனிடத்தில் னிட்டினுல் அது உன்னைத் தீண்டாமல் விடாது. பாம்பு சீறி வந்நால் அதற்குத் தடியடிப் பிரசாதம் கொடுத்தே ஆக வேண்டும். வேறு வழியில்லை. இங்கே அடக்கம் ஆபத்தை விளைவிக்கும்.

233

ரிஷி பிண்டம் ராத்தங்காது

ஒரு பெரியவர் மேடையில் னிற்க அவரைப் பார்த்து விட்டு வருவதுவே தரிசினை என்கிறூர்கள். அது தரிசினை என்றூல் உனக்கு சினை தரிக்க வேண்டும். அந்நச் சினை தூல சேர்க்கையால் ஏற்படும் சினையல்ல. அது தூய அரூப சேர்க்கையால் ஏற்படும் தேவ சினை.

மாணவனின் ஆவிடையோனியில் ஆசானின் ஞுதரூப லிங்கம் போகிக்க போகிக்க ரிஷி பிண்டம் உருவாகிறது. இப் பிண்டம் இரவு தங்காது. உடனே பிறந்து விடும். இதைத் தான் ரிஷி பிண்டம் ராத்தங்காது என்பர்.

இப்பிண்டம் (குழந்தை) பிறந்நவுடனேயே பாடும், பேசும், புளகாங்கிதமடையும். புல்லரிக்கும் சுயம்பு லிங்கத்தை தெரிசித்து ஆனந்த பாஷ்யத்தால் அதற்கு அபிஷேகம் செய்யும் புண்ணியக் குழந்தை அது. இது தேவ குழந்தை 'சதா' சிவத்தின் பிள்ளை. சதா - அதாவது ''என்றும் பூராணமாயுள்ள'' சிவத்தினுடைய பிள்ளை என்பர்.

குரு தேவரின் புணர்ச்சியினுல் சமாதி னிலை எய்தினவனது மூச்சு வெளியே ஓடாது.

ஆசானின் அருள் வாள் பாயப் பாய பாபங்கள் பலி வாங்கப் பட்டு பரிசுத்தனுவாய்.

இறைவனின் பெருங்கருணை

மனிதன் இறைவனின் இரகசியப் பெட்டகம். அவனது னலனுக்காகவே சர்வத்தையும் படைத்தான். னாவிற்கு இன்ப மூட்ட ருசி மிக்க அறுசுவைக் கனிகள், னோயினை னீக்க பிணிதீர்க்கும் மூலிகைகள். ஆரோக்கியமாக வாழ வகையான தானியப் பொருட்கள், காதுக்கு இன்ப மூட்டும் பறவைகளின் கீதங்கள்.இப்படி எத்தனை எத்தனையோ! சொல்லி முடியாது.

ஐந்து னிமிஷ னேரம் காற்றில்லாமல் உன்னால் தாக்குப் பிடிக்க முடியுமா? முடியாது. அதனை உனது னாசித் துவாரத்தின் அருகிலேயே வைத்திருக்கிறான். தண்ணீரில்லாமல் 48 மணி னேரம் உயிர் வாழலாம். அதனை வானத்திலிருந்து அவ்வப் போது பருவம் தவறாமல் மழையாகப் பொழிகின்றான்.

உணவில்லாமல் ஒரு மண்டல காலம் (40 னாட்கள்) உயிர் வாழலாம். உயிர் வாழ்வதற்குத் தேவையான தானியங்-களையும் அவனே படைத்தான்.

உனது விஞ்ஞான அறிவு கொண்டு ஒரு மணி னெல் படைக்க முடியுமா? முடியாதே. அப்படி இருக்க எத்தனை ரகமான தானியக் குவியல்கள்! இவைகளை இனாமாகப் படைத்தாலும் அவைகளை விளைவித்து சேகரம் செய்து அனுபவிக்க வேண்டு மென்ற சிறிய சிரமம் தான் உனது தலையில் ஏற்றப்பட்டது. அதுவே உனது ஆயுள் காலம் வரை சரியாக இருக்கிறது. எப்பப்பார் வவுத்துப்பாடு என்றே அலைகிறான், என்றென்றும் உணவுப் பஞ்சம் என்ற பேச்சே அதிகமாகக் காதில் விழுகிறது.

இத்தனையும் வீணுக்கா படைத்தான்? இவைகளை உன்னை அனுபவிக்க விட்டு அதற்கு ஒரு னிபந்தனையை விதித்தான். உன்னை அறிந்து, உனக்குள் ஜொலிக்கும் பிரணவ னாதனைக் காண வேண்டும் என்பதுவே அவன் விதித்த பிரதானக்கட்டளை. உனக்குள்ளிருக்கும் கடவுளைத் தெரிசிக்க வேண்டுமென்று அவன் னிபந்தனை விதிக்க, அதனைக் காற்றில் பறக்கவிட்டு, கல்லுக்குள் இருக்கும் தேவனைத் தேடி அலைகிறான். அதனால் தான் இறைவனின் தண்டனை இறுதியில் இறங்குகிறது. வருகிறான் எமன் இவனுக்கு புத்தி புகட்டிட அந்த எமனை விரட்டவே னாம் முயற்சி செய்கிறோம். அதற்கு செவி சாய்த்தவர்களே மீட்புக்குரிய எமது வானாட்டு தேவ மக்கள்.

மனித வித்தின் தன்மை

மனிதனின் ''மனம்'' எவ்வளவு கொடுத்தாலும் திருப்தியடையாது. தன்னிடத்திலிருப்பது போதாது மேலும் வேண்டுமென்றே கேட்கும்.

னடந்து செல்லுவான் - சைக்கிள் இருந்நால் தேவலே என்று னினைப்பான் - சைக்கிற் வாங்கினதும் மோட்டார் சைக்கிள் மேல் மனம் தாவும் - பிறகு கார் - ஏரோப்பிளேன் இப்படியே மனம் போகும்.

இவனது ஆசைக்கு எல்லேயே இல்லே. எவ்வளவு கொடுத்தாலும் திருப்தி ஏற்படாது. அதற்கு இவனேச் சொல்லிக் குற்றமில்லே. இவனேப் படைத்த வித்தின் தன்மை அது. னிரந்திர வித்து. என்றென்றும் ஸ்தாபிதமாக னிற்கும் சஞ்ஜீவி வித்து. அதனல் அல்பாயுசு என்று தெரிந்தும் னிரந்நரமாக னிலேத்து னிற்க வீடுகட்டுருன். ஏன்?

இவன் தேகம் அழியும். வித்து அழியாது. னித்தியத்துவம் பெற்றது. ஆகவே னித்தியமாக உள்ளதையே ஞடும். உனது வித்து னிரந்திர சுவர்க்கம், அல்லது னிரந்திர னரகம் அனுபவிக்க வந்த வித்து. அதனே னிரந்திர சுவர்க்கப்-பாதையில் திருப்புவதுவே மனிதனின் கடமை. அதற்கு உதவிபுரியவே ஞம் இருக்கிருேம்.

உன்னிடத்திலுள்ள வித்து - முத்தான தேவ வித்து. அது பேரின்ப வித்து. பேரின்பத்தை ஞேக்கியே வளரும். எவ்வளவு சிற்றின்ப உணவு கொடுத்தாலும் இதற்கு னிறைவு ஏற்படாது. இன்னும் கொஞ்ஞம் வேண்டுமென்று தான் கேட்கும். அதனே எந்த வகை சிற்றின்ப உணவினுலும் திருப்திபண்ண முடியாது. அருளமுத பேரின்பச் செவி உணவு ஒன்றே அதனே திருப்தியடையச் செய்யும். அது வரை அதன்பசி தீராது.

அந்நப் பேரின்பச் செவியுணவு எம்மிடத்திலுள்து. அதுவே எமது ''மை'' அதுவே உன் ''மை'' ஜகத்தை மயக்கும் ''மை'' அதுவே ஆண் ''மை''. உன்னிடத்தில் பெண் ''மை'' இருந்நால் எமது ஆண் ''மை'' யை அனுபவிக்கலாம்.

இந்த ஆணுக்கு எத்தனே கோபியர்களிருந்நாலும் போதாது. அத்தனே பேரையும் ஒரே காலத்தில் போகிப்பார். இது தேக உறவு அல்ல. தேவ உறவு. தூலபோகமல்ல. கந்நர்வ போகம். அகக் கண் போகம். இதனேயே ஸ்ரீ கண்ணபிரான் அன்று செய்து காட்டிஞர்கள்.

இந்நக் காக்ஷியினைக் கண்டுகளிக்க உனது ஊனக் கண்களுக்கு சக்தியில்லை. அதனை தேவகண்ணுக மாற்றி அமைக்க வேண்டும். அப்போது தான் னிஜக் கண்ணனை தெரிசிப்பாய். அர்ஜுனனுக்கு உபதேசத்தருளிய பார்த்திபனைப் பார்ப்பாய். அவனது விஜய காண்டீபம் உனது தோற்றத்திற்கு வரும். இதற்கு வடக்கே குருக்ஷேத்திரத்தைத் தேடிச் செல்ல வேண்டியதில்லை. சாலையே உனது குரு வசிக்கும் க்ஷேத்திரம்- குருக்ஷேத்திரம். அதுவே உனது முத்தித்தலமாகும்.

236

தில்லை னடராஜன்

னடராஜனின் தெரிசனம் பாபவிமோசனம். இது சரியே. னட ராஜன் - னடனம் செய்யும் ராஜன் - இவனைத் தெரிசிக்க வேண்டும். தேகாதியந்நமும் குலுக்கி னடனம் செய்யும் அந்ந திவ்விய ராஜனை சந்நிக்க வேண்டும். அவன் னடனத்தின் அசைவுகளைக் கண்டு உனது கண்களில் ஆனந்ந பாஷ்யம் சொரிய வேண்டும். அந்நப் பாத சிலம்பொலி ஞதம் உனது காதில் இனிக்க வேண்டும். அப்படித் திருனடனம் செய்யும் தில்லை ஞயகனைச் சந்நிக்க உனது பாபங்கள் சங்ஙரிக்கப்பட்டு புண்ணியன் ஆவாய். அதனை விட்டு ஒரு காலைத் தூக்கி அசையாது னிற்கும் னடராஜன் சிலையைத் தெரிசினை செய்தால் பயன் இல்லை.

அசல் திரு னடனக்காக்ஷியைக் கண்டால் கண்களில் னீர் சுரக்கும். இது ஆனந்நக் கண்ணீர். உப்புக் கரிக்காது. மயிர் கூச் செரியும். சுயம்பு லிங்கம் கங்ஙா ஸ்ஞனம் செய்யும். அப்போது னீ சாந்நி அடைவாய்.

'உன்னிலிருக்கும் மனிதனைச் சாகடித்துத் தேவனுக்கும் தீ தான் ''சா - ந்தி'' மனத்தினை சாகடித்து அருட் பெரும் ஜோதியாக மாற்றும் தீயே சா - ந்தி.

''ஓம் சாந்தி, ஓம் சாந்தி'' என்று ஆயிரம் தடவை வாயினுல் சொன்னுலும் அந்நப் பருப்பும் வேகாது. பருப்பு வேக வேண்டுமென்ருல் நிஜமான தீ வேண்டும். அது தான் ஆசானிடத்திலுள்ள முத்தி ''முத் - தீ'' முப் பெரும் தீ.

237

கனவுலகம்

வேதத்திற்கு மறை என்ற மாற்றுப்பெயர் உண்டு. உனது கண்களுக்கு மறைக்கப்பட்டிருக்கிறது மறை. வேதத்திலேயே

மறைக்கப்பட்டது உனது கனவில் தோன்றுமா?

கனவில் ஞன் மயில் வாகனனைக் கண்டேன் என்கிருன். மயில் வாகனனை முன்ஞல் சந்நித்திருக்கிருஞ, அவனை அடையாளம் கண்டு கொள்ள? இது மனப்பிரமை. கனவு இதற்காக படைக்கப் படவில்லை.

மனிதப் பிறவியைத் தவிர வேறு எந்தப் பிறவிக்கும் கனவுலகம் இல்லை. இவன் ஒருவனுக்கே அது பிரத்தியேகமாகப் படைக்கப் பெற்றது.

இவன் இன்பக்கனவு காண்கின்ருன். அதற்கான அடையாளம் வெளிப்படையாகத் தெரிகிறது. ஆஞல் இதில் இவனது தேகம் பங்கெடுத்துக் கொண்டதா? இல்லை - தேகத்தின் ஐய்புலன்களின் சம்பந்தமில்லாமலேயே மனம் மட்டும் தனித்து னின்று இன்பம் அனுபவித்திருக்கிறது. அதே போல் துன்பம் அனுபவித்து கனவில் அலறுபவர்களும் உண்டு.

தேகத்தின் உதவியின்றியே சுகம், துக்கம் இவ்விரண்டையும் அனுபவிக்கும் வல்லபம் இவனுக்குண்டு என்று காட்டவே கனவு படைக்கப் பெற்றது.

தேகம் நீங்கின பின் - இறந்த பின் - சுவர்க்கம், னரகம் இதில் ஒன்றை அனுபவிக்கப் பிறந்தவன் என்று எச்சரிக்கவே மனிதனுக்காக உண்டான உன்னத படைப்பு இந்தக் கனவுலகம்.

238

உள்ஞேக்குப் பார்வை

பிறந்த குழந்தையை னீ கூப்பிட்டுப்பார். அது உன்னை லெக்ஷியம் செய்யாது. திரும்பிப் பார்க்காது. ஏன்? அதன் உள்ளம் வெளி ஞேக்கி இல்லை. உள் ஞேக்கியே - தன்னைத்தானே ஞேக்கி - இருக்கிறது. னீ சந்தோஷ மூட்டிப்பார் அது சிரிக்காது. ஆஞல் தூக்கத்தில் சிலனேரம் தாஞகவே சிரிக்கும். சிலனேரம் அழும். இது எப்படி? அது இறை சொரூபத்தை அகத்தில் தெரிசித்துக் கொண்டு உள்ஞேக்குப் பார்வையில் இருக்கிறது. ஆஞல் அதனை னீ, ''இதோ பார் உனது அப்பா, இதோ பார் உனது அம்மா'' என்று உன் பார்வையை வெளியே இழுத்து விடுகிருய் ஆஞல் அந்த உன் பார்வையை உன்ஞல் திருப்பி உள்ளே கொடுக்க முடியாது. அப்படித்திருப்பிக் கொடுப்பது ஆசான் ஒருவரே.

வெளிநோக்குப் பார்வையை உள்நோக்குப் பார்வையாக்கி வைப்பதுவே உபதேசம் ''இத்தேசத்திலிருக்கும்'' பார்வையை ''உன் தேகத்திற்கு'' மாற்றுவதே உபதேசம். அப்போது மறு தேசத்தில் இருக்கும் இறைவனைக் காண்பாய் உனது அகக்கண் தேவகண்ணாக மாறுகிறது. மறு பிறப் பெடுத்து மறுபடியும் பிள்ளையாகின்றாய். ஆனால் தேகம் மட்டும் மாறுவதில்லை.

இது சிவகாமியின் பிள்ளை.
உண்ணாமுலையில் பாலருந்தும் பிள்ளை.
ஞானப்பால் அதன் வாயிலிருந்து வடியக்
காண்பாய். இது பிறந்ததும் பேசும். பாடும்.
இந்தச் செயலை உனக்கு அளிப்பதவே எமது வேலை.

239

ஜாதிமத வேற்றுமைகளைக் களைதல்

மனிதன் ஒரு தனி இனம். இந்த இனத்தில் ஜாதி வேறுபாடில்லை. இறைவன் படைத்தது ஒரே சாதி தான். அதில் ஏழை பணக்காரன், மேல் ஜாதி கீழ் ஜாதி என்ற பாகுபாடில்லை. பணக்காரன் குழந்தையும், ஏழையின் குழந்தையும் பிறக்கும் போது ஆடையில்லாமல் அம்மணமாகவே பிறக்கிறது ''குவா'' என்ற ஒரே மொழியையே பேசுகிறது.

ஜாதிமத வேறுபாடுகளை நீயே ஏற்படுத்திக் கொண்டது-தான். அது இந்தத் தூல அளவிலேயே நின்று விடும். தூலம் கடந்த ஜீவதேக சுடருக்கு ஜாதி மத வேறு பாடு இல்லவே இல்லை. அந்த ஜாதி மதமற்ற ஜீவச் சுடரைத் தேடி அடைய வேண்டியது தான் உனது தலையான வேலை. ஜலந்நனில் நடுவே அக்கினிச் சுடராக நின்று பிரகாசிக்கும் அந்தக் குளிர் தீபத்தைக் காணுவதற்கு உதவி புரியவே நாம் உன்னிடமிருக்கிறோம்.

ஒரு வேப்பங்குச்சி, ஒரு சந்நன குச்சி, ஒரு புளியன் குச்சி இவைகளை எடுத்துக்கொள். இவைகளின் குணம் வேறு மணம் வேறு. இவைகளை ஒன்றாக இணைக்க எந்தப் பாடு பட்டாலும் நடக்காது. ஆனால் மூன்று குச்சிகளையும் தீமூட்டி பற்ற வைத்து சுடர் விட்டெரியச் செய்து, அச்சுடர்களை ஒன்றாகச் சேர்த்தால், சிறிது கூட வேறுபாடில்லாமல் ஏகமாகக் கலந்து ஒன்றி எரியும்.

இந்து மதம், இஸ்லாமிய மதம், கிருஸ்துவ மதம் இவைகள் தான் தற்காலத்தில் பிரதான மதங்கள்.

இவைகளின் பண்பு கலாச்சாரம் அவ்வளவும் மாறுபட்டது. இந்த மதத்தவர்களை ஒன்றாகச் சேர வேண்டுமென்று நீ என்ன பாடு பட்டாலும் அது நடை பெறாது. தனித்தனியாகவே நிற்பார்கள். இவர்களை ஒன்று சேர்க்க வேண்டுமென்றால் அவரவர் ஜீவனை அவரவர் அறிய வேண்டும். தனது ஜீவச்சுடரை உணர்ந்தால்; அந்தச் சுடர் வித்தியாசமில்லாமல் ஒன்றாக ஒன்றி கலக்கும். சாதி மத வித்தியாச மற்றுப் போகும். அது தான் இங்கு நடக்கும். வித்தை. அறுபத்தி ஒன்பது சாதிகள் பேதமில்லாமல் ஒன்றி, ஒருவனே தேவன் ஒன்றே குலம் என்று வாழ்வதின் இரகசியம்.

240

ஐம்பொன்

ஒரு புத்த மதத்தைச் சேர்ந்தவர் சாலைக்கு வந்த போது

இந்தியாவில் இந்துக்கள், கிருஸ்தவர்கள், இஸ்லாமியர், பௌத்தர்கள், ஜெயினர்கள் என ஐந்து மதங்களே மிகவும் பிரதானமானவைகள். இவர்களை ஒற்றுமையாக வாழ வேண்டுமென்று எவ்வளவு போதித்தாலும் அவர்கள் ஒற்றுமையாக வாழ்வதைப் போல் காணப்படுவார்கள். ஆனால் நெருக்கடியேற்படும் போது தனது சொந்த சொரூபத்தையே காட்டுவார்கள். இவர்களை ஒரே குலமாக்கப் பேசுவதனால் மட்டும் மாற்ற முடியாது. இவர்களை ஒன்றாக உருக்கி வார்ப்படம் செய்தல் வேண்டும்.

தங்கம், வெள்ளி, செம்பு, துத்தநாகம், வெள்ளீயம் இந்த ஐவகை உலோகங்களை எடுத்துக் கொள். இவைகள் ஒவ்வொன்றுக்கும் தனித் தனி நிறம், பண்பு உண்டு. இவைகள் ஒன்றாக சேர்க்க என்ன பாடு பட்டாலும் நடக்காது. ஒன்றாகத் தேய்த்தால், இடித்தால், மிகச்சிறிய துகளாக்கினால் அப்போதும் சேராது. ஒவ்வொரு துகளுக்கும் அதன் தன் தனித்தனி குணம், நிறம் இருக்கத்தான் செய்யும். அப்போ என்ன செய்தால் ஒன்றாகக் கலக்கும்? மண்குகையில் வைத்து சூடேற்றினால் சூடு ஏற ஏற இளகி, உருகி ஒன்று சேர்ந்து ஐம் பொன் என்ற புதிய பொருள் தோன்றும். அதில் தங்கம், வெள்ளி, செம்பு என்ற பாகுபாடு இருக்காது. எல்லாமாய்க் கலந்து ஒரே பொருளாக இருக்கும்.

அதேபோல் 69 ஜாதிகள் கொண்ட இவர்களை எமது தேவகுரு வெனும் ஜீவ குகையில் வைத்து எமது அமுத ஞா

வெனும் வெப்பத்தினுல் சூடேற்றி இவர்களே உருக்கி இளக வைத்துக் கலந்து ஒன்ருக்கி வைத்திருக்கிருேம். அதனுல் தான் அனந்நர் குலம் என ஒன்ருக வாழ்கின்ருர்கள்.

241

தாயுமானவர்

தந்தையாக னின்று ஞானவழி முற்கூட்டி னடந்து வழிகாட்டி, தனது பிள்ளேகள் சோர்வுறும் போதெல்லாம் தாயாக மாறி தனது உண்ணு முலேயின்கண் சுரக்கும் ஞானப்பாலே பசியறிந்து தாயின் மிக்க கருணேயுடன் ஞான பாலகனுக்கு ஊட்டி வளர்ப்பதனுல் தகப்பன் மட்டுமல்ல தாயும் ஆன வரானுர்-தாயுமானவர்.

242

திருமணம்

இவன் செய்து கொள்ளும் திருமணத்தில் ''திரு'' வுமில்லே, 'மணமும்' இல்லே. அழல் ஞற்றமே னிறைந்துள்ளது. ''திரு'' என்ருல் ''அழியாதது'' என்று பொருள் ''மணம்'' என்ருல் வாசனே இருத்தல் வேண்டும். இந்த இரண்டுமே இவன் செய்து கொள்ளும் திருமணத்தில் இல்லே.

அப்படியிருக்க ''திருமணம்'' என்ற ஞமத்தை ஏன் அதற்கு சூட்டினுர்கள்? திருவும், மணமும் கலந்த அழியாத சுகந்நம் வீசும் ஒரு பெரு வாழ்க்கை. அதுவே திருவாகிய அழகுடைய அழியாதது. அதுவே என்றென்றும் தேவமணம் வீசும் சுகந்நமுடையது. அத் தேவ மணம் வீசும் பேரின்ப பெரு வாழ்வை னீ அனுபவிக்கப் பிறந்நவன் என்று உன்னே சிந்திக்க வைக்கவே இந்நச் சிற்றின்ப சேர்க்கைக்கு திருமணம் என்ற ஞமத்தை சூட்டியருளி ஞர்கள்.

அந்நப் பேரின்ப வாழ்வை அடைவதற்கு இந்நச் சிற்றின்ப வாழ்க்கையும் தேவையானது தான். இல்லேயேல் உனது மனம் காமத்தில் அலேமோதி அந்ந சிவயோக காமத்தில் லயம் பெருது.

ஒரு மனிதன் கலியாணமாகாமல் பிரம்மசாரியகவே இருந்து விட்டால் மனிதப் பூண்டே அழிந்து போகும்.

மனித வர்க்கம் என்றென்றும் அழியாமல் வாழையடி வாழையாக வாழவே இந்த அற்ப போகத்தில் அவ்வளவு இன்பத்தை வைத்துப் படைத்தான் இறைவன். ஆகவே பருவமடைந்த ஆணும், பெண்ணும் திருமண வாழ்க்கையில் ஈடுபட்டேயாக வேண்டும்.

தான் ஒரு கட்டை பிரம்மச்சாரி என்று பெருமையாகச் சொல்லிக் கொண்டு ஊரை வேண்டுமென்ருல் ஏமாற்றலாம். இவனுல் பிரம்மச்சாரியாக இருக்க முடியாது என்று எனக்குத் தெரியும். இவன் தூலத்தளவில் பிரம்மசாரியாக இருந்நாலும், மனத்தளவில் அசுத்தனுகிவிடுவான். னினவில் இல்லா விட்டாலும் கனவில் ஏற்பட்டே தீரும். இது இயற்கையின் கூற்று. அவனேச் சொல்லிக் குற்றமில்லே.

சுக்கிலம் ஒரு கழிவுப் பொருளே. அது வெளியாகத்தான் செய்யும். உணவு மலமாகக் கழிவதைப் போல், சுக்கிலமும் வெளியேறியே தீர வேண்டும்.

ஆனுல் சுக்கிலம் விலே மதிக்க முடியாத ஒரு பொக்கிஷம். புதிய உருவம் ஒன்றினேப் படைக்கும் சக்தி வாய்ந்த அதி அற்புத ஆயுதம். ஒரு சொட்டு சுக்கிலம் உற்பத்தியாக (60) அறுபது சொட்டு இரத்தம் பலியாக வேண்டும். சுக்கிலம் சுரந்நதும் அது ஒரு சிறிய குடத்தில் சேமித்து வைக்கப்படுகிறது. அது ஒரளவே கொள்ளும். அது னிரம்பியவுடன் ஞத சரீர தீபத்திற்கு உணவாகி அதனே சுடர் விட்டெறியச் செய்யும். அப்போது தான் அக்குடம் னிரம்பி வழியாது. சுக்கிலத்தை னிலே னிறுத்தலாம்.

இதுவே சிவபோகம். என்றென்றும் மாருத பேரின்ப பேரானந்த பெரு வாழ்வைத் தரும் போகம். இந்த யோக னிலேயை அளிப்பதுவே திருவும் மணமும் கலந்த மெய்யான ''திரு - மணம்'' ஆகும்.

ஆதலால் னமது பிரம்மகுல மக்கள் திருமணம் முடித்துக் கொண்டாலும் பிரம்மச்சரிய விரதத்தைக் கூடுமான வரையில் கடைபிடித்தல் வேண்டும். அப்படி செய்தால் ஆரோக்கியமும், புத்தி கூர்மையும், னீண்ட ஆயுளேயும் பெற்று பெருவாழ்வு வாழ்வார்கள்.

போகம் உனது சந்நதி விருத்தியடையப், சிவபோகம் னீ அழியாப் பதியில் குடியேற என்பதனே னினேவில் வைத்து போகத்தைத் தவிர்த்து, சிவபோகத்தை கைப்பிடிப்பதுவே னமது பிரம்மகுல மக்களுக்குத் தலேயான வேலே. இதுவே புதிதாகத் திருமணம் முடிக்க இருக்கும் தம்பதிகளுக்கு ஞம் சொல்லும் அறிவுரை.

243

போகமகரிஷி

ஞானிகளின் போகம் தேக போகம் அல்ல. யோகிகள் போகம் - ரூபமற்ற அருப போகம்- எங்கள் அமுதனுவெனும் லிங்கம், மாணுக்கனின் யோனியாகிய செவியில் அருபத்தில் போகிக்கும் வான ஞட்டு போகம்- தேகாதியந்நமும் இனிக்கும் போகம்- மயிர்க்கால்தோறும் இன்ப மூட்டும் பேரின்ப சிவ போகம்- மகா சுகபோகம் சுவர்க்கபதிக்கு ஏற்றுவிக்கும் போகம்- இந்த போகத்தையே அந்த மகா போகர் அன்று சைனு ஞட்டில் செய்தார். காமி. மகாகாமி என்னும் மாருத போக இச்சையுடைய மகா மகா காமி. சாதாரண காமியல்ல சிவகாமி. அவரே மகா யோகி, போகமகா முனிவர், போகரிஷி என்றும் அழைக்கப்படுவார்.

போக மகரிஷி னம் ஞட்டை விட்டு புகைக் கூண்டில் சைனு ஞட்டிற்குச் சென்ருர்கள் என்று பழங்கால ஏட்டுச் சுவடியில் காணப்படுகின்றது.

இந்த லீலையையே னமது ஞட்டில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா அன்று செய்தார். அவர் போகிக்காத கோபியர்களே கிடையாது என்கிறது மகா பாரதம் - கோபியர்கள் என்ருல் ஞான சீடர்கள். கோபியர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது ஞானசீடர்களேயே.

244

குண்டலினி

''குண்டலினி'' தான் ஞானத்திற்கு ஆதாரம். அது தூங்குகிறது. அதனைத் தட்டி எழுப்பி இயங்க வைக்க வேண்டும். அப்போது தான் ஞான தீபம் சுடர் விட்டெரியும் என்பார்கள். இது உண்மையே. ஆனல் குண்டலினி எங்கே இருக்கிறது என்ருல் மூத்திர தூவாரத்திற்குப் பின்னல், முதுகெலும்பின் அடிபாகத்திலிருக்கிறது என்பான். அதாவது மிக அசூசையான இடத்தில் இருப்பதைக் காட்டுவான்.

ஒரு வைரக்கல் உன்னிடத்திலிருந்தால் அதனை இரும்புப் பெட்டகத்தில் பத்திரமாக வைப்பாயா அல்லது குப்பைக் குழியில் தூக்கி எறிவாயா? அழியும் பொருளுக்கே இப்படி என்ருல், அழியாத, விலைமதிக்க முடியாத தெய்வீக மாணிக்கக்கல் - குண்டலினியை - பரிசுத்த தேவலோகத்தில் வைப்பானு, அல்லது அசூசையான இடத்தில் வைத்துப்

படைப்பானு என்று சிந்தித்துப்பார். இதனைத் தட்டிக் கேட்க ஆள் இது வரையில் வரவில்லை.

உனது தேகத்தினுள் னரகலோகம், பூலோகம், சுவர்க்க லோகம் இம் மூன்றும் இருக்கின்றன. னீ குண்டலினியைக் சுட்டிக்காட்டும். இடம் னரகக் குழியாகும், உன்னுள் தலையான சுவர்க்கபதி எங்கே இருக்கிறது என்று தேடிப்பார். அங்கு தான் குண்டலினி சுடர் விட்டு பிரகாச தீபமாக இருக்கக் காண்பாய். இதனைக் காட்ட உனக்கு உதவி செய்யவே னும் வந்து ஆயிரக்கணக்கான மக்களுக்கு காட்டியும் விட்டோம்.

245

மகிழ்ச்சி கரமான பிறந்த னுள்

ஒரு னுள் மதியம் ஒரு அங்கத்தினருக்கு "Happy Birth Day to you" என்ற தந்தி வந்தது. அது என்ன தந்தி என்று ஆண்டவர்கள் விசாரிக்க அத்தந்தியின் வாசகத்தை தமிழில் மொழி பெயர்த்துச் சொன்னுர்கள். அப்போது - சந்தோஷ-கரமாய் பிறந்த னுள் யாருக்குமே இருந்தது கிடையாது. பிறக்கும் போது தாய் பிரசவ அறையில் அலறுவாள். புருஷன் ஏது ஆகுமோ, என்னவாகுமோ என்று வாசற்படியில் அலைவான். மாமன் மாமியார் ''தெய்வமே எல்லாம் னல்லபடியாக முடிய வேண்டும்'' என்று கவலை னிறைந்த மனத்தோடு இறைவனை பிரார்த்திப்பார்கள். இது தான் இவன் பிறந்த சந்தோஷகரமான பிறந்த னுள்'' ஒன்றினை அனுபவிக்கப் போகும் ஒரு சிறிய வித்து வெளியான னன்னுள் என்று சொல்லலாம்.

சந்தோஷகரமான - மகிழ்ச்சி கரமான பிறந்த னுள் என்பது னீ மறுபிறப்பு பிறந்த னுள் தான். உன்னை பிராமணனுக ஆக்கிய னுள். உபதேசம் பெற்று மறு உலகத்தில் சஞ்சரிக்கத் துவங்கிய னுள். தூபதீப மங்கள ஆராதனையோடு இரட்டைப் பிறப்பான னுள் - அந்தணனுகப் பிறந்த னுள் தான் மகிழ்ச்சிக்குரிய பிறந்த னுள் (The Happy Birth Day)

246

மணி விழா

னுதம் = னுதத்தொனி; விந்து; சுக்கிலம்

னுதன் = குரு; னுதத்திற்கு அதிபன்

ஆண்டவர்கள் :- னுதம் உண்டான பிறகே மனிதப் பிறவியில் ஆண், பெண் என்ற வித்தியாசம் ஏற்படுகிறது. அது வரையில்

ஒரே தன்மைதான். ஆண், பெண் என்ற வேற்றுமையில்லாமல் ஒன்ருகவே விளையாடுவார்கள்.

பெண் பருமடைந்ததும் அவளது தேகத்தில் பல மாற்றங்கள் காணப்படுகின்றன. குணத்திலும் அப்படியே.

ஆணுக்கு 16 வயது எட்டினதும் அவனது தேகத்தில் சுக்கிலம் உற்பத்தியாகி, பாலனின் தொனிமாறி, கம்பீரமான ஆண்மைக்குரல் எழும்புகிறது. ஆக ஞதம் தான் ஆண். இந்த ஞதமில்லையேல் ஞானமில்லை. ஞதமே ஞானத்திற்கு மூலம்.

ஞதன் உன்னைத் தொட வேண்டுமென்ருல் உன்னிடத்தில் ஞதம் இருக்க வேண்டும். அப்போது தான் உனது ஞதத்தை எழுப்ப முடியும். ஆதலால் தான் இளமை ததும்பும் போதே ஞானத்தை அடைய வேண்டுமென்கின்றேன். இதைத்தான் ''இளமையில் கல்'' என்று எழுதிவைத்தார்கள். இளமையில் ஞதம் னிரம்பி வழியும். ஞானத்தை எளிதாகப் பற்றும். அதை விட்டு ஞானத்தை வயது முதிர்ந்ததும் அடையலாம் என்று சொல்வது கவைக்கு உதவாத பேச்சு. பதினுறு வயதுக்கு முன்பும் அறுபதிற்கு பின்பும் ஞான தீபத்தை ஏற்ற முடியாது.

அறுபது வயது முடிந்ததும் மணி விழா சிறப்பாகக் கொண்டாடுகிருன். இது சரியே. தனக்கு ஜீவ விந்து அற்றுப் போய் விட்டது எனக்கும் ஜீவ மணிக்கும் தொடர்பு இல்லை என்று ஞானிகளுக்கு அறிவிக்கவே இவன் மணிவிழா கொண்டாடுகிருன். இது மணிவிழாவல்ல. மணி அறு விழா.

அறுபது வயது எட்டியதும் ஞத ஊற்று வற்றிப் போவதனுல், ஞானுக்கினியை அவன் மேல் ஏற்றினுல், அதன் வெப்பத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் தீய்ந்து போவான். அதனுல் தான் ஞானிகள் அறுபது வயது மேம்பட்டவர்களுக்கு உபதேசம் வைக்கக் கூடாது என்று சட்டம் வகுத்தார்கள்.

ஞானிகள் தப்பித் தவறி ஞான தீபத்தைத் தூண்டி விடாமல் எச்சரிக்கையாக இருக்கவே இந்த மணி விழா ''எனக்கு இனி ஞானப் பிராப்தி இல்லை. தெரியாமல் யாராவது ஒரு ஞானி என் மேல் கருணை கூர்ந்து ஞானத்தை ஏற்றி விடாதீர்கள் '' என்று எச்சரிப்பு விடுவதே இவனது ''அறு - பதாம்'' கல்யாணம்.

ஞம் என்னுடைய அதிவல்லப தபோ பலத்தால் இந்த வயதை அறுபத்தி ஞன்காகக் கூட்டியிருக்கிருேம். பதினெட்டிலிருந்து அறுபத்தி ஞன்கு வரை ஞம் உபதேசம் வைப்போம்.

247

இறைவனைக் குறை கூறாதே

மழை அதிகமாகப் பெய்கிறது. மிகவும் சிரமமாக இருக்கிறது. வெய்யில் கடுமையாகக் கொழுத்துகிறது. பொறுக்க முடியவில்லை என்று அலுத்துக் கொள்ளாதே. எதெது எப்படி னடத்த வேண்டும் என்பது இறைவனுக்கு னன்ருகத் தெரியும். அவனுக்குப் புத்தி சொல்ல வேண்டாம்.

உப்பள வியாபாரி தனது களத்திலுள்ள உப்பு கரையாமலிருக்க மழை வேண்டாம் வெய்யில் னன்ருகக் காய்தல் வேண்டும் என்று பிரார்த்திப்பான். விவசாயி வயலில் வாடும் பயிர்களுக்கு மழை பெய்நால் தேங்காய் உடைக்கிறேன் என்று வேண்டிக் கொள்வான். இதில் இறைவன் எதைச் செய்வான்? எதையும் செய்யமாட்டான். ஊழி விதிப்படி எதைச் செய்ய வேண்டுமோ அதையே செய்வான். அவனுக்கு இப்படி செய்; அப்படி செய் என்று யாரும் புத்தி புகட்டத் தேவையில்லை. உனது தேங்காய் உடைப்பிற்கும் வடை மாலைக்கும் மசிகின்றவன் அவனல்ல. தான் படைத்த மனித சமுதாயத்தை னன்கு வாழச் செய்ய வேண்டியதைச் செய்ய வேண்டிய காலத்தில் செய்து கொண்டேயிருக்கும் மகா காருண்யன்.

248

அமுது, தீர்த்த அபிஷேகம்

னடமாடும் தெய்வமாகிய குருபிரானுக்கு அன்னம் படைத்து, அவர்களருந்நினது போக மீதியிருக்கும் உச்சிஷ்டம் அமுதாகும். அதனைச் சீடர்கள் பகிர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

தேவ குருவிற்கு சமர்ப்பித்து அவர் பருகினது போக மீதமிருக்கும் னீர் தீர்த்தமாகும். அதுவே உனது ஜீவனை உய்விக்கும் ஜீவ மரபு னீர்.

இதை விட்டு தெய்வத்திரு படைக்கிறேன் என்று சொல்லி விக்ரகத்தின் தலையில் பாலைக் கொட்டி அபிஷேகம் செய்கிருன். இது அபிஷேகமா அல்லது அவமானமா என்று எண்ணிப்பார்.

னீ விரும்பி அருந்நும் பாலை மனைவி கையில் கொடுக்காமல் அவள் தலையில் கொட்டினுல் உனக்கு இனிக்குமா? கசக்கும். உனக்குக் கசப்பது தெய்வத்திற்கு

மட்டும் இனிக்குமா? உனக்கு ஒரு நியாயம். தெய்வத்திற்கு ஒரு நியாயமா? அதே தெய்வம் தூலத்தோடு நடமாடும் போது அப்படி செய்ய முடியுமா? நீ உண்டாக்கின "கடவுளுக்கு" உனதிஷ்டம் போல் நெய் வேத்தியம் செய்கிறாய். பேசும் பெருமானாக இருந்தால் இப்படிச் செய்வாயா?

தலையில் கொட்டி அபிஷேகம் செய்வது தான் தெய்வ வழிபாடு இது நன்மை பயக்கும் என்று பழக்கி விட்டார்கள். எல்லோரும் அப்படியே செய்கிறார்கள். அது நன்மையா, தீமையா என்று எடுத்துச் சொல்வார் இல்லை - இதனை நாம் சொல்கிறோம்.

249

ஆருயிர்ப்பிறவியர்

நம்பிய தன்னுயிரை அறிந்து அதனை வளர்ப்பதுவே ஜீவ காருண்யமாகும். மற்றையது எல்லாம் ஜீவஹிம்சையே. உன்னை வளர்ப்பது, இளமையாக்குவது எல்லாம் உன்னுடைய ஆசானின் திருவாக்கே. அவர்கள் விநியோகிக்கும் அருளமுதத்தை நீ பருகப் பருக உனது ஜீவ தேகம் வனப்பு அடையும். சுவர்க்க பூமியை நோக்கி நடை போடுவாய்.

உனக்கு உயிரான நண்பன் என்பான் தன் உயிரே தனக்குத் தெரியாத நிலையில் உயிருக்கு நண்பன் எப்படி ஆக முடியும்?

ஆருயிர் உங்களுக்குத் தெரியும். ஆதலால் நீங்கள் மெய்வழி சகோதரர்களுக்கு கடிதம் எழுதுகையில் "பிரம்மத்தை அறிந்த ஆருயிர்ப் பிறவியர்" என்றும் "ஜீவப் பிறவியரே" என்றும் எழுத வேண்டும்.

250

உனக்கும் எனக்கும் இசைந்த பொருத்தம்

உனக்கும் எனக்கும் ஏற்பட்ட பொருத்தம் ஒரு தேவப் பொருத்தம். நீ எங்கேயோ பிறந்தாய், வளர்ந்தாய். நான் எங்கேயோ பிறந்து வளர்ந்தேன். ஆனால் தற்போது உனது மனம் அறிவாக மாறி என்னோடு லயமாகி, நகமும் சதையும் போல் பிரிக்க முடியாத தொடர்போடு இருக்கிறோம். இது உலகத்தில் கிடைக்கக் கூடாத - காணக் கூடாத - ஒரு அதிசயம். இது எப்படி இருக்கிறதென்றால், ஆழ்கடலில் விளைந்த உப்பும், உயர் மலையுச்சியில் பழுத்த எலுமிச்சையும் இணைந்து ஊறுகாயானது போல் இருக்கிறது.

என்னிடம் ஊற்றுப் பெருக் கெடுக்கும் வற்றுத ஜீவமரபு னீரில் னீ ''ஊறு'' கிருய். உனது எமபய மென்ற குளிர் 'காய்' ந்நு, தேய்ந்நு இல்லாமல் போகிறது. இதுவே ''ஊறுகாய்''

இந்நப் பொருத்தம் எளிதில் யாருக்கும் சிக்காது. கோடியில் ஒருவனுக்கே கிட்டும். இது பூர்வ ஜென்ம தொடர்பு. இது யுகங்காலந் தொட்டு வருவது.

இதுவே எனக்கும் உனக்கும் இசைந்த பொருத்தம். இது தேவ பொருத்தம்.

251

கலைமகள்

பிரம்ம தேவனின் ளுவில் கலைமகள் - சரஸ்வதி - வாசம் செய்கிருள் என்று சொல்லி வைத்திருக்கிருர்கள். அது எப்படி முடியும்? ஆணின் வாயில் பெண் வாசம் செய்து சமையல் செய்து சாப்பிட்டாளா? இது னடைமுறைக்கு ஒத்து வராத ஒரு செய்தி.

பிரம்மதேவன் சகலகலா வல்லவன். அவனது ளுவில் ளுன்நு வேதங்ஙளும் னின்று விளையாடும். அவன் ளுவசைவதால் வேதங்ஙள் பிறக்கும். அவனது ளுவன்மையை வலியுறுத்திச் சொல்ல சர்வ கலைகளுக்கும் தெய்வமாக விளங்ஙும் சரஸ்வதியை - கலை மகளை - அவன் ளுவில் வாசம் செய்கிருள் என்று சொல்லி வைத்தார்கள்.

வெண் தாமரை மலரில் வீற்றிருப்பாள் வேதவல்லி என்று வேதம் சொல்ல, இவன் தாமரை மலரை வரைந்து, அதில் வெள்ளை புடவையுடுத்திய பெண் உட்கார்ந்திருப்பதாகப் படம் வரைந்து காட்டுகிருன் - மெல்லிய பூவில் பெண் ஒருத்தி சவாரி செய்தால் அப்பூவின் கதியென்ன வாகும்? னசுங்ஙி ளுசமாகி விடும்.

என்றென்றும் தாளுக ஊற்றெடுக்கும் புனல் னீரில் மிதக்கும் ''வெண் தாமரை'' மலரில் கலைமகள் வீற்றிருக்கிருள் என்று சொன்னது உண்மையே. ஆளுல் இவன் னினைப்பது போல் அல்ல.

252

தூங்ஙாமல் தூங்ஙுதல்

''தூங்ஙாமல் தூங்ஙிச் சுகம் பெறுவது எக்காலம்''

என்ருர்கள். இவன் னிஷ்டையென்று சொல்லி கண் மூடி உட்காருகிருன். கண் மூடி உட்கார்ந்நால் தூக்கம் தான் வரும். ''தூங்ஙாமல் தூங்ஙி'' என்ருல் விழித்துக் கொண்டு னடக்கும்

போதே - எத் தொழில் செய்யும் போதும் - னிஷ்டை கலேயாது தியானத்தில் இருத்தல் வேண்டும்.

இன் னிலே எப்போது ஏற்படும்? ஆசானுள் தான் ஐக்கியமாகி, ஆசானே விழுங்கி, ஆசான் வேறு, தான் வேறில்லே என்று ஆனபோது இன்னிலே ஏற்படும். அப்போது னிரந்திர சமாதியிலிருப்பாய்.

அது தான் தூங்காமல் தூங்கி சுகம் பெறும் பொற்காலம்.

253

மனக் குரங்கை னிலேப்படுத்துதல்

மனம் ஒரு குரங்கு. அது ஒன்றை விட்டு மற்றொன்றுக்குத் தாவும் இயல்புடையது. அதனே னிலே னிறுத்த வென்றால் அதற்கு ஒரு பிடிகோல் வேண்டும். ஆசானின் பாதத்தை பற்றிட மனம் அசையாது கட்டுண்டு னிலேத்து னிற்கும்.

யானேப் பாகன் யானேயின் துதிக்கையை அசையாமல் னிலேனிறுத்தத்தான் அங்குசக் கோலே அதன் மேல் சாத்தி வைக்கிறான். அங்குசம் இருக்கும் வரையில் யானே துதிக்கையை அசைக்காது. அது போல் ஆசானின் மந்திரக் கோல் உன் மேல் சாத்தப் பெற்றிருக்கும் வரையில் உனது மனம் அசையாது னிலேத்து னின்று மூச்சு ஓடாத சமாதி னிலேயில் னிலேத்து னிற்கும்.

254

னடராஜன் - கோவில்

னீ சிறு பிள்ளேயாக இருந்த போது மண்ணில் பொம்மை வீடு கட்டி விளேயாடி மகிழ்ந்தாய். வளர்ந்து பருவ மடைந்ததும் னகல் வீட்டைப் புறக்கணித்து னிஜ வீடு கட்டிக் குடியேறினாய்.

ஆனால் தெய்வ வழிபாட்டில் மட்டும் கோவிலிலிருக்கும் பொம்மையைக் கும்பிட்டு னிஜ தெய்வத்தை னாடாமலே இன்னமும் சிறு குழந்தையாகவே இருந்து வருகின்றாய்.

னீ கும்பிடும் கோயில் கல்லாலான கோயில். அங்கிருக்கும் கெர்பக் கிரஹம் இருள் சூழ்ந்தது. வீற்றிருக்கும் னடராஜ தெய்வம் கல் தச்சனின் உளியினால் உருப்பெற்றது. அந்த னடராஜன் னடனமாடுவதில்லே. சிலம்பொலி கேட்பதுமில்லே. அது வெறும் கற்சிலேயே.

ஆனால் உனது தேகம் னடமாடும் தேவாலயம். உன்னுள்ளிருக்கும் கெர்பக் கிரஹம் மாசிலாமணி னவரத்தின மாளிகை. அம்மாளிகையினுள்ள ஜீவப் பிரகாஸ னடராஜன்

னடனமாடிக் கொண்டே இருக்கின்றுன். அந்த அற்புத சிலம்பொலி எழும்பும். னடன காக்ஷியளிக்கும் னிஜ னடராஜனைத் தெரிசிக்கப்பிறந்த னீ னகல் னடராஜனே போது மென்றிருக்கின்ருய்.

உனது தேவாலய மாளிகையைத் திறக்கும் சாவியே மூல மந்திரமாகும். அந்நச் சாவி ஆசானின் கையிலிருக்கிறது. அச்சாவி கொண்டு உனது சுவர்க்கவாசல் திறக்க, மாசிலா தூயமணி மாளிகையினுள் பிரவேசித்து, சிற்பி உளி படாத தானுகத்தோன்றிய ''சுயம்பு லிங்கத்தைத் தெரிசிப்பாய்''.

அந்நச் சுயம்பு லிங்கம் கல்லாலான விருக்ஷத்தின் கீழ் கோடி சூரிய பிரபையை வீசிக் கொண்டு ஜெக ஜோதி மயமாய் வீற்றிருக்கின்றது. அந்த ஜோதி தெரிசினே ஆசானின் அருளினுலேயே கிட்டும். ஆசானின் அருளே பெரும் ஜோதி. அதையே வடலூர் பிரான் அருட் பெரும் ஜோதி தனிப் பெரும் கருணே என வர்ணனே செய்தார்.

255

சூலாயுதம்

அன்ன மயில் வாசி யென்ற குதிரையேறி அகில அண்டம் அரை னொடியில் வலம் வரவு மாகும்.

இந்த மயில் வாகனத்தைக் கண்டாயா? அந்த மயில் வாகனத்திலேறி சகல அண்டங்களேயும் அரை னொடியில் வலம் வந்தாயா? அந்த மயில் வாகனம் உடையவரே சுப்பிரமனியர். இதுவே அவரது செயல் அடையாளமாகும்.

ஒரு வக்கீல் என்பதற்கு அடையாளம். அவர் வைத்திருக்கும் பட்டயம் தானே. அதே போல் ஸ்ரீ சுப்ரமனிய தெய்வத்திற்கு அவர் கையேந்தி னிற்கும் சூலாயுதமே பட்டய சன்னதமாகும். அந்நச் ''சூல்'' ஆயுதம் உன்னேச் சூலாக்கும் - (கருவுறச் செய்யும்) ஆயுதம் கையேந்தியிருப்பவரே சுப்ரமணியர்.

அந்நத் தேவசூலுண்டாகும் கருவறை குகையே கெர்பக் கிரஹம். அக் கெர்பக் குகையினுள் வீற்றிருக்கும் சிவனேத் தெரிசித்துச் சுற்றி வந்து னமஸ்கரித்தால் அகிலாண்டத்தையும் அரை னொடியில் வலம் வரும் சக்தி பெறுவாய்.

256

இருள் வித்தை - அருள் வித்தாக மாற்றல்

மனிதன் தவறு செய்கிருன் என்ருல் அது அவனது தவறல்ல. அது அவனது வித்தின் இயல்பாகும். மனிதன்

தவற்றில் ஜனித்தவன். குற்றம் - அவமானம் - எனக் கருதி கதவடைத்து இருட்டில் ஜனித்தவன் மனிதன். இருட்டில் விதைத்த வித்திலிருந்து பிரகாசக் கனி எப்படித் தோன்றும்?

இது னறவித்து. னரகத்திற்கே இழுத்துச் செல்லும். இருள் வித்துக்கு இருள் தான் தெரியும். இருள் வித்தைப் பிரகாச வித்தாக மாற்ற, தவற்றில் பிறந்நவனே தவத்தில் பிறப்பெடுக்க வைக்க வேண்டும். இது தான் ஆசான் எனும் ஈசன் செய்யும் வேலை.

அறிவும் மனமும் ஒன்ருகக் கலந்து பாகுபாடில்லாமல் கடல் னீரில் உப்பு ஒன்றியிருப்பது போல் இருக்கிறது. கடல் னீரிலிருக்கும் உப்பைப் பிரித்தெடுக்க அதனைக் காய்ச்சி, னீரை ஆவியாக்கி, அதிலிருக்கும் உப்பு ஸ்படிகத்தை வெளியே கொண்டு வர வேண்டியிருக்கிறது. அதே போல் உனது மன மெனும் உப்பு னீரை அமுதனு சூட்டிஞல் காய்ச்சி, ஆவியாக்கி, அதனுள் மறைந்திருக்கும் பஞ்ஞ ரத்தின ஸ்படிக அறிவை வெளியெடுத்துக் காட்டுவதுவே ஆசானின் வேலை. இதுவே இருள் வித்தை. அருள் வித்தாக - பிரகாச வித்தாக - மாற்றும் அபூர்வ வித்தை ''பிரம்ம வித்தை'' இது தான்.

257

லாட பாசை

உனது மாய மனத்தை மாற்றி மாருத அறிவு ஜோதி மயமாக்கி வைகுந்நம், கைலாயம், மெஹராஜ் முதலிய திவ்விய சுவர்ணபதி லோகங்ஙளில் குடியேற்றி அங்ஙு முன் சென்ற தீர்க்கத் தெரிசியர்களைத் தெரிசிக்க வைத்து அவர்கள் பேசும் பரிபாசையை உனக்குக் கற்பிப்பதுவே எமது தலையான முதல் வேலை.

அவர்கள் உரையாடும் பரி பாசை லாட பாஷை. சைகை பாசை. கையசைவு பாசை. கலங் கொண்டு எழுதாத பாசை. எழுத்து வடிவம் பெறுவதற்கு முன்பே உருவெடுத்த ஆதி பாசை எந்ந மதத்தினரும் புரிந்நு கொள்ளும் ஒரே பாசை. அது ஏகனின் பாசை என்னும் அழியாத சிரஞ்சீவி பாசை. அணுவுக்குள் அணுவாய் அடங்ஙும் பாசை. அண்டபிர் மாண்டமாய் விரியும் பாசை. எட்டியெட்டிப் பார்த்தும் எட்ட முடியாத பாசை எண்ணில் கோடி வேதங்ஙளையும் விளங்ங வைக்கும் ஒரே பாசை. ஆசானின் முகத்தில் எழுதி சீடன் வாசிக்கும் பாசை. முக்கூர்கூலத்தி ஞல் உனது ஞவில் தீட்டப்

பெற்ற பாஷை. இவ்வாறு தீட்டப் பெற்ற இரவே உனது திருநாள். அதுவே உபதேச நாள் அதுவே நீ பிறந்த நன் நாள். அதுவே உனது நவராத்திரி. அதாவது புதிய ராத்திரி.

258

மனிதன் கையாளும் அவலச் சொற்கள்

வாழப் பிறந்த மனிதன் சாகவே பாடுபடுகிறான். இவனது பழக்கத்திலிருக்கும் சொற்கள் ஒவ்வொன்றும் இவன் செய்யும் அவல செய்கையையே எடுத்துக் காட்டுகின்றன. இவன் படுகின்ற பாடு எல்லாம் சாவை நோக்கியே செல்லுகிறது என்று எடுத்துக்காட்டுகிறது.

சாப்பாடு : இவன் செய்வது அத்தனையும் சாவதற்கே
சோறு : சுறுசுறுப்பை ஊட்டாமல் சோர்வைக் கொடுப்பது.
சாதம் : தம்மைச்சாகடித்துக் கொள்ளுதல்
சாம்பார் : இவன் பார்க்கச் சாவுக்கு இழுத்துச் செல்வது
பொங்கல் : பொங்க வைக்கும் கல் வாழவைப்பதல்ல
குழம்பு : குழப்புவது ; தெளிவற்றது
வருவல் : வருத்திக் கொண்டே-துன்புறுத்திக் கொண்டே இருப்பது.
அம்மாள் : மாள்வதற்கே - இறப்பதற்கே - பிறந்தவள் ''அம்மா'' என்று இருத்தல் வேண்டும்.

இது தொலையட்டும், விசேட காலங்களில் இவனை வாழ்த்த பாட்டுக் கச்சேரி வைத்தால் டாக்டர் மேடையேறி நன்றாகச் சப்பணமிட்டமர்ந்து 'சா' என்று துவங்கி, அது ''சரி, சரி'' என்று விரித்து உன் ''பதசா'' என்று அவலமாக வாழத்தி ''நீசா'' என்று முத்தாய்ப்பு வைக்கின்றான்.

இவனும் ''பேஷ், பேஷ், பலே'' என்று சந்தோஷித்து தலையையாட்டி ஆரவாரித்து பாடகருக்கு பரிசு கொடுத்து அனுப்புகிறான்.

இதுவே இவனது நடை முறை. இவ்வளவு அவலமாகயிருக்கிறது என்றும் அறியாதவன்.

அறிந்த மக்களாகிய நீங்கள் இன்றிலிருந்து சாதத்திற்கு ''அன்னம்'' என்றும் ஆலயத்தில் வழங்கப் பெறும் அன்னத்திற்கு ''அமுது'' என்றும் மாற்றுப் பெயரில் வழங்குங்கள்.

குழம்பிற்கு ''ஆணம்'' என்றும், மேல் கறிக்கு ''வெஞ்ஞனம்'' என்றும் புதுப் பெயரில் அழைக்க வேண்டும். இதுவே சாலை வாழ் மக்களுக்கு விதியாகும்.

கிரஹப்பிரவேசம் :- கிருஹம் என்ருல் கஷ்டம். கஷ்டத்துற்குள் - துன்பத்திற்குள் பிரவேசம். இது னமக்கு வேண்டாம். இதனை மாற்றி ''புது மனைக் குடியேற்றம்'' என்று வழங்குங்கள்.

சாப்பிடப்போகிறேன் என்று சொல்லாமல், பசியாறப் போகிறேன் என்று சொல்லிப்பழகிக் கொள்ளுங்கள்.

259

ஞானக் குன்று

வான ஞட்டரசர் உனது பாட்டையர் தணிகை வள்ளல் பிரானவர்களுடன் அகிலவலம் வரும் போது ஞங்கள் ஞானக்குன்றில் ஏற ஆரம்பித்தோம். அப்போது அக்குன்றின் மேல் எங்களுக்கு முன் சென்ற சித்தர் முத்தர்களின் கால் சுவடுகள் பல பதிந்திருந்தன சில ஆண்டுகள் னடந்த பின்னர் எங்களுக்கு முன் வெகு சொற்பச்சுவடுகளே காணப் பெற்றன. பத்தாண்டுகள் னடந்த பின்னர் எங்கள் முன்னர் ஒரு கால் சுவடு கூட இல்லை. ஞங்கள் இருவரும் விட்டு சென்ற சுவடுகளே எஞ்ஞி னின்றன.

மற்றையவர்கள் யாரும் அந்த ஞானக் குன்றின் மேல் அவ்வளவு உயரம் ஏறி வர வில்லை என அப்போது ஞன் அறியேன்.

260

மௌனம்

மௌனம் சாதித்தால் முத்தி சித்தியாகுமென்று னினைத்து பேசாமல் வாய் மூடி உட்கார்ந்திருந்தால் முத்தி கிட்டாது. அப்படி கிடைப்பதாகவிருந்தால் பிறந்தனுள் முதற் கொண்டு மௌனமே சாதிக்கும் மிருகஜாதிகளுக்கு உனக்கு முன்பே முத்தி கிட்டியிருக்க வேண்டும்.

ஞானிகள் அருள் மாரி பொழிந்து பேசிக் கொண்டிருக்கையில் மோன னிலையில் இருப்பர். இதுவே மௌன னிலை.

261

சப்த ஸ்தானம்

சப்த ஸ்தானத்தில் சேவித்தால் புண்ணிய முண்டு என்று

இந்து மதம் சொல்கிறது. ''சப்த ஸ்தானத்தில்'' சேவை செய்யுங்கள் என்று சொன்னால் இவன் ''சப்தத்தை'' விட்டு ஏழு இடங்களைத் தேடி அலைகிறான். ''சப்தம்'' என்றால் ''ஓசை'' ஓங்காரத் தொனியான ஓசை, உன்னுள் இயங்கும் எல்லையை அறிந்து, அதற்கு சேவை செய்தல் வேண்டும். ''ஓம், ஓம்'' என்று வாயால் உச்சரித்தால் ஒன்றும் நடவாது. உன்னுள் எழும் ஒலியற்ற ஓசையை உணர்ந்து ஆனந்த மடைய வேண்டும். தன் நாதத்தை தான் கேட்டல் வேண்டும்.

தன்னுள் இயங்கும் நாதம் தெளிவாகவுள்ளதா என்று கண்டு அறிய நாயகம் சல் அவர்கள் ஒலிமிகுந்த சந்தைக்குச் சென்று அங்கு தன் சக்தியைச் சோதிப்பார்கள் என்று இஸ்லாமிய வேதம் சொல்கிறது.

262

சேலை கட்டிய மாந்தரை நம்பாதே

''சேலை கட்டிய மாந்தரை நம்பாதே'' என்றால் அதில் உனது தாயும் சகோதரியும், மனைவியும், சேர்த்தே சொல்லப் படுகிறது. தாயை விட வேறு தெய்வமில்லை என்று சொல்லும் நம் நாட்டில் அவர்களை நம்பாதே என்று சொல்லுவார்களா? தெய்வமாகக் கொண்டாட வேண்டிய தாயினத்தை இப்படி அவமரியாதை செய்வார்களா?

சேலை கட்டிய மாந்தரல்ல. சேலை அகட்டிய மாந்தர் என்று கொள்ளுதல் வேண்டும். சேலையை அகட்டியவர் விலை மாதர்களாவார். அவர்களை நம்புவது ஆபத்து என்பது செயல் விளக்கம்.

263

சிக்கெனப் பிடித்தேன்

சிக்குப் பலகை என்பது முற்காலத்தில் வேத நூல் வைத்துப் படிக்க பயன்பட்ட ஒரு சாதனம். அதனைச் செய்வதற்கு மிகவும் திறமை வேண்டும். இரண்டங்குல கனப் பலகையை ஒரு அங்குல கனமுள்ள பலகையாக இருபுறமும் வாளால் அறுத்து இரு பலகைகளாகப் பிளக்க வேண்டும். ஆனால் இரண்டு பலகைகளும் பிரிந்து விடாமல் மையத்தில் கீல் வைத்தது போல் பிணைத்துக் கொண்டிருக்கும். அதனை விரித்து V போன்ற பகுதியில் வேதநூலை வைத்துப் பிரித்து படிப்பார்கள். கீழ் நோக்கி V போன்ற பகுதி பாதமாக அமையும்.

இதுவே சிக்குப் பலகை. இது தற்போது அதிகம் உபயோகத்தில் இல்லை. அதன் படம் X.

''சிக்கெனப் பிடித்தேன்'' என்றால் சிக்கிக் கொண்டேன் என்று பொருள் அல்ல, நானும் நீயும் பிரிக்க முடியாமல் ஒரு தெய்வீக பிணைப்பில் இருக்கிறோம். பிறர் பிரிப்பதற்கு எவ்வளவு முயன்றாலும் நடக்காதது நடக்காதது ஒரு காந்தப் பிணைப்பு இது. ஆசானுக்கும் சீடனுக்கு முள்ள ஒரு விநோதத் தொடர்பு.

மேலும் சிக்குப் பலகை விரிய விரிய வேதமும் விரியும். அதே போல் ஆசானின் வாய் விரிய விரிய சீடனுக்கு வேதம் விரியும். அந்த விரி ஆலவாயினுள் அண்ட சரா சரங்களையும், ஈரேழு பதினான்கு உலகங்களையும் சீடன் சந்தேகமற கண்டு மகிழ்வான். இதுவே ''சிக்கெனப் பிடித்தல்'' என்பது.

264

அருணாசலம்

திண்ணையிலிருந்து ஒரு முதியவர் தியானம் செய்து கொண்டிருந்தார்.

'அம்பரம் பரம் பரம்
அம்பரம் பரம் பரம்'

என்று ஓயாமல் முணு முணுதுக் கொண்டிருந்தார். அது போது அவரது பேரன் தெருவில் பம்பரம் விட்டு விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது அவனது பம்பரம் சாக்கடையில் விழுந்து விடுகிறது. அவன் அதைப் பார்க்க வில்லை. தேடலானான். அது சாக்கடையில் விழுந்து விட்டதைப் பார்த்த பெரியவர், பம்பரம் இருக்கும் இடத்தைப் பேரனுக்குக் காட்டிக் கொடுக்க எண்ணினார். அதே நேரத்தில் தான் செய்யும் ஜபத்தையும் விட்டுக் கொடுக்க மனமில்லை ஆதலால்

'அம்பரம் பரம் பரம் பம்பரம் சாக்கடை
அம்பரம் பரம் பரம் பம்பரம் சாக்கடை'

என்று ஜபித்தார். இதுதான் நீ செய்யும் தியானத்தின் லெக்ஷணம். எவ்வளவு முயன்றாலும் உன்னால் மனதை ஒரு நிலையில் அசையாமல் நிலை நிறுத்த முடியாது. அது சலனமுற்றே இருக்கும். சலனமுள்ள மனதை நிச்சலன மனதாய் மாற்ற, நித்தியானந்தத்தில் நின்று திளைக்கும் நித்தியனான இறைசொருப குருபிரான் ஒருவர் வேண்டும். அவரது அருளமுதம் உனது செவியில் ஏறவும் மனசலனம் நீங்கி நிச்சலனம் குடியேறி பேரின்பப் பெரு வெள்ளம் பொங்கித்

ததும்பும்.

அருளினுல் அச்சலத்தை உன்னுள் புகுத்தும் தெய்வமே அருணசலம். அத்தெய்வம் வாழும் பதியே திருவண்ணுமலை. அதுவே சாலையம்பதி.

265

ஆண்டவர்களிடம் உபதேசத்திற்கு விண்ணப்பித்து நிற்கும் மெய்வழி அங்கத்தினர்களிடமும், புதியதாகத் தம்மை சந்தித்து தரிசிக்க வரும் இப்பூஉலக மக்களிடமும் ஆண்டவர்கள் கேட்கும் - ஞான எழில் சிந்தும் விஞக்களும் அதைத் தொடர்ந்து அவர்களே தந்திடும் ஞான போதனை விடைகளும் மிக சுவையானது. அந்த ஜீவ ஏற்றச் செவ்விய தேவ ஞான திருவசனங்களைத் தொகுத்துத் தரப்பெற்றுள்ளது:

1. கடவுள் என்றுல் என்ன?

   முதல் முதலாகக் கடவுள், ஐந்து பூதங்கள், மின்பனி தாரகை முதலானவற்றை உண்டாக்கி (அதாவது தனக்கு வேண்டிய கை ஆயுதங்களை உண்டாக்கி) பிறகு, தான் குடியேறவுள்ள மனித ரூபத்தை உண்டாக்க எண்ணினைத்தான். சிருஷ்டியில் முதலில் உண்டான உயிருடைய பொருள் புழு. அதில் தன் வல்லபமாகிய ஆறு அறிவையும் வைக்க முடியாது என்று கண்டு-புழுவிற்கு வேண்டிய உணவு முதலியவைகளை உண்டாக்கி விட்டு, எறும்பு கொசு இப்படியே யானை முதல் அண்டரண்ட பட்சி முதலியவைகளைப் படைத்தான். அவை எதிலும் தன்னுடைய வல்லப ஆறு அறிவை வைக்க முடியாமல் போகவே, நீண்ட கால கால முயற்சிக்குப் பின் ஒரு மனு உருவை உண்டாக்கினுன். அப்போது இறைவனுக்கு என்ன சந்தோஷமாக இருக்கும்? ஆனுல் அவன் செயல் அதோடு நிற்க வில்லை. மனிதனுடைய நுவில் ருசியை வைத்துப் படைத்து விட்டோமே என்று வெளியே அண்டத்திலும் பல ருசிகளைப் படைத்தான். இவ்வாறே

மனுவின் மூக்கிற்காக பல வாசனைகளையும் - கண்ணுக்காக பல அழகுகளையும் பல வர்ணங்களையும் படைத்தான். மேலும் மனித தூலத்திற்கு வரும் வியாதிகளைக் கண்டிக்க பலவித மூலிகைகளையும் உண்டாக்கினான். அதோடு னில்லாமல், தன்னை மனிதனுக்கு வெளியாக்க வேண்டி, தானும் ஒரு மானிட ரூபத் திருமேனி ஏற்று வந்நான். இவ்வளவு னீண்ட பாடும் வல்லபமும், கருணைப் பெருக்கும் உடைய வஸ்து வித்தே கடவுள்.

மேலும் தன்னை அறியாது தவறுகிறவர்களுக்கு னரகத்தையும் படைத்து வைத்தவனும் அவனே.

2. உபதேசம் என்பது என்ன செயல்?

மனுவை இக்கடத்தை விட்டு னீக்கி அக்கடத்துள் ஆக்குவது முதல் - அதாவது இம்மனித தூலமாகிய பீத்த உடலை விட்டு னீக்கி, அந்தப் பரிசுத்த தேவ தூலத்தில் புகுத்தாட்டப் பெறுவது முதல் இவனை அந்தப் பரமபத னித்திய தூலத்துக்குள்ளே னிலைப்பிக்கச் செய்கிறவரை - அதாவது காரிடி எமன் கையிலிருந்து பிடுங்கப்பட்டு ஒளி பரவும் மிகு மவுன பரமானந்ந னிலையில், னீங்காது னிலைத்தாட்டி வைக்கிறவரை - உபதேசத் திருச் செயல், அருட்பெருஞ்சோதித் திருமேனியராகிய தெய்வீக குருபிரானவர்களின் தனிப்பெருங்கருணையால் னிகழ்த்தப் பெறுவது.

3. உலகம் எத்தனை? என்ன என்ன? அண்டத்திலா பிண்டத்திலா?

உலகம் மூன்று. பாதாள லோகம் அல்லது னரகலோகம், பூலோகம், வானலோகமாகிய ஆகாயலோகம் ஆக மூன்று - அண்டத்திலும் பிண்டத்திலும்.

4. பூதங்கள் எத்தனை?

னிலம், னீர், னெருப்பு, காற்று, ஆகாயம் ஆக பூதங்கள் ஐந்து.

5. பூதியங்கள் எத்தனை? என்னென்ன? பூதியம் மேலே சொன்ன பூதந்நானு வேறு?

பூதியம் ஐந்து - மாமிசம், இரத்தம், உஷ்ணம், சுவாசம், மனம் இவ்வாறு பிண்டத்தில் எஸ்ஸன்ஸாக பூதங்கள் உள்ளன.

6. பொறிகள் எத்தனை? என்னென்ன?
மெய், வாய், கண், மூக்கு, செவி ஆக பொறிகள் ஐந்து

''நூலபார்த்தாற் கருவிடயம் நிறுத்திப் பாருன்
நினைவுக்கே தோணும் மெய்ப் பொருள் தானப்பா
கால்மேலும் தலைகீழாய் நிலைக்கும் பாரு
கண்டு பார் மெய்ப் பொறியென் றதற்குப் பேரு
பால்போன்ற மெய்வழினூ லுனக்காய்ச் சொன்னேன்
பகர்ந்தேனுன் ஆனந்தக் களிப்பும் பாரு
வால்காட்டிப் பயல்களுடல் மெய்யென் பார்கள்
வண்டரெதும் கண்ட துண்டோ வாய்ப்பேச்சாலே''

(மெய்வழி நூல் பாடல் 30)

''ஐம்பொறி யெனச் சொல்வார் வாயில் - அத்தை
யறியார்கள் மெய்ப்பொறி யானசஞ்ஞீவி
பொய்யான வுடலைமெய் யென்னும் - வேஷப்
புலையர்களறியாத பூதச்சஞ்ஞீவி''

(ஆனந்த களிப்பு பாடல் 15)

7. புலன்கள் எத்தனை? என்னென்ன?
புலன்கள் ஐந்து - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்.

8. மனிதனுக்கு அறிவு எத்தனை? என்னென்ன அறிவுகள்?
ருசி அறிவு, கேள்வி அறிவு, நுகர் அறிவு, கண் அறிவு, உணர்வு அறிவு, தன்னை அறிகின்ற ஆளுவது அறிவு ஆக அறிவு ஆறு.

9. மிருகங்களுக்கு அறிவு எத்தனை?
ஐந்து அறிவு

10. உயிர்களின் பிறப்பிடமாகிய யோனிகள் எத்தனை?
புழுக்கம், வித்து, அண்டபம், சினை என்னப்பெற்ற நாலு வகை யோனிகள்.

11. இறைவன் படைத்த தோற்றம் எத்தனை? அது என்னென்ன?
அமரர், மனு, விலங்கு, புள், (பறவை) ஊர்வன, ஜலம்

வாழ் ஐந்து, தருக்கினம் ஆக தோற்றங்கள் ஏழு.

12. தோற்றம் எந்த அறிவுப்புக்காக உள்ளது?
கொசுவும் அண்டரண்டப் பட்சியும் புள் என்ற ஒரே தோற்றத்திற்குள் வருவதாயினும் ஒன்றை ஒன்று உசுக்காது. சின்னுநுன்னியும் திமிங்கிலமும் ஒரே இனமாகிய ஜலம் வாழ் ஐந்து என்ற தோற்ற வகையில் பிரிக்கப்பட்டாலும் ஒன்றை ஒன்று பிரியப்படுவதில்லை. அப்படியிருக்க மனு, தேவன் என்ற வெவ்வேருன பிரிவாக ஆன பின்னும் - தேவனை இவன் தனது பரிசுத்த வித்தை - பழைய மாமன் கழுதை அக்கா கழுதை - என்ற உறவு கொண்டாடிக் கலக்கிருனே அந்தப் பாவத்தை எடுத்துக்காட்டி எச்சரிப்பிக்கவே.

13. கடவுள் அண்டத்திலா? பிண்டத்திலா?
அண்டத்திலும் பிண்டத்திலுமாகிய அனைத்திலும்.

14. உபதேசம் எதற்காக வாங்குகிறது?
தெய்வ ஆசானிடத்தில் அன்பு பெருக-உபதேசம் எவ்வளவு னெடிய செயலோ அப்படியேதான் னிஜ அன்பு பிறங்கச் செய்யும் திருச்செயலும் னெடியதாய் உள்ளது. எண்ணம் வாக்கு செயல் தெய்வ ஆசானிடத்தில் ஒட்ட வைத்து, பிரளாமல் பழகுவதால்தான் னிஜ அன்பு பிறங்கும். அந்த அன்பே மனுவை சிவமாக்கும் விசுவாசம் ஏற்படும்
(வி=உசும்புதல் - விசும்புதல் - அழகு செய்தல்)

15. குரு என்றல் என்ன?
விதி கடந்நோர் - மனுவுக்கு உள்ள விதி அவர்களுக்கு இல்லை.

16. என்ன செயலுடையவர் குரு ஆவார்?
அந்நகாரமென்னும் இருளிருப்பாகிய இதய லோகத்தைத் திறப்பித்து அவ்விருளைக் கிழித்து னெறித்து ஒட்டி வைக்கும் அருங்காரணச் செயல் அவ்வளவும் உடையவர் குரு.

17. மனிதனின் முதல் கடமையாவது யாது?
தன்னைப்போல் மனித தூலத்தில் வந்துள்ள தேவகுரு பிரானைத் தேடிச் சந்திப்பதே மனிதனின் முதல் கடமையாகும்.

18. னரன் என்பது யார்?
பொய்ப் பொருளின் தேட்டாகிய அழி செயலேயே ஞடி அவாவித் திரிபவன்.

19. மனிதன் என்பது யார்?
மெய்ப்பொருளே அடையும் ஞேக்குடன் ஒரு சற்குரு பிரானேத் தேடுகின்ற ஞட்ட முடையவன்.

20. தேவர்கள் என்பவர் யார்?
அந்த சற்குருபிரானின் தனி அன்பினுல் தேவ ரகசியங்கள் எல்லாவற்றையும் தெரிந்தவன்.

21. மதத்தை சார்ந்திருப்பது எதற்கு?
தெய்வ ஆசாஞகிய தேவ குருராஜர் உன்னே னம்பி தன் சீடஞக ஏற்றுக் கொள்வதற்காகத்தான்.

22. பிறப்பிலேயே ஓர் மதத்தில் உள்ளவஞ? பிறந்து அறிவு வந்தபின் ஓர் மதத்தில் பிறப்பதா?
இத்தூலப் பிறப்பிலேயே யாரும், எந்த மதத்திலும் இல்லே. எல்லோரும் னரனே. தெய்வச் சூலில் பிறந்து மெய்யறிவு-தன்னே அறியும் அறிவு-வந்து ஓர் மெய்க்குருவால் ஒரு மதத்தில் பிறப்பிக்கப் பெற வேண்டும்.

23. சரிகை எது துவங்கி எது வரை?
அங்க சுத்தி ஆலய வழிபாட்டில் ஆரம்பம். அங்கசுத்தி என்பது பிறர் மனே ஞேக்கா சுத்தம். தேவ ஆசிரியரின் எண்ணத்தில் இவனது வழிபாடு சரி என்று தோன்ற வேண்டும். அவ்வாறு அவர்களுக்குத் தெரிந்தபின் அவனே அவர்கள் தன் சீடஞக ஏற்றுக் கொள்ளும் போது சரிகை முடிகிறது.

24. கிரியை எது துவங்கி எது வரை?
தெய்வ ஆச்சாரியரால் சீடஞக ஏற்றுக்கொள்ளப் பெற்றதிலிருந்து, அவனே பையப்பைய மெய்வழியில் ஆக அவனேப் பண்படுத்தி பிரம்மோபதேச மறுபிறப்பு இலக்குவரைக் கொண்டு வரும்போது கிரியை முடிகிறது.

25. யோகம் ஆரம்பம் எது? முடிவு எது வரை?
பிரம்மோபதேசம் பெற்றதும், இவனது மூச்சு தேவ ஆசான் அவர்களது சொற்படி கேட்க ஆரம்பிக்கிறது. முடிவு விண்ஞடு விடியும் வரை

26. படிப்படியாய் ஞானத்துக்குப் போவதா?
ஞானத்துக்குப் படிப்படியாகத்தான் போகமுடியும்.
27. ஞானம் என்பது இவன் செயலில் என்ன-வாயிருக்கிறது?
தேவ ஆசானிடத்தில் னீ வைக்கும் னீங்காத அன்பாயிருக்கிறது.
28. அறுசுவை ஒளிக்குமிடம் மும்மூர்த்திகளில் யார்கையில் இருக்கிறது?
மும்மூர்த்திகளில் எவர் கையிலும் இல்லை. மும்மூர்த்திகரமும் ஒரு முகமாய்ச் சேர்க்கை பெற்று மனித தூலம் தாங்கி வந்துள்ள ஒரு தேவகுரு கொண்டல் அவர்கள் கையில் இருக்கிறது.
29. ஞானேந்திரியங்கள் எத்தனை? அவை என்னென்ன?
மூன்று - அவை கண், செவி, வாய்.
30. ஆதாரங்கள் எத்தனை? அவை என்னென்ன?
ஆறு-அவை மூலாதாரம், சுவாதிஷ்டானம் மணிபூரகம், அனுகதம், விசுத்தி, ஆக்ஞை.
31. தர்மம் என்றால் என்னவானது?
மெய்ஞானியிடத்தில் பிரதிபலன் ஒன்றும் எதிர்பாராமல் செய்யும் ஈகையே தர்மம்.
32. வீடு அடைவதற்கு னம்பிக்கை (ஈமான்கள்) எத்தனை? அவை என்னென்ன?
ஆறு - அவை:
1. கடவுள் ஒருவர் உண்டென்பதும்
2. அவனுடைய சிபார்சுக்குரிய தீர்க்கத்தரிசியர்கள் உண்டென்பதும்.
3. அடியார்களாகிய தேவர்கள் உண்டென்பதும்
4. வேதம் உண்டென்பதும்
5. மரணம் உண்டென்பதும்
6. அவரவர்கள் செய்த னன்மை, தீமைகளுக்குத் தக்கபடி தீர்ப்பளிக்கப் பெறுகின்ற தீர்ப்புனுள் உண்டென்பதும் ஆகிய னம்பிக்கைகள் ஆறு.

33. மரணம் எத்தனை? என்னென்ன மரணம்?
மரணம் இரண்டு வகை - னியாயமரணம், அனியாய மரணம்.

34. மனிதன் இறந்ததும் அவனது மனைவி முதல் எல்லாரும் பழிக்கத் தகுந்த பிசாசாகப் போவது எதனாலே? இதை அறிந்தவர்களுக்குத்தான் முத்தி-கிட்டும் எப்படி?

ஒரு மெய்க் குருவைப் பெறுவிட்டால், இறுதி னேரத்தில் கசப்பாகிய தீட்டு வெளிப்பட்டு, மரணத்திற்கு ஆளாகி என்றென்றைக்கும் னீஙகா அவஸ்தையாகிய அலகைத் தேகம் வந்துவிடுமே என்ற அச்சம் இல்லாததாலே பிசாசாகப் போகிறார்கள். இதை அறிந்து அச்சம் ஏற்பட்டு ஒரு மெய்க் குருவைச் சார்ந்தவர்களுக்கே முத்திகிட்டும்.

35. னித்தியம் பெறுவது எதைத் தாரை வார்த்து?

உடல், பொருள் ஆவி மூன்றையும் ஆண்ட குருவிற்குத் தாரை வார்த்துக் கொடுத்துப் பெறுவது னித்தியம்.

36. மனம் என்பது தோற்றமற்றதா? தோற்றமுற்றதா?

மறுபிறப்புப் பெற்ற தேவர்களுக்கு மனம் தோற்ற முற்றது.

37. அறிவு தோற்றமுடையதா? அல்லது இல்லையா?

அதே போல் மறுபிறப்புப் பெற்ற தேவர்களுக்கு அறிவு தோற்றமுடையது.

38. உன் ஜீவன் தோற்றமுற்றதா? இல்லாததா?

தோற்றமுள்ளது.

39. ஆத்மா எத்தனை? எது எது? தோற்றமுடையதா? தோற்றமற்றதா?

இரண்டு - ஜீவாத்மா பரமாத்மா. இரண்டும் தோற்ற-முடையது. ஜீவாத்மா னீ - பரமாத்மா உன்னை ஆண்டுகொண்ட தேவபிரான்

40. பொய் என்றால் என்ன செயலுடையது?

அழியும் தன்மையுடையது - னன்மை தராதது.

41. மெய் என்னப் பெற்றது என்ன செயலுடையது?

னித்தியமானது, னன்மை பயப்பது.

42. மனிதனுக்குள் எத்தனே தூலங்கள் உள்ளன? அத்தூங்களின் பெயர்கள் எனனென்ன?

சூக்குமம், காரணம், மகா காரணம் என மூன்று தூலங்கள் உள்ளன. தீட்சை ரூபமாக அவை வெளியாவன.

43. மௌனியர் என்பது யாரை?

படித்தவர், தேர்ந்தவர் என்று வந்த எவரையும் தன் முன்னர் வந்ததும் ஞவெழ ஒட்டாமல் செய்கின்ற எல்லபம் பெற்றவரே மௌனியர்.

44. தாய், தந்தை, மனே, மனேவி, ஊண், உறக்கம், அறுசுவை, மக்கள், சுற்றம் மாடு, ஆடு,திரவியம், அரசாட்சி, தேசாதிபத்தியம், புகழ்ச்சி இவைகளில் எதன் மீது வைப்பது அன்பின் பலனுடையது?

இவற்றில் எவற்றின் மீது வைத்தாலும் அன்பின் பலன் இல்லே. தேவ குருபிரானிடத்தில் னீ வைக்கும் னிஜ ஒட்டுதலே தேவ அன்பு

45. ஞான குரு, தேவ குரு என்பது யாரை?

னரரை மக்களாக்கி, மக்களேத் தேவர்களாக ஆக்க வல்லபமுடையவர்களே தேவ குரு, அவர்களே ஞான குருவும் ஆவார்.

46. மெய்ஞ்ஞானச்சீடர் என்பது யாரை?

தன் உடல், பொருள், ஆவி மூன்றையும் தன்னே ஆண்டுகொண்ட தேவகுரு பிரானுக்குத் தாரை வார்த்தவர். உடல், பொருள் ஆவியாகிய மூன்றும் தன் ஆட்சியிலிருந்நால் கெட்டுப் பாழாகி னன்மை தராமல் போய் விடுமே என்று அறிந்து, அவற்றை னன்மை தரக்கூடிய மெய்ஞ்ஞான ஆசான் அவர்களிடம் ஒப்படைத்தவர்கள்.

47. ஞானம் என்ருல் என்ன? அண்டத்திலா? பிண்டத்திலா?

அண்டத்திலும், பிண்டத்திலும் - ஞானம் சர்வமும் தன்னதாக ஆக்கிக் கொண்ட செயல்கடவுள், வேதம்,

சுவர்க்கம், உலகம், எல்லாம் தன்னதாக ஆக்கிக் கொண்ட திருச்செயல்

48. வேதம் எதனுல் விளங்கும்?

பாதம் விளங்க வேதம் விளங்கும். பாதம் தான் திருமறை.

49. ஊற்ருள் என்ருல் என்ன? அண்டத்திலா பிண்டத்திலா?

வேதத்தை விளங்க வைப்பது ஊற்ருள். அது பிண்டத்தில் உள்ளது.

50. மலர்மிசை எப்படி ஏகுவது? அண்டத்திலா? பிண்டத்திலா.

மலர்மிசை ஏகுவது என்பது பிண்டத்தில் ஊடக்கும் திருச்செயல். தேவ குருவின் திருவருள் வல்லபத்தால் ஆகுவது.

51. அகரம், அவ்வு, அரி எழுத்துக்கு முன்னேயா, பின்னேயா? அண்டத்திலா? பிண்டத்திலா?

அரி எழுத்துக்கு முந்தியது அவ்வு- அதற்கும் அப்பால் உள்ளது அகரம் - மூன்றும் பிண்டத்திலுள்ளவை.

52. சாவு என்ருல் என்ன?

முடிவுருனுள் னெடுந்துயரே சாவு. உன்னேப் படைத்ததும், உன்னேப் போலவே பலரை னீ படைக்கக் காரணமாயிருந்நதும் ஆகிய ஞதம் என்ற ஜீவ வித்து, அது கசப்பு தீட்டு ஜலமாக மாறி வெளியே சிதறி விடுவதே சாவு -இந்த அடையாளம் இல்லாமல் மரணிப்பதே சாவா வரம்.

53. தேவர்கள் என்ருல் யார்?

தேவ ரகசியம் தெரிந்த னன்னெறியோர்களே தேவர்கள் என்பது திருமறைத் தீர்ப்பு.

54. மூலமந்திரம் பார்ப்பதா? படித்து உருப்போடுவதா?

மூல மந்திரம் னேருக்கு னேர் தரிசிக்கப் பெறுவது-உருப்போடுவது அல்ல.

55. னிஷ்டை என்ருல் என்ன?

சுவாசம் முதலிய உணர்ச்சிகள் இல்லாமல்போய் பரத்தோடு ஒன்றி னிற்பது -பகிரங்கத்தில் சிட்டவாசிரியர் னிழல் போலே னின்று அவர் செயலினுக்கெல்லாம் ஒத்துப் பழக்கமாகி, வட்டமிட்ட மாய்கை என்னும் முள்ளுக்காட்டை வைராக்யச் செருப்பிட்டு மிதித்து ஏறி சட்டமதே இரண்டறவுங் கலந்நங்ஙோடி னிலேத்த அகமிய விளேவினுல் கிட்டுவது. தூல ஞான னிஷ்டை குருவுக்கு ஒத்துச் செயல் பழகி வருவது - சூக்கும் ஞான னிஷ்டை என்பது சகச னிஷ்டை.

56. கிரகஸ்தன் என்ருல் யாரை?

தேவ குடும்பம் உண்டாக்கி அதில் வாழ்பவன் - கிரகங்ஙளின் செயல் அஸ்தமானவன். இல்லறத்தின் அகண்ட முடிச் சுடர் தேகத்தில் இருப்பவர்க்கு, வைக்கிரக அதிகாரங்ஙள் செல்லாது. செல்லுதர்க்கே இடமங்ஙில்லா தேகியவன் ஒளி பாய்ந்து குணம் வேருகிச் சொல்லுமிவன் சொற்படிக்கே கிரகம் கேட்க்கும். சுருதி விதி கடந்ந கிரகஸ்தன் பேரே.

57. கல்வி என்பது படிக்கிறதா? அல்லது அறிகிறதா?

அறிகிறது.

''ஆதியா மில்மை அறிவதற்கே யன்றி

இஃது ஒது மறைப் பய னென்றில்'' (ஞானக்குறள்)

''அலீபுலாம் மீமாகவும் அடிமுடி னடுவாகவும் அகர வுகர சிகரமாகவும் அகது உகது வாகிதுவாகவும் ஆலம் ரூகு ரூகானியாகவும் உடல் உயிர் ஆத்மா உயிர் ஊமை எழுத்தாகிய முப்பொருட்கோலமாக னிற்கும் இவ்வுள்ளமை உஜுதினே எதார்த்த னன்னம்பிக்கை

னலவிளைவு மனமனிதனில்ப் புகட்டுவதற்கு ஐனுல் எக்கின் ஆலம் ரூகானியா என்னும் ஜீவகாயத்திரி விடிவு னிலத்து னிலேக்குக் கூட்டிக்கொண்டுபோய் னிறுத்திச் சுட்டித் தொட்டுக்காட்டிய அதன்பின் மாருத பவுசு பலன் விளேகுவதற்காக அந்த வடிவுகுறி அடையாள கிரந்நத்தை வாக்கு ரூபத்திற்கு இழுத்துக்கொண்டு வந்து வெளியாக்கும் ஒலிவடிவு விரிப்பின் பிரவாகத்திற்கேதான் இல்மு என்றும் கல்வி என்றும் பெயர் படைத்துக்கொண்டிருக்கிறது''

(ஆண்டவர்கள் மாண்மியம் - பக் 126)

''என்றும் பொய்யகத்து உறைந்துள்ள மனத்தை மெள்ள மெள்ள மெய்யறிவு உதயம் காட்டிக்காட்டி, அகவிளைவு குடியேற்றி, உள்ளும் புறம்பும் சிறக்க, செவ்வீடு அடையவைப்பனவாகிய னரரை மக்களாக்கி மக்களே தேவர்களாக ஆக்கும் தடையற்ற முழுதீரத்தை உடையதே மெய்க்கல்வி''

(எமபடரடிபடு கோடாயிதக்கூர்)

58. பாஷை படிப்பது எதற்கு?

வேதசிரேஷ்டர் உன்னே னம்புவதற்கு - ஞானம் உன்னே மதிக்க. பாஷை தெரியாதவர்களுக்கு உபதேசம் செய்யாதே என்பது னீதிக் கட்டளே. வேத கிரேஷ்டா எந்தப் பாஷையில் அவதரித்தார்களோ அந்த பாஷையே தேவபாஷை. அதைத்தான் படிக்கவேண்டும். அதுதான் முத்தி னல்கும்.

59. னூல்கள் படிப்பதின் பயன் என்ன?

வீடடைதலே னூல்கள் படிப்பதின் பயன்.

60. மனு எதற்காக ஆகிருன்?

னித்திய தேவனுக ஆகுவதற்கு.

61. னரனுகப் பிறந்தது எதற்கு?

மனுவாகிப், பிறகு தேவனுகுவதற்கு.

62. உன் ஜீவன் ஆணு பெண்ணு?

63. ஆண் தூலம் வருகிறது எப்படி?

64. பெண் தூலம் வருகிறது எப்படி?

தெய்வ ஆசிரியரிடத்தில் தெரிய வேண்டிய முறையில் மேற்கூறிய மூன்று கேள்விகளுக்கும் பதில் அறிந்து கொள்ள வேண்டும்.

65. பொருள் என்ருல் உனக்கு என்ன அது?

னித்தியத்தைத் தருகின்ற மெய்ப்பொருள்

66. பொருள் அழியப்படுவதும் குறைந்து போவதுமா? அல்லது அழியாததா?

பொருள் அழியப்படுவதும் குறைந்து போவதுமல்ல. என்றென்றைக்கும் அழியாதது.

67. பொருளேப் பெறுகிறவர்கள் னரரா? மனுவா? அமரரா?

மெய்ப் பொருளேப் பெறுகிறவர்கள் மனுவே.

68. னரகர் பொருள் எது?

அழிகின்ற பொய்ப் பொருள்

69. மனுவினுடைய பொருள் எது?

அறிவுடைய பெரியோர்களின் திருவாக்கு

70. அமரர்கள் பொருள் எது?

னித்தியத்தைத் தருகின்ற மெய்ப்பொருள்.

71. பொய்ப்பொருள் காணப்படுவது போல் மெய்ப்பொருள் தோற்றமுடையதா? இல்லேயா?

மறுபிறப்புப் பெற்ற தேவர்களுக்கு மெய்ப்பொருள் தோற்றமுடையது. மற்றையோருக்குக் காணப்படாதது.

72. மலம் எத்தனே? அவை என்னென்ன?

ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்கள்.

73. மலத்தைப் போக்குவது யார் உதவியாலே?

ஒரு மெய்ஞ்ஞான ஆசிரியர் உதவியாலே போக்கப்-பெறுவது. தனக்கு ஒன்றில்லை என்று அவரை அர்ச்சித்து வாங்கும் பூர்ண சரணகதியாலே அந்த வல்லபம் கைகூடும்.

74. அச்சம், மடம், ஞணம், பயிர்ப்பு இன்னுன்னும் பெண்களுக்கு ஆபரணங்களாகத் தரப்பெற்றது எதற்கு?

ஞானம் பெற்றவர்களில் பெண்கள் சிலரே. ஏனெனில் அவர்கள் ஒரு மெய்ஞ்ஞான ஆசிரியரைத் தெய்வ இச்சையோடு அணுகியதும், ஊரே படர்விரிக்கும். அதை மிதித்து ஏறவே இந்த ஞன்கு ஆபரணங்ஙளும் தரப்பெற்றன.

இல்லா விட்டால் அவர்களில் ஞானமடைந்தவர்கள் ஒரு குஞ்ஞு கூட இருக்க முடியாது. மனித ரூபத்தில் வந்தவர்கள் எல்லோரும் கட்டாயம் பரமபதம் அடைய வேண்டும் என்ற கடமையை ஏற்றி வைத்துள்ள இறைவன் பெண்களுக்கு வரும் தூற்றுதலாகிய படரை மிதித்து ஏறி வரச் செய்யவே இந்த ஞலு ஆபரணங்களேயும் அவர்கள் பால் வைத்துப் படைத்தான்.

இதை கவனிக்கும்போது ஒவ்வொரு மனுவும் இப் பரமபதத்தை அடைய வேண்டியது எவ்வளவு கட்டாயம் என்பது தெரிகிறதல்லவா.

(மடமை - கணவன் பொய்யே சொன்னுலும் அதை மெய்யென்று முழுக்க ஙம்பும் குணம். பயிர்ப்பு - அவனுக்கு பணிவிடை கணவனேத் தவிர பிறரிடம் புழங்ங அருவெறுப்பு).

75. இறைவனிடத்தில் சீதனமாக அமானிதப் பொருளாக வாங்ஙி வந்த வித்தியா தத்துவம் என்னென்ன?

1. காலம் 2. னியதி 3.கலை 4.வித்தை 5. அராகம் 6.புருஷன் 7. சுத்த மாயை.

76. மேற்சொன்ன அமானிதமாகிய சீதனம் பொருள் இறைவனிடம் கடனாக வாங்கி வந்தது இன்னும் கொடுக்கப்படாதிருந்நால் நீ கடன்காரனா? இல்லையா?

கடன்காரன்தான்.

77. முத்தி கிட்டுவது எதனால்?

தெய்வ ஆசானின் கிருபையால்.

78. முத்திக்கு மூலம் எது?

ஒரு மெய்ஞ்ஞான ஆசிரியரிடத்தில் நீ நீங்காத அன்பு வைப்பதே.

79. யோகம் செய்கிறார் என்றால் அதற்கு அடையாளம் என்ன?

மூன்று அங்குலத்திற்கு மேல் நாசிக்கு வெளியே மூச்சு ஓடாதிருத்தல்.

80. அனுக்கிரகம் என்றால் என்ன?

உன்னைப் பிடித்துள்ள கிரகத்தை அணு அணுவாகப் பியத்தெறிந்துவிட்டு கோடி சூர்யப் பிரகாசப் பூணூலை பிரம்ம முடியுடனே உன்னெஞ்சகத்தில் தரிப்பிப்பது.

கிரகத்தின் வலிமை அணுக்கூட அணுகாமல் சங்கரிப்பவர்களின் அந்த பிரம்மாதிக்கச் செயலே அனுக்கிரகம்.

மானிட தேக அடிமுடி - தேகம் விதேகம் வரை

1. அங்ஙதேகம்
2. ஈனமற்ற தேகம் ஆகுவ்தற்கு - ஈனதேகம்
3. ஆங்ஙல்வி தேகம்
4. கல்வியற்ற தேகம்
5. கல்வியிலா பக்திதேகம்
6. ஆங்ஙல்வி ஆராய்ச்சி தேகம்
7. ஆராய்ச்சி அலகைத் தேகம்
8. ஆராய்ச்சி - தான்தோன்றித் தேகம்
9. ஆராய்ச்சி - தான்தோன்றி அலகைத் தேகம்
10. ஆராய்ச்சி - னூதன விவேக தேகம்
11. ஆராய்ச்சி - னூதன விவேக அலகைத் தேகம்
12. ஆராய்ச்சி - கிரிகைத் தேகம்
13. கிரிகை முறைத் தேகம்
14. கிரிகை முறை ஒழுக்க பக்தி தேகம்
15. கிரிகை கர்வதேகம்
16. கிரிகை தீனித் தேகம்
17. கிரிகை தீனி அலகைத் தேகம்
18. காமத்தேகம்
19. லோபத் தேகம்
20. காம அலக்ஷிய தேகம்
21. பரனேத் தேடு தேகம்
22. குருபரன் ஆட்கொளு தேகம்
23. மறுபிறப்புப் பெற்ற தேகம்
24. மறுபிறப்பில் கோழைத் தேகம்
25. மறுபிறப்பில் தான்தோன்றித் தேகம்
26. மறுபிறப்பில் மமதைக் கர்வத் தேகம்

27. மறுபிறப்பில் முழு மாங்கைத் தேகம்
28. மறுபிறப்பில் மாயா அலகைத் தேகம்
29. மறுபிறப்பில் குருபரனெனக் கண்ட தேகம்
30. பரனெனத் தொடரும் எழில் தேகம்
31. ஞான வைராக்கிய தேகம்
32. வைராக்கிய சாந்நி தேகம்
33. குருபரனுக்கு இருப்பிடந் நரும் தேகம்
34. குருபரன் கூடடை தேகம்
35. சூக்கும வசத்தேகம்
36. வாசிவசத் தேகம்
37. வாசிவச சாந்நி தேகம்
38. வாசி ஆனந்நத் தேகம்
39. ஆனந்ந சாந்நி தேகம்
40. சுத்தத் தேகம்
41. னறுமணத் தேகம்
42. முழுவலி சுத்த சாந்நித் தேகம்
43. சிவவாச தேகம்
44. சிவவாச சாந்நி தேகம்
45. சிவராஜ தேகம்
46. ஞுத தேகம்
47. ஞான தேகம்
48. சாயுச்ய தேகம்
49. ஞானரேகை தேகம்
50. சக்தி தேகம்
51. பிராஸ்தகூட தேகம் - பிர்மம்

பிரம்மப்பிரகாச மெய்வழிசாலை ஆண்டவர்கள் இறக்கியருளியது (காரியதரிசி மெய்வழி னச்சேந்திர அனந்தர் ஞுட்குறிப்பிலிருந்து).

267
பாட்டையர் தனிகை மணிப்பிரானுடன் னிகழ்ந்த ஆண்டவர்கள் அகில வலம்

னமது பாட்டையர் தணிகை மணிப்பிரான் அவர்களுடன் ஸ்ரீமஸ்ரீ சாலே ஆண்டவர்கள் அகிலவலம்

"அணிகொள்னிதி அமரரதி
பதிவதன மேரு
தனிகையரி னுடனெழுமி
தகிலவலம் வருவார்" (மான்மியம்)

1. மார்க்கம்பட்டி
2. திங்களூர்
3. காசுக்காரம் பாளையம்
4. சென்னிமலே
5. அவிஞசி
6. கோயம்புத்தூர்
7. தத்த மங்கலம்
8. கண்ணனூர்
9. சேலம்
10. ஓமலூரு
11. மேச்சேரி
12. விருத்தாச்சலம்
13. வீராணத்தேரி
14. வடவானதி (கொள்ளிடம்)
15. சிதம்பரம்
16. சீர்காழி
17. னன்னிலம்
18. ஆடுதுறை
19. தேவக்கோட்டை
20. இராமனுதபுரம்
21. அருப்புக்கோட்டை
22. குற்ருலம்
23. பாவனுசம்
24. தற்கரை
25. இடிந்நகரை
26. கன்னியாகுமரி
27. ஆர்வாமுள்ளிகோட்டை
28. செந்நிலம்பதி
29. திருனெல்வேலி
30. கோவில்பட்டி
31. விருதுனகரம் (ரெட்டியப்பட்டி)
32. திருப்பரங்கிரி
33. மதுரை
34. மேலூர்
35. திருப்புத்தூர்
36. கருங்குளம்
37. திருக்கோஷ்டியூர்
38. ராஜகெம்பீரம்
39. தஞ்ஞாவூர்
40. காரைக்கால்
41. மெய்வழிச்சாலே

268

முன்னே நுவர்க்கும் பின்னே இனிக்கும் பாஷை அட்சர அமைப்பு

''கோடாக எழுதும் பிரான்திருப் பாடமது
கொண்டைனு லான பாடம்
கூடான கவைசதுர்ப் பாடமது ஆகியே
கொக்கியது ஞன்நு பாடம்
தேடான தேடுடைய தானகலப் பையது
தெளிவான இரண்டு பாடம்
மேடான காண்டீப வில்லதொரு பாடமும்
வெற்றியோர் கிள்ளு மமே''

(ஆதி மெய் உதய பூர்ண வேதாந்நம்)

அழகன் அச்சகம், ஆற்காடு.